# *என் உரை*

திருக்குறள் என்ற எமது மறை நூலில் உள்ள 1330 குறள்களுக்கும் கதை எழுத வேண்டும் என்ற நினைவு, ஔவையாரின் ஆத்திசூடிச் சூத்திரங்களுக்குக் கதை எழுதிய பின்பு எனது மனதில் தோன்றியது. இதற்குக் காரணம் ஆத்திசூடிக் கதைகளுக்குக் கிடைத்த பெரும் வரவேற்பே. 2003 ஆம் ஆண்டு மலேசியத் தலைநகரில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் இந்நூல் வெளியிடப்பட்டு, உலகில் உள்ள சைவ அறிஞர்களினால் ஆய்வு செய்யப்பட்டது. அறநீதிக் கருத்துக்களே இன்றைய உலகிற்குத் தேவையென சைவப் பெரியார்கள் உலகச் சைவ மகா நாட்டில் எடுத்துக் கூறினர். இதற்கமைய உலகப் பொது மறையான திருக்குறள் பாக்களுக்குக் கதை எழுத ஆரம்பித்தேன்.

கதைகள் மூலம் எவற்றையும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். அதனால் அற, நீதி, ஒழுக்கக் கருத்துக்களை மக்களின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைத்துக் கூறியுள்ளேன். அறத்துப்பாலில் உள்ள 380 குறள்களுக்கும் கதைகளை எழுதி முடித்துள்ளேன். இவற்றை பதின்நான்கு புத்தகங்களாக வெளியிட நினைத்தேன். இலங்கையில் புகழ்பூத்த புத்தக வெளியீட்டு நிறுவனமான லங்கா பதிப்பகத்தினர் இவற்றை வெளியிட முன் வந்தனர். ஏழு புத்தகங்கள் 2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் வெளி வந்தன. இவற்றிற்குக் கிடைத்த பெரும் வரவேற்பு என்னை உற்சாகப்படுத்தியது. இலங்கை வரலாற்றில் இவ்விரு நூல்களினதும் விற்பனை ஒரு புதிய சாதனையை நிலை நாட்டியது. மிகுதி ஏழு புத்தகங்களும் விரைவில் வெளிவரவுள்ளன.

அறத்துப்பால் முடிவடைந்ததும் இன்பத்துப் பாலில் உள்ள 250 குறள்பாக்களுக்கும் கதைகள் எழுதியுள்ளேன். இது மணிமேகலை பிரசுர நிறுவனத்தினரால் வெளியிடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பொருட்பால் குறள்பாக்களுக்கும் கதை எழுதவுள்ளேன். எந்தவொரு நூலையும் தமிழகத்தில் வெளியிட்டால் தான் அது ஆய்வுக்குட்படும். இந்த வகையில் தமிழக அறிஞர்கள் எனது அறத்துப்பால் கதைகளையும், இன்பத்துப்பால் கதைகளையும் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்தல் வேண்டும். இந்நூலை வெளியிட முன்வந்த மணிமேகலை பிரசுர நிறுவனத்தினருக்கும் அதன் முகாமைப்பணிப்பாளர் திரு. ரவி தமிழ்வாணனுக்கும் இக்கதைகளை கணனியில் அச்சிட்டுத் தந்த செல்வி. க.சுகந்தினிக்கும், பிரதியைச் சரிபார்த்துத் தந்த திரு. பொ. இராசதுரை, திரு. க. கணேசராசா, திருமதி. சா. வாகீசன் ஆகியோர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***நன்றி***

அன்புடன்
கே.வி. குணசேகரம்

அதிபர்
யா/ நாவலர் தமிழ் வித்தியாலயம்,
கோப்பாய்,
ஸ்ரீலங்கா.

# மயங்கும் நெஞ்சம்

பூரணை நாள். இரவு பத்துமணிக்கு மேலாகி விட்டது. வேப்பமரத்தின் கீழ் பரப்பப்பட்டிருந்த வெண்மணற் பரப்பில் அமர்ந்திருந்தான் நகுலன். அவனுக்கு இருபத்தாறு வயது. க. பொ. த. உ.தரம் பரீட்சையில் சித்தியடைந்த அவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பாடத்தை விசேடமாகக் கற்கிறான். பஞ்சு போன்ற வெண்மேகக் கூட்டங்கள் காற்றில் அடிபட்டு திரள்திரளாகப் பல்வேறு வடிவங்களில் வானத்தைக் கோலமிட்டுக் கொண்டிருந்தன. அந்த வெண் மேகக் கூட்டத்தைப்போல் அவனது மனமும் திசைகெட்டு அலைந்து கொண்டிருந்தது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கொடியேறி அன்று நான்காம் நாள். நல்லூர்க் கந்தனின் மிகப்பெரிய பக்தன் நகுலன். வழமையான நாட்களில் தினமும் காலைப் பூசைக்குச் சென்று விட்டுத் தான் பாடசாலைக்குப் போவான். கோயில் கொடியேறி விட்டால் காலைப்பூசைக்கும் மாலைப்பூசைக்கும் செல்வான்.

அன்று காலை தோய்ந்து விட்டு நெற்றியிலும் உடலிலும் திருநீற்றை திரிபுண்டரமாக அணிந்து வேட்டி கட்டி சால்வை போட்டுக் கொண்டு கோயிலுக்குச் சென்றான். வெளியே அமைக்கப்பட்டிருந்த குழாயில் கால் முகம் கழுவினான். சால்வையால் முகத்தைத் துடைத்து விட்டுத் தான் கொண்டு வந்த தேங்காயை உடைத்தான். கற்பூரத்தைக் கொழுத்தி விட்டு, அதைத் தொட்டு வணங்கினான். பின் கோபுரத்தைத் தரிசனம் செய்து விட்டு அட்டாங்க நமஸ்காரம் செய்தான். அப்பொழுது அவனது தலையை ஒரு பட்டுச் சேலை உரசியது. திருவிழாக் காலமாகையால் பக்தர்கள் கோயிலெங்கும் நிறைந்திருந்தனர். அதனால் அவன் அதைப் பெரிதாக எண்ணவில்லை. எழுந்து உடலெங்கும் ஒட்டியிருந்த மண்ணைத் தனது இரண்டு கைகளாலும் துடைத்தான்.

அவனுக்கு அருகில் மிக அருகில் அவனது தலையை உரசிய பட்டுச் சேலைக்குரியவள் நின்றாள். ஒரு கணம் அவனது விழிகள் அவளது முகத்தை விட்டு அகல மறுத்தன. அவற்றிற்கு அவளின் அழகிய வதனத்தின் எழிலில் இருந்து மீள முடியவில்லை. ‘‘யாரவள்.? இவ்வளவு பேரழகு இவளுக்கு எங்கிருந்து கிடைத்தது.’’ கோயிலுக்குள்ளே சென்று முருகனைத் தரிசிக்க அவனது மனம் மறந்து விட்டது. நினைவு தெரிந்த நாளில் இருந்து அவனது மனம் ஒரு போதும் கோயிலடியில் சலனப்பட்டதில்லை. அவள் நாலைந்து பெண்களுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். அழகான வட்ட முகம், போதையை ஊட்டும் விழிகள், அழகான மூக்கு, சிவந்த உதடுகள், பளபளக்கின்ற கழுத்து, இப்படி ஒரு பெண்ணை அவன் இதுவரையில் கண்டதில்லை. கண்களை முந்தி மனம் அவளின் அழகை அணுவணுவாக இரசித்தது.

தோழிகளோடு உள்ளே அவள் சென்றாள். அவளின் பின்னால் அவன் சென்றான். உள்ளே சென்ற அவள் கொடித்தம்பத்திற்கு அருகில் நின்று கண்களை மூடி முருகப் பெருமானை வணங்கினாள். அவனது கண்கள் அவளை மொய்த்தன. ஒப்புக்குக் கூட கையைக் கூப்ப மறந்தான் நகுலன். சுவாமியை வணங்கிய அவள் அருகே உள்ள கோயில் அலுவலகத்திற்குச் சென்று அர்ச்சனைச் சீட்டொன்றை வாங்கி வந்து குருக்களிடம் கொடுத்து விட்டு; ‘‘அர்ச்சகா, மிருகசீரிடம்’’ என்றாள்.

“அர்ச்சகா மிருகசீரிடம்” என நகுலனின் வாய் முணுமுணுத்தது. பூரணசந்திரன் வானத்தில் உலாவிக் கொணடிருந்தான். நகுலன் பூரணசந்திரனைப் பார்த்தான். அதனுள் அர்ச்சகா தோன்றி முறுவலித்தாள். அழகான அந்த வெண்நிறப் பற்கள் மின்னலைப் போல் ஒளிர்ந்தன. அங்கங்கள் எல்லாம் அளவாகச் செதுக்கப்பட்ட தெய்வப் பெண்ணோ இவள் இல்லை தோகையை? விரித்து ஆடும் அழகிய மயிலோ? விலை உயர்ந்த ஆபரணங்களை உடல் முழுவதும் அணிந்துள்ள மனிதப் பெண்ணோ...? அவனால் இனங்காண முடியவில்லை. அவனது நெஞ்சம் அவளது அழகில் மெய்மறந்திருந்தது.

நாளைக் காலையில் கோயிலுக்குச் செல்ல வேண்டும். அவளின் ஒப்பற்ற அழகை ரசிக்க வேண்டும்”. என்று நினைத்தான். அவளைப் பார்க்காது அவனால் இருக்க முடியவில்லை. அந்த இனிமையான நினைவுகள் இனித்ததால் அவனது மனம் உறங்க மறுத்து, அவளின் எழிலுருவை எண்ணி எண்ணி மகிழ்ந்தது; “இவள் தேவ மகளிரில் ஒருத்தி தான்” அவனது மனம் அடித்துக் கூறியது.

**1081. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும் என் நெஞ்சு**

*தெய்வப் பெண்ணோ! அழகியமயிலோ! கனமான ஆபரணங்களை அணிந்த மனிதப் பெண்ணோ? என்று எனது நெஞ்சம் மயங்குகிறது.*

## *படையெடுத்த அணங்கு*

இரவு முழுவதும் அவளின் நினைவு நகுலனின் மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. விழித்திருக்கும் வேளையை விட அயர்ந்திருக்கும் வேளையில் கூட விழித்திரைக்குள் தோன்றிச் சிரித்தாள் அர்ச்சகா. அதனால் அவனால் நித்திரை கொள்ள முடியவில்லை. அதிகாலை நான்கு மணிக்கு முன்பே அவன் எழுந்து தோய்ந்து விட்டான்.

கிணற்றடியில் நீரூற்றும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்த நகுலனின் தாய் நகுலாம்பிகை கிணற்றடிக்கு வந்தாள்.; “என்ன தம்பி நான்கு மணி கூட ஆகவில்லை. வழமையாக நான் வந்து எழுப்பினால் கூட எழும்பாத நீ, இன்று அதிகாலையில் எழுந்தது எனக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது” என்றாள்.

நகுலன் தடுமாறிப் போனான். அவனால் உடனடியாகப் பதில் கூற முடியவில்லை. சில கணம் பொறுத்துச் சொன்னான்; “இன்று ஐந்து மணிக்கு நடைபெறும் பஜனையில் கலந்து கொள்ளப் போகிறேன்.”

‘சரி’ என்று கூறிவிட்டு, அவன் கூறியதை உண்மையென நினைத்துக் கொண்டு சென்றாள் நகுலாம்பிகை.

தலையை துவட்டி விட்டு வந்த நகுலனுக்குச் சுடச்சுட தேநீர் கொடுத்தாள் நகுலாம்பிகை. அதை வாங்கிக் குடித்து விட்டுக் கோயிலுக்குச் சென்றான் நகுலன். வழமை போல அவனால் சுவாமியைத் தரிசனம் செய்ய முடியவில்லை. மின்குமிழ்கள் கோயிற் சுற்றாடல் முழுவதையும் பகல் போலப் பிரகாசிக்கச் செய்து கொண்டிருந்தன. கோயில் கோபுரத்தில் இருந்த மணிக்கூடு அதிகாலை

நான்கு முப்பது மணியெனக் காட்டியது. “நேற்று ஏழுமணிக்குத் தான் அவள் வந்தாள். இன்று அவள் வருவதானால் இன்னும் இரண்டரை மணிநேரம் இருக்கிறது.” என்று நினைத்தான். வேப்பமரத்தின் அருகில் பலர் குழுமியிருந்து பஜனை பாடிக் கொண்டிருந்தனர். அவ்விடத்தில் சென்று அமர்ந்தான் நகுலன்.

பொன்னையா என்பவர் மிகவும் இனிமையாக முருகநாமவளி சொல்லிக் கொடுக்க மற்றவர்கள் இனிமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஓடிவா நீ ஓடிவா நீ வாவா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வாவா முருகா
குமரமலை வீற்றிருக்கும் எங்கள்குல தெய்வம் தேவ
குஞ்சரியை மணம்புரிந்த எங்கள் குல தெய்வம்
சரவணையில் வந்துதித்த எங்கள் குலதெய்வம் சிவ
சண்முகமாய் வந்துதித்த எங்கள் குல தெய்வம்.

மிகவும் இனிமையாகப் பொன்னையா சொல்ல அடியவர்கள் அதே போலச் சொல்லிக் கொண்டிருந்தனர். நகுலனால் முருக நாமவளியைச் சொல்ல முடியவில்லை. மனம் அவதிப்பட கண்கள் வாசலை வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

ஐந்து மணிக்கு அவள் தோழியர்களுடன் வந்தாள். ஒரு கணம் நகுலனின் உயிர் விறைத்துச் செயலற்று நின்றது. முதல்நாள் கடும் பச்சை நிறக் காஞ்சி புரச்சேலை அணிந்திருந்த அவள், இன்று கடும் நீல நிறக் காஞ்சிபுரம் சேலை அணிந்திருந்ததாள். மோகினிக் கூட்டத்துடன் வந்த அவளைப் பார்த்த அவனின் கண்கள் பரவசத்தில் ஆழ்ந்தன. மெதுவாக எழுந்தான். சாவி கொடுக்கப்பட்ட பொம்மை ஒன்று தட்டுத் தடுமாறிச் செல்வதைப் போல அவன் பதட்டத்துடன் நடந்து சென்றான்.

அர்ச்சகா தான் கொண்டு வந்த கற்பூரத்தை எரியும் தட்டுள் போட்டு விட்டு அதைத் தொட்டுக் கும்பிட்டாள். பின்பு தேங்காயை அடித்தாள். நகுலன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். அழகிய தேவ மகள் ஒருத்தி தனது பரிவாரங்களுடன் வந்து நிற்பதைப் போல இருந்தது. அவனது கண்கள் இமைக்க மறந்தன. தனது தோழிகளுக்கு எதையோ சொல்லிச் சிரித்தவாறு திரும்பிய அர்சகாவின் விழிகள் தன்னை உற்று நோக்கிய நகுலனின் கரு விழிகளின் வெம்மையைத் தாங்காது எதிர்ப்பக்கமாகத் திரும்பித் தாழ்ந்தன. வனப்பு மிகுந்த அவள், மோகினிச் சேனையுடன் வந்து தன்னைத் தாக்குவதைப் போல நகுலனுக்கு இருந்தது.

நிலம் நோக்கித் தாழ்ந்த அவளது விழிகள் மெல்ல மறுபக்கம் திரும்பி மீண்டும் நகுலனின் முகத்தைத் தரிசனம் செய்தன. அந்தப் பார்வையின் குளிர்மை அவனின் உடலை ஊடறுத்துச் சில்லென்ற உணர்வை உண்டாக்கியது.

அவள் உள்ளே சென்றாள். அவன் அவளைப் பின் தொடர்ந்து சென்றான். கொடித்தம்பத்தின் முன் நின்ற அவள் சுவாமியை வணங்கி விட்டுப் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தாள். தங்க விக்கிரகம் ஒன்று பரிவாரங்களுடன் வீதியுலாச் செல்வதைப் போல அர்ச்சகா உள் வீதியை வலம் வந்தாள்.

**1082. நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கு அணங்கு
தானைக் கொண் டன்னது உடைத்து.**

*என்னை நோக்கி அவள் பார்த்த பார்வைக்கு எதிரே நான் பார்ப்பது, தானே தாக்கி வருத்தும் ஓர் அழகிய மோகினி ஒரு சேனையோடு வந்து தாக்கியதைப் போன்றது.*

## *எமன்*

அர்ச்சகாவின் பின்னால் நகுலன் சென்று கொண்டிருந்தான். அவளது கால்கள் தாளத்திற்கேற்ப அசைந்து செல்லும் நாட்டிய மங்கையின் கால்களைப் போல அசைந்து கொணடிருந்தன. மெல்லிய இடையின் அசைவு புயலில் அகப்பட்ட மரக்கிளை முறிந்து விடுமோ என்று எண்ணுவதைப் போல நகுலனுக்கு இருந்தது. அழகாகப் பின்னப்பட்டிருந்த அவளது தலை முடி இடையையும் கடந்து நின்றது. அதன் தலைப்பில் கட்டப்பட்டிருந்த குஞ்சம் அவளது நடைக்கேற்றவாறு நடனமாடிக் கொண்டிருந்தது. நகுலன் சொக்கிப் போனான். அவனது நரம்புகளுக்குள்ளால் புதிய உணர்வொன்று பிரவாகித்துப் பாய்ந்து கொண்டிருந்தது; உயிர்களைக் கவர்ந்து செல் எமனை நான் முன்பு அறிந்ததில்லை. இப்பொழுது இவளின் உருவில் அறிந்து கொண்டேன். அது பெண்தன்மையுடன் போர் செய்யும் பெரிய கண்களைக் கொண்டதாக உள்ளது.'' என்று எண்ணியவாறு அவன், அவளின் பின்னால் தலையில் கை கூப்பியபடி நடந்து சென்று கொண்டிருந்தான்.

முதல் முறை வீதியைச் சுற்றி வந்த அர்ச்சகா கொடித்தம்பத்தின் முன்னால் நின்று சுவாமியை வணங்கினாள். பின்பு பஞ்சாங்க நமஸ்காரம் செய்து விட்டு எழுந்தாள். நகுலனும் சுவாமியை வணங்கி விட்டு அட்டாங்க நமஸ்காரம் செய்து விட்டு எழுந்து அர்ச்சகாவைப் பார்த்தான். அவளது விழிகளும் அவனையே மொய்த்துக் கொண்டிருப்பது தெரிய வந்தது. அவனது விழிகள் நாணமுற்று மயங்கித் தாழ்ந்தன. நகுலனின் உடலில் மின் அதிர்வு ஏற்பட்டதைப் போல இருந்தது. இனம் புரியாததோர் உணர்வு உடலெங்கும் சிலிர்த்தோடுவதைப் போன்ற பிரமை. அவளில் குடி கொண்டிருக்கும் அளவுக்கதிகமான வனப்பை அவனது கண்கள் உறிஞ்ச, மனம் குதூகலித்தது.

இரண்டாவது தடவையாக அர்ச்சகா உள்வீதியை வலம் வந்தாள். அவளின் பின்னால் நகுலன் சென்றான். அவள் அசைந்து செல்லும் அழகு அவனைப் பிரமிக்க வைத்தது. தெற்கு வாசலில் நின்று திரும்பி அவள் ஒருமுறை பார்த்தாள். அவளின் மனதில் ஏற்பட்ட குதூகலம் முகத்தில் தெரிந்தது. உதடுகள் பிரியாது பற்கள் தெரியாது மூன்றாம் பிறைச் சந்திரனின் உருவிற்கு அவளின் உதடு விரிந்தது. அதை அருகில் நின்ற நகுலன் கண்டு கொண்டான். மாசி மாதப் பனிக் குளிரில் நடுங்குவதைப் போல உடல் நடுங்கிச் சிலிர்த்தது.

அர்ச்சகா மெல்ல நடந்து மேற்கு வீதியை அடைந்தாள். அங்கிருந்த ஒவ்வொரு பரிவாரத் தெய்வங்களின் வாசலிலும் நின்று வணங்கினாள். பின்பு பஞ்சாங்க நமஸ்காரம் செய்தாள். பின் பரிவாரத் தெய்வங்களின் கோயில்களை வலம் வந்தாள். நகுலன் காந்தத்தினால் கவரப்பட்ட இரும்புப் பொம்மையைப் போல அவளின் பின்னால் உணர்வின்றிச் சென்றான். அவனது செயல்கள்

அவளது கட்டுப்பாட்டிலேயே நடைபெற்றன. அவள் நின்றால் அவனும் நின்றான். அவள் வணங்கினால் அவனும் வணங்கினான்.

பூசை முடிந்ததும் வீபூதி சந்தணம் வாங்கிய அர்ச்சகா, அவற்றை நெற்றியில் இட்டு விட்டு கோயிலை விட்டு வெளியே வந்தாள். நகுலனுக்குத் துக்கமாக இருந்தது.அவளைத் தரிசிக்க இன்னும் இருபத்து நான்கு மணிநேரம் காத்திருக்க வேண்டும் என்பதை நினைக்க கவலையாக இருந்தது. வெளியே வந்தான்.

“இரவுத் திருவிழாவிற்கும் வருவமா..? நல்லூரானின் திருவிழாவிற்கென வந்த நாம் காலையும் மாலையும் வந்து வணங்க வேண்டும்”. என்று அர்ச்சகா சற்றுப் பலமாகச் சொல்லி விட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவளது வார்த்தைகள் நகுலனுக்குக் கேட்டன. அவனது மனம் குதூகலித்துத் துள்ளியது. அவளைப் பார்த்தான். நான் விழிகளும் ஒரு கணம் சந்தித்துக் கலந்துரையாடித் தாழ்ந்தன.

வீட்டுக்கு வந்த நகுலனின் மனம் அமைதியிழந்து தவித்தது. தனது உயிரை அவள் பிரித்து எடுத்துச் சென்று விட்டதைப் போன்ற உணர்வு அவனுள் ஏற்பட்டது. உயிரைக் கவரும் எமன் அழகிய பெண்ணுருக் கொண்டு வந்து தனது பெரிய கண்களால் தனது உயிரைக் கவர்ந்து சென்று விட்டதாகவே அவன் கருதினான். மனம் அவளின் நினைவை விட்டு அகல மறுத்தது. உடல் இயங்க மறுத்தது. அதனால் உயிரற்றவன் போலக் கட்டிலில் கிடந்தான் நகுலன்.

**1083. பண்டு அறியேன் கூற்றுஎன் பதனை; இனி அறிந்தேன்**
**பெண்தகையால் பேரமர்க் கட்டு.**

*எமன் என்று கூறப்படுபவனை நான் முன்பு கண்டு அறியவில்லை. இப்பொழுது தான் கண்டறிந்தேன். அது பெண்தன்மையுடன் போர் செய்யும் பெரிய கண்களை உடையது.*

## *உயிர்குடிக்கும் கண்கள்*

மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து நகுலனின் நினைவில் அசைந்து அசைந்து வந்தாள் அர்ச்சகா. தலையின் முன்பக்கத்தில் உள்ள முடி சுருண்டு நெற்றியில் தவழ்ந்தது. மெல்லிய காற்று அதன் மேற்பட்டு மேலும் கீழும் அசைத்துக் கொண்டிருந்தது. சிவந்த நெற்றியின் மீது அசைந்தாடும் அவளின் சுருண்ட முடி அவளின் வனப்பை அதிகரிக்கச் செய்தது. உச்சி பிரிக்காது சீவி இரட்டைப் பின்னலிட்டிருந்தாள். ஒரு பின்னல் அவளின் இடப்பக்கத் தோளால் முன்னே வந்து இரு மார்பகங்களையும் பிரித்து வயிற்றைத் தாண்டி நின்றது.

மூக்குப் பள்ளத்திற்கு சிறிது மேலே நெற்றியின் அடியில் ஒட்டப்பட்டிருந்த கறுப்பு ஒட்டுப் பொட்டுக்குக் கீழ் சிறிய நட்சத்திரப் பொட்டு மினுங்கியது. சதைப்பிடிப்பான அவளது சிவந்த கன்னத்தில் அவள் புன்னகைக்கும் போது குழி விழுந்தன. சிவந்த உதட்டிற்கு மேலும் வனப்பூட்ட செந்நிறம் பூசியிருந்தாள். உற்றுப் பார்பவர்களுக்குத் தான் அது செந்நிறப்பூச்சு என்று தெரியும். அனுபவமில்லாதவர்கள் அவளின் உதடுகளின் நிறம் அதுவென எண்ணிக் கொள்வர்.

கண்களை ஒரு முறை இறுகமூடி விட்டுத் திறந்து பார்த்தான் நகுலன். அர்ச்சகா முகில்வண்ண நீலநிறக் காஞ்சிபுரச் சேலையில் தேவதையாக ஒளிர்ந்தாள். தேவமகளிரின் கண்களைப் போன்ற தோற்றத்தையுடைய அவளது கண்கள், அவனது உயிரை உண்ணும் தோற்றத்தை உடையன போலக் காட்சி கொடுத்தன. அழகான கரு நிறப் புருவத்திற்குக் கருமை நிறம் தீட்டியிருந்தாள். கீழ் இமையின் அடிப்பகுதிக்குப் பூசிய கரிய பூச்சு செம்மையான அவளின் கன்னத்திற்கு எடுப்பாக இருந்தது.

''நகுலா! மேக வண்ணநீல நிறப் பட்டுச் சேலையுடன் பின்னலை முன்னால் விட்டு விட்டு நிற்கும் அந்த அழகான பெண்ணின் கண்களைப் பார் காலம் முழுக்க அக்கண்களைப் பார்த்துக் கொண்டே இருக்கத் தோன்றுகிறது. அக்கண்களில் குடிகொண்டிருக்கும் மயக்கம் உயிரைக் கொல்கிறது. அவளது கண்களை உற்றுப்பார், அதன் குளிர்மை காண்பவர்களைக் கொல்கிறது. நேற்று அவளை அருணன் கண்டு விட்டு அவளின் பின்னால் சென்று அவளது கண்களைப் பார்த்து இரசித்ததாகச் சொன்னான். யாரென்று தெரியவில்லை. அவளைத் திருமணம் செய்பவன் கொடுத்து வைத்தவன்'' என்றான் நகுலனின் நண்பன் கஜேந்திரன்.

அர்ச்சகாவின் கண்களை நினைத்துப் பார்த்தான் நகுலன். அவள் தனது தோழிகளோடு பேசும் போது அவளை உற்று நோக்கினான். அவளின் உதடுகளை விட கண்கள் மிகவும் நளினமாக சுழன்று நடனமாடி அதிகமாகப் பேசின. குரலின் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப கண்களும் உயர்ந்து தாழ்ந்தன. சில சமயங்களில் கண்கள் இரண்டும் மேலிமைக்குள் புகுந்து கொள்ளும், சில சமயங்களில் கண்கள் இரண்டும் கீழ் இமைக்குள் புகுந்து கொள்ளும் சில வேளைகளில் இடப்பக்கமும் சில நேரங்களில் வலப்பக்கமும் புகுந்து கொள்ளும். மகுடிக்கேற்ப பாம்பு ஆடுவதைப் போல அவளது நளினமான உதடுகளின் அசைவுக்கேற்ப கண்கள் அற்புதமாக நடனமாடின.

கைதேர்ந்த ஓவியனால் வரையப்பட்ட ஓவியம் ஒன்று உயிர்பெற்றதைப் போன்ற உணர்வில் மிதந்தான் நகுலன். அருணன் கூறிய வார்த்தைகள் அவனின் நினைவிற்கு வந்து இனித்தது. பெண்தன்மைக்குரிய இந்தப் பேரழகியின் கண்கள், பார்ப்பவர்களின் உயிரைக் குடிக்கும் தோற்றத்தோடு கூடி மாறுபட்டிருக்கின்றன'' என்று நினைத்தான் நகுலன்.

''பெண்களுக்குக் கண்கள் தான் அழகு. அன்பு, பண்பு, பாசம், பற்று, காதல் யாவற்றையும் அவர்களது கண்கள் தான் புலப்படுத்துகின்றன கதைகள் பல கூறும் அவர்களது கண்கள் தான் ஆண்களின் உயிரைக் குடிப்பவை.'' யாரோ ஓர் அறிஞன் எழுதியதை வாசித்த நினைவு நகுலனுக்கு வந்தது. மெல்லச் சிரித்தான். ''உனக்கென்ன விசரே அண்ணை'' அவளின் தங்கை கமலினி கேட்டாள்.

**1084. கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்தகைப்**
**பேதைக்கு அமர்த்தன கண்.**

*பெண் தன்மையுடைய இப்பேதைக்கு இருக்கும் கண்கள் கண்டவரின் உயிரைக் கவரும் தோற்றம் கொண்டு மாறுபட்டு இருக்கின்றன.*

## மூன்று தன்மை

அழகான ஒளி பொருந்திய சிவந்த வட்ட வடிவமான அவளது முகத்தில் நடனமாடும் அந்த வசீகரமான கண்களுக்கு எத்தனை தன்மைகள் உள்ளன. நகுலன் யோசித்துப் பார்த்தான். தமிழ் இலக்கியம் என்றால் அவனுக்கு உயிர். பரவசமூட்டும் பக்தி இலக்கியங்களானாலும் சரி மனதைக் கொள்ளை கொள்ளும் காவியங்களானாலும் சரி இதிகாச புராணங்களானாலும் சரி அதை எழுதிய கவிஞர்கள் பெண்களை எப்படியெல்லாம் வர்ணித்திருக்கிறார்கள். வைணவ இலக்கியங்கள் பலவற்றை அவன் படித்திருக்கிறான். அதில் பெண்களைப் பற்றிய வர்ணனைகளை வார்த்தைகளால் கூற முடியாது. கம்பன் சீதையை வர்ணிப்பதைக் கண்டு அதிசயித்திருக்கிறான். ஆண்டாள் கண்ணனை பெண்ணாக உருவகித்து அவனை வர்ணிப்பதைக் கண்டு மெய்மறந்திருக்கிறான். அவையெல்லாம் வெறும் வார்த்தைகள். புலவர்கள் மகிழ்வான நேரங்களில் ஒன்றைப் பத்தாகவும், சிறு துரும்பைத் தூணாகவும், சிறிய கல்லை மலையாகவும் பெரிது படுத்திக் கூறுவார்கள். அரசனை வர்ணிக்கும் போது அவனது தோள் வலிமையையும் வீரத்தையும் அளவுக்கதிகமாகப் புகழ்வார்கள். சங்ககாலப் புறத்திணை நூல்கள் பலவற்றில் அரசனது பட்டத்து யானையும், அவன் ஏறிச் செல்லும் குதிரையும் பெரும் வீரர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அதே போல அகத்திணை நூல்களில் அரசவம்சத்தில் தோன்றிய பெண்களின் அழகு மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது என்றே நகுலன் இவ்வளவு காலமும் நினைத்திருந்தான். புலவர்கள் தமக்கு விருப்பமான அரசர்களையும் தம் மனங் கவர்ந்த பெண்களையும் பொன்னுக்காகவும் அன்புக்காகவும் வர்ணித்திருக் கிறார்களே தவிர யாவும் புழுகு வார்த்தைகள் என்ற எண்ணம் அர்ச்சகாவைக் கண்ட பின் மனதிலிருந்து நழுவி அத்தனையும் உண்மைகள் என்ற நினைவு அவனது மனதில் கல்லெழுத்துக்களாகப் பதிந்தன.

கண்டவர்களைக் கூரிய வேல்களாகத் தைத்துக் கொல்லும் அவளது கரிய பெரிய விழிகள் எமனது விழிகளோ? இல்லை, அழகிய மானிடப் பெண்ணின் கயல் போன்ற விழிகளோ..? இல்லை கண்டவுடன் மிரட்சியடைந்து பரபரப்படைவதால் பெண் மானின் விழிகளோ... என எண்ணினான். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் அவளது விழிகள் கொல்லும் தன்மை வாய்ந்தனவாகவும், அழகிலும் கண்டவர்களை மயக்கும் தன்மையிலும் அவை மனிதக் கண்கள் போலவும் ஆடவரைக் கண்டு மிரட்சியுறுவதால் பெண்மானின் விழிகளைப் போலவும் இருக்கின்றன. இம்மூன்று தன்மைகளையும் உடைய உருவம் ஒன்று பேரழகுடன் தன் பார்வைக்கு வந்திருப்பதாகக் கருதினான் நகுலன்.

**1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கம் இம் மூன்றும் உடைத்து.**

*எமனோ? கண்ணோ? பெண்மானோ? தெரியவில்லை. ஆனால் இந்த இளம் பெண்ணின் பார்வை இந்த மூன்று தன்மைகளையும் உடையதாக இருக்கிறது.*

## கோணிய புருவங்கள்

இரவுப் பூசையைப் பார்ப்பதற்காக நகுலனும் கஜேந்திரனும் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் முன் நின்ற வேப்பமர நிழலில் இருந்தனர். பூசை

தொடங்க இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் இருந்தன. முன்பென்றால் , நகுலன் பூசை தொடங்குவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்பு தான் கோயிலுக்கு வருவான். ஆனால் கஜேந்திரன் ஒரு மணித்தியாலத்திற்கு முன்பே புறப்பட்டு நகுலனின் வீட்டுக்கு வந்து விடுவான். பூசை தொடங்குவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு தான் நகுலன் பறப்படுவான். இதனால் இருவரும் பிரச்சினைப்படுவார்கள்.

“மற்றய கோயில்களைப் போலல்ல நல்லூர். சரியாக அந்தந்த நேரத்திற்கு அந்தந்தப் பூசைகள் நடைபெறும். பூசை நேரம் தெரிந்த ஒருவர் உலகில் உள்ள எந்த நாட்டில் இருந்தாலும் நல்லூர் கந்தனை நினைத்து அந்த நேரம் கும்பிடலாம். அப்படியிருக்க அருகில் உள்ள நாம் ஏன் தேவையில்லாமல் நேரத்திற்கு முந்திச் செல்ல வேண்டும் என்று கேட்பான் நகுலன். இதனால் அனேகமான நாட்களில் கஜேந்திரன் நகுலனை விட்டு விட்டுச் சென்று விடுவான். அதைப் பற்றி நகுலன் அவ்வளவாக அக்கறை கொள்வதில்லை. ஆனால் அந்த வருடம் நகுலன் என்றுமில்லாதவாறு பூசை தொடங்குவதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பே கோயிலுக்குச் சென்று வேப்பமரத்தின் கீழ் அமர்ந்து விடுவான். இது கஜேந்திரனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்த போதும் அவன் அதைப் பற்றி நகுலனிடம் கேட்கவில்லை.

வேப்ப மரநிழலில் வந்தமர்ந்த நகுலனுக்கு அருகில் வந்தமர்ந்தான் கஜேந்திரன். “பூசை தொடங்க இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் இருக்கின்றன. இப்ப நீ முன்பு போலில்லை. பூசை தொடங்குவதற்குப் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு முன்பு வரும் நீ, இப்ப இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பே வந்து விடுகிறாய்...?. என்றான் கஜேந்திரன்.
“கோயிற் சுற்றாடல், குளிர்மயான காற்று, புனிதமான இடம் யாவும் மனதிற்கு இதமாக உள்ளன. ஆண்டவன் மட்டுமல்ல ஆலயச் சூழலும் ஒருவனுக்கு ஆறுதலையளிக்கும்.”

கஜேந்திரன் எதுவும் பேசாமல் சிரித்தான்; “ஆலயச் சூழலும் அளிக்கும் ஆலயத்திற்கு வாறவர்களும் அளிப்பார்கள்” என்றான் கஜேந்திரன்.

“நீ அவற்றை யெல்லாம் முன்பே புரிந்து கொண்டாய். நான் இப்பொழுது தான் புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கிறேன்.”

அப்பொழுது அர்ச்சகா தனது தோழிகளுடன் வந்து கால்களைக் கழுவி விட்டு ஆலய வாசற் பக்கம் வந்தாள். அவள் கற்பூரத்தைக் கொழுத்தி தேங்காயை அடித்து, வணங்கி விட்டுக் கையைத் திருப்பி நேரத்தைப் பார்த்தாள். பின்பு முன் மண்டபத்துள் சென்று அமர்ந்தாள்.

அவளைப் பார்த்த பின்பு நகுலனுக்கு இருப்புக் கொள்ளவில்லை; “வா முன் மண்டபத்தில் சென்று இருப்போம்” என்றான் நகுலன்.

“பூசை தொடங்க இன்னும் சரியாக ஒரு மணித்தியாலம் இருக்கிறது. ஆயத்தமணி அடித்ததும் உள்ளே செல்லலாம்.” என்றான் கஜேந்திரன்.

கஜேந்திரனது வார்த்தைகள் நகுலனுக்கு எரிச்சலைக் கொடுத்தன. “எப்பொழுதும் அவன் அப்படித்தான் கதைப்பான்.” என்று நினைத்த நகுலன்

எழுந்து சென்று கற்பூரம் வாங்கிக் கொண்டு வந்து கோயில் வாசலில் எரியும் கற்பூரத்தட்டுள் போட்டு விட்டு அதைத் தொட்டு வணங்கியபின் முன் மண்டபத்துள் சென்று அர்ச்சகாவும் தோழியரும் அமர்ந்திருக்கும் இடத்திற்குச் சற்றுத் தள்ளி அமர்ந்தான்.

அர்ச்சகா தோழிகளுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தாள். அது கேட்காவிட்டாலும் ஏதோ சுவரஸ்சியமாகக் கதைத்துச் சிரிக்கிறார்கள் என்று நினைத்தான் நகுலன். அர்ச்சகா அடிக்கடி தலையைத் திருப்பித் திருப்பிக் கதைத்த போதும் அவளது கண்கள் அவனை வட்டமிடத் தவறவில்லை. வனப்பு மிகுந்த அவளது புருவங்கள் இரண்டும் அருச்சுனனது வில்லைப் போல வளைந்திருந்தன. மை தீட்டப் பெற்ற அப்புருவங்களின் அழகு நகுலனுக்கு மயக்கத்தைக் கொடுத்தது. ‘‘வளைந்த இவளின் மைதீட்டப்பட்ட புருவங்கள் நேராக இருந்திருக்குமானால் அவை வாட்டும் படியான துன்பத்தை எனக்குத் தந்திரா’’ என்று எண்ணினான்.

**1086. கொடும் புருவம் கோடா மறைப்பின் நடுங்கு அஞர்**
**செய்யல மன் இவள் கண்.**

*வளைந்த இவளது புருவங்கள் கோணாமல் நேராக இருந்திருக்குமானால், இவளுடைய கண்கள் நான் நடுங்கும் படியான துன்பத்தைச் செய்ய மாட்டாது.*

## *முகபடாம்*

வழமையாகச் சேலை உடுத்தி வரும் அர்ச்சகா அன்று பச்சை நிற முழுப்பாவாடையும் மெல்லிய பச்சை நிற மேல்சட்டையும் அணிந்திருந்தாள். அவளின் மெல்லிய பொலிவான சிவந்த உடலுக்கு எல்லா நிற உடைகளும் அற்புதமாகப் பொருந்தி நின்று அவளின் வனப்பை அதிகரிக்கச் செய்யும். அன்று அவள் பாவாடை தாவணியில் மிகவும் அற்புதமாகத் தோன்றினாள். எடுப்பான நீண்ட இரு கரங்களிலும் தங்க வளையல்கள் பூத்துக் குலுங்கின. கழுத்தில் அணிந்திருந்த சிவப்புக்கல் பதித்த அட்டியல் கழுத்துத் தசையோடு சேர்ந்து மின்னியது.

பூசை ஆரம்பமாவதற்கு அறிகுறியாக காண்டாமணி ஒலிக்க, அர்ச்சகாவும் தோழியரும் எழுந்து உள்ளே சென்றனர். கோயிலுள் ஏராளமான பக்தர்கள் குவிந்திருந்தமையால் உள்ளே அர்ச்சகாவை அவனால் காணமுடியவில்லை.

பூசை முடிந்து சுவாமி உள்வீதி சுற்றி விட்டு வெளிவீதிக்கு வந்த போதும் நகுலனால் அர்ச்சகாவைக் காணமுடியவில்லை. அவனுக்கு துக்கமாக இருந்தது. கஜேந்திரனோடு சேர்ந்து வீதியை வலம் வந்தான். மற்றைய வருடங்களில் சுவாமியின் பின்னால் பஜனை பாடியபடி வரும் நகுலன் அன்று சுவாமியின் பின்னால் வெகுதூரத்தில் வந்தான்.

‘‘ஏன் பஜனை பிடிக்கவில்லையா?’’ என்று கேட்டான் கஜேந்திரன்.

நகுலன் எதுவும் பேசவில்லை; ‘‘இந்தமுறை நீ முற்றாக மாறி விட்டாய். கேட்டாலும் பதில் சொல்கிறாய் இல்லை. விடியப்புறம் வீதியால் வரும் போது மோகினி உன்னில் தொற்றி விட்டது போலத் தெரிகிறது’’ என்றான் கஜேந்திரன்.

அதற்கும் நகுலன் பதில் சொல்லவில்லை. மெதுவாகச் சிரித்தான். வழமையாகப் பஜனை படிக்கும் பெரியவர் ஒருவர் நகுலனைக் காணாததால் தேடி வந்தார்.; ‘‘தம்பி படித்த நீங்கள் பஜனை பாடுவதற்கு முன் நிற்றல் வேண்டும். வழமையாகப் பல வருடங்களாகப் பஜனை பாடும் நீர் ஏன் இந்த முறை பின் நிற்கிறீர். வாரும்’’ என்று அவனது கையைப்பிடித்து அழைத்துச் சென்றார்.

சுவாமி வெளிவீதி உலாவை முடித்துக் கொண்டு கோயிலின் உள்ளே சென்று விட்டார். கோயிற் கதவுகள் மூடப்பட்ட போதும் மக்களின் நடமாட்டம் குறையவில்லை. கோயிலின் முன்னால் இருந்த பந்தலில் கதாப்பிரசங்கம் ஆரம்பமானது. பின்னால் இருந்த மண்டபத்தில் இசைக்கச்சேரி ஆரம்பமானது.

நகுலன் கதாப்பிரசங்கம் நடைபெறும் பந்தலை நோக்கி நடந்தான். வெகு நேரமாக அர்ச்சகாவைக் காணாதிருந்தது அவனது மனதை வருத்தியது. பந்தலுக்கு அருகில் இருந்த வீட்டின் மதில் சுவரோடு சாய்ந்தபடி நின்றாள் அர்ச்சகா. நீளமான குழாய் அமைப்பை உடைய மின்குமிழில் இருந்து பாய்ந்து வெளியேறிய தூய வெண்மையான ஒளிவெள்ளம் அர்ச்சகாவின் உடலெங்கும் வியாபித்துப் பரவி ஒளிர்ந்தது.

கண்களை இமைக்காது அந்த அழகுத் தேவதையைப் பார்த்தான். பச்சைப் பாவாடையில் இழைக்கப்பட்டிருந்த மஞ்சள் பட்டு பளபளவென மின்னியது. காலின் பாதத்தையும் விரல்களையும் தவிர ஏனைய இடங்கள் பச்சைப்பட்டால் மூடியிருந்தது அவனுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

அவனது கண்கள் அவளது பாதத்தில் இருந்து மெதுமெதுவாக மேலே சென்றன. இடைப்பகுதிக்குச் சற்றுமேலே சென்ற அவனது விழிகள் குத்திட்டு நின்றன. மெல்லிய பச்சை மேலாடையை பிரித்து வெளியேறிவிட வேண்டும் என்ற துடிப்பு மேலிடுவதைப் போன்ற ஓர் உணர்வு நகுலனின் மனதில் கிளர்ந்தெழுந்தது. கலிங்கத்துப் பரணி கூறுவது போல பெண்களின் மேலாடை மதங்கொண்ட ஆண்யானையின் மேலிட்ட முகபடாம் போன்றது என்பதை நினைத்துப் பார்த்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. மதங்கொண்ட ஆண்யானையின் முகபடாம் மதத்தின் வீரியத்தால் பிரிந்து இரண்டாகி விடும். அதுபோல அர்சகாவின்..’’நினைவுகள் இனிக்க அவனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. இவன் அவதிப்படுவதை உணர்ந்த பெரியவர் ஒருவர் அவனைப் பார்த்து முறாய்த்தார்.

**1087. கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்**
**படாஅ முலை மேல் துகில்.**

*பெண்களுடைய சாயாத கொங்கைகளின் மேல் அணிந்த ஆடை, மதம் பிடித்த ஆண்யானையின் மேல் இட்ட முகபடாம் போன்றது.*

# ஒளிரும் நெற்றி

மதில் சுவரோடு சாய்ந்தபடி நின்ற அர்ச்சகாவின் கண்கள் நகுலனை விருப்புடன் நோக்கின. மலரின் மேல் இருந்து தனது இறகுகளை அசைக்கும் கருவண்டைப் போல அவளது விழிகள் துடித்தன. உதட்டைப் பிரிக்காமல் மெல்லிய மின்னல் கோடு போல அசைந்து நீண்ட சிவந்த உதடுகளின் நகர்வை நகுலன் கண்டு கொண்டான். மனம்கிளர்ந்தெழ கண்கள் அவளை நாடிச் செல்ல, அவனது உடல் சிலிர்த்தது.

அவள் எங்கே இருக்கிறாள்? என்ன செய்கிறாள் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்று அவனது மனம் அல்லற்பட்டது. அவளின் அருகில் குழுமி நின்று கதைத்துச் சிரிக்கும் அவளது தோழிகள் எவரையும் அவன் அதற்கு முன்பு கண்டதில்லை. யாரையாவது பிடித்து அவளின் விபரத்தை அறிந்து கொள்ள வேண்டுமென நினைத்துக் கொண்டான்.

''நீ இங்கேயா நிற்கிறாய்'' என்று கேட்டபடி வந்த கஜேந்திரன் நகுலனது தோளைப் பற்றினான். பின்பு திரும்பிப் பார்த்து விட்டு; 'ஓ' இந்த வருடம் உனது சிந்தனை முற்றாக மாறிவிட்டது. இவ்வளவு காலமும் நல்லூர்க் கந்தனைக் கண்டு மகிழ்ந்த உனது கண்களும் மனமும் யாரோ இனந்தெரியாத ஒருத்தியைக் கண்டு மகிழ்கிறது. அது நல்லதற்கல்ல. தெரிந்த பெண்ணைத் தான் விரும்ப வேண்டும். அப்பத்தான் அவளின் குலம் கோத்திரம் குடும்ப நிலையெல்லாம் தெரியவரும். நீ யாரென்று தெரியாத ஒருத்தியின் அழகில் மயங்கிப் பித்துப் பிடித்தவனைப் போல விரதத்தையும் மறந்து அவள் செல்லும் இடமெல்லாம் செல்கிறாய். அழகும் கவர்ச்சியும் வாழ்க்கைக்கு உதவாது. பலரிடமும் இரவல் வாங்கி நகைகளைப் போட்டுத் தம்மை அழகு படுத்தி வரும் பெண்கள் தான் இக்காலத்தில் அதிகம்''.

நகுலன் சிரித்தான்; ''நான் இதில் இருந்து கதாப்பிரசங்கம் கேட்கிறேன். நீ என்னைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டு எனக்குப் பிரசங்கம் செய்கிறாய்.''.

அதைக் கேட்டு கஜேந்திரன் சிரித்தான்; '' நீ தான் என்னைத் தவறாகப் புரிந்துள்ளாய். உன்னுடைய ஒரு சிறு அசைவுக்கும் என்னால் விளக்கம் கூற முடியும். நீ அவளை விரும்புகிறாய். அவளும் உன்னை அடிக்கடி பார்த்துச் சிரிக்கிறாள். அவளது முகத்தில் தெரியும் உணர்வுகள் எனக்கல்ல எந்த மடையனுக்கும் புரியும்''.

நகுலன் எதுவும் பேசாமல் சில கணங்கள் நின்றான். அவனது விழிகள் அவனது கட்டுப்பாட்டை மீறி அடிக்கடி அர்ச்சகா நிற்கும் திசையை நோக்கித் திரும்பின; ''எனக்கு அவளைக் கண்ட நாள்முதல் தூக்கம் வரவில்லை. அவளில் குடிகொண்டிருக்கும் பேரழகு என்னைக் கொல்கிறது. அவளைக் காணாமல் என்னால் இருக்க முடியவில்லை. சாப்பிடமுடியவில்லை. அத்துடன் மல்யுத்த வகுப்பில் மிகவும் பலவீனனாக இருக்கிறேன். பாடசாலையிலும் பல்கலைக் கழகத்திலும் கழகங்களுக்கிடையேயும் நடைபெற்ற மல்யுத்த போட்டிகளில் வீரர்கள் எல்லோரையும் வென்ற நான் இப்பொழுது மிகவும் பலவீனனாக எமது கழக வீரரையே வெல்ல முடியாது தடுமாறுகிறேன். வீரர்களுடன் நான் பொருதும் போது அவளது ஒளி பொருந்திய நெற்றி எனது விழித்திரைக்குள் தோன்றி என்னைப் பலவீனனாக்குகிறது''.

“விசர் நன்றாக முத்தி விட்டது. நானும் அவளைப் பல தடவை பார்த்து விட்டேன். எனக்குத் தெரியாத ஒளி உனக்குத் தெரியுதோ...? மின்விளக்கை அணைத்து விட்டுப் பார்த்தால் தான் ஒளியின் தன்மையைப் பற்றி உனக்குத் தெரிய வரும்” சிரித்தான் கஜேந்திரன்.

எதையும் உணர்ந்து இரசித்தால் தான் உனக்குப் புரியும். அதோடு சாதாரணமான கண்களுக்கு நான் சொல்வதொன்றும் புரியாது. காதல் கொண்ட கண்களுக்குத்தான் அது புரியும். இதெல்லாவற்றையும் சொல்லி விளங்கப்படுத்த முடியாது. தானாய்ப் புரிந்து விளங்கிக் கொள்ள வேண்டும்” என்றான் நகுலன்.

“என்னையும் விசரனாக்கப் பார்க்கிறாய். அவளின் நெற்றியிலிருந்து வெளிப்படும் ஒளியைத் தொட்டுக் கும்பிடு என்று சொல்லி விட்டு நகர்ந்தான் கஜேந்திரன்.

**1088. ஒள்நுதற்கு ஓஓ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்கும்என் பீடு.**

*போர்க்களத்தில் பகைவர்கள் அஞ்சுவதற்குக் காரணமான எனது வலிமை, இவளது ஒளி பொருந்திய நெற்றியைக் கண்டு தோற்று விட்டதோ.*

## அணிகள் எதற்கு?

மதில் சுவரோடு சார்ந்து கொண்டு நின்ற அர்ச்சகாவும் தோழியரும் அவ்விடத்தை விட்டு மெதுவாக நடந்து வந்தனர். நகுலனுக்கு இருதயத் துடிப்பு சற்று அதிகமானது. தோழிகளுடன் கதைத்துச் சிரித்தவாறு வரும் அர்ச்சகாவை அவனால் பார்க்க முடியவில்லை. கண்கள் தாழ்ந்து நிமிர்ந்தன. மெதுவாக நடந்து வந்த அர்ச்சகா அவன் இருந்த இடத்திற்குச் சிறிது தூரத்தில் இருந்த மணற்பரப்பில் அமர்ந்தாள். பச்சைப் பட்டுப் பாவாடையில் இழைக்கப்பட்ட மஞ்சள் பட்டின் மீது பட்ட மின்சார ஒளி பளபளத்து மின்னி அவனது கண்களைக் கூசச் செய்தது. மெல்லிய பச்சை நிற மேல்சட்டை அணிந்திருந்தாள். முழங்கைக்குக் கீழ் வெறுமையாக இருந்த எழிலான தசைப்பகுதியின் செழுமை நகுலனின் உடலெங்கும் வியாபித்துப் பரந்து புத்துணர்ச்சியை ஊட்டியது.

தலையில் செருகியிருந்த சிவந்த ரோஜாவின் நறுமணம் அவனது மூக்கைத் துளைத்தது; “நகுலா, கவர்ச்சியை நம்பி ஏமாந்து விடாதே. தற்போதைய பெண்கள் இரவல் வாங்கித் தான் நகைகளை அணிந்து வெளியிடங்களுக்குச் செல்கிறார்கள். அழகையும் கவர்ச்சியையும் நம்பி ஏமாறும் ஆண்கள் பிற்காலத்தில் சொல்லொணாக் கஸஷ்டத்துக்கு ஆட்படுகிறார்கள். எனவே கவனமாக இரு” என்று கஜேந்திரன் சொன்னதை நினைத்துப்பார்த்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது.

பெண்மானைப் போல அழகிய பார்வையும் நாணமும் கொண்ட இவளுக்கு மற்ற அணிகலன்கள் தேவைதானா? அழகான பசுமை நிறைந்த கழுத்தில் அட்டியல் ஒன்றும் சங்கிலியொன்றும் அணிந்திருந்தாள் அர்ச்சகா. அந்தக் கழுத்தின் கவர்ச்சியையும், அழகையும் பொலிவையும் அணிந்திருந்த ஆபரணங்கள் கெடுப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. அவற்றைக் கழற்றினால் அந்த அழகு முழுமை பெறும் என அவன் நினைத்தான்.

அவனுக்கு அருகில் வந்த அர்ச்சகாவும் தோழியர்களும் சிலகணங்கள் தடுமாறி படி நின்றனர்.; "நீங்கள் கலைவாணியின் சகோதரனா..." தடுமாறியபடி அர்ச்சகா கேட்டாள். அவளின் தடுமாற்றமான சொற்களில் ஒருவகையான இனிமை இருப்பதாக நகுலனுக்குத் தெரிந்தது.

நகுலன் அவள் வந்து கதைப்பாள் என்பதை எதிர்பாராததால் சற்றுத் தடு மாறிவிட்டான்; "யார்.. நீங்கள்...எனக்கு'

அர்ச்சகாவின் தோழி ஒருத்தி சிரித்தாள் பின்பு; "அர்ச்சகாவுடன் கலைவாணி என்று ஒருத்தி படித்தவள். நீங்கள் அவளின் சகோதரனா என அறிய விரும்புகிறாள்" என்றாள்.

"இல்லை..இல்லை அப்படி ஒரு பெயருடைய சகோதரி எனக்கு இல்லை. நீங்கள் யாரென்று தெரிந்து கொள்ளலாமா...?"

"எனது பெயர் அர்ச்சகா. கோப்பாய் என்னுடைய சொந்த ஊர். இவ்வளவு காலமும் கொழும்பில் இருந்தனாங்கள். இப்ப ஊரோடு வந்து விட்டோம்" என்றாள்.

மேலே என்ன பேசுவதென்று நகுலன் யோசித்தான். வார்த்தைகள் எதுவும் உடனடியாக நாவிற்கு வரவில்லை.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள். உங்களின் பெயர் என்ன..?" என்று கேட்டாள் அர்ச்சகாவின் இன்னொரு தோழி.

" நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்கிறேன். எனது பெயர் நகுலன்" என்று கூறிவிட்டு அர்ச்சகாவின் முகத்தைப் பார்த்தான் நகுலன். அவளின் முகம் சிவந்து கொண்டிருப்பதைப் போலிருந்தது. நாணமிகுதியால் கண்கள் துடிப்பதைப் போல நகுலனுக்கு இருந்தது. அது பிரமையோ, உண்மையோ என்று புரியாது தவித்தான் நகுலன். அர்ச்சகா மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். பெண்மானொன்று தனது அழகிய நாணம் மிகுந்த விழிகளால் பார்ப்பதைப் போலிருந்தது. அந்தப் பார்வையில் மெய்மறந்து போனான் நகுலன்.

**1089. பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு**
**அணி எவனோ ஏதில தந்து.**

*பெண்மானைப் போன்ற மயக்குகின்ற பார்வையும் நாணமும் உடைய இவளுக்கு, அணிகலன்கள் எதற்கு?.*

## பார்த்தலே மயக்கம்

கரிய விழிகளின் புருவங்களுக்கு அர்ச்சகா மை தீட்டியிருந்தாள். கருமையும் பால் போன்ற வெண்மையையும் உடைய அவளது கண்களுக்கு அழகிய முறையில் பூசப்பட்டிருந்த கரு நிற மை அவளின் எழிலை அதிகரிக்கச் செய்து நகுலனுக்கு மயக்கத்தைக் கொடுத்தது. கண்களுக்குக் கீழ் உள்ள கன்னச் சதை மின்ஒளியில் பளபளத்தது. கன்னங்களுக்குப் பூசப்பட்டிருந்த நறுமணப்பூச்சு அவனுக்குப் போதையைக் கொடுத்தது. அவனது உடலெங்கும் பிறந்த புதிய உணர்வுகள் உடலைக் குளிராக்கியும், சூடாக்கியும் அவனை வேதனைக்குள்ளாக்கியது.

காதுகளில் அணியப்பட்டிருந்த தூக்கணங்கள் இரண்டும் அவளது நளினமான வாயசைவுக்கேற்ப நடனமாடின. அந்த அசைவு கைதேர்ந்த நட்டுவனாரிடம் பயின்ற நடனமாதின் அசைவையும். மிஞ்சிவிடும் போல் இருந்தது. அர்ச்சகாவின் காதில் தொங்கும் தூக்கணங்கள் நட்டுவனாரிடம் நடனம் பயின்றனவோ என்று நினைத்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. காரணமில்லாது சிரித்தால் முன்னால் நிற்கும் பெண்கள் தன்னைத் தவறாக நினைத்து விடுவார்களோ என்று சிரமப் பட்டு அடக்கிக் கொண்டான்.

நகுலனது கண்கள் அர்ச்சகாவின் காதுகளை ஸ்பரிசித்து சுவைத்து விட்டு சற்றுக் கீழே இறங்கின. உரித்த வாழைத் தண்டைப் போலச் செழுமையாகவும் பளபளப்பாகவும் போதையூட்டுவதுமாக இருந்த அவளின் கழுத்தின் செழுமை அவனைப் போதைக்குள்ளாக்கியது. இவ்வளவு போதை எப்படி இவளின் கழுத்துள் நுழைந்தது. மதுபானத்தை அளவுக்கதிகமாக அருந்துபவர்கள் காரணங்களின்றிச் சிரிப்பார்கள். புரியாதபடி வாயுள் முணுமுணுப்பார்கள், கண்டபடி கதைப்பார்கள். போதை தலைக்கேறி நடக்க முடியாமல் தள்ளாடுவார்கள். இவற்றையெல்லாம் நகுலன் கண்டு இரசித்திருக்கிறான். ஆனால் இன்று மது அருந்தாமலே அர்ச்சகாவைக் கண்ட மாத்திரத்தே அவனுள் இத்தனையும் நிகழ்வதைப்போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

கழுத்திற்குக் கீழ் பச்சைப் பட்டால் மறைக்கப் பட்டிருந்த இடத்தின் செழுமை பச்சைப்பட்டின் கட்டுப்பாட்டையும் மீறி நகுலனின் கண்களைப் போதைக்குள்ளாக்கியது. அவனால் நிதானமாக நிற்கமுடியவில்லை. நினைக்க முடியவில்லை., பேசமுடியவில்லை.

‘‘கலைவாணி என்னுடன் படித்தவள். சரியாய் உங்களைப் போலவே இருப்பாள். அதனால் தான் நாலைந்து தினங்களாக உங்களை அடிக்கடி பார்ப்பேன். கேட்கத் தயக்கமாக இருந்தது. இன்று தான் எமக்குத் துணிவு வந்தது’’ முழுமையாகச் சிரித்தாள். உதடுகள் விரிந்து கன்னத்தில் குழியிட்டன. அவளின் அழகான கன்னங்கள் இரண்டிலும் விழுந்த குழிகள் அவளின் அழகை மேலும் அதிகரிக்கச் செய்தது. அளவான பற்கள் பளிங்குக் கற்களைப் போல ஒளிர்ந்தன. நகுலனுக்கு போதை தலைக்கேறியது. அவளைப் பார்க்கப் பார்க்க மது மயக்கம் அதிகரிப்பதைப் போல இருந்தது.

‘‘உங்களுக்கு தங்கச்சி இல்லையா..?’’

மீண்டும் அர்ச்சகா கேட்டாள். இனிமையாக அவனது காதுக்கள் அச்சொற்கள் சென்ற போது, ‘‘தங்கையைப் பற்றி விசாரிப்பதால் தன்மீது காதல் கொள்ளாது தன்னை ஒத்த உருவச் சாயலை உடைய கலைவாணியைப் பற்றி அறிந்து கொள்ளத் தான் என்னைப் பார்த்தாளோ...,’’

‘‘என்ன யோசிக்கிறீர்கள்’’ அர்ச்சகா கேட்டாள்.

‘‘ஒன்றுமில்லை எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அவளின் பெயர் கமலினி என்றான் நகுலன்.

‘‘உங்களைப் போல அழகாகத் தான் உங்களது தங்கையும் இருப்பாள். நாளைக்கு வரும்போது அவளைக் கூட்டி வாருங்கள்’’ என்றாள் அர்ச்சகா.

அர்ச்சகா அப்படிச் சொல்வாள் என எதிர்பாராத நகுலன் தடுமாறிப் போனான்; ‘‘அவளை எதற்கு?’’ தடுமாறினான்.

‘‘சில செய்திகளை அறிய வேண்டியிருக்கு’’ சிரித்தாள் அர்ச்சகாவின் தோழி.

**1090. உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம் போல்**
**கண்டார் மகிழ் செய்தல் இன்று.**

*கள், தன்னை உண்டவர்களுக்கு மயக்கத்தைக் கொடுக்குமே தவிரக் காமத்தைப் போலப் பார்த்தவர்களுக்கு மயக்கத்தை உண்டாக்காது.*

## இருபார்வை

வீட்டுக்கு வந்த நகுலனுக்குக் குழப்பமாக இருந்தது.; ‘‘கலைவாணி உங்களைப் போலவே இருப்பாள். அதனால் தான் நாலைந்து தினங்களாக உங்களை அடிக்கடி பார்த்தேன்.’’ அர்ச்சகாவின் இனிமையான சொற்கள் கசப்புடன் அவனது காதில் ஒலித்தன. ‘‘அப்படியானால் அவள் கலைவாணியைப் பற்றி அறிந்து கொள்வதற்காகத்தான் என்னை அடிக்கடி பார்த்தாளா....? நான் நன்றாக ஏமாந்து விட்டேன். கஜேந்திரன் கூறுவது போலத் தெரியாதவர்களைக் காதலிக்கக் கூடாது. இனிமேல் கோயிலுக்குப் போனால் அவள் இருக்கும் இடத்திற்குப் போகக் கூடாது. என்று நினைத்தான். மனம் சில நிமிடங்கள் அமைதி கொண்டது. எனது வாழ்க்கையில் எத்தனையாயிரம் பெண்களை நான் இதுவரை கண்டு விட்டேன். அவர்களிடத்தில் இல்லாத கவர்ச்சியா அர்ச்சகாவிடம் உள்ளது.’’ அப்போது அவனுடன் கல்வி கற்கும் ரேணுகாவின் நினைவு அவனுக்கு ஒரு கணம் வந்தது. ரேணுகா அடிக்கடி அவனைச் சுற்றிச் சுற்றி வருவாள். பார்த்துச் சிரிப்பாள். சில வார்த்தைகள் பேசுவாள். அவளைப் பற்றி ஒரு நிமிடம் கூட அவன் சிந்தித்ததில்லை. ஒரு நாள் நூல் நிலையத்தில் அவளைச் சந்தித்தான் நகுலன். அவனுக்கு அருகில் இருந்த ஆசனத்தில் வந்தமர்ந்த ரேணுகா மெல்லச் சிரித்தாள். கஷ்டப்பட்டு நகுலன் பதிலுக்குச்

சிரித்தான்.; ‘‘சிரிக்கக் கூட உங்களால் முடியவில்லை’’ மெதுவாகக் கிசுகிசுத்தாள் ரேணுகா. நிமிர்ந்து ரேணுகாவைப் பார்த்தான். அவளது அழகிய முகம் சிவந்திருப்பதைப் போலிருந்தது. கண்கள் மருண்டு துடித்தன. உதடுகள் அசையக் கஷ்டப்பட்டன. ‘‘டேய் நகுல், ரேணுகா உன்னைச் சுற்றிச் சுற்றி வாறாள். அவளின்ரை சிரிப்புச் சரியில்லை. கவனம் மாட்டுப்பட்டுப் போகாதை’’ கஜேந்திரன் கூறியது அவனுக்கு நினைவில் வந்தது. அதற்குப் பின் ரேணுகாவைக் கண்டால் தூர விலகி விடுவான். அதை விட எத்தனையோ பெண்கள் அவனது வாழ்வில் குறுக்கிட்டிருக்கிறார்கள். அவர்களில் எவரையும் அவன் மீட்டுப் பார்த்ததில்லை.

அர்ச்சகாவைக் கண்ட பின்பு, ‘‘அவளது நினைவு மனத்திலும் அவளது அழகிய முகம் கண்களுக்குள்ளும் ஏன் தோன்றுகின்றன? விழித்திருக்கும் வேளைகளிலும் அவளது நினைவு மனதை அரித்துக் கொண்டே இருக்கிறது. உறக்கத்திலும் இமைக்குள் அவளது நர்த்தனம் ஒரே தொல்லை’’ என்று நினைத்தான்.

நகுலனால் அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. மைதீட்டிய அழகிய அந்தக் கண்களுக்குள் எத்தனை ஜாலங்கள்; ‘‘ஒரு முறை பார்த்தால் அந்தப் பார்வையின் கனிவு எனக்கு நோயைத் தருகிறது. அவளைப் பிரிந்து செல்ல முடியாத நிலை; ‘‘என்ன செய்யலாம்..’’ நகுலனால் சிந்திக்க முடியவில்லை.

எப்பொழுதும் விடியும் என்று கண்களை மூடாமல் காத்திருந்தான். ‘‘விடியு முன் எழுந்து குளிர்த்தாலும் வீட்டில் கேட்பார்கள். பொழுதும் நகர மறுக்கிறது’’ என்று அலுத்துக் கொண்டான்.

விடிந்ததும் அவசரமாகப் புறப்பட்டு கோயிலுக்கு வந்து, முன் மண்டபத்தில் அர்ச்சகாவின் வரவுக்காகக் காத்திருந்தான். நேரம் நழுவாமல் நின்ற இடத்தில் நிற்பதைப் போலிருந்தது. அர்ச்சகாவைக் காணவில்லை. ‘‘வழமையாக இந்நேரம் வரும் அவள் இன்று ஏன் வரவில்லை. மனம் பரபரக்க இதயம் துடித்தது. ‘‘வராமல் விட்டு விடுவாளோ..?’’ அதற்கு மேல் சிந்திக்க அவனால் முடியவில்லை. இருதயம் மரத்து விட்டதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.

நகுலன் திரும்பிப் பார்த்தான். அர்ச்சகா தோழியருடன் வந்து கொண்டிருந்தாள். நகுலன் மெதுவாக நடந்து அவள் வரும் இடத்திற்குச் சென்றான். அவள் திரும்பி நகுலனைப் பார்த்தாள். அழகிய மை தீட்டிய இரு விழிகளும் மலர்ந்து பிரகாசித்தன. அந்தப் பிரகாசம் மெதுவாக நகுலனின் இதயத்துள் புகுந்தது. இதுவரை அவன் பட்ட அவஸ்தை என்னும் நோய் கணப்பொழுதில் குணமாகி இதயம் இன்பத்தில் மிதக்க கண்கள் குளிர்ந்தன. அவளையே பார்த்துக் கொண்டு நின்றான் நகுலன்.

**1091. இருநோக்கு இவள் உண்கண் உள்ளது; ஒருநோக்கு**
**நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து.**

*இவளுடைய மை தீட்டிய கண்களில் இரு வேறுபட்ட நோக்கு உண்டு. ஒன்று நோயை உண்டாக்குவது, மற்றொன்று உண்டான நோயைத் தீர்க்கும் மருந்தாவது.*

# மிகுதியானது

கதைத்துச் சிரித்தவாறு அர்ச்சகா வந்து கொண்டிருந்தாள். வரிசையாக வானில் பறக்கும் பறவைக் கூட்டத்தைப் போல அவள்முன்னே வர, அவளது தோழிகள் பின்னால் வந்தனர். ஒருகதை சொல்லுவது பின் பெரிதாகச் சிரிப்பது பின் கதை சொல்லிச் சிரிப்பதுமாக அர்ச்சகா நடந்து வந்தாள். அவளது தோழிகளும் அவளது கதையை இரசித்துப் பலமாகச் சிரித்தபடி வந்தனர்.

நகுலன் அவர்கள் வருவதைக் கவனிக்காதவன் போல மறுபக்கம் திரும்பி நின்றான். அவர்களது குதூகலமான கதைச் சத்தம் மிகவும் அண்மையில் கேட்டது. சாதாரணமாகத் திரும்புவதைப் போலத் திரும்பினான். அவனது கண்கள் இச்சையோடு அர்ச்சகாவின் முகத்தில் மொய்த்தன. அர்ச்சகா உடனே அவனைக் கவனிக்காதவள் போல மறுபக்கம் திரும்பினாள். நகுலனுக்கு ஏமாற்றமாக இருந்தது. திரும்பிய அர்ச்சகா திடீரென்று திரும்பி நகுலனைப் பார்த்தாள். இரு சோடி விழிகளும் ஒரு கணம் சந்தித்துக் கலந்து உரையாடிப் பிரிந்தன.

சங்ககாலத்துப் புறப் பாடல் ஒன்றில் காதலன் போருக்குச் செல்கின்ற அவசியம் ஏற்படுகிறது. பகைவன் யாரும் எதிர்பாராதவாறு படையெடுத்து வந்து விட்டான். போர் முரசு கொட்டத் தொடங்கியது. தலைவி வீட்டில் இருந்து புறப்பட்டு அம்மன் கோயிலுக்கு வருகிறாள். அம்மனைத் தனது சகவீரர்களுடன் வணங்கிய தலைவன் தலைவியைப் பார்க்கிறான். அவள் நிலம் நோக்குகிறாள். அவன் பாராத வேளையில் அவளது கண்கள் திருட்டுத்தனமாக அவனது அழகை இரசிக்கின்றன. அப்பொழுது புலவன் சொல்கிறான்; "தலைவன் காணத போது அவள் தலைவனை நோக்குகின்ற சிறிய பார்வை காமத்தின் சரிபாதி அல்ல. அதை விடவும் மிகுதியானது." அர்ச்சகா என்னைக் களவாகப் பார்த்து இரசிப்பதும் அத்தகையதோ...?"

அந்நினைவுடன் அர்ச்சகாவைப் பார்த்தான் நகுலன். அவளின் முகம் பிரகாசமாக இருந்தது. உதடுகளின் அசைவுக்கேற்ப கன்னத் தசைகளும் தலையும் சிலசமயம் வலது கையும் நாட்டியம் ஆடின. உதடுகளோடு சேர்ந்து கண்களும் சிரித்தன. மெதுவாக அசைந்து வந்த அர்ச்சகா நகுலனைக் கடந்து சென்றாள். அவனது வலது கை அர்ச்சகாவின் இடது தொடையை இடித்தது.

ஒரு கணம் திகைத்துப் போனான் நகுலன். இது தற்செயலாக நடைபெற்றதா, இல்லை வேண்டு மென்றே நடை பெற்றதா. என்று நகுலனால் தீர்மானிக்க முடியவில்லை. அர்ச்சகா திரும்பி அவனைப் பார்த்தாள். அவளது முகத்தில் படர்ந்திருந்த உணர்வுகளை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவனது பார்வை பட்டதும் அர்ச்சகாவின் விழிகள் மிரண்டன. பின் நிலம் நோக்கித் தாழ்ந்தன.

நகுலனுக்குப் பயமாக இருந்தது. எனினும் அர்ச்சகாவின் மீது பட்ட தனது வலது கையை தூக்கிப் பார்த்தான். மனதில் இனிமையான உணர்வுகள் எழுந்த போதும் பயம் அவ் உணர்வுகளை விழுங்கிக் கொண்டிருந்தது. ஒருமணி நேரம் அந்த இடத்திலே அசையாது நின்றான். நகுலன். அவனால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை.

ஒரு மணிநேரம் கழிந்ததும் அர்ச்சகாவும் தோழியரும் எங்கோவெல்லாம் உலாத்தி விட்டு மீண்டும் அவ்விடத்திற்கு வந்தனர். நகுலன் ஒதுங்கி நின்றான். முன்பு தனது கை அவள் மீது பட்டு விட்டது. இன்னொருமுறை பட்டால் அது பிரச்சினையாகி விடும் என நினைத்து அவர்கள் வரும் பாதையை விட்டு விலகி நின்றான் நகுலன்.

அர்ச்சகா அவனைக் கவனிக்காதவன் போலத் தனது தோழியருடன் கதைத்துக் கொண்டு வந்தாள். நகுலனது இருதயம் வேகமாக அடித்தது. அர்ச்சகா அவனின் அருகால் சென்றாள். மீண்டும் அவனது வலது கை அவளது தொடையை உராசியது. அர்ச்சகா திரும்பி அவனைப் பார்த்தாள். அவன் பயத்துடன் அவளைப் பார்த்ததும் அவளது கண்கள் திரும்பின. நான் காணாத போது அவள் என்னை நோக்குகின்ற சிறிய பார்வை காதலின் வெளிப்பாடோ?'' நகுலனால் தீர்மானிக்க முடியவில்லை.

**1092. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்**
**செம்பாகம் அன்று பெரிது.**

*கண்களால் என்னைக் களவாக நோக்கும் அவளது சுருங்கிய பார்வை காமத்தின் சரிபாதி அன்று; அதைவிடக் கூடியதாகும்.*

நீர்

அன்று மாலை நகுலன் நகரின் மத்திய பகுதியில் அமைந்திருந்த பூங்காவுக்குச் சென்றான். மனம் நிம்மதி இழந்து தவிக்கும் வேளைகளில் அவன் பூங்காவுக்குச் செல்வது வழக்கம். பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடனோ அல்லது விரிவுரையாளர்களுடனோ மனதிற்குப் பிடிக்காத சம்பவங்கள் நடைபெற்றால் பூங்காவுக்கு வருவான். பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் ரோஜாத்தோட்டத்திற்கு அல்லது வர்ண மீன்கள் நீந்தி விளையாடும் இடத்திற்குப் போனால் அவனது மனதில் இருக்கும் பிரச்சினைகள் யாவும் மறைந்து விடும்.

ரோஜாப் பூந்தோட்டத்தில் வெகுநேரம் இருந்தான். அழகிய விதம் விதமான நிறங்களையுடைய ரோஜாப் பூக்களில் அர்ச்சகாவின் முகம் தோன்றிச் சிரித்தது. அதனால் அவனால் ரோஜாப்பூக்களைப் பார்க்க முடியவில்லை. எழுந்து மீன்கள் உள்ள பகுதிக்கு வந்தான். அங்கே அர்ச்சகாவும் அவளது தோழிகளும் நின்றனர்.

நல்லூர்த் திருவிழாக் காலமாகையால் வெளியிடங்களில் இருந்து வந்த பலர் பூந்தோட்டத்தைப் பார்க்க வந்திருந்தனர். அர்ச்சகா முழுப்பாவாடையும் சட்டையும் அணிந்திருந்தாள். பின்னப்பட்டு இடைவரை தொங்கிய தலை முடியின் நுனியை இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையால் அதைத் தடவிக் கொண்டிருந்தாள். அவளது கண்கள் அடிக்கடி நகுலன் இருந்த இடத்தை நோக்கிச் சென்றன.; ''இவ்வளவு காலமும் நான் பாராத போது நோக்கிய அவளின் கண்கள் இப்பொழுது எனது விழிகளைச் சந்தித்ததும் நிலம் நோக்குகின்றது.'' என்று நினைத்தான் நகுலன்.

அர்ச்சகாவை முதன் முதலாகக் கண்டவுடனே அவன் தனது மனதைப் பறி கொடுத்தான். அவளைப் பாரா விட்டால் அவனுக்கு உறக்கம் வர மறுத்தது. அந்த நிலை மாறி தற்பொழுது அவன் பயப்பட்டான். ஒரு நாளிலேயே இருமுறை அவனது கைகள் அவளின் உடலைத் தீண்டி விட்டது. அதற்கு அவனுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் அவள் வேண்டுமென்று தான் அப்படி நடந்து கொண்டதாக நினைத்து தனது ஒழுக்கத்தில் குறை கண்டால் என்ன செய்வது என்று நினைக்க அவனுக்குப் பயம் அதிகரித்தது. வழமையாகச் சென்றால் சிவப்பு நிறத்தை உடைய மீனைத் தான் அவன் பார்ப்பான். அழகான அந்தச் சிவப்பு மீனின் கழுத்துப் பகுதி பால் போல் வெள்ளை நிறமானது. வால் கரும் சிவப்பு நிறமானது. சிவந்த அதன் உடற் பகுதியில் வெள்ளை நிறத்திலும் மஞ்சள் நிறத்திலும் புள்ளிகள் இருந்தன. வாயில் சிவப்பு நிறமான நீண்ட முள்ளுகள் இருந்தன. அது நீந்தும் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பான். அன்று அந்த அழகான மீனின் நீச்சல் விளையாட்டு நகுலனுக்கு கசந்தது.

திரும்பி அர்ச்சகாவைப் பார்த்தான். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் பார்த்ததும் அவளது தலை குனிந்தது. கைகள் பின்னப்பட்ட தலை முடியின் நுனிப்பகுதியைக் கோதின. நகுலன் மீனைப் பார்த்தான். அந்த மீன் இன்னொரு அதே நிறத்தைச் சேர்ந்த மீனின் வாயைக் கௌவியது. சில கணங்கள் இரண்டு மீன்களும் வாயைக் கௌவியபடி நீந்திக் கொண்டிருந்தன. பின் சிறிய மீன் தனது வாலால் பெரிய மீனின் உடலைப் பலமுறை உராசியது. இவ்வளவு நாளும் அவன் வந்து அம் மீன்களை இரசித்துப் பார்த்த போதும் அதை வித்தியாசமாக கொள்ளவில்லை. இன்று அர்ச்சகாவைக் கண்ட பின்பு தான் அவை காதல் லீலைகள் புரிகின்றன என்று எண்ணினான்.

இனிமையான அந்த நினைவுடன் அர்ச்சகா நின்ற பகுதியைப் பார்த்தான். அவள் அவனையே பார்த்துக் கொண்ட நின்றாள். நகுலனது பார்வை பட்டதும் அவளது முகம் கலவரமடைந்து தடுமாறியது. தலையைக் குனிந்து கொண்டாள்.

நகுலனுக்கு இன்ப அதிர்சியாக இருந்தது. ‘‘என்னை நோக்கியவள், நான் நோக்கியதும் தலை குனிந்து விட்டாள். இச் செய்கையானது எனக்கு தன் மீது உள்ள காதலை வளர்க்க ஊற்றும் நீராகும்’’ என்று நினைத்தான் நகுலன்.

**1093. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினான் அஃதவள்**
**யாப்பினுள் அட்டிய நீர்.**

*அவள் என்னை நோக்கினாள்; அதை நான் கண்டதும் என்னை நோக்கித் தலை குனிந்தாள்; அது எங்களிடையே தோன்றிய காதல் பயிர் வளர அவள் ஊற்றிய நீராகும்*

## நிலம் பார்ப்பாள்

காதலின் சக்தியை நினைத்துப் பார்த்தான் நகுலன். அர்ச்சகாவைக் காண்பதற்கு முன்பு அவனது மனம் சலனப்பட்டதில்லை. பார்த்த பெண்ணைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என எண்ணியதில்லை. பார்த்த சிரித்துக் கதைத்த பெண்களின் பெயர்களை மீட்டுப் பார்த்ததில்லை. அவர்கள் என்ன கதைத்தார்கள். எப்படிச் சிரித்தார்கள். என்று ஒரு கணம் கூடச் சிந்தித்ததில்லை.

ரேணுகா தினமும் அவனைச் சுற்றிச் சுற்றி வருவாள். ஏதேதோவெல்லாம் சொல்வாள். பலத்துச் சிரிப்பாள். ஏதாவது கொடுக்க நேர்ந்தால் கையைத் தொட்டுக் கொடுப்பாள். இதையெல்லாம் அவன் நினைத்துப் பார்த்ததில்லை. கஜேந்திரன்; ‘‘டேய் நகுலா ரேணுகா பித்துப் பிடித்தவள் போல காணுகின்றவர்களுடன் உனது புராணத்தை புலம்புகிறாள். அவளுக்கு என்ன குறை. எம்முடன் பட்டப் படிப்புப் படிக்கிறாள். அழகிலும் குறைவில்லை. சீதனத்தைத் தான் அதிகம் எதிர்பார்க்க முடியாது. காதலுக்கு சீதனம் பெரும்பாலும் தடையாக இருப்பதில்லை. பாவமடா அவள்’’ என்று சொன்ன போது தான் அப்படியும் ஒரு விடயம் இருக்கா என நினைத்தான் நகுலன்.

‘‘உனக்கு வந்து ஏதாவது சொன்னவளே…?’’

‘‘சொன்னதோ…? அழுகிறாளடா. பார்க்கப் பாவமாக இருக்கிறது. உன்னைக் கலியாணம் செய்யாவிட்டால் தான் கன்னியாகவே வாழ்வாளாம்.’’

நகுலன் சிரித்தான்; ‘‘காதலை பலாத்காரத்தால் உண்டாக்க முடியாது. இன்னொருவர் சொல்லி அந்த உணர்வுகள் உருவாக மாட்டாது. அது தானாக உருவாக வேண்டும். ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணின் மீது ஏற்படுகின்ற உணர்வு அந்தப் பெண்ணுக்கும் ஏற்பட வேண்டும். அந்த உணர்வு நட்பாக இருந்தால் நட்புப் பர்ணமிக்கும். சகோதர உணர்வாக இருந்தால் சகோதர பாசம் உண்டாகும். அனுதாபம் ஏற்பட்டால் இரக்க உணர்வு உண்டாகும். இப்படி உணர்வுகளைப் பொறுத்துத் தான் நாம் பேச வேண்டும். எனக்கு ரேணுகா மீது எந்த உணர்வும் ஏற்பட வில்லை. நட்போ சகோதர உணர்வோ ஏற்பட்டாலாவது பரவாயில்லை. ஏற்படாத காதல் உணர்வை எப்படி ஏற்படுத்துவது. தானாக உருவாகும் போது உன்னிடம் வருகிறேன்’’.

‘‘எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசிக்கிறாய்’’ என்றவாறு நகுலனின் தோளில் கைவைத்தான் கஜேந்திரன்

திடுக்கிட்டுத் திரும்பிய நகுலன்; ‘‘கோட்டையைப் பிடித்து என்ன செய்கிறது அதோ அந்த மஞ்சள் பஞ்சாபியோடு நிக்கிறாளே அவளைப் பிடிக்கத்தான். யோசிக்கிறன்.’’

அருமையான ஒரு தெய்வீக அழகு அவளிடம் குடி கொண்டிருக்கு அவளை அடைபவன் பாக்கிய சாலி. விளக்கமாய்ச் சொன்னால் நீ தான் அந்தப் பாக்கிய சாலி’’ என்றான் கஜேந்திரன்.

நகுலன் அதிர்ந்து போனான்; ‘‘ உன்னுடைய வாய்ச் சொல் பலித்தால் நான் மிகவும் சந்தோஷப்படுவன். எதை வைத்துக் கொண்டு அப்படிச் சொல்கிறாய்’’ ஆவலோடு கேட்டான் நகுலன்.

‘‘இதுக்கெல்லாம் நாம் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. பழந்தமிழ் இலக்கியங்களைப் படித்தால் காதலையென்ன வாழ்க்கையையே படித்த மாதிரி. உன்னை அவதானித்துப் பார்த்தேன். நீ முற்றாக மாறிவிட்டாய். அதனால் உன்னைப் பின் தொடர்ந்தேன். நீ விரும்புறவளைக் கண்டு கொண்டேன். பிறகு அவளைக் கவனித்தேன். அவள் சுவாமியைப் பார்க்கும் வேளையில் கூட உன்னைத் தான் பார்க்கிறாள். நீ அவளைப் பார்த்தால்

தலையைக் குனிந்து சிரிக்கிறாள். தோழியரோடு சிரித்துப் பேசும் போது உன்னைப் பார்க்கிறாள். அந்தப் பேச்சும் சிரிப்பும் உனக்காகத்தான் என்று எனக்குத் தெரியும். நீ அவளைப் பாராத வேளையில் அவள் உன்னைப் பார்த்துச் சிரிப்பதும் உன்னைக் கண்டவுடன் அவளது கண்கள் அசையும் அசைவும், முகம் செல்லும் திசையும், உதடுகள் புரியும் ஜாலமும் உன்னை அவள் விரும்புகிறாள். என்பதைச் சொல்கின்றன'' என்றான் கஜேந்திரன். நகுலனுக்கு வியப்பாக இருந்தது.

1094. **யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்**
**தான் நோக்கி மெல்ல நகும்.**

*நான் அவளைப் பார்க்கும் போது அவள் நிலத்தைப் பார்ப்பாள். நான் அவளைப் பார்க்காத பொழுது அவள் என்னைப் பார்த்து தனக்குள் சிரித்து மகிழ்வாள்.*

## சுருங்கிய பார்வை

''என்னை அவள் விரும்புகிறாள் என்று நீ சொல்கிறாயா....?'' ஏக்கத்துடன் கேட்டான் நகுலன்.

''உன்னை அவள் விரும்புகிறாள். வேண்டுமானால் வா போய்க் கேட்போம்.''

கஜேந்திரன் வார்த்தைகளை முடிக்கு முன் நகுலன் அவசரமாகச் சொன்னான்; '' அவள் விரும்பாவிட்டாலும் பரவாயில்லை. நீ போ. நான் ஆறுதலாகக் கேட்கிறேன். உன்னை நம்பிக் கூட வந்தால் நான் செருப்பால் தான் அடிவாங்க வேண்டி வரும்...''

''டேய் இதெல்லாத்தையும் இந்த வயதில் தான்ரா செய்ய வேண்டும். இரண்டு மூன்று வருடங்கள் தான் இதெல்லாம் செய்யலாம் பிறகு கலியாணம் பிள்ளை குட்டி என்று வந்து விடும். அதுக்குப் பிறகு செய்வது தான் தவறு'' என்றான் கஜேந்திரன்.

''அன்றைக்கு நீ திவாகரனை ஜானகி விரும்புகிறாள், என்று கூறி அவனைக் கதைக்கக் கூட்டிக் கொண்டு போய், அவளிடம் அடிவாங்காத குறையாக ஏச்சு வாங்கிக் கொண்டு வந்தனீங்கள். அதை மாதிரித்தான் என்னையும் கூட்டிக் கொண்டு போய் அடி வாங்கித் தர நினைக்கிறாய்''.

''அண்டைக்குப் பேசினவள் தான். ஆனால் இண்டைக்கு அவை இரண்டு பேரும் காதலிக்கினை. திவாகரனுக்கு ஜானகீலை விருப்பம். நெடுக அவளைப் பற்றிச் சொல்லித் தனக்கு உதவி செய்யச் சொல்லிக் கேட்கிறவன். அதற்காகத் தான் ஓர் உதவியாய்ச் செய்தனான். அந்த நேரம் அவள் பேசினவள் தான். இப்ப நிலமை மாறீவிட்டுது. காதலித்து ஒரு பெண்ணை அடையிறதெண்டால் நம் நாட்டிலை நெருப்பாற்றைக் கடக்கிற மாதிரி. ஆயிரம் சோதனைகள் வரும். இதையெல்லாம் சோதனையாகவும் வேதனையாகவும் செய்ய முடியாததாகவும் நினைக்கிறவை காதலிக்கக் கூடாது.

அதற்கு நகுலனால் பதில் சொல்ல முடியவில்லை. சற்று நேரம் யோசித்தான்; “ யோசிக்கிறவன் காதலிக்கக் கூடாது. இப்ப அவளின்ரை விருப்பத்தை அறிய யோசிக்கிற நீ அவள் விரும்பினாப் பிறகு வ்ர்ற நிலைமை எப்படித் தாங்கப் போறாய். அவளிட்டை அழகு மட்டும் தான் இருக்கு. பொருள் ஏதும் இருக்கோ தெரியாது. போட்டிருக்கிற உடைகளையே இரவல் வாங்கிப் போடுற காலம் இது. அதை விட அவள் எந்தச் சாதியோ....?”

கஜேந்திரன் கதைத்துக் கொண்டிருக்கும் போது நகுலன் குறுக்கிட்டான்; “ நீ பயமுறுத்துவதிலும் கெட்டிக்காரன். நான் எதைப் பற்றியும் யோசிக்கேல்லை. சனநடமாட்டமுள்ள இந்த இடத்திலை ஏதாவது கதைக்கப் போனால் கரைச்சல் வரும். என்று நினைக்கிறன். விரும்புறவளும் தனக்கு ஏதாவது பிரச்சினை வருமென்று கண்டால் விலகத்தான் பார்ப்பாள். அதோடு அவள் என்னை விரும்புறாளோ தெரியாது.”

“ அவளின்ரை நடத்தையிலை இருந்து அவள் உன்னை விரும்புகிறாள் என்று என்னால் திடமாகச் சொல்ல முடியும். ஒரு பெண் தான் விரும்புபவனை நேராகக் குறிப்பிட்டுப் பார்க்க மாட்டாள். வேறெங்கோ பார்ப்பது போலப் பார்த்து ஒரு கண்ணைச் சுருக்கிக் கொள்பவளைப் போல தான் விரும்புபவனைப் பார்த்து மெல்லச் சிரிப்பாள். நான் நாலைந்து தினங்களாக அவளைக் கண்காணித்து வருகிறேன். அவள் எங்கோ பார்ப்பது போலப் பார்த்து உன்னைப் பார்க்கிறாள்.. அவள் உன்னைப் பார்க்கும் போது அவளது கண்களும் முகமும் நவரச பாவனையைக் காட்டுகின்றன. நான் அவளுக்கு மிகவும் அண்மையில் நின்று அவளை அவதானித்தேன்” என்றான் கஜேந்திரன்.

இருவரும் அர்ச்சகாவுக்குச் சமீபாகச் சென்று நின்றனர். நகுலன் எங்கோ பார்ப்பது போல் பார்த்து விட்டு கடைக் கண்ணால் அர்ச்சகாவைப் பார்த்தான். அவளும் எங்கோ பார்ப்பது போல்ப் பாசாங்கு செய்து அவனைப் பார்த்துச் சிரித்தாள். நகுலனுக்குச் சில கணங்கள் இவ்வுலக நினைவு இல்லாதிருந்தது.

**1095. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒரு கண்**
**சிறக்கணித்தாள் போல நகும்**

*என்னை நேராக அவள் பார்க்கவில்லையே தவிர, ஒரு கண்ணைச் சுருக்கிக் கொள்பவள் போலச் சுருக்கி என்னைப் பார்த்து தனக்குள் சிரித்து மகிழ்வாள்.*

## பகையில்லாத சொற்கள்

“சில பேர் கோயிலுக்கு வாறது பெம்பிளைப் பிள்ளைகளைப் பார்ப்பதற்காகவும், அவர்களோடு இடிபடவும் தான். நன்றாகப் படித்தவனும் சரி படியாதவனும் சரி இதுக்கென்று தான் வாறார்கள். இதுகளின்ரை இம்சையில் இருந்து மீள முடியாது போல் இருக்கிறது. நாலைந்து நாட்களாக ஒரு குரங்கு எங்களுக்குப் பின்னால் திரிகிறது. அதின்ரை வாலை ஒட்ட நறுக்க வேணும்” சற்றுக் கோபமுள்ளவளைப் போலச் சொன்னாள் அர்ச்சகா.

ஒரு கணம் நகுலன் திகைத்துப் போனான். அவனது கற்பனைக் கோட்டை பிளந்து சரிந்து கொண்டிருந்தது. கஜேந்திரன் பலமாகச் சிரித்தான்; “ நல்ல வேளை இரண்டு குரங்கு என்று சொல்லவில்லை உனக்கு வாலிருக்கோ என்று தடவிப்பார்’’.

‘உனக்கு எல்லாம் விளையாட்டுத் தான். அவளின் பேச்சு எனக்குப் பிடிக்கேல்லை. வா போவம்.’’ என்றான் நகுலன்.

கஜேந்திரன் மீண்டும் விழுந்து விழுந்து சிரித்தான்; “டேய் வீராய்ப்பாகச் செருப்புக் கழட்டிய பல பெட்டையள் காலடிலை சரணடைந்த வரலாறு என்ரை நெஞ்சிலை இருக்கு. ஆரம்பம் இப்படித்தான்ரா. இதுக்கெல்லாம் பயந்தால் காதலிக்க முடியாது. அம்மா அப்பாவையும் கலியாணத் தரகரையும் நம்பியிருக்க வேண்டியது தான். அழகான பெண்ணைப் பார்த்து ஆசைப்பட்டு அவளுக்குப் பின்னால் திரியக் கூடாது.’’

பெரிய படிப்புப் படிச்சவராம் இப்படித்திரிய வெக்கம் இல்லையே?. இரண்டு மூன்று நாட்களால் வெக்கமில்லாமல் எங்களுக்குப் பின்னாலை நாயாய் அலைகிறார் எனக்கெண்டால் உந்த அழுமூஞ்சையை விருப்பமில்லை. உனக்கு விருப்பமே?’’ அர்ச்சகா கேட்டாள்.

‘‘அவன் எங்களைப் பார்க்கவில்லை உன்னைத்தான் பார்க்கிறான். மூஞ்சையிலை அடிச்ச மாதிரி உனக்கு விருப்பமில்லை என்று சொல்லி விடு. போ’’ என்றாள் அர்ச்சகாவின் தோழி.

‘‘உவையோடை கதைத்தால் கரைச்சல். தேர் மட்டும் வருவம் தானே. அவதானித்துப் பார்த்திட்டு ஒரு நாளைக்கு பழைய செருப்புப் போட்டருவம்’’ என்றாள் அர்ச்சகா.

நகுலனுக்கு அவமானமாக இருந்தது. அதோடு கவலையாகவும் இருந்தது; “நாலைந்து நாட்களாக முருகனை முழுமனதோடு வணங்காததற்குத் தண்டனை என நினைத்தவாறு; “நீ வரா விட்டால் நில் நான் போகிறேன்’’ என்று கூறி விட்டு கஜேந்திரனின் பதிலை எதிர் பாராது நடந்தான் நகுலன்.

நகுலனைப் பின் தொடர்ந்து நடந்து வந்த கஜேந்திரன், கோயில் வாசலுக்கருகே வந்து வேப்ப மரநிழலில் அமர்ந்த நகுலனுக்கு அருகில் அமர்ந்து கொண்டான்.

“நீ சின்னப் பிரச்சினைகளுக் கெல்லாம் உணர்ச்சி வசப்படுகிறாய். எல்லாப் பொறுப்பையும் என்னட்டை விடு. நான் வென்று தாறன்.’’ என்றான் கஜேந்திரன். நகுலன் நிமிர்ந்து அவனைப் பார்த்தான். தாங்க முடியாத வேதனையால் நகுலனது கண்கள் கலங்கியிருந்தன.; “அவள் என்னைக் குரங்கு நாய் என்று ஏசுகிறாள்.’’ கலங்கினான் நகுலன்.

‘‘அவளை அடைய வேணுமெண்டு நினைத்தால், அவள் அடித்தாலும் வாங்கத் தான் வேண்டும். காதல் கொண்ட பெண்கள் தம் காதலை வெளிப்படுத்த முன்பு அன்பில்லாத வார்த்தைகளைப் பகைவர்கள் கூறுவதைப் போல் கூறுவார்கள். ஆனால் கூறும் போது அவர்களது உள்ளம் மலரும். முகம் பிரகாசிக்கம். நீ வா அவள் உன்னைப் பார்த்து விட்டு என்ன சொல்கிறாள். என்று பார்ப்போம். அவள்

கூறும் கொடுஞ் சொற்களைக் கூறும் போது அவளது முகம் நாணமடைகிறதா என்று நான் அவதானிக்கிறேன்'' என்றான் கஜேந்திரன்.

அப்பொழுது அர்ச்சகாவும் அவளது தோழிகளும் வந்து அவர்களுக்கு எதிரே நின்றனர்; ''சுவாமியைக் கும்பிட்டு விட்டு வீட்டுக்குச் செல்லலாம் என்று வந்தால் அந்தக் குரங்கு நிக்குது.'' என்றவாறு சுவாமியை வணங்குவது போல நகுலனைப் பார்த்தாள்.

''அவள் உன்னை விரும்புறாள். அதை வெளிப்படுத்தத் தான் கடுஞ் சொற்களைச் சொல்கிறாள். அதனால் ஏற்படும் வாய்தகராறு காதலாய் முடியும். நீ ஒன்றுக்கும் யோசிக்காதை'' என்றான் கஜேந்திரன்.

நகுலன் திரும்பிப் பார்த்தான். அர்ச்சகாவின் கண்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தன.

**1096.. உறாஅ தவர்போல் சொலினும் செறா அர்சொல்
ஒல்லை உணரப்படும்.**

*புறத்தே அன்பில்லாத அயலவர் போல அவன் கடுஞ் சொற்களைச் சொன்னாலும், அவை பகையில்லாத அன்பான சொற்கள் என்று விரைவில் அறிந்து கொள்ளலாம்.*

## குறிப்பு

அவ்விடத்தில் பரவி ஒளிந்த மின் குமிழ்களின் ஒளி வெள்ளம் அர்ச்சகாவினது உடலெங்கும்பட்டுப் பிரகாசித்தது. சில கணங்கள் சந்தித்த அர்ச்சகாவின் கண்களில் புதைந்திருந்த உணர்வுகளை நகுலனால் புரிந்து கொள்ள முடியவில்லை. வெளித்தோற்றத்திற்குக் குளிர்மையானவை போலத் தெரியும் அக்கண்களில் சினத்தின் சாயல் தெரிவதைப் போல இருந்தது. கீழ் உதட்டை மடித்து பற்களால் கடித்தபடி நோக்கிய அர்ச்சகாவைப் பார்க்கும் சக்தி இழந்து நகுலனின் கண்கள் தாழ்ந்து கவரப்பட்டன.

''டேய் அர்ச்சகா நின்று உன்னைப் பார்க்கிறாளடா. ஒரு கணம் நிமிர்ந்து பாரடா. மஞ்சள் தேய்த்துக் குளித்த அவளது முகம் செவ்வானத்தைப் போல சிவந்து கிடக்கிறது. தேனை அளவுக்கதிகமாக உண்ட வண்டு போதையில் மலரின் மேல் அமர்ந்திருந்து தனது சிறகை அசைப்பது போல அவளது இமைகள் போதை மேலீட்டால் துடிக்கின்றன. நிமிர்ந்து பாரடா. அவள் வெகு நேரமாக உன்னைத்தான் பார்த்துக் கொண்டு நிற்கிறாள். வீட்டுக்குச் செல்லப் போகிறாள் போல் தெரிகிறது. அதற்கிடையில் உனது முகதரிசனத்துக்காகக் காத்திருக்கிறாள். நிமிர்ந்து பாரடா.''

கஜேந்திரன் அப்படிச் சொல்லியும் நகுலன் நிமிரவில்லை. அதனால் கஜேந்திரனுக்குக் கோபம் வந்தது. ''உன்னைப் போல முட்டாள்களுக்கு ஏன் காதல். காதலிக்கிற பெண்கள் வெளியே அன்பில்லாத அயலவர்கள் போல கடுஞ் சொற்களைக் கூறுவார்கள். ஆனால் உண்மையில் அவை பகையில்லாத

இனிய சொற்கள் என்பதை நீ அறியவில்லை. உன்னில் விருப்பமில்லா விட்டால் அவள் ஏன் இங்கு வாறாள். நிமிர்ந்து பாரடா'' அதட்டினான் கஜேந்திரன்.

நகுலனுக்குப் பயமாக இருந்தது. ''தற்செயலாக அவள் ஏதாவது முரண்பாடாகக் கதைத்தால் நாளைக்கு ஊர்முழுவதும் தெரிந்து விடும். இவ்வளவு காலமும் கட்டிக் காத்த மானம், ஒழுக்கம் யாவும் ஒரு கணத்தில் போய்விடும். இது தேவை தானா?.'' என்று உள் மனம் கூறி எச்சரித்தது. இருந்த போதும் அர்ச்சகா மீது கொண்ட மோகம் மனதைத் தாண்டி வெளிப்பட்டது மெதுவாக நகுலன் தலையை நிமிர்ந்து அர்ச்சகாவைப் பார்த்தான். அவளின் உதடுகள் மெல்லப் பிரிந்து நளினமாக அசைந்து மலர்வதைப் போல் இருந்தது. அவனால் அதை நம்ப முடியவில்லை. பின்னால் தொங்கிய பின்னல் ஒன்றை முற்பக்கத்திற்கு எடுத்து அதன் நுனிப் பாகத்தைப் பிரித்துப் பின்னினாள். பின் பின்னலைத் தூக்கிப் பின்னால் போட்டு விட்டு, வலது கையால் தனது முகத்தைத் தடவி விட்டு கீழ் உதட்டைக் கடித்தாள்.

''மடையா, அவளின் சைகை மொழி உனக்க விளங்கவில்லையா. தனது கூந்தலைப் பிரித்துப் பின்னியது, கையால் முகத்தைத் தடவி பின் உதட்டைக் கடித்தது யாவும் காதல் கொண்டமையை வெளிப்படுத்தும் செய்கைகள். பார் போறாள். இப்ப திரும்புவன்'' என்று கஜேந்திரன் சொல்லி முடிக்கு முன் அர்ச்சகா திரும்பிப் பார்த்தாள்.

கஜேந்திரன் பலமாகச் சிரித்தான். காதலில் பல சைகைகள் இருக்கு. மொழியால் பேசுவதை விட சைகை மூலம் பேசுவது எளிதானது. அத்துடன் வெட்கமும் ஏற்படாது. காதலிக்கும் ஒரு பெண் தனது வெட்கத்தை விட்டு ஓர் ஆடவனுக்கு வார்த்தைகளால் எதுவும் சொல்ல மாட்டாள். சைகைகள் மூலமும் கடுஞ்சொற்கள் மூலமும் தான் ஆரம்பத்தில் தொடர்பு கொள்வாள். இதை ஆடவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவள் கூறியவை உனக்குத் தான் என்று நீ எப்படி நினைக்க முடியும். எம்மோடு பலர் இருந்தவர்கள்'' என்று கூறிவிட்டு நிறுத்தினான் கஜேந்திரன்.

நகுலனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவனது மனம் சஞ்சலப்பட்டது. அதை உணர்ந்த கஜேந்திரன் சொன்னான்; ''நீ முழுமடையன். எல்லாவற்றையும் நம்பி விடுவாய். உன்னை விரும்பா விட்டால் அவள் உன்னை ஏன் சுற்றுவாள்? உன்னை ஏன் பார்ப்பாள் போகும்போது ஏன் திரும்புவாள்?. ஒரு பெண் தனது காதலை எதிர்மறையாகத் தான் ஆரம்பத்தில் வெளிப்படுத்துவாள். நீ கவலைப்படாதை'' என்றான் கஜேந்திரன்.

**1097. செறா அச் சிறுசொல்லும் செற்றார் போல் நோக்கும்**
**உறா அர் போன்று உற்றார் குறிப்பு.**

*பகையில்லாத கடுஞ் சொற்களும் பகைவர்கள் போலப் பார்க்கும் பார்வையும், வெளித்தோற்றத்திற்கு அயலவர் போல இருந்து கொண்டு உள்ளத்தில் அன்பு கொண்ட வரின் குறிப்பாகும்.*

## மேலும் ஓர்அழகு

நடந்து சென்ற அர்ச்சகா கோயிலின் முன்னால் பரப்பப் பட்டிருந்த மணலைக் கைகளால் பரவி விட்டு அமர்ந்தாள். தோழிகள் அவளைச் சுற்றி அமர்ந்தனர்.

தோழி ஒருத்தி வாங்கி வந்த கச்சான் கடலைப் பொதியைத் திறந்து தனது கையை விட்டுச் சில கச்சான் கடலைகளை எடுத்துக் கொண்டு பையை நீட்டினாள். அதைப் பெற்ற அர்ச்சகா கொஞ்சம் கச்சானை எடுத்து விட்டு மற்றத் தோழிக்குக் கொடுத்தாள்.

''சுவாமியைக் கும்பிட்டு விட்டு வீட்டுக்குச் செல்லலா மென்று வந்தால் அந்தக் குரங்கு நிக்குது என்றவள், கும்பிட்டு விட்டுக் குரங்கைப் பார்க்காமல் போகலாம் தானே. ஏன் மணலில் இருக்கிறாள். அதை விட உன்னைப் பார்ப்பதற்கு வசதியான இடமாகப் பார்த்துத் தான் சென்று அமர்ந்திருக்கிறாள். உன்னைப் பார்க்க விருப்பமில்லா விட்டால் மறைவான இடத்தில் இருக்கலாம் தானே? நீ பார்க்கக் கூடிய இடத்திலா இருக்க வேண்டும்'' என்று கேட்டான் கஜேந்திரன்.

கஜேந்திரன் சொல்வதில் நியாயம் இருப்பதாக நகுலனுக்குத் தோன்றியது. அவள் தன் மீது கொண்ட காதலை வெளிப்படுத்தத் தான் கடுஞ்சொற்களைப் பாவித்தாளோ..? என்னில் அன்பில்லாதவள் போல் பேசிய அவள், சுவாமியைக் கும்பிட்டு விட்டு ஏன் என் எதிரில் அமர வேண்டும்.'' அவற்றை நினைக்க நகுலனக்குத் தலையைச் சுற்றியது. ''பெண்கள் ஒரு புதிர் என்பார்கள். கன்னிப்பெண்கள் புதிருக்குப் புதிரானவர்களோ...?.''

''என்னடா யோசிக்கிறாய். அவள் தன்னைப் பார்க்கட்டும் என்று சொல்லி உனக்கெதிரே வந்து தவமிருக்கிறாள். நீ விசரனைப் போல யோசித்துக் கொண்டிருக்கிறாய். தத்துவத்தை ஒரு பாடமாய் பட்டப்படிப்பிலை முதலாம் வருடத்திலை படித்த உனக்கு காதல் தத்துவத்தையோ காதல் உளவியலையோ புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறத்தை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கு. வந்திருந்ததிலை இருந்து பத்துத் தரம் பார்த்திட்டாள். மணப் பெண் மாதிரி தலையைக் குனிந்து கொண்டிருந்தால் உனக்கு அது எப்படித் தெரியும். அவள் உனக்கு முன்னால் வந்து இருப்பதில் இருந்து அவள் உன்னை விரும்புறாள் என்பதை அறிந்து கொள்ள முடியாத உன்னைப் பற்றி அவள் கேவலமாக நினைக்கப் போறாள். நீ உண்மையில் வீரமுள்ள ஆண்மகனென்றால் நிமிர்ந்து பார்த்துச் சிரி. அதனால் அவள் அடித்தாலும் பரவாயில்லை''. என்றான் கஜேந்திரன்.

கஜேந்திரனது பேச்சைக் கேட்ட நகுலனுக்கு ஓர் அசட்டுத் துணிவு வந்தது. அவள் ஏதாவது முரட்டுத் தனமாகக் கதைத்தால் காரமாக இரண்டு வார்த்தைகள் பேச வேண்டும் என்று நினைத்தான் நகுலன்.

''காதலிப்பவர்களுக்கு யாருக்கும் வராத துணிவு வரும். சாதிக்க வேண்டும். என்ற எண்ணம் வரும். யாருக்கும் அஞ்சாத பயமற்ற நிலை உண்டாகும் அருகில் இருப்போரைத் தெரியாத மயக்கம் உண்டாகும். பேச வேண்டும் என்ற துடிப்பு வரும். இவையொன்றையும் உன்னிடம் நான் காணவில்லை'' என்றான் கஜேந்திரன்.

நகுலன் ரோசத்துடன் நிமிர்ந்து பார்த்தான். அர்ச்சகா கச்சான் கடலையின் கோதை பற்களால் கடித்து உடைத்துக் கொண்டிருந்தாள். துடிப்பான வார்த்தைகளை அள்ளி வீசிய அவளது உதடுகள் செயலிழந்து ஒரு கணம் நின்றன. நகுலன் அவளைத் தனது கண்களைத் தாழ்த்திப் பார்த்தான். அவனது பார்வையின் பொருளை உணர்ந்த அர்சகாவின் கண்கள் தாழ்ந்த கொண்டன. அவளது உதடுகள் பிரிந்து மெல்லப் பிரிய முறுவல் வெளிப்பட்டது. கோடை

கால வானம் லேசாக இருண்ட போது தோன்றிய மின்னலைப்போல் ஒரு சிறு கீறாக தென்பட்ட சிரிப்பு மறைய சில கணங்கள் சென்றன. அப்பொழுது அவளின் முகம் மலர்ந்திருந்தது. அது அவளது அழகை மேலும் அதிகரிக்கச் செய்தது. நகுலனால் தன் கண்களை நம்ப முடியவில்லை. அர்ச்சகா மீண்டும் தன் தலையை நிமிர்த்தினாள். நகுலனது விழிகள் தாழ்ந்து நோக்குவதைக் கண்டதும் மீண்டும் அவளின் உதடுகளில் புன்னகைக் கீறு ஒன்று தென்பட்டது.

**1098. அசை இயற்கு உண்டு ஆண்டு ஓர் ஏஎர்யான் நோக்கப்
பசையினன் பைய நகும்.**

*நான் அவளைப் பார்க்கும் பொழுது அப்பார்வையின் பொருளை அறிந்து சிரிப்பாள். அசையும் மென்மையான இயல்பை உடைய அவளின் அழகு அப்பொழுது அதிகரிக்கும்.*

# இயல்பு

அன்று அர்ச்சகாவுடனும் தோழிகளுடனும் நடுத்தர வயதுடைய ஒருத்தரும் நடுத்தர வயதுடைய பெண்ணும் கோயிலுக்கு வந்திருந்தனர். வெளியெ அமைக்கப்பட்ட குழாய் நீரில் எல்லோரும் கால்களைக் கழுவி விட்டு வேப்ப மர நிழலில் இருந்த கற்பூர வியாபாரியிடம் கற்பூரம் வாங்கிக் கொண்டு வாசலுக்குச் சென்றனர்.

நடுத்தர வயதுள்ள பெண்ணின் கையில் அர்ச்சனைத் தட்டம் இருந்தது. நடுத்தர வயதுடையவர் தேங்காயை அடித்து விட்டு எரிந்து கொண்டிருந்த கற்பூரச் சட்டிக்குள் கற்பூரங்களைப் போட்டு விட்டு மேலெழுந்த கற்பூரச் சுவாலையை தொட்டு வணங்கி விட்டு அட்டாங்க நமஸ்காரம் செய்தார். கூட வந்த நடுத்தர வயதுடைய பெண் கற்பூரச் சுவாலையைத் தொட்டு வணங்கி விட்டுப் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தாள்.

அனைவரும் கோயிலின் உள்ளே சென்றனர். அர்ச்சகா ஒரு முறை கூடத் திரும்பிப்பாராதது நகுலனுக்குத் துன்பத்தைக் கொடுத்தது. கஜேந்திரன் அவளது செயல்களைக் கண்காணித்து அவள் அவனைக் காதலிக்கிறாள் என்று சொன்ன போதும் அவனது மனம் அதை நம்ப மறுத்தது.

ஒருவரது செயலை இன்னொருவர் தவறாக விளங்கிக் கொள்வதும் உண்டு. அர்ச்சகா திரும்பிப் பார்த்தால் யாரைப் பார்க்கிறாளோ தெரியவில்லை. ஆனால் கஜேந்திரன் என்னைப் பார்ப்பதாக நினைக்கிறான். அப்படிப் பார்ப்பதாக இருந்தால் இன்று ஒரு முறையாவது திரும்பிப் பார்த்திருக்கலாம் தானே. அதை நினைக்க அவனது மனம் வாடிச் சோர்ந்தது.

கால்களைக் கழுவி விட்டுத் தான் கொண்டு வந்த கற்பூரத்தை கற்பூரச் சட்டிக்குள் போட்டு விட்டு தேங்காயை உடைத்தான். பின்பு அட்டாங்க நமஸ்காரம் செய்து விட்டுக் கோயிலுனுள்ச் சென்றான். அர்ச்சகா அர்ச்சனைச் சீட்டை எடுக்குமிடத்தில் வரிசையாக நின்ற பெண்களோடு நின்றாள். நகுலன்

மெதுவாகச் சென்று ஆண்கள் நிற்கும் வரிசையில் நின்று அர்ச்சகாவைப் பார்த்தான். அவள் அவன் நிற்கும் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை.

அவள் அர்ச்சனை செய்யும் போது அவளுக்கு மிக அருகில் சென்று நின்று கடைக்கண்களால் அவளைப் பார்த்தான். அவள் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. அது நகுலனுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

அர்ச்சனை முடிந்த பின்பு அவள் வீதியை வலம் வந்தாள். அவளின் பின்னால் அவளின் தோழியர்களும் நடுத்தர வயதுடையவர்களும் வந்தனர்.

அர்ச்சகாவும் அந்த நடுத்தர வயதுடையவர்களும் கதைத்த கதையில் இருந்து அவர்கள் அவளின் பெற்றோரென அறிந்து கொண்டான் நகுலன். அர்ச்சகாவும் தோழியரும் மற்றைய நாட்களில் அரட்டை அடிப்பார்கள். அன்று அவர்கள் அமைதியாக மரப்பொம்மைகளைப் போலவே காட்சி கொடுத்தனர்.

ஒரு மணி நேரமாக அவர்களின் பின் நகுலன் சென்ற போதும் அர்ச்சகா ஒரு முறையேனும் திரும்பிப் பார்க்கவில்லை. அது நகுலனுக்கு வேதனையைக் கொடுத்தது. வசந்த மண்டபம் திறந்திருந்தது. அலங்காரங்களுடன் வீற்றிருந்த முருகப்பெருமானைக் கை கூப்பித் தொழுதான். அவனது கண்கள் கலங்கி உடைப்பெடுத்தன. சால்வைத் தலைப்பால் துடைத்தவாறு வெளியே வந்தான்.

வெளியே கஜேந்திரன் சிரித்தபடி அவனை வரவேற்றான். அவனது முகம் என்று மில்லாதவாறு வாடி இருப்பதைக் கண்ட கஜேந்திரன் கேட்பான்; ‘‘நகுல், உனக்கு என்ன நடந்தது’’ வெகு நேரம் வரை பேசாதிருந்த நகுலன் தனது மனதில் இருந்தவற்றைத் துயரத்துடன் சொன்னான்.

கஜேந்திரன் பலமாகச் சிரித்தான். ‘‘டேய் உன்னைப் போல மடையன் யாரும் இருக்க மாட்டான். ஒரு பெண் பெற்றோர் அல்லது தமக்குப் பிடிக்காதவர்கள் கூட இருந்தால் ஒருவரை ஒருவர் அறியாதவர்கள் போலத் தான் நடந்து கொள்வார்கள். தகப்பன் எப்படியானவரோ தெரியாது. கோபக்காரராக இருந்தால் உன்னை அவள் பார்ப்பதைக் கண்டால் எவ்வளவு பிரச்சினைகள் வரும். தமிழ் படிக்கிறாய். காதலைப் பற்றி எதுவும் தெரியாமல் இருக்கிறாய். பிறர் மத்தியில் அறியாதவர்கள் போல நடிப்பது காதலரின் இயல்பெடா.. கவலைப் படாதை.’’

1099. **ஏதிலார் போலப் பொழுது நோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே யுள.**

*பிறர் இருக்கும் வேளையில் அயலவர் போல அன்பில்லாமல் பொது நோக்குடன் பார்த்தல் மனமொத்த காதலரிடம் உள்ள ஓர் இயல்பாகும்.*

## பயன் இல்லாதவை

‘‘நீ எதைச் சொன்னாலும் எனக்கு நம்பிக்கை இல்லை. வீனாய் அவள் மீது ஆசையை வைத்து தீராத துயருக்கு ஆளாகி விட்டேன் போல் தெரிகிறது. நான் அவளின் திமிரான வார்த்தைகளால் அவமானப்பட்டு அவளை வெறுத்து

ஒதுக்கினாலும் நீ தான் அவள் என்னை விரும்புகிறாள் என்று கூறி எனது நம்பிக்கையை வளர்த்தனீ. அவள் இன்றைக்கு நடந்து கொண்ட முறையில் இருந்து அவள் என்னை விரும்பவில்லை. என்று தெளிவாகத் தெரிகிறது'' அழுவதைப் போல் சொன்னான் நகுலன்.

''காதல் என்றால் சோதனைகள். வேதனைகள் எல்லாம் வரத்தான் செய்யும். காதலர்கள் கதைத்தால் தான் பிரச்சினைகள் வரும் என்றில்லை. கதைக்காமலும் பிரச்சினைகள் வரும். ஒரு கன்னிப் பெண்ணின் செயல்கள் நேரத்திற்கு நேரம் மாற்றமடையும். அவள் சூழ்நிலைக்கேற்ப மாறித்தான் நடப்பாள். காதலிக்கும் போது ஒரு பெண் பலருக்குப் பயப்பட வேண்டும். பலரின் விருப்பத்திற்கு இசைந்து நடக்க வேண்டும்...'' கஜேந்திரன் கதைக்கும் போது நகுலன் சற்றுக் கோபத்துடன் குறுக்கிட்டான்; ''நீ பெரிய ஞானி மாதிரி தத்துவம் பேசுவாய். உந்தத் தத்துவங்களெல்லாம் புத்தகங்களிலை எழுதவும், மேடைகளில் பேசவும் தான் சரிப்பட்டு வரும். இனிக் கதைக்காதை''.

''புத்தகங்களில் எழுதவும் மேடையில் பேசவும் அல்ல. நான் சொல்பவை வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும் உதவும். நீ ஆண, அவளோடு போய்க் கதைக்கலாம்.; உன்னுடைய விருப்பத்தை வெளியிடலாம் தானே? நீ ஏன் அவளின் அருகில் செல்லப் பயப்படுகிறாய் பயம்... அதே மாதிரித்தான் அவளும் உன்னோடு பேசப் பயப்பிடுவள். இல்லாவிட்டால் கூச்சப்படுவள். காதலிக்கிறவை பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் வீணான கற்பனைகள் செய்வதையும் விட்டுவிடல் வேண்டும். அவள் ஓர் ஆடவனுடன் கதைத்தால் நீ காதல் என்று தான் எடுப்பாய். அது தவறு. அதைப் போலத் தான் அவளது செயல்களையும் தவறாக எடுக்கிறாய். இன்று அவள் உன்னைப் பார்க்கவில்லை. என்பதற்காக அவள் உன்னை விரும்பவில்லை. என்று நினைத்துக் கவலைப்படுகிறாய். அவள் விரும்பா விட்டால் விடன். ஏன் கவலைப் ப்ரறாய்?. நீ வா உன்ரை விருப்பத்தை அவள் அறிய வேணும். நீ அறிய வைக்காது கற்பனைகள் செய்வதால் துன்பம் தான் மிஞ்சும்.''

''உன்ரை தத்துவ மொன்றும் எனக்குத் தேவையில்லை. நீ உன்ரை வேலையைப் பார்.'' என்ற நகுலன் திரும்பி நடந்தான்.

''டேய் டேய் உன்ரை அர்ச்சகா தோழியரோடை வாறாளெடா...'' என்றான் கஜேந்திரன். நகுலன் திரும்பிப் பார்த்தான். அர்ச்சகா அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவளது கண்கள் அவனது முகத்தை நோக்கியிருந்தன. நகுலனால் அவளது முகத்தைப் பார்க்க முடியவில்லை தலையைக் குனிந்தான்.

''மடையா உன்னைப் பார்ப்பதற்காக உன்னை நோக்கி வந்து கொண்டிருப்பவளைப் பாராமல் விட்டு விட்டு பின் அவள் பார்க்கவில்லை என்று அழுது தீர்ப்பாய். நிமிர்ந்து பாரடா துணிச்சல் இல்லாத உனக்கெல்லாம் என்னத்துக்குக் காதல்'' கஜேந்திரன் கோபமாகச் சொன்னான்.

நிமிர்ந்து அர்ச்சகாவைப் பார்த்தான் நகுலன். இருவரது விழிகளும் சில கணங்கள் சந்தித்தன. நகுலனின் உடல் சிலிர்த்தது. நரம்புகளுக்குள்ளால் சூடாக ஏதோ ஓடுவதைப் போன்ற பிரமை. ''நீ சொல்லாமல் விட்டாலும் உனது கண்கள் கூறும். கவிதையை என்னால் புரிந்து கொள்ள முடியும்.'' என்று அர்ச்சகாவின் விழிகள் சொல்வது போல இருந்தது. நகுலன் கண் இமைக்காது

அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவளும் அவனைப் பார்த்துக் கொண்டு வந்தாள்.

அவளது அழகான கண்கள் ஆயிரமாயிரம் வார்த்தைகளை பேசின. முதல் முறையாக நகுலன் அர்ச்சகா தன்னை விரும்புவதை உணர்ந்து கொண்டான்.

‘‘காதலர் இருவரது கண்களும் ஒத்த பார்வையில் அன்பால் ஒன்று பட்டால் பேச்சுத் தேவையில்லை’’ என்றான் கஜேந்திரன்.

**1100. கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல.**

*காதலர் இருவரது கண்களும் நோக்கால் ஒத்திருந்து அன்பு செய்யுமானால் வாய்ச் சொற்களால் எந்தப் பயனும் ஏற்படாது.*

## ஐம்புல இன்பம்

அன்று அர்ச்சகா மிகவும் அழகாக இருந்தாள். முழுகியமையால் அவளது நீண்ட தலைமுடி காய்ந்து காற்றில் பறந்தது. பின்னாமல் சேர்த்துக் கட்டிய கூந்தலில் மல்லிகைப் பூ வைத்திருந்தாள். அழகான நெற்றியில் முருகனின் திரு நீறும் சந்தணமும் பொலிந்து கண்களை வசீகரித்தது. அழகான பச்சைக் காஞ்சி புரத்தில் தோகையை விரித்து ஆடும் மயிலின் சாயலில் மெல்ல நடந்து வந்த அர்ச்சகாவை நகுலனின் கண்கள் முழுதாக விழுங்கின.

நகுலன் பார்த்த போதும் அவளது விழிகள் தாழாது நாணம் கொண்டு மூடித்திறந்தன. காலையில் கோயிலின் உள் காணாதவளைப் போல் சென்ற அர்ச்சகா வெளியே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு வந்தது நகுலனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மெல்ல நடந்து கோயிலுக்கு வெளியே வந்த அர்ச்சகா முற்பக்கம் சென்று விட்டுத் திரும்பிக் கோயிலினுள் சென்றாள். உள்ளே செல்லு முன் வெளிமண்டபத்தில் நின்ற அர்ச்சகா திரும்பி நகுலனைப் பார்த்தாள். அவளது வலது கரம் கூந்தலைத் தொட்டுத் தடவுவது போலத் தடவி விட்டு மேலெழுந்து அசைந்தது.

‘‘பார்த்தியா உன்னைப் பார்க்கவென்று தான் அவள் கோயிலுக்குள்ளிருந்து வெளியே வந்திருக்கிறாள். தாய் தகப்பனுக்கு முன்னால் உன்னைப் பார்த்து கூந்தலைச் சீர் செய்வது போலக் கையை அசைக்க முடியுமா…? இனி நீ தான் போய்க் கதைக்க வேண்டும்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘வா வீட்டை போய்க் கதைப்பம்’’ என்ற நகுலன் முன்னே செல்ல கஜேந்திரன் பின்னால் சென்றான்.

நகுலனின் வீட்டுக்கு அடிக்கடி கஜேந்திரன் வருவதால் அவனைக் கண்ட நகுலனின் தாய் நகுலாம்பிகை; ‘‘கையைக் கழுவி விட்டு வாருங்கோ சாப்பிட’’ என்றாள்.

நகுலனும் கஜேந்திரனும் பேசாமல் இருந்து சாப்பிட்டனர்; ‘‘ தம்பி இப்ப நகுலன்ரை போக்கு மாறி விட்டது. நேரத்திற்கு வாறானில்லை; ஒழுங்காய்ச் சாப்பிர்றானில்லை; எந்த நேரமும் யோசித்துக் கொண்டே இருக்கிறான். பல்கலைக்கழகத்திலை ஏதாவது பிரச்சினையே’’ என்று கேட்டாள் நகுலாம்பிகை.

‘‘இல்லை கோயிலிலை தான் பிரச்சினை’’ என்று சொல்ல வாயுன்னிய கஜேந்திரன் நகுலனைப் பார்த்துச் சிரித்து விட்டுச் சொன்னான்; ‘‘இப்ப அவன் ஓர் ஆராய்ச்சி செய்கிறான். அதாலை கொஞ்சம் பித்துப் பிடித்தவன் மாதிரித்தான் இருப்பான். கொஞ்ச நாள் செல்ல சரி வரும்’’ என்றான். நகுலன் கண்களால் கஜேந்திரனை முறாய்த்தான்.

சாப்பிட்ட பின்பு இருவரும் முற்றத்தில் நின்ற வேப்ப மர நிழலில் வந்து அமர்ந்தனர். கடும் கோடை வெப்பத்தையும் மீறி குளிர்ந்த காற்று வீசியது.

இன்றைய பார்வையில் இருந்து அர்ச்சகா உன்னை விரும்புவது தெரியுது. நான் காதலித்து அனுபவப்பட்டதாலை சொல்லுறன் நீ அவளைத் தனிமையிலை சந்தித்துக் கதைக்கிறது நல்லது’’. எப்படிச் சந்திக்கிறது என்றான் நகுலன்.

‘‘சந்திக்க வேணுமெண்டு நினைத்தால் சந்திக்கலாம். உனக்குத் தெரியுந் தானே நான் வித்தியாவை விரும்புவது. ஆரம்பத்தில் அவள் எவ்வளவு திமிராக நடந்தவள். அவளைக் காதலிக்க வேண்டுமென்று நினைத்து அவள் போகும் இடமெல்லாத்திற்கும் போனேன். அவள் செருப்பைக் கழற்றிக் காட்டினவள். இருந்தும் நான் விடேல்லை. எப்படியென்றாலும் அவளை மயக்க வேணுமென்று நினைத்தன். முயற்சி செய்தால் விரும்புற பெண்ணை அடையலாம். முதலில் அவர்கள் கடுமையாகத் தான் நடப்பினை. பிறகு கைக்குள் அகப்பட்ட கோழி மாதிரி அடங்கி விடுவினை. வித்தியா தான் என்ரை உயிர். ஒரு மனிதன் ஐம்புலன்களால் வரும் இன்பங்களை வெவ்வேறான நேரங்களில் தனித்தனியே தான் அனுபவிக்க முடியும். ஆனால் நான் எனது வித்தியாவுக்கு அருகில் இருந்தேனென்றால் ஐம்புலன்களினால் பெறும் இன்பங்கள் அனைத்தையும் ஒரே நேரத்தில் ஒன்றாகப் பெற்றுக் கொள்வேன். அந்த இன்பங்களை வழங்க அன்பு செலுத்திற காதலியால் மட்டும் தான் முடியும். உனக்கு அனுபவமில்லை. முற்றத்தில் நிற்கும் மல்லிகையின் மணத்தை விட வித்தியாவின் கூந்தலிலை இருக்கிற மல்லிகைக்கு மணம் அதிகம். அத்துடன் அதை எடுத்து முகர்ந்தால் வித்தியாவை அணைத்துத் தழுவுற இன்பம் கிடைக்கும்’’ கஜேந்திரன் புலம்பிக் கொண்டிருந்தான்.

**1101. கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.**

*கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், தொட்டும் அனுபவிக்கின்ற இன்பங்களும் ஒளி பொருந்திய வளையலை அணிந்த இவளிடம் உள்ளன.*

# மருந்து

பகல் உணவை உண்டு விட்டுச் சிறிது நேரம் களைப்பாறிய கஜேந்திரனும் நகுலனும் திரும்பவும் கோயிலுக்கு வந்தனர். கோயிலின் முன்னால் நின்ற வேப்ப மரத்தின் கீழ் வித்தியா தனது பல்கலைக்கழகத் தோழிகளுடன் இருந்தாள். கஜேந்திரனைக் கண்டதும் எழுந்து அவனருகே வந்தாள்.

‘‘மூன்று நாட்களாக நான் உம்மைத் தேடிக் களைத்து விட்டேன். மூன்று நாட்களுக்கு உம்மால் என்னைப் பாராமல் இருக்க எப்படி முடிந்தது?.’’ கஜேந்திரனின் குரல் கரகரத்தது.

‘‘நான் என்ன செய்வது அம்மாவுக்குச் சுகமில்லை. எழும்பி நடக்கக் கஷ்டப்பட்டா அவாவையும் கவனித்து, அவர் செய்யும் வேலைகளையும் நான் தானே செய்ய வேண்டும்.’’ கவலையோடு சொன்னாள் வித்தியா.

‘‘அது தானே பார்த்தன். அம்மாவின் வருத்தம் தான் உம்மை வராமல் பண்ணியது. மூன்று நாட்களும் துடிதுடித்துப் போனேன். உம்மைப் பார்க்கா விட்டால் கைகாலெல்லாம் மடக்கப்பட்ட நோயாளியாகி விடுவேன். உம்மைக் கண்டதும் எனக்கு வந்த நோயெல்லாம் பறந்து விடும்’’.

‘‘வழியாதைங்கோ பல பேர் நிக்கினை.’’ சினந்தாள் வித்தியா.

கஜேந்திரன் அதன் பின் பேசவில்லை; ‘‘நகுலன் உம்மைப் பற்றி என்னிடம் ஒரு பிள்ளை விசாரித்தது. அவை கொழும்பிலை இருந்து விட்டு இப்பத் தான் யாழ்ப்பாணம் வந்திருக்கினை. உம்மை எப்படி அவளுக்குத் தெரியும். என்று நான் யோசிச்சனான்.’’ என்று வித்தியா சொல்லிக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் குறுக்கிட்டான்.; ‘‘யார் அர்ச்சகாவே? அவளை உமக்கு எப்படித் தெரியும்.’’

‘‘உங்களுக்கு எப்படி அவளின் பெயர் தெரியும்?’’ கண்டிப்புடன் சொற்கள் வெளி வந்தன.

‘‘நகுலனைப் பற்றி அவள் விசாரித்ததில் இருந்தே உமக்குப் புரியவில்லையா...அவன் நகுலன்ரை காதலி என்று’’

‘‘என்ன நகுலன்ரை காதலியோ? அது தான் அவர் நாணிக் கோணிக் கேட்டவா. அவள் வந்து ஒரு கிழமைகூட ஆகவில்லை. அதுக்குள்ளை ...’’ வித்தியா பேசிக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் குறுக்கிட்டான்; ‘‘இதுக்கெல்லாம் நாள் தேவையே? நிமிசம் காணும். உமக்கு என்னைப் பிடிக்கத்தான் வருடங்கள் பல எடுத்தன.. நகுலன் அதிட்டமுள்ளவன். கண்டண்டைக்கே மடக்கிப் போட்டான்.’’

‘‘அர்ச்சகா என்னுடைய சொந்தக்காரி. தகப்பன் கொழும்பிலை வேலை செய்தவர். இப்ப ஓய்வெடுத்து விட்டார். அதாலை ஊரோடு வந்திட்டடினை’’ என்றாள் வித்தியா.

‘‘அப்ப எல்லா விஷயமும் சுலபமாகிப் போய்ச்சு. அர்ச்சகா தன்னைப் பார்த்துச் சிரிக்காவிட்டால் சாகப் போறதாய்ச் சொன்னதாகச் சொல்லு’’ என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது ; ‘‘வித்தியா’’ என்று ஒரு குரல் இனிமையாக ஒலித்தது.

‘‘நகுலன் திரும்பிப் பார்த்தான் அழகான தேவதையைப் போல அர்ச்சகா வித்தியாவின் அருகில் நின்றாள். அவளின் அழகான முகம் நாணத்தால் சிவந்திருந்தது. கதைக்கச் சற்று தடுமாறினாள்.

‘‘அர்ச்சகா இவர் தான் நகுலன். தமிழைச் சிறப்புப் பாடமாகப் பல்கலைக்கழகத்தில் கற்கிறார். சரியான கெட்டிக்காரன். நாடகம் சிறுகதை கவிதை யெல்லாம் எழுதுவார்.’’ என்றாள் வித்தியா.

அர்ச்சகாவின் கண்கள் நகுலனின் பக்கம் திரும்பி மகிழ்ந்து தாழ்ந்தன; ‘‘இவர் கஜேந்திரன் என்னோடு பல்கலைக்கழகத்தில் படிப்பவர். நகுலனின் உயிர்தோழர். பிறகு இவரைப் பற்றிச் சொல்கிறேன்’’.

அர்ச்சகா இருவரையும் பார்த்துச் சிரித்தாள். அவளின் முகத்தில் படர்ந்திருந்த நாணம் கண்களைத் திசை மாற்றியது. ‘‘வா வித்தியா கடைப் பக்கம் போவம்’’ என்றாள் அர்ச்சகா. வித்தியா அவளுடன் புறப்பட்டாள்.

‘‘மூன்று நாட்களாக நான் வித்தியாவைக் காணவில்லை. இன்றைக்குக் கண்டு கதைக்க முன்னம் அவள் வந்து அழைத்துச் செல்கிறாள். என்னால் வித்தியாவைப் பார்க்காமல் ஒரு கணமும் இருக்க முடியவில்லை. நோயை நிக்க பயன்படுவது மருந்து இவளால் ஏற்பட்ட நோய் தீர வேண்டுமானால் இவளைத் தரிசிக்க வேண்டும். இல்லா விட்டால் நோய் அதிகரித்து விடும். இவளால் ஏற்பட்ட எல்லா நோய்க்கும் மருந்து. இவள் தான்’’ என்றான் கஜேந்திரன்.

1102. **பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை**
**தன்நோய்க்குத் தானே மருந்து.**

*நோயை நீக்கப் பயன்படுவது மருந்தாகும். ஆனால் அணிகலன்களை அணிந்த இவளால் வந்த நோய்க்கு இவளே மருந்தாக இருக்கிறாள்.*

## தேவர்உலகிலும் மேலானஇன்பம்

வெகுநேரமாகக் காத்திருந்தும் வித்தியா வரவில்லை. அதனால் கஜேந்திரனுக்கு பொறுக்க முடியாத அவதியாக இருந்தது. மூன்று நாட்களுக்குப் பின் வந்தவள் சிறிது நேரம் நின்று கதைத்திருக்கலாம் என்று நினைத்தான் கஜேந்திரன்.

‘‘நான் அர்ச்சகாவைக் காணவில்லை என்று துடித்தால் என்னைப் பற்றிக் கேவலமாகச் சொல்வாய், இப்ப நீ ஏன் துடிக்கிறாய். நான் தான் முடிவை அறிய

வேண்டுமென்பதற்காக அவதிப்பட்டனான். நீ என்னத்திற்கு அவதிப்படுகிறாய்? நீயும் விரும்புறாய், அவளும் விரும்புறாள்; வீட்டாரும் விரும்புகினை பிறகென்ற அவதி'' சிரித்தான் நகுலன். ''உனக்கு இதுகளொன்றும் விளங்காது. காதலிக்க முன் அவள் விரும்புவாளோ என்ற அவதி மனதில் இருக்கும். அவள் சம்மதம் சொல்லி விட்டால் வேலை வெட்டிகள் யாவற்றையும் ஒதுக்கித் தள்ளி விட்டு அவளோடு நாள் முழுவதும் இருக்க வேண்டும். என்ற நினைவு வரும். அப்படியான நிலை வந்த பின் அவளைத் தொட்டு அணைக்க வேண்டுமென்ற நினைவு வரும். இப்படிக் காதலிக்கத் தொடங்கினால் நினைவுகளுக்கு எல்லையே இராது. இனி போகப் போக உனக்கும் அது புரியும்'' என்றான் கஜேந்திரன்.

''சரி வா போய்ப் பார்ப்பம்'' என்றான் நகுலன்.

இருவரும், அர்ச்சகாவும் வித்தியாவும் சென்ற திசையை நோக்கிச் சென்றனர். ஒரு மணி நேரம் தேடியும், அவர்கள் இருவரையும் காணவில்லை. கஜேந்திரனுக்கு துக்கமாக இருந்தது; ''இன்றைக்குக் காணா விட்டால் இரவுக்கு வித்தியாவின் வீட்டுக்குப் போறதெண்டு நினைச்சனான். பின்நேரம் போகவேணும்.'' என்றான் கஜேந்திரன்.

''நீ வீட்டை போனால் வித்தியான்ரை பெற்றோர் ஒன்றும் சொல்லாயினையே?.'' நகுலன் கேட்டான்.

''வித்தியாவினுடைய தகப்பன் செத்துப் போனார். தமையன்மார் மூன்று பேர் வெளிநாட்டிலை இருக்கினை. வீட்டிலை வித்தியாவும் தாயும் தான் இருக்கினை. அப்பிடி இப்பிடி ஏதாவது ஒரு சாட்டுச் சொல்லிப் போறது தானே. சாட்டுக்கே பஞ்சம்'' என்றான் கஜேந்திரன்.

''வித்தியாவுக்கு தகப்பன் இல்லை அர்ச்சகாவுக்கு இரும்புக் குண்டு மாதிரித் தகப்பன் இருக்கிறார். நான் எப்பிடிப் போறது'' அழுவதைப் போலச் சொன்னான் நகுலன்.

''காதல் லேசானது அல்ல. இரும்புக் கோட்டைகளையம் தகர்த்தெறியும் வெடி குண்டு. நினைக்கிற எல்லாவற்றையும் லேசாகச் செய்து முடிக்கும் துணிவையும் அது கொடுக்கும். நீ கவலைப் படாதை'' என்றான் கஜேந்திரன்.

''திருவிழா முடிந்தால் அவளை எப்படிச் சந்திப்பது என்பதை நினைக்கத் துக்கமாக இருக்கு'' என்றான் நகுலன்.

''கவலைப் படாதை அந்தந்த நேரம் அதுவதுக்கான வீரமான யோசனைகள் தானாக வரும். இரண்டு வருடங்களாக நான் வித்தியாவைக் காதலிக்கிறன். அவளுக்கு பக்கத்தில் நின்று பேசினாலே எனக்கு மயக்கம் வரும். அவளின் மிருதுவான கைகளைத் தொட்டுப் பார்க்க வேண்டு மென்று தினமும் நினைப்பன். ஆனால் பயம் விடாது. ஒரு நாள் அவளின் வீட்டை போனனான்'' என்று கூறிவிட்டு கண்களை மூடினான் கஜேந்திரன்.

நகுலன் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றான். வெகு நேரம் வரை கஜேந்திரன் தனது கண்களைத் திறக்கவில்லை. நகுலனுக்கு எரிச்சலாக இருந்தது; “ வா போவம்” என்றான்.

“அருமையான கனவைக் கலைத்துப் போட்டாய். முதல் முதலாக அவளைத் தொட்ட நினைவு எனது கண்களுக்குள் தினமும் வலம் வரும். இன்று இந்த நேரம் வந்து விட்டது” என்று பெருமூச்சு விட்ட கஜேந்திரன் சிறிது நேரத்தின் பின் சொன்னான்; “ நான் போன நேரம் வித்தியாவின் தாய் கோயிலுக்குப் போயிட்டா. வித்தியா என்னை உள்ளே அழைத்துச் சென்றாள். வெகுநேரம் கதைத்துக் கொண்டிருந்தேன். என்னை அறியாமல் எனது கரங்கள் வித்தியாவின் தோள்களைப் பற்றின. அந்தச் சுகமான இன்பத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது. தான் காதலிக்கும் பெண்ணின் மென்மையான தோளில் சாய்ந்து தூங்குவதைப் போன்ற இன்பம் தேவருலகில் கூடக் கிடையாது”. கண்களை மூடினான் கஜேந்திரன். நகுலன் எதுவும் கதைக்காமல் விசரனைப் போல் சிரிக்கும் கஜேந்திரனைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

1103. **தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல்**
**தாமரைக் கண்ணான் உலகு.**

*தாமரை கண்ணனின் தேவருலகம், தான் விரும்பும் காதலியின் மென்மையான தோள்களில் சாய்ந்து தூங்குவதை விட இனிதாகுமோ?*

## புதுமையான தீ

“விசரன் மாதிரிச் சிரிக்கிறாய். யாராவது கண்டால் விசரன் என்று சொல்லப் போகிறார்கள” என்றான் நகுலன்.

“உயிர்கள் எல்லாவற்றையும் உற்று நோக்கிப் பார். எல்லோரும் விசரனைப் போல் தான் பலகருமங்களைச் செய்யினை. இந்த நாலைந்து நாட்களுக்குள் நீ எத்தனை விசர்க் கதை கதைச்சனி தெரியுமே. உளவியலாளர்கள் எல்லோருக்கும் உனக்கு கோளாறு குறிப்பிட்ட அளவிலை இருக்கென்று சொல்வீனை” என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கையில் நகுலன்; “உன்ரை விசர் கதையைக் கேட்கேலாது, நான் போறன்” என்றான்.

“இப்ப உன்ரை விசருக்கு மருந்து என்னட்டைத் தான் இருக்கு” என்று சிரித்தான் கஜேந்திரன். அவனது பேச்சு விளங்காமையால் தடுமாறினான் நகுலன்.

“அர்ச்சகாவின்ரை சாதகம் வித்தியாவின்ரை கையிலை தான் இருக்கு. அதைப் பார்த்துப் புரிந்து கொள்ள வேணுமென்டால் என்ரை உதவியைத் தான் நீ நாடவேணும்”.

“வெருட்டுறியே...? சரி வா போவம்” என்றான் நகுலன்.

இருவரும் கோயிலின் முன்பக்கம் வந்தனர். கஜேந்திரனது கண்கள் ஆவலோடு வித்தியாவைத் தேடி வெகுதூரம் சென்றன; “எந்தக் கடைக்குப்

போனார்களோ தெரியாது. அவர்களைப் பின் தொடர்ந்து சென்றிருக்கலாம்'' என்றாள் கஜேந்திரன்.

''சரி இதிலை இரு'' என்று கூறிவிட்டு நகுலன் முன் பக்கத்தில் பரவியிருந்த வெண் மணலில் அமர, கஜேந்திரன் அவனுக்கு அருகில் அமர்ந்தான்.

''நான் இவ்வளவு நாட்களும் வித்தியாவின் வீட்டுப் பக்கம் பயந்து பயந்து தனியத் தான் சென்றான். இப்ப துணைக்கு நீ கிடைத்து விட்டாய்.'' என்றான் கஜேந்திரன்.

''வித்தியா எல்லாவற்றையும் சொல்ல முன்னம் அர்ச்சகா வந்திட்டாள் என்றான் நகுலன்.

''வித்தியா நின்றபடியால் தான் அர்ச்சகாவை அருகில் நின்று பார்க்க உனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.''

''காதலர்களுக்கு உதவி செய்வதற்கு என்றான் கஜேந்திரன். கடவுள் யாராவது ஒரு வரை ஏற்பாடு செய்து விடுவார். இதை நான் அனுபவத்திலை கண்டனான்''. என்றான் கஜேந்திரன்

''நாங்கள் இதிலை வந்தும் ஒரு மணித்தியாலத்துக்கு மேலையாச்சு. இவை என்ன செய்யினை'' என்று அலுத்துக் கொண்டான் நகுலன்.

''காதலிக்கிறவைக்கு பொறுமை தான் முக்கியமாகத் தேவை. அது உனக்கு அணுவளவு கூட இல்லை. அழகு தேவதைகளை இலகுவாகச் சந்திக்க முடியாது. எவ்வளவோ சிரமப்பட வேண்டும். அதை விட பல நாட்களுக்குக் கூடக் காத்திருக்க வேண்டும். போன வருடம் ஆறு மாத காலமாக நான் வித்தியாவைச் சந்திக்கக் கஸஷ்டப்பட்டனான்'' என்றான் கஜேந்திரன்.

நகுலன் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் அர்ச்சகாவும் வித்தியாவும் வந்து கொண்டிருந்தனர். நகுலனின் உள்ளம் ஆரவாரித்தது; ''இரண்டு பேரும் வரீனை'' என்றான் நகுலன்.

அர்ச்சகாவும் வித்தியாவும், கஜேந்திரனும் நகுலனும் இருந்த இடத்திற்கு வந்தனர்; ''உந்த இரண்டு பொருட்களும் வாங்கவே இரண்டு மணித்தியாலம் செலவழித்தனீங்கள்'' என்றான் கஜேந்திரன்.

''அர்ச்சகா கடைகளைப் பார்க்க விரும்பினாள் அது தான்'' என்று வித்தியா சொல்லும் போது கஜேந்திரன் குறுக்கிட்டான்; ''இஞ்சையும் இரண்டு பேர் பார்க்கத் துடித்தவை..''

வித்தியா முறாய்த்துப் பார்த்தாள். அதைப் புரிந்து கொண்ட கஜேந்திரன்; '' நீர் வந்து கனநேரமாச்சு அம்மாவை யார் பார்க்கிறது'' என்றான்.

''ஓ அதை நான் மறந்திட்டன் வா, உள்ளுக்குப் போய்க் கும்பிட்டுட்டு போவம்'' என்று புறப்பட்டாள் வித்தியா.

அர்ச்சகா நகுலனைப் பார்த்து நளினமாகச் சிரித்தாள். நகுலனுக்கு மின்னல் தாக்கியதைப் போல் இருந்தது.

வித்தியா செல்வதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான் கஜேந்திரன். அவளது உடல் தீப் பற்றி எரிவதைப் போல இருந்தது.

''என்னடா சோகமாய் இருக்கிறாய்? எனக்கு இன்றைக்குத் தான் மகிழ்வான நாள்'' என்றான் நகுலன்.

''வித்தியாவைக் காணாவிட்டால் எனது உடல் தீப்பற்றி எரிகிறது. அவள் அருகில் இருந்தால் குளிரூட்டிய அறையுள் இருப்பதைப் போல் உடல் குளிர்கிறது. இத்தகைய புதுமையான தன்மையை இவள் எங்கிருந்து பெற்றாளோ தெரியவில்லை, நான் கஷ்டப்படுகிறேன்'' என்றான் கஜேந்திரன்.

**1104. நீங்கின் தெறூ உம் குறுகும்கால் தண் என்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்.**

*அவளை விட்டு நீங்கினால் சுடுகிறது; அவளை நெருங்கிச் சென்றால் குளிர்ச்சியாக இருக்கிறது; இத்தகைய புதுமையான தீயை இவள் எங்கிருந்து பெற்றாள்.*

## நினைக்கும் இன்பம்

கஜேந்திரன், நகுலனோடு அவனது வீட்டுக்கு வந்தான். நகுலனின் தாயார் இருவருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். நகுலனும் கஜேந்திரனும் வழக்கமாக அமரும் வேப்பமரத்தின் கீழ் அமர்ந்தனர். ஆவணி மாத உஷ்ணக் காற்று வேப்பமரத்தைத் தழுவி வந்த போது வழமையான குளிர்மையை அதில் காணமுடியவில்லை.

''இன்றைக்குத் தான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது. இவ்வளவு காலமும் அர்ச்சகா என்னைக் காதலிக்கிறாளோ இல்லையோ என்று நினைத்திருந்தேன். அவள் வித்தியாவிடம் என்னைப் பற்றி விசாரித்ததில் இருந்தும், இன்று என்னைப் பார்த்துச் சிரித்த சிரிப்பில் இருந்தும் அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டேன். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உனக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். மிகவும் நன்றியடா'' என்றான் நகுலன்.

''உனக்கு முடிவு தெரிந்தமையால் மகிழ்ச்சியாக இருக்கு. வித்தியாவை மூன்று நாட்களாகக் காணாமையால் எனக்கு தாங்க முடியாத துயரமாக இருக்கிறது''. என்றான் கஜேந்திரன்.

''முடிவு தெரிந்து விட்டது அவள் உன்னைக் காதலிக்கிறாள் என்பதும் தெளிவாகி விட்டது பிறகேன் கவலைப் படுகிறாய்?'' என்று கேட்டான் நகுலன்.

“உனக்குக் காதலைப் பற்றி எதுவும் புரியாது. நான் விரும்பும் பெண் என்னைக் காதலிக்கிறாளோ இல்லையோ என்று அறிவதில் ஆவல் இருக்குமே தவிரக் கவலை இராது. ஆனால் ஒரு பெண் ஒருவனை விரும்பிய பின் காணாமல், கதையாமல் இருப்பதென்பது முடியாத காரியம். உன்னை அர்ச்சகா விரும்பி விட்டாள் என்று தெரிந்து கொண்டு விட்டாய். இப்பொழுது அவளைப் பார்த்துக் கதைக்க வேண்டும் என்று ஆசை உனது மனதில் இல்லையா..? சொல்லு, காதல் என்பது கரும்பை நுனியில் இருந்து உண்டு கொண்டு செல்வதைப் போன்றது. நாள் செல்லச் செல்ல இனிமை அதிகரித்துக் கொண்டு செல்லுமே தவிரக் குறையாது.” என்றான் கஜேந்திரன்.

“நீ அனுபவஸ்தன், நீ சொன்ன பின்பு தான் எனக்குப் பல விஷயங்கள் தெரிய ஆரம்பித்துள்ளது. பாடங்களில் படித்தாலென்ன, பத்திரிகைகளில் வாசித்தாலென்ன, ஒவ்வொன்றிலும் அனுபவப்பட வேண்டும். நீ அனுபவப்பட்ட படியால் சொல்கிறாய். எனக்கு ஏட்டறிவு இருக்கு. ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாதது என்பது போலக் கலிங்கத்துப் பரணியும் அகநானூறும் படித்துச் சுவைத்து கதைத்து இன்புற்றேனே தவிர அனுபவத்தால் வரும் உணர்வுகளை அவை ஒத்திருக்கவில்லை. நீ சொல்வதைப் போல அர்ச்சகாவை பார்க்க வேண்டும்., அவளோடு பேச வேண்டும். என்ற ஆவல் எனது மனதில் எழுகிறது.” என்றான் நகுலன்.

“இப்ப காணவேண்டும் கதைக்க வேண்டும். என்ற நினைவு தான் வரும். கதைத்துப் பேசிய பின்பு தழுவினால் எப்படி என்ற நினைவு வரும். நகுலா, வித்தியாவுடன் இருக்கும் வேளைகளில் நான் உலகத்தை மறந்து விடுகிறேன். அவளது தோள்களைப் பார்த்தால் இவ்வுலகத்தில் உள்ள இன்பங்கள் யாவும் என்னுள் வந்து விடுகின்றன. சில சமயம் இரவு நேரத்தில் நான் வித்தியாவின் வீட்டுக்குச் செல்லும் போது அவளது தாயார் அங்கிருப்பதில்லை. வித்தியாவின் வீட்டு முற்றத்தில் மல்லிகைப் பந்தல் ஒன்றுள்ளது. அவள் அம்மரத்தைத் தன்னைப் போலப் பேணுகிறாள். அதனால் எந்த நேரமும் பந்தல் முழுவதும் மல்லிகை பூத்துக் குலுங்கும். வித்தியா என்நாளும் மல்லிகைப் பூவை தனது கூந்தலில் மாலையாகக் கட்டி அணிந்திருப்பாள்” கஜேந்திரன் கண்களை மூடினான். அவனது விழிக்கள் வித்தியா கூந்தலில் மல்லிகை மாலையணிந்து தோன்றினாள்.

“நகுலா, மலரணிந்த கூந்தலையுடைய வித்தியாவின் மிருதுவான தோள்களைப் பார்த்தால், அவை நான் விருப்பமான பொருள்களை நினைத்து விரும்பிய பொழுது அவ்வப் பொருட்களைப் போலவே இன்பம் செய்கின்றன. குளிர்மையான சோலையில், பூந்தோட்டத்தில் இருப்பதைப் போலவும், சோடியாக இருந்து படம் பார்ப்பது போலவும் இன்னும் எத்தனையோ நினைவுகள் நிஜம் போலத் தோன்றுகின்றன. அந்த இன்பத்தைப் பெறத்தான் நான் அவளைச் சந்திக்க விரும்புறன்” என்றான் கஜேந்திரன்.

**1105. வேட்டா பொழுதின் அவை அவை போதுமே**
**தோட்டார் கதுப்பினாள் தோள்.**

*மலர்களை அணிந்த கூந்தலை உடைய இவளது தோள்கள், நான் விருப்பமான பொருள்களை நினைத்து விரும்பும் போது அப்பொருள்களைப் போலவே இன்பந் தருகின்றன.*

# தளிர்த்த உயிர்

முன்பு கஜேந்திரன் காதலைப் பற்றி ஏதாவது கூறினால், சரியான விசரன் என்று நினைத்துக் கேலி செய்யும் நகுலன், இன்று அவனின் புலம்பலை மிகவும் அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருந்தான். இவ்வளவு அக்கறையாக அவன் இது வரை விரிவுரைகளைக் கூடக் கேட்டதில்லை.

‘‘நீ சொல்வதெல்லாம் உண்மையான வார்த்தைகள். அது எனக்கு முன்பு தெரியவில்லை. அர்ச்சகாவை விரும்பிய பின்பு தான் நீ சொல்வதின் அர்த்தம் புரிகிறது. இப்பொழுது என்னால் அர்ச்சகாவைக் காணாமல் ஒரு கணம் கூட இருக்க முடிவதில்லை. அவளுடைய கண்களையும் முகத்தையும் நளினமான சிரிப்பையும் கொண்டு அவளின் மனதில் உள்ள குறிப்பை அறிந்த சில மணி நேரத்துக்குள் அவளின் நினைவுகள் தீயாகச் சுடுகின்றன.’’ என்றான் நகுலன்.

‘‘பிரிவு தான் காதலை வளர்ப்பது. பிரிந்த பின் கூடியிருப்பதைப் போல இன்பம் உலகத்தில் இல்லை. நான் அவளைக் காணாத வேளையில் அவளின் நினைவுகளை மீட்டு உயிர் வாழ்கிறேன். ஆனால் நீண்ட பிரிவு அளவுக்கதிகமான துன்பத்தைத் தரும். காதல் என்பது முழுமதி. அது ஒரு பொழுதும் தேயாது. நாட் செல்லச் செல்ல வளருமே தவிரக் குறையாது. இறைவன் படைத்த படைப்புக்களில் எல்லாம் மிகவும் சிறந்த படைப்பு காதல் தான். அது விசித்திரமானது, புதுமையானது; அழியாதது; அதோடு அழிக்க முடியாதது. அன்பே சிவம் என்கிறார்கள். அந்த அன்பு தான் காதல் அப்படிப் பார்த்தால் காதலும் சிவமும் ஒன்றுதானே. காதலுக்கென சமயங்கள் பலவும் தெய்வங்களை உருவாக்கியுள்ளன. என்னைப் பொறுத்த வரையில் முருகன் தமிழரின் காதல் தெய்வம். முருகனின் கதையில் இருந்து நாம் காதலின் வலிமையை உணர்கிறோம். காதலின் புனிதத்தை உணர்கிறோம்’’.சொல்லிக் கொண்டிருந்தான் கஜேந்திரன்

‘‘எல்லோரையும் விட்டு விட்டு இப்ப நீ முருகனின் காதலைப் பற்றிச் சொல்கிறாய் இனி...’’ நகுலனைக் கதைக்க விடாமல் கஜேந்திரன் சொன்னான்; ‘‘நீ தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்கிறாய். நான் கணிதத்தைச் சிறப்புப் பாட மாகக் கற்கிறன். உனக்குக் கணிதத்தைப் பற்றிப் பெரிதாகத் தெரியாது. ஆனால் எனக்கு தமிழைப் பற்றி நன்கு தெரியும். அதுவும் காதலைப் பற்றி சங்க காலத்து அறிஞர் கூறியதிலிருந்து இன்றைய கே.வி. குணசேகரம் கூறியது வரை தெரியும். காதலால் தான் உலகம் வாழ்கிறது. திருவள்ளுவர் அறத்துப் பாலில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்ற பாயிரவியலுக்கு அடுத்ததாக இல்வாழ்க்கையைப் பற்றித் தானே சொல்கிறார். அதற்கடுத்து வாழ்க்கைத் துணை நலம் பற்றிக் கூறுகிறார். கடவுள் வாழ்த்துப் பாடிய பாயிரவியலுக்கு அடுத்து இல்வாழ்ககை பற்றிக் கூற வேண்டிய அவசியம் என்ன..? காதல் தான் உலகம். காதல் இல்லாவிட்டால் உலகம் அழிந்து விடும். காதல் உணவில் உப்புப் போன்றது. தொழிலில் காதல் முதலையைப் போன்றது. முயற்சியில் காதல் வலிமையைப் போன்றது. காதல் இல்லா விட்டால் உயிர்கள் அழிந்து விடும்.’’ என்றான் கஜேந்திரன்.

நகுலன் சில கணங்கள் பேசாமல் இருந்தான்; ''நான் தமிழ்ப் படித்தும் இவற்றை உணரவில்லையே'' என்றான்.

''கற்றல் அனுபவத்துடன் சேர்ந்தால் தான் பயனுள்ளதாகும். அதனால் தான் இன்று உலகில் செயல் முறைக் கல்வியை ஊக்குவிக்கின்றனர். மனிதனுக்கு மன அமைதியைத் தருவது தான் காதலின் அடிப்படை இலட்சியமாகும். மறு உலகத்தில் இன்பத்தை அனுபவிப்பதற்காக இந்த உலகில் ஒரு பெண்ணைக் காதலித்து அவளையே திருமணம் செய்து அறவாழ்வு வாழ வேண்டும் என்று இந்து மதம் சொல்கிறது. இந்து மதம் காதலைப் போற்றுகிறது. காதலைக் கடவுளாக்குகிறது. ஒருவன் இங்கேயே இப்பொழுதே இன்பத்தைப் பெற வேண்டுமானால் சிறந்த ஒரு பெண்ணைக் காதலிக்க வேண்டும். மிகவும் துன்பப் படும் வேளைகளில் வித்தியாவை நான் சந்திப்பேன். வாடிய என்னுயிரை அவளது மென்மையான தோள்களில் உள்ள இன்பம் தளிர்க்க வைக்கும். எனக்குத் தேவையான இன்பங்களையெல்லாம் அள்ளித் தரும். அவளது தோள்கள் சாவா மருந்தான அமுதத்தால் உருவாக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்'' என்றான் கஜேந்திரன்.

**1106. உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு**
**அமிழ்தின் இயன்றன தோள்.**

*அவளது தோள்களைத் தழுவும் போதெல்லாம் என்னுயிர் தவிர்க்கும் படி தீண்டுவதால், இவளது தோள்கள் அமிழ்தத்தினால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.*

## பேரின்பம்

'' நீ வித்தியாவின் வீட்டுக்குச் செல்லும் பொழுது என்னையும் அழைத்துச் செல்வாயா...? '' என்று கேட்டான் நகுலன்.

கஜேந்திரன் அவனின் கேள்விக்கு உடனே பதில் சொல்லவில்லை. யோசித்துக் கொண்டிருந்தான்.

''உன்னைக் குழப்பி விடுவேன் என்று யோசிக்கிறாயா...?என்னைக் கூட்டிக் கொண்டு செல்ல விருப்பம் இல்லா விட்டால் நான் தரும் கடிதத்தை யாவது அர்ச்சகாவிடம் கொடுக்கச் சொல்லி வித்தியாவிடம் கொடு. பிறகு அவள் தரும் பதில் கடிதத்தை வாங்கி வந்து தா இதை ஒரு முறைக்குச் செய்தால் போதும். பிறகு நான் உன்னைக் கேட்கமாட்டன்'' நகுலனின் குரல் தளர்ந்தது.

''வீணாய் ஏன் கற்பனை செய்கிறாய். வித்தியாவின் வீடு சன நெருக்கமுள்ள இடத்தில் உள்ளது. அதோடு சுற்றி வர இருக்கிறவை வித்தியாவின்ரை நெருங்கிய உறவினர்கள். நான் அடிக்கடி அங்கு செல்வதை வித்தியா விரும்புவதில்லை. அத்துடன் வித்தியாவின் தாயார் கடினமான போக்குடையவர். அடிக்கடி நான் அங்கு செல்வது அவருக்குப் பிடிப்பதில்லை. மாதத்திற்கு ஒரு முறை அவா மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்வா. அந்த நாள் விரிவுரைகள் இல்லாத நாளாக இருந்தால் உன்னை நான் கூட்டிக் கொண்டு செல்கிறேன்'' என்றான் கஜேந்திரன்.

இதைப்பற்றி வித்தியாவுடன் கதைத்து அவளின் சம்மதத்தைக் கேட்ட பின்பு தான் என்னால் சொல்ல முடியும். குறை நினைக்காதை. எமது பிரதேசத்தைப் பற்றி உனக்குத் தெரியும் தானே ஒரு பெண்ணோடை இரண்டு நாள் கதைத்தால் பல கற்பனைகளை உருவாக்கிக் கதைக்கிறது எமது மக்களின் பொழுது போக்கு என்றான் கஜேந்திரன்.

‘‘நான் உன்னைத்தான் நம்பியிருக்கிறன். அர்ச்சகாவைக் கண்டு ஓரிரு நிமிடங்களென்றாலும் கதைக்க வேண்டும். என்று ஆசையாக இருக்கு’’.

‘‘ஒரு நாளைக்கு தோழிகளை விட்டு விட்டு அர்ச்சகாவைக் கூட்டிவரும்படி வித்தியாவுக்குச் சொல்லுறன். கோயில்கள் தான் காதலர்களின் சொர்க்கம்.’’ என்றான் கஜேந்திரன்.

‘‘அர்ச்சகாவைக் காணாத நேரத்தில் நரகத்தில் இருப்பதைப் போல் இருக்கிறது’’ என்றான் நகுலன்.

‘‘உலகம் தான் நரகலோகம் என்று பெரியவர்கள் கூறுவார்கள். இந்த நரக உலகத்தில் ஒருவனுக்கு இன்பமும் மகிழ்ச்சியும் அளிப்பது காதல். இளமையில் பெற்றோர் மீது உள்ள காதலால் தான் வாழ்வில் கல்வி, முன்னேற்றம் என்பன ஏற்படுகின்றன. வாலிபப் பருவத்தில் காதலியால் தான் அனைத்தும் ஏற்படுகின்றன. வாடிய உயிர்களைத் தளிர்ப்பிப்பது காதலியின் அரவணைப்பு. வாழ்க்கையில் பிடிப்பேற்பட்டு முன்னேற வைப்பது காதலியின் அன்பான வார்த்தைகள், நொந்த மனதிற்கு ஆறுதலளித்து. உற்சாகமூட்டுவது காதலியின் இனிமையான வார்த்தைகள்’’ இந்த உண்மையை நான் வித்தியாவைக் காதலித்த பின்பு தான் உணர்ந்து கொண்டேன். மற்றவையெல்லாம் அர்த்தமற்ற வெளிவேசங்கள் தான். உண்மையான காதல் எமது பிறவிகள்தோறும் தொடர்ந்து வரும்’’ என்றான் கஜேந்திரன். நகுலன் சிரித்தான் ‘‘காதலுக்கு நீ புதிய விளக்கம் கொடுக்கிறாய்’’ என்றான்.

‘‘இவையெல்லாம் என்னுடைய கருத்துக்களல்ல. எல்லாம் எமக்கு முன்பு வாழ்ந்த அறிஞர்களின் கருத்துக்கள். நீ படித்து அறியாததால் எனது கருத்துக்கள் என்று சொல்கிறாய். வித்தியாவைப் போல் ஒரு பெண் உலகத்தில் இல்லை என்று தான் நான் நினைக்கிறன். அவளோடு சேர்ந்திருக்கும் வேளையில் எனது உறவினர்கள் அனைவரோடும் மகிழ்வாக எனது வீட்டில் இருந்து நான் உழைத்துச் சம்பாதித்து வாங்கி வந்த பொருளை பகிர்ந்து உண்ணும் போது ஏற்படுகின்ற இன்பம் ஏற்படுகிறது.’’ என்றான் கஜேந்திரன்.

‘‘நான் கேட்டதற்கு நீ பதில் கூறவில்லை. நான் எழுதித் தரும் கடிதத்தை அர்ச்சகாவிடம் சேர்ப்பிப்பாயா..? என்று கேட்டான் நகுலன்.

‘‘எழுதித்தா’’ என்றான் கஜேந்திரன்.

**1107. தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு.**

*தன்னுடைய வீட்டில் இருந்து தான்தேடிய பொருள்களைப் பிறருடன் பகிர்ந்து உண்ணும் போது உண்டாகின்ற இன்பம், அழகிய இந்தப் பெண்ணைத் தழுவும் போது ஏற்படுகிறது.*

## இனிமையான செயல்

''கடிதத்தைக் கொண்டு சென்று கொடுப்பதில் எந்த விதமான பிரச்சினையும் எனக்கு இல்லை. இன்றைய இளைஞர்களை நம்பி எந்தக் காரியங்களிலும் ஈடுபடக் கூடாது. உன்னை நான் நம்புறன். நீ நல்லவன்; நேர்மையானவன்; அவளை ஏமாற்ற மாட்டாய் என்று எனக்குத் தெரியும். இருந்தபோதும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் எந்த மனிதனும் மாறலாம். அப்படி நீ மாறினால் வித்தியா என்னைக் கொன்று போடுவள்'' கஜேந்திரனின் கதை நகுலனுக்கு ஆத்திரத்தை வரவழைத்தது. ஆத்திரத்துடன் குறுக்கிட்டான்; ''நீ உதவி செய்ய முடியாவிட்டால் உதவி செய்ய மாட்டன் என்று சொல்லுவதை விட்டு விட்டு கற்பனை பண்ணிக் கதை சொல்லாதை'' என்றான் நகுலன்.

''நான் கற்பனை பண்ணிச் சொல்லவில்லை. இன்றைய நிலையைச் சொல்லுறன். சென்ற வருடம் பல்கலைக்கழகத்தில் எம்முடன் படித்த பிரசாந்தன் கலைமகளை ஏமாற்றியபடியால் அவள் தற் கொலை செய்ய முயற்சித்தவள். பிறகு தப்பி மனநோயாளி மாதிரி இருக்கிறாள். பெற்றோரின் கரைச்சலுக்காகச் சிலர் மனம் மாறுவினை. சிலருக்கு காதல் ஒரு பொழுது போக்கு, பல்கலைக் கழகத்திலை படிக்கு மட்டும் பொழுது போக்காய்க் காதலிப்பினை, படிப்பு முடிந்த பிறகு அந்த நினைவே வராது. உன்னை நம்புறன். ஆனால் பெற்றோர் விரும்பா விட்டால் என்ன செய்வாய். அர்ச்சகா மிகவும் அழகானவள். அந்தக் கவர்ச்சியில் மயங்கிற நீ கடைசி வரையும் அவளை மறக்க மாட்டாய் என்று நான் எப்படி நம்புவது'' என்று கேட்டு விட்டுச் சில கணங்கள் எதுவும் பேசாமல் நகுலனின் முகத்தைப் பார்த்தான் கஜேந்திரன்.

நகுலனின் முகத்தில் உள்ள உணர்வுகளை கஜேந்திரனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ''இந்த உலகத்தில் காதலில் வெற்றியடையும் பாதை தான் மிகவும் கரடு முரடானதாகவும் செங்குத்தாகவும் இருக்கிறது. அந்தப் பாதையில் பலர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். பலர் தோல்வியடைந்து விழுந்து போனதில் ஆச்சரியம் இல்லை. பலமுறை இடறி விழுந்தாலும் காதலில் வெற்றி பெறுபவன் தான் வாழ்க்கையில் வெற்றி பெற்றவனாவான்.''என்றான் கஜேந்திரன்.

''நீ எனக்கு உபதேசம் செய்யாதை. நான் அர்ச்சகாவை விரும்புறன். அவளை எந்தச் சந்தர்ப்பத்திலும் கை விட மாட்டன். ஆயிரம் தடைகள் வந்தாலும் அதை உடைத்தெறிய என்னால் முடியும்'' ஆவேசமாகச் சொன்னான் நகுலன்.

''நீ சொல்வதை நான் நம்புறன். கடைசி வரையும் உறுதியாக இருந்தால் சரி'' என்றான் கஜேந்திரன்.

''உன்னுடைய பேச்சைப் பார்த்தால், உனக்கு என்னில் நம்பிக்கை ஏற்படவில்லை என்று தெரிகிறது உனக்கு விருப்பாமில்லா விட்டால் அவள்

என்னை விரும்புகிறாளா என்று அறிவதற்காக நான் தரும் கடிதத்தைக் கொண்டு சென்று கொடுத்து விட்டு அவளின் பதில் கடிதத்தை வாங்கி வந்து தா.'' என்று சலிப்புடன் சொன்னான் நகுலன்.

''நாம் ஒரு பெண் மீது கொள்ளும் காதல் சிறந்ததாகவும் தூய்மையுடையதாகவும் இருந்தால் தான் வாழ்க்கையும் சிறந்ததாகவும் தூய்மை உடையதாகவும் இருக்க முடியும். காதல் கொண்ட அறிவுள்ள பெண்ணும் பேதையாகி விடுவாள். ஆரம்பத்தில் கதைத்துச் சிரித்த நான் நாள் செல்லச் செல்ல அவளுடன் நெருக்கமாகப் பழகுவேன். சில நாட்கள் அன்புடன் பழகிய ஆணைப் பெண் இலகுவில் நம்பி விடுவாள். இதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். காதலரிடையே நம்பிக்கையின் அடிப்படையில் பலவும் நடக்கும். காற்றுக் கூட இருவருக்கும் இடையே புகுந்து செல்ல முடியாத படி தழுவும் தழுவல், ஒருவரை ஒருவர் விரும்பிய காதலர் இருவருக்கும் இனிமை உடைய செயலாகும். அந்த அணைப்புத் தரும் சுகத்திற்கும் எல்லையே இல்லை. அப்படி அணைத்து இன்பத்தைப் பெற்றால் அவளைத் திருமணம் செய்ய வேண்டும்.'' என்றான் கஜேந்திரன்.

நகுலன் எதுவும் பேசாமல் சிலை போல இருந்தான்.

1108. **வீழும் இருவர்க்கு இனிதே வளி இடை**
**போழப் படா அமுயக்கு.**

*காற்றுக் கூட இடையே புகுந்து சொல்லாத படி நெருங்கி அணைத்து மகிழ்வது, ஒருவரை ஒருவர் விரும்பிய காதலர் இருவருக்கும் இனிமையானதாகும்.*

## இன்பமானவை

ஒரு வாரம் வித்தியாவைக் காணமையால் கஜேந்திரனது மனம் வாடிச் சோர்ந்து விட்டது. அவள் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குத் திருவிழாத் தொடங்கிய பின்பு வருவதைக் குறைத்துக் கொள்வாள். சன நெருக்கடி மிகுந்த வேளையில் பக்தி சிரத்தையுடன் முருகனை வணங்க முடியாது என்று நினைப்பாள். அத்துடன் திருவிழாத் தொடங்கி விட்டால் கஜேந்திரனைச் சந்திப்பதையும் தவிர்த்து வருவாள். திருவிழா நேரங்களிலும் மற்றைய நாட்களிலும் அவள் கோயிலுக்கு வந்தால் கஜேந்திரன் அவளுக்குப் பின்னாலேயே திரிவான். அது அவளுக்குப் பிடிப்பதில்லை. கடவுளை மனத்தூய்மையுடன் வணங்க வித்தியா விரும்புவாள். ஆனால் அதற்குக் கஜேந்திரன் இடையூறாக இருந்து வந்தான். அவர்களுக்கிடையில் ஊடல் கோயில் சம்பந்தமாகவே அடிக்கடி வரும்.

''நான் முருகனை மனத்தூய்மையோடு வணங்க விடுங்கள். உங்களைக் கண்டால் எனது மனம் சஞ்சலப்படுகிறது. அத்துடன் களங்கமும் அடைந்து விடுகிறது. தயவு செய்து நான் கோயிலுக்கு வரும் நாட்களில் நீங்கள் கோயிலுக்கு வராதீர்கள். அப்படி வந்தாலும் வெளியே நில்லுங்கள்'' என்பாள்.

கஜேந்திரன் அவளின் சொல்லை வேத வாக்காக நினைத்து ஓரிரு நாட்களுக்குப் பின் பற்றுவான். அதன் பின் மறந்து விடுவான். இரண்டு மூன்று நாட்கள் அவளைச் சந்திக்காதிருந்தால் அவளது வேதவாக்கையும் மீறிக்

கோயிலுனுள் சென்று விடுவான். இதனால் இருவருக்குமிடையில் சச்சரவு தோன்றும். வித்தியா அவனுடன் சில நாட்களுக்குக் கதைக்க மாட்டாள். கஜேந்திரன் அவளின் பின்னால் ஓயாமல் கதைத்துக் கொண்டு செல்வான். கோயிலில் அவளைக் கண்டால்; ‘‘ஒரு பெண்ணுக்குக் கணவன் தான் கண்கண்ட தெய்வம். கணவனின் மனதைப் புண்படுத்தும் பெண்ணிற்கு நரக வாழ்வு தான் கிடைக்கும். முருகனை விழுந்து விழுந்து கும்பிட்டும் பிரயோசனமில்லை’’ என்பான். அவனது கரைச்சல் தாங்க முடியாது அவள் பொய்யாகக் கோபித்து ஏசுவாள். கஜேந்திரன் குழைந்து சமாதானமாகி விடுவான். சமாதானமானதும் அவளைக் கட்டித் தழுவுவான். அவள் கோபித்துப் பின் சமாதானமான பின் தழுவும் போது கிடைக்கும் இன்பம் சந்தோசமாக இருந்து தழுவும் நாட்களில் கிடைப்பதில்லை.

ஒரு வாரகாலமாக வித்தியாவைக் காணாமையால் அன்று அவன் அவளது வீட்டுக்குச் சென்றான். அன்று விநாயக சதுர்த்தி. வித்தியாவின் தாயார் பிள்ளையார் கோயிலுக்குச் சென்றிருப்பாள் என்று நினைத்தான்.

கஜேந்திரனைக் கண்டதும் வித்தியா ஏசினாள்.; ‘‘உங்களை இஞ்சை வர வேண்டாமென்று எத்தனை நாள்ச் சொன்னனான். போன கிழமை நீங்கள் வந்து போன பிறகு மாமி கண்ட கண்ட பெடியள் வீட்டை வாறது சரியில்லை என்று ஏசினவா’’.

‘‘நான் கண்ட கண்ட ஆளில்லை கணவன்? என்று சொல்லுறது தானே’’.

‘‘என்ன முறையிலை கணவன், எந்த உரிமையிலை அப்பிடிச் சொல்லுறியள்.’’ எரிந்து விழுந்தாள் வித்தியா.

‘‘எனக்கு உரிமை இல்லைத்தான். இந்த வார்த்தையை நான் கேட்கும் போது சொன்னால் சரி.’’ சிரித்தான் கஜேந்திரன்.

‘‘ ஓ, காதலித்து விட்டு தப்பிப் போக நினைக்கிறியளோ...? அந்த எண்ணம் உங்களுக்கு இருக்கு. என்னை ஏமாற்றுவியளெண்டு எனக்குத் தெரியும்.’’ சீறினாள் வித்தியா.

‘‘மனிசி கோபங் கொண்டால் தான் அழகாய் இருப்பா...’’ கஜேந்திரனைப் பேசவிடாது குறுக்கிட்டாள் விததியா; ‘‘ அப்ப நான் அழகில்லை. அப்படித்தானே’’.

‘‘ஏழு நாட்களாய் காணாமல் தவித்துப் போய் வந்திருக்கிறன். அன்பாய் ஆதரவாய் கதைப்பமெண்டில்லை. சண்டைக்கு வாறீர’’ என்றவாறு வித்தியாவின் கைகளைப் பிடித்தான். அவள் மெல்லச் சிணுங்கினாள்; ‘‘மனிசியைக் கோபித்த பின் அணைத்து மகிழ்வதில்தான் அலாதியான ஒரு சுகம் இருக்கு. மனிசி ஆரம்பத்திலை சண்டைக்கு வரும். பின் சமதானமாகும். அதன் பின் கொண்டாட்டம் தான்’’ என்று சிரித்தான் கஜேந்திரன்.

‘‘போங்கோ.. உங்களை இஞ்சையார் வரச் சொன்னது’’ என்றாள் வித்தியா.

1109. **ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்**
**கூடியார் பெற்ற பயன்.**

*ஊடல்கொள்ளல், பின் அதனை அளவோடு விட்டு விடல், அதன் பின் சேர்ந்து மகிழ்தல் ஆகிய இவைகளே காதல் கைகூடப் பெற்றவர்கள் அடையும் பயனாகும்.*

## புதுமையான இன்பம்

கஜேந்திரன் வித்தியாவின் முகத்தைப் பார்த்தான். அவளது முகத்தில் நாணம் தெரிந்தது. செம்மை நிறமுடைய கன்னங்களில் பல்வேறு விதமான உணர்வுகள் பிரதி பலித்தன.; "நான் போவது உமக்குப் பிடிக்குமென்றால், நான் போகிறேன். உமது தோள்கள் பதிந்து உயர்வது என்னைத் தழுவச் சொல்லி. அவற்றின் மௌன மொழிகளின் அர்த்தம் எனக்குப் புரியும்'' என்று சிரித்தான் கஜேந்திரன்.

வித்தியா எதுவும் பேசவில்லை. மெதுவாக அவனது நெஞ்சில் சாய்ந்தாள்; "உம்மை இரண்டு வருடங்களாகக் காதலிக்கிறேன். உமது போக்கு எனக்குத் தெரியாதா என்ன?. நீ கோபித்து ஏசினால் நான் பல நாட்கள் வராது இருந்தமைக்காகத் தான் என்று எனக்குப் புரியும். வரவேண்டாம் என்றால் வா என்று அர்த்தம்'' என்றான் கஜேந்திரன்.

வித்தியா எதுவும் பேசவில்லை. கஜேந்திரனாலும் பேசமுடியவில்லை. சில கணங்கள் மௌனமாகக் கரைந்தன. "அம்மா வந்திடுவா போங்கோ..'' என்றாள் வித்தியா.'' எனினும் அவனைப் பிரிவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"நான் இங்கே தங்கட்டா'' ஆவலோடு கேட்டான் கஜேந்திரன்.

"படிப்பு முடிந்து வேலை கிடைத்த பின் தங்கலாம்'' என்றாள் வித்தியா.

"அர்ச்சகாவின் குடும்பம் எப்படி..'' நகுலன் ஒரு கடிதம் தந்துள்ளான். அதைக் கொடுப்பீரா''. என்று கேட்டான் கஜேந்திரன்.

"அர்ச்சகாவின் தாயார் எமக்கு நெருங்கிய இனத்தவர். பல வருடங்களுக்கு முன் அவர்கள் கொழும்புக்குச் சென்று விட்டனர். அங்கு சென்ற பின் எம்முடன் அவர்கள் தொடர்பு கொள்ளவில்லை. ஒரு மாதத்திற்கு முன்பு தான் வந்துள்ளனர். நான் அங்கு செல்வது குறைவு. அர்ச்சகாவின் அம்மா அடிக்கடி வருவா. அவா தான் நீங்கள் வருவதைக் கண்டு விட்டு அம்மாவுக்கு இல்லாதது பொல்லாததுகள் யாவற்றையும் சொல்லுறவா. அர்ச்சகா எப்படியானவள், அவளது குடும்பத்தின் நிலை எதுவும் எனக்குத் தெரியாது'' என்றாள் வித்தியா.

"அடுத்த முறை நான் வரும்போது யாவற்றையும் விபரமாக அறிந்து வைத்திரும். இந்தக் கடிதத்தைக் கொடுத்து பதில் வாங்கித் தாரும்'' என்றான் கஜேந்திரன்.

“இதனால் பிரச்சினைகள் வராதா...?”

“பிரச்சினைகள் யாவற்றையும் நீர் வென்றுவிடுவீர். அந்த நம்பிக்கையில் தான் நான் நகுலனிடம் கடிதத்தை வாங்கி வந்தேன்.” என்று கூறி வித்தியாவை அணைத்தான் கஜேந்திரன்.

“அம்மா வந்திடுவா போங்கோ” என்றாள் வித்தியா.

கஜேந்திரன், நகுலனின் வீட்டுக்கு வந்த போது நகுலன் பரபரப்புடன் இருந்தான்; “என்ன மாதிரி” பரபரத்தான் நகுலன்.

“கடிதத்தைக் கொடுத்து விட்டேன். அர்ச்சகாவின் வீட்டார் பல வருடங்களுக்கு முன்பே கொழும்புக்குச் சென்றதால் அவர்களைப் பற்றிய எந்த விடயமும் வித்தியாவுக்கு தெரியாது. நாலைந்து நாட்கள் பொறுத்திரு” என்றான் கஜேந்திரன்.

“நாலைந்து நாளோ..? நாலைந்து வருடங்கள் மாதிரியெல்லே இருக்கப் போகுது” அழுவாரைப் போல் சொன்னான் நகுலன்.

“பொறுத்திரு காதலிக்கத் தொடங்கீற்றாய். இனித்தான் பல சோதனைகளுக்குள்ளாக வேண்டும்” என்று சிரித்தான் கஜேந்திரன்.

“இன்றைக்கு என்றுமில்லாதவாறு மகிழ்ச்சியாய் இருக்கிறாய். வித்திய என்ன தந்தவள்”.

கஜேந்திரன் பலமாகச் சிரித்தான்; “அவள் எதுவும் தரத்தேவையில்லை. எதையும் தருவதாகச் சொன்னாலே அதைப் பெற்றதைப் போல இருக்கும். அவளை நான் எத்தனையோ தரம் சந்தித்து விட்டேன், ஒவ்வொரு முறையும் அவள் புதுமையான வளாகவே எனக்குத் தோன்றுகிறாள். அத்துடன் அவள் தரும் இன்பமும் புதியதாகவே உள்ளது. நல்ல நூல்களைக் கற்கக் கற்க அறியாதவற்றை அறிவது போல இவளைக் கூடும் போதெல்லாம் முன்பு நான் அறியாத புதுமையான இன்பம் எனக்குக் கிடைக்கிறது” என்றான் கஜேந்திரன்.

1110. **அறிந்தோறு அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு.**

*நல்ல நுல்களைக் கற்கின்ற ஒவ்வொரு முறையும் அறியாதவற்றை அறிவது போல, அணிகலன்களை அணிந்து அழகோடு இருக்கும் இவளைக் கூடும் போதெல்லாம் புதுமையான இன்பம் ஏற்படுகிறது.*

## மென்மையானவள்

கஜேந்திரன் அன்று மாலை தனது தந்தையார் செய்யும் வயலுக்குச் சென்றான். கஜேந்திரனின் தந்தையார் பொன்னம்பலம் ஒரு விவசாயி. உச்சுவில் குளக்கரையில் அவரது வயல் இருந்தது. மிகவும் அவதானமாக அவர் உழுது

பசளையிட்டு நெல் விதைப்பதால் அவருக்கு அமோக விளைச்சல் வருடா வருடம் ஏற்படும். வயலில் இருந்து கிடைக்கும் நெல் அவரது குடும்பத்தின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தது.

கஜந்திரன் ஓய்வு கிடைக்கும் வேளைகளில் வயலுக்குச் சென்று தகப்பனுக்கு உதவி செய்வான். அன்று வயலில் களை எடுப்பு நடைபெற்றது. களை எடுக்கும் பெண்களுக்கு கஜேந்திரனின் தாயார் உணவும் தேநீரும் கொடுத்ததால் அதைக் கொண்டு சென்றான்.

வயல் ஆரம்பமாகும் இடத்தில் தனது துவிச்சக்கர வண்டியை நிறுத்திய கஜேந்திரன், உணவுப் பொதியையும் தேநீர் கலத்தையும் எடுத்துக் கொண்டு வயல் வரம்பில் நடக்கத் தொடங்கினான். அந்த வரம்பால் அவர்களது வயலுக்கு ஒருமைல் தூரம் நடந்து செல்ல வேண்டும்.

வயல்களில் பல பெண்கள் களை பிடுங்கிக் கொண்டிருந்தனர். வரம்பின் மேல் வெள்ளம் நின்றது. அவதானமாக அவன் நடந்து கொண்டிருந்தான். வயல் வரம்புகளில் முள்ளிச் செடிகள் நின்றன. உயரமாகச் சிலர் வரம்பு கட்டியதால் அவ்வரம்பில் நீர் நிற்கவில்லை. அதனால் நீரில் நின்ற தவளைகள் வரம்பில் இருந்தன. கஜேந்திரன் நடந்து வரும் அரவச் சத்தம் கேட்டதும் அவை வயலில் இருந்த நீருள் பாய்ந்தன. வரம்பில் படுத்திருந்த சில நீர்ப் பாம்புகளும் அவசர அவசரமாக நெளிந்து நீருள் இறங்கின. நீரில் இறங்கிய பாம்பு ஒன்று வயல் வரம்பில் இருந்து பாய்ந்த மிகவும் சிறிய தவளையொன்றைக் கௌவியது.

வரம்பில் இருந்த வயல் எலி ஒன்று நீருள் பாய்ந்து நீந்திச் சென்றது. அதன் வால் மிகவும் நளினமாக அசைந்தது. அது நீந்திச் செல்லும் அழகைச் சில கணங்கள் பார்த்து ரசித்தான் கஜேந்திரன். அவன் இயற்கையை ரசிப்பதில் விருப்பமுடையவன். அதனால் அவன் பௌர்ணமித் தினங்களில் வயலுக்குச் செல்வான். நிலவு உள்ள நாட்களில் வயல் காவலுக்குச் செல்வது அவனுக்குப் பிடிக்கும்.

நெற் பயிர்கள் காற்றில் மிகவும் மெதுவாக அசைந்தன. மிகவும் பரந்த கடல் பச்சை நிறத்தில் அலை அடிப்பதைப் போல நெற்பயிர்கள் அழகாக அசைந்தன. குளிர்மையாக வீசிய காற்று கஜேந்திரனின் உடலில் ஊசி போலக் குத்தியது.

அவர்களது வயலில் பல பெண்கள் களை பிடுங்கிக் கொண்டு நின்றனர். கஜேந்திரனைக் கண்டதும் பொன்னம்பலம் வயலில் களை பிடுங்கும் பெண்களை உணவு உண்ண வருமாறு அழைத்தார். கஜேந்திரன் உச்சுவில் குளக்கட்டில் ஏறி அமர்ந்தான். குளக்கட்டோடு அவர்களின் வயல் இருப்பதால், வயலுக்கு ஒரு போதும் நீர்ப் பஞ்சம் ஏற்படுவதில்லை. வயலின் வரம்புகளிலும் குளக்கட்டின் கீழ்ப் பகுதியிலும் பொன்னம்பலம் காய்கறிச் செடிகளை நட்டிருந்தார். மாரி காலத்தில் காய்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு உண்டாகும். ஆனால் பொனன்ம்பலத்தின் வீட்டிற்குக் காய்கறித் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை.

குளத்துள் ஏராளமான செந்தாமரைப் பூக்களும், வெண்தாமரைப்பூக்களும் மலர்ந்திருந்தன. குளக்கட்டில் ஏராளமான அனிச்சம் பூக்கள் மலர்ந்திருந்தன. கஜேந்திரன் வயலுக்கு வந்தால் அனிச்சம் பூக்களைப் பார்க்காமல் விடமாட்டான். மிகவும் அழகான அந்தப் பூக்களை கவிஞர்கள் பெண்களுக்கு ஒப்பிட்டுள்ளது. அவனுக்குத் தெரியும். அதனால் அவன் அப்பூக்களைப் பார்த்து ரசிப்பான். கவிஞர்கள் எவ்வளவு திறமைசாலிகள். அனிச்சம்பூவை எனது காதலியின்

மென்மைக்கு ஒப்பிட்டுள்ளனர். அவன் அனிச்சம்பூவை தொட்டுப் பார்த்தான். அது மென்மையாக இருந்தது; "அனிச்சம்மலரே, நீ மிகவும் மென்மைத் தன்மை உள்ளதாக இருக்கிறாய். நான் உன்னைத் தொட்டுப் பார்த்தேன். உன்னை விட எனது காதலி மென்மையானவள்." என்று அவனது உதடுகள் முணுமுணுத்தன.

**1111. நல்நீரை வாழி அனிச்சமே! நின்னினும்**
**மெல்நீரள் யாம்வீழ் பவள்.**

*அனிச்சம் மலரே, நீ நல்ல மென்மைத் தன்மையைப் பெற்றிருக்கிறாய்! நீ வாழ்க! நான் விரும்பும் பெண் உன்னை விட மென்மையானவள்.*

## மலர்கள்

"பெண்கள் தான் மலர்களா?. இல்லை மலர்கள் தான் பெண்களா" என்று கவிஞர்களைப் போலக் கஜேந்திரனுக்கும் ஒரு சந்தேகம் நெடு நாட்களாக மனதில் இருந்து வந்தது. அதற்கான விளக்கத்தை யாரிடம் கேட்பது. ஓர் அறிஞரிடம் தான் கேட்க வேண்டும். அந்த அறிஞரிடம் கேட்டால் என்னைப் பற்றித் தவறாக நினைக்க மாட்டாரா?" என்று எண்ணுவான் கஜேந்திரன்.

தமிழை விசேட பாடமாகக் கற்கும் சில மாணவர்களிடம் அவன் இதைப்பற்றிக் கேட்டுள்ளான். அவர்கள் அவனை விசித்திரமாகப் பார்ப்பார்கள். "உலகில் எத்தனையோ தீர்க்க முடியாத பிரச்சினைகள் இருக்கு. நீ ஒரு பாடு" என்று நகுலன் சொன்னான்.

"உனக்கென்ன விசர் முத்திப் போய்ச்சே. போய் ஒழுங்காய்ப் படி. கணிதத்துறையில் ஆராய்ச்சி செய்ய வேண்டிய நீ ஏன் பெண்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறாய்" என்றான் இன்னொருவன்.

"யார் எதைச் சொன்ன போதும் கஜேந்திரன் வெட்கமோ துக்கமோ கொள்ளவில்லை. தன்னை ஒத்த இளைஞர்களிடம் அந்தக் கேள்வியைக் கேட்பான். சில நாட்களுக்கு முன்பு அவன், நகுலனிடம் அக்கேள்வியைக் கேட்டான்.

"நகுலன் அவனை விசித்திரமாகப் பார்த்தான். பின்பு தனது வலது கையை உயர்த்தி இரண்டு விரல்களை மடித்து விட்டு" :இதிலை எத்தனை விரல்கள் இருக்கு தென்று சொல்லு பார்ப்பம்" என்று சிரித்தான்.

கஜேந்திரன் எதுவும் சொல்லாமல் சிரித்தான். பின்; "எல்லோரும் வார்த்தைகளால் என்னை விசரன் என்று சொல்வார்கள். நீ செயலால் விசரன் என்று சொல்கிறாய். அது தான் வித்தியாசம். தான் விரும்பிய ஒரு பெண்ணைக் காதலிப்பவன் தான் உலகத்தில் பாக்கியசாலி என நான் நினைக்கிறேன். நான் பெண்ணைப் பற்றிக் கேட்டதும் வார்த்தைகளால் விசரனென்றும், செயல்களால் விசரனென்றும், கூறும் தமிழ் படிக்கும் நீங்கள், என்னைப் போல் பெண்களை மலராக நினைத்துக் கவிஞர்கள் பாடல்கள் எழுதியதைப் படித்துத்தானே பட்டம் பெறுகிறீர்கள். அத்துடன் அப்பட்டத்தின் மூலம் தானே தொழில் பெற்று வாழ்க்கையை நடத்துகிறீர்கள். அப்பிடியிருக்க ஒரு கவிஞனின் சந்தேகத்தைப்

பற்றிக் கேட்டால் சிரிக்கும் நீங்கள் படித்தவர்கள் தானா...? அகநானூற்றுப் பாடல்களையும், பெண்களைப் பற்றிக் கவிஞர் கூறியதையும் பரிகசிக்கும் நீங்கள் ஏன் அவர்கள் கூறியவற்றைப் படித்துப் பட்டம் பெறுகிறீர்கள். என்னைப் போல கணிதத்தைப் படியுங்கள்'' என்றான் கஜேந்திரன் கோபமாக.

நகுலனால் எதுவும் பேசமுடியவில்லை. கஜேந்திரன் கூறுவதைப் போல தமிழை ஒரு பாடமாகக் கற்பவர்கள் பெண்களையும் காதலையும் விட்டு விட முடியாது; ''உண்மைதான் நீ சொல்வதைக் கேலி செய்த நாங்கள் தான் விசரர்கள்'' என்றான் நகுலன்.

''என்ன தம்பி வந்தநேரம் தொடக்கம் குளத்தைப் பார்த்து யோசித்துக் கொணடிருக்கிறீா். ஏதாவது நடக்கக் கூடாதது நடந்து விட்டதோ..?'' என்று கேட்டாள் களை பிடுங்கும் ஒரு பெண்.

திடுக்கிட்டுத் திரும்பிய கஜேந்திரன்; ''ஒன்றுமில்லை'' என்று சிரித்தான். மீண்டும் அவனது மனம் அனிச்சம்பூக்களை நோக்கிச் சென்றது. பின் குளத்தில் மலர்ந்திருக்கும் செந்தாமரைப் பூக்களை நாடிச் சென்றது. அந்தப் பூக்களில் உள்ள செம்மை நிறம் தான் பெண்களில் உள்ள நாணமோ..? வெண்டாமரைப் பூக்கள் அவளது உள்ளத்தைப் போல வெண்மையாக இருந்தன. நகரில் உள்ள பூந்தோட்டம் திடீரென்று குளக்கரைக்கு வந்து விட்டதைப் போன்ற பிரமை. அவன் சென்றால் அழகாக மலர்ந்து பலரது கண்களையும் கொள்ளை கொள்ளும் மஞ்சள் நிறமான ரோஜாப் பூவையே விரும்பிப் பார்ப்பான். அதற்குள் வித்தியாவின் முகம் தெரியும். படபடத்து மூடும் மயக்கத்தைத் தருகின்ற கண்கள் தெரியும். அதைப் பறித்துச் சென்று வித்தியாவின் முகத்தில் வைத்துப் பார்க்க வேண்டுமென்ற நினைவு வரும்.

''இவளது கண்கள் பலராலும் காணப்படும் மலர்களை ஒத்திருக்கின்றன. எனக்கருதி அவளது கண்களைப் போன்ற அழகான மலர்களைக் கண்டதும் என் மனம் மயங்குகிறது.'' என நினைத்தான் கஜேந்திரன்.

**1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்**
**பலர் காணும் பூவொக்கும் என்று.**

*நெஞ்சமே, இவளுடைய கண்கள் பலரும் காண்கின்ற மலர்களை ஒத்திருக்கின்றன எனக்கருதி இவளது கண்களுக்கு ஒப்பான மலர்களைக் கண்டால் நீ மயங்குகிறாய்.*

## மூங்கில் முத்துவேல்

குளக்கட்டின் வடக்குப்பக்கமாக மூங்கில் மரங்கள் பற்றையாக நின்றன. கவிஞர்கள் பெண்களின் தோளை மூங்கிலுக்கு ஒப்பிட்டு வர்ணிக்கிறார்கள். இந்த மூங்கில் மரத்தில் அப்படி என்ன விசேடமிருக்கு என்று மூங்கில் மரத்திற்கு மிக அருகில் சென்று பார்ப்பான். பலமணி நேரம் தொடர்ந்து பார்த்தும் அவனுக்கு அவற்றின் ஒத்த தன்மை பற்றி விளங்கவில்லை. இங்கு பற்றைக் காடாக வளர்ந்து நிற்கும் மூங்கில் மரங்களை உற்றுப் பார்த்தான். அதன் அருகில்

சென்று தொட்டுப் பார்த்தான். பளபளவென இருந்த அதன் தோற்றம் அவனுக்குச் சற்று மயக்கத்தைக் கொடுத்தது.

வித்தியாவின் தோள்களை நினைத்துப் பார்த்தான். மூங்கில் மரத்தில் தொட்ட போது வித்தியாவின் தோள்களைத் தழுவுவது போன்ற உணர்வு அவனது மனதில் எழுந்தது. மென்மையான வளவளப்பான மஞ்சள் நிறங் கொண்ட அந்த மூங்கில் மரம் வித்தியாவின் தோள்களைப் போல பளபளத்தது.

குளக்கட்டில் அவனது தகப்பனார் நட்ட பயித்தங் கொடி கொம்பில் சுற்றி பச்சைப்பசேல் என இருந்தது. அதன் தளிர் ஒன்று வயற்காற்றில் மெல்ல அசைந்து ஆடியது. மிருதுவான அந்தத் தளிரைப் போன்ற மெல்லிய வளைந்து அசையும் உடல் வாகு வித்தியாவுக்கு இருக்கிறதா என நினைத்துப் பார்த்தான் கஜேந்திரன். மிகவும் மெலிந்த அவளது பளபளப்பான உடல் காற்றில் அசையும் தளிர் போலத் தோன்றியது.

திரும்பிக் குளத்தைப் பார்த்தான். பூரணமாக மலர்ந்திருந்த பெரியதொரு செந்தாமரைப்பூ அவளின் கண்ணில் பட்டது. உற்று அதன் அழகை ரசித்தான். அத் தாமரைப்பூ வித்தியாவின் பொலிந்த முகத்தைப் போல் இருந்தது. அவனைக் கண்டதும் அப்பூவில் தோன்றிய வித்தியா முறுவலித்தாள். வெண்முத்துக்களைப் போல அவளது பற்கள் ஒளிர்ந்தன. கைதேர்ந்த சிற்பி ஒருவனால் அளவெடுத்து செதுக்கியதைப் போன்ற அமைப்பு. வித்தியா பூரண மகிழ்வுடன் சிரித்தால் முத்துக்களைப் போல் ஒளிரும் அவளது பற்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் அவ்வளவு அழகான பற்கள்.

கஜேந்திரனின் மனவானில் வித்தியா வலம் வந்து மெல்லச் சிரித்தாள். சிரிக்கும் போது குழி விழும் அவளது மிருதுவான கன்னங்கள் சிவக்கும் அழகைக் கவிஞனைப் போல ரசிப்பான். அவளின் எழிலையும், அவள் அணிந்திருக்கும் சேலையின் அழகையும் ரசித்துக் கவிதைகள் எழுதிக் கொடுப்பான். அவள் ‘விசர்’ என்று சிரிப்பாள்.

கட்டி அணைக்கும் போது அவளது மிருதுவான உடலில் இருந்து வரும் வாசனை, அவனது மனதைச் சிலிர்க்கச் செய்யும். “பாண்டிய மகாதேவியின் கூந்தலில் இருந்து வந்த நறுமணம் செயற்கையானதா அல்லது இயற்கையானதா என்று பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட ஐயம் பெரும் கலகத்தில் முடிவடைந்ததை ஒரு கணம் நினைத்துப் பார்த்தான் கஜேந்திரன். அவனுக்குச் சிரிப்பு வந்தது. “பெண்களின் அழகு கடவுள்கள் மத்தியிலேயே குழப்பத்தை உண்டு பண்ணியுள்ளது. இதில் நான் எம் மாத்திரம்” என்று நினைத்தான்.

வித்தியாவின் மைதீட்டிய கண்களை நினைத்துப் பார்த்தான். வேலைப் போல் கூர்மையான அந்த விழிகள் கஜேந்திரனின் இதயத்தைத் தாக்கின. “பெண்களுக்குக் கண்கள் தான் அழகு என்று கவிஞர்கள் கூறுகிறார்கள். ஆண்களை வசியப்படுத்துவது அவர்களது கண்கள் தான்” என்று நினைத்தான் கஜேந்திரன்.

காதல் கொண்டவனுக்குக் காண்பதெல்லாம் காதலியின் கவர்ச்சியான அங்கங்களாகவே தோன்றும் என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். “கவிஞர்கள், புலவர்கள் எல்லோரும் பெண்களின் மென்மையான தோள்களைப் பற்றியும் உடலைப் பற்றியும் பற்களைப் பற்றியும் கண்களைப் பற்றியும் அளவுக்கதிகமாக

வர்ணித்திருக்கிறார்கள். அவர்கள் கூறுவது எல்லாம் வித்தியாவக்குப் பொருந்தும்'' என்று நினைத்தான் கஜந்திரன்.

**1113. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்**
**வேல்உண் கண் வேய்த்தோ ளவட்கு.**

*மூங்கில் போன்ற தோள்களை உடைய இவளின் மேனி தளிரையும், பற்கள் முத்தையும், உடல் மலரின் மணத்தையும், கண்கள் வேலையும் ஒத்திருக்கின்றன.*

## நாணும் குவளை

கஜேந்திரனை நான்கு தினங்களாகக் காணாமையால் தவித்துப் போனான் நகுலன். கடிதத்தை வாங்கும் போது இரண்டு தினங்களில் பதில் வாங்கித் தருகிறேன்.'' என்று கூறி விட்டுச் சென்ற கஜேந்திரனைக் காணாமல் நகுலனின் இதயம் வாடிச் சோர்ந்து விட்டது. அர்ச்சகாவின் எழுத்துக்கள் எப்படி இருக்கும். அழகிய முத்துப் போன்ற அவளது பற்களை ஒத்திருக்குமா..? இல்லை அவளது கூர்மையான வேல் போன்ற விழிகளை ஒத்திருக்குமா..? அவனால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

தன்னைப் பற்றி வித்தியாவிடம் விசாரித்ததில் இருந்தும், அன்று பார்த்துச் சிரித்ததில் இருந்தும் அவள் தன்னை விரும்புவதைத் தெரிந்து கொண்ட நகுலன் அவளது எழுத்தின் அழகைக் கண்டு ரசிக்க ஆவற்பட்டான். கடிதத்தைக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி விட்டுச் சென்ற கஜேந்திரனின் நீண்ட பிரிவு அவனுக்குத் துக்கத்தைக் கொடுத்தது.

ஆவல் மிகுதியால் கஜேந்திரனைத் தேடி அவனது வீட்டிற்குச் சென்றான். அங்கு அவனைக் காணவில்லை. அதன் பின் நான்கு முறை அவனது வீட்டுக்குச் சென்றான். அவ்வேளையிலும் அவனைக் காணமுடியவில்லை. அதன் பின் நான்கு தினங்களும் காலையும் மாலையும் கோயிலுக்குச் சென்றான். கஜேந்திரன் கோயிலுக்கு வரவில்லை.

அன்று காலை எப்படியும் அவனது வீட்டில் தங்கியிருந்தாவது அவனைக் கண்டு கொள்ள வேண்டு மென நினைத்து வீட்டுக்குச் சென்றான். இதற்கு முன்பு தனது மகன் எங்கு சென்றான் எனத் தனக்குத் தெரியாது எனக் கூறும் அவனது தாயார் அன்று அவன் வயலுக்குச் சென்று விட்டதாகக் கூறினார்.

நகுலன் முன்பு கஜேந்திரனுடன் அவனது வயலுக்கச் சென்றிருக்கிறான். நீண்டதூரம் வெள்ளத்துள் வரம்பால் நடந்து செல்வது அவனுக்குப் பிடிக்காது. ஆனால் அன்று அவனுக்கு வெள்ளத்தைக் கடப்பது சிரமமாகத் தோன்றவில்லை.

விரைவாக வரம்பால் நடந்து சென்று குளக்கரையை அடைந்தான். குளத்தில் மலர்ந்திருந்த குவளை மலர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் கஜேந்திரன். நகுலன் வந்து சிறிது நேரம் கஜேந்திரனைப் பார்த்துக் கொண்டு நின்றான். கஜேந்திரனுக்கு இவ்வுலக நினைவு இருக்கவில்லை. குளத்தையே வெறித்து நோக்கியபடி இருந்தான்.

‘‘கஜேந்திரன்’’ என்று அழைத்தபடி நகுலன் கஜேந்திரனது தோளைப் பற்றினான். திடுக்கிட்டு நிமிர்ந்த கஜேந்திரன் நகுலனைக் கண்டு விட்டு; ‘‘நீயா... வயலுக்கு வருவது உனக்குப் பிடிக்காதே எப்படி வந்தாய்’’ என்று கேட்டான்.

‘‘இரண்டு மூன்று தினங்களில் அர்ச்சகாவிடமிருந்து கடிதம் வாங்கித் தருவதாகக் கூறினாய் அதன் பின் உன்னைக் காணவில்லை. பல முறை உனது வீட்டுக்கு சென்றும் உன்னைச் சந்திக்க முடியவில்லை. இன்று தான் நீ இருக்குமிடம் தெரிந்தது. நீ இருக்குமிடம் சந்திரமண்டலமன்றாலும், அங்கு நான் வந்திருப்பன்’’. என்றான் நகுலன்.

‘‘வித்தியா தனது வீட்டுக்கு என்னை வரவேண்டாம் என்றும், தான் கடிதத்தைக் கொண்டு வந்து தாறதாகவும் சொன்னாள். நேற்று வரை வரவில்லை’’ என்றான் கஜேந்திரன்.

‘‘நான் படும் வேதனை உனக்குத் தெரியும் தானே.’’ அழுவதைப் போல சொன்னான் நகுலன்.

‘‘அதற்கு நான் என்ன செய்வது? காதலியைக் காண முடியாதவர்கள் இயற்கையில் தமது காதலிகளைக் கண்டு மகிழலாம். இந்தக் குளத்திற்கு நான் வருவது எனது காதலியின் அங்கங்களின் பொலிவைக் காணுவதற்காகத்தான். காதல் கொண்டவளின் கண்களுக்கு அழகான மலர்களெல்லாம் காதலியின் அழகான முகத்தைப் போலவே தோன்றும். அர்ச்சகாவை நினைத்துக் கொண்டு இந்தக் குளத்தில் மலர்ந்திருக்கும் குவளை மலர்களைப் பார். அவளது கண்களைப் போலத் தாம் இல்லையே என்று வெட்கப்பட்டுக் குவளை மலர்கள் தம் தலையைக் கவிழ்த்திருப்பது போல உனக்குத் தெரியவில்லையா?. ஒரு முறை அருவி வெட்டிய பின் என்னுடன் வித்தியா இக் குளத்தைப் பார்க்க வந்தாள். குளத்தில் உள்ள அத்தனை குவளை மலர்களும் அவளது கண்களைக் கண்டு நாணித் தமது தலைகளைக் கவிழத்து விட்டன’’ என்றான் கஜேந்திரன்.

**1114. காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்**
**மாணிழை கண் ஒவ்வோம் என்று.**

*இவளது கண்களைப் போல நாம் இல்லையே என வெட்கப்பட குவளை மலர்கள், இவளைக் கண்டதும் நாணப்பட்டு தலை கவிழ்ந்து நிற்கும்*

## மெல்லிடை

‘‘ முன்பு நீ இப்படிக் கதைத்தால் நான் மனதுக்குள் இவன் சரியான விசரன்என்று நினைப்பேன். அத்துடன் எனது நண்பர்கள் எல்லோருக்கும் நீ சொன்ன கதையைப் பல தடவைகள் சொல்லி விழுந்து விழுந்து சிரித்திருப்பேன். உன்னை நான் நண்பர்களுடன் இருக்கும் போது கண்டால் கண்ணால் சைகை காட்டிச் சிரிப்போம். அல்லது சிலேடை மொழியில் கதைத்துச் சிரிப்போம். இப்பொழுது நான் அர்ச்சகாவின் மீது காதல் கொண்ட பின்பு தான் காதலின் மகிமை தெரிகிறது. பிரிவின் துயரம் புரிகிறது. காதலின்

இயல்பு புரிகிறது. அர்ச்சகாவைக் கண்ட நாள் முதல் அவள் என்னை விரும்புவாளோ என்ற ஏக்கம் என்னை வாட்டியது. அவளைக் கண்ட பின்பு என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை. எந் நெஞ்சில் அவளின் முகம் தோன்றி வருத்திக் கொண்டே இருந்தது'' கண்களை மூடினான் நகுலன்.

குளக்கரையில் மலர்ந்திருந்த அணிச்ச மலர்களைப் பார்த்தான். கஜேந்திரன். அப்பூக்களைப் பறித்து முகர்வதன் மூலம் வெளிவரும் மூச்சுக் காற்றுப் பட்டாலே அம்மலர்கள் வாடிச் சோர்ந்து விடும். அவ்வளவு மென்மையான மலர்களைக் கவிஞன் எப்படி உவமிக்கிறான். அதை நினைக்க அவனுக்கு வியப்பாக இருந்தது.

''அர்ச்சகா என்னை விரும்புகிறாள். என்பதை அறிந்த பின்பு மகிழ்ச்சியால் குதூகலித்தாள். எனது இதயம் அவளின் வார்த்தைகளை எதிர்பார்க்கிறது. எந்நேரமும் அவள் அருகில் இருக்க வேண்டும். என்று விரும்புகிறது. கவிஞர்கள் சொல்வது போல காதல் கொண்ட உள்ளம் பிரிவின் போது நிம்மதியிழந்து தவிக்கிறது. தயவு செய்து அர்ச்சகாவை நான் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யடா. ஏனோ தெரியவில்லை அவள் கடந்த மூன்று நாட்களாகக் கோயிலுக்கு வரவில்லை'' என்றான் நகுலன்.

துயரத்துடன் கதைத்துக் கொண்டிருக்கும் நகுலனின் முகத்தைப் பார்த்தான் கஜேந்திரன். அது வாடிச் சோர்ந்து களை இழந்திருந்தது. பிரிவுத்துயர் அவனது முகமெங்கும் படர்ந்திருந்தமையால், முகம் கறுத்திருந்தது.

''உனது துயரம் எனக்குப் புரிகிறது. ஆனால் என்னால் வித்தியாவின் வீட்டுக்குச் செல்ல முடியாது. வித்தியாவின் தாய் முன்பென்றால் எதுவும் பேசமாட்டா. இப்பொழுது அர்ச்சகாவின் தாய் நான் அங்கு சென்று வருவதைப் பற்றி அடிக்கடி கூறுவதால், அவா எனக்கு ஆலோசனைகள் கூறுகிறா. அவா கூறுவது சரிதான். பெண்களைப் பெற்றவர்கள் அவதானமாகத்தானே இருக்க வேண்டும். அதனால் அவா இல்லாத நேரங்களில் தான் என்னால் அங்கு செல்ல முடியும். வழக்கமாக வித்தியா வரும் இடங்களுக்கும் வரவில்லை. பொறுத்துக் கொள்'' என்றான் கஜேந்திரன்.

நகுலன் சில கணங்கள் பேசாமல் நின்றான். பின்பு; ''அனிச்ச மலர்களைப் பற்றித் தான் கவிஞர்கள் அளவுக்கதிகமாகக் கூறியுள்ளனர். பெண்களின் மென்மையான சிற்றிடை அனிச்சம் பூச்சூடிய கூந்தலையே தாங்கமாட்டாது. என்று கூறுகிறார்கள்.''

நான் ஒரு நாள் அனிச்சம் பூக்களை காம்புடன் பறித்துச் சென்று வித்தியாவுக்குக் கொடுத்தேன். அவள் அவற்றை மாலையாகக் கட்டி தனது கூந்தலில் சூடினாள். மிகவும் அருமையாக இருந்தது. வழக்கமாக நிமிர்ந்து நடக்கும் வித்தியா, அன்று கூந்தல் பாரமாக இருக்கிறது. என்று என்னை ஏசினாள். பெண்களுக்கு இடை உடுக்கைப் போல இருப்பது தான் அழகு'' என்றான் கஜேந்திரன்.

''நீ குளக்கரையில் வந்து இருக்கும் காரணம் இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது. குளத்தில் மலர்ந்திருக்கும் செந்தாமரை, வெண்தாமரை நீலோற்பனம் என்பன அர்ச்சகாவின் கன்னங்களைப் போலவும் கண்களைப் போலவும் முகத்தைப்போலவும் எனக்கும் தோன்றுகின்றன.'' என்றான் நகுலன்.

‘‘சரி வா போவம் இப்ப இரண்டு மணி வீட்டுக்குச் சென்று குளித்து சாப்பிட்டு விட்டு நான்கு மணிக்குக் கடற்கரைக்குப் போவோம் வித்தியா வருவாள். சில வேளை உனக்குக் கடிதம் கொண்டு வருவாள்.’’ என்றான் கஜேந்திரன். அவனது வார்த்தைகள் நகுலனக்கு இன்பத்தைக் கொடுத்தது.

1115. **அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை.**

*இவள் தனது மென்மையை அறியாது அனிச்சம் பூக்களைக் காம்புடன் சூடினாள். அதன் பாரம் தாங்காது வருத்தும் அவளின் இடைக்கு இனி நல்ல பறை ஒலிக்காது.*

# குழப்பம்

நான்குமணிக்கு நகுலனும் கஜேந்திரனும் கடற்கரைக்கு வந்தனர். கடற்கரையில் சனநடமாட்டம் மிகவும் குறைவாக இருந்தது. வழமையாக ஆறுமணிக்குப் பிறகே சனநடமாட்டம் அதிகரிக்கும். காதலர்கள் இருட்டிய பின்பு தான் அங்கு வருவார்கள். ஆனால் வித்தியா வித்தியாசமானவள். நான்கு மணிக்கு வந்து ஐந்து மணிக்குச் சென்று விடுவாள். அன்று நாலரை மணியாகியும் வித்தியா வரவில்லை. நாலைந்து தினங்களுக் முன்பு வித்தியாவைச் சந்தித்துத் தழுவி மகிழ்ந்த போதும் கஜேந்திரனுக்கு மனம் பரபரத்தது. வித்தியா வந்தால் கதைத்து மகிழலாமென நினைத்தான்.

சூரியன் கடலுள் புதைந்து கொண்டிருந்தான். பூரணசந்திரன் கடலுள் இருந்து மெல்ல எழுந்து கொண்டிருந்தான். கஜேந்திரன் நேரத்தைப் பார்த்தான் மாலை ஐந்தரைமணி.

‘‘இனி வித்தியா வரமாட்டாள் வா போவம்’’ என்று எழுந்தான் கஜேந்திரன் கடற்கரை மெதுவாகக் களை கட்டிக் கொண்டிருந்தது. கரையோரமாக இருந்த மின் குமிழ்கள் மெல்லச் சிணுங்கியவாறு அழத்தொடங்கின. நகுலனுக்குத் துக்கமாக இருந்தது. அவனுக்கு எழும்பவே விரும்பவில்லை.

‘‘ராஜ்’’ என்றொரு இனிமையான குரல் கஜேந்திரனுக்கு அருகில் ஒலித்தது. அந்த இனிமையான குரலுக் குரியவள் வித்தியா என்று தெரிந்து கொண்ட கஜேந்திரன் திரும்பிப் பார்த்தான். அலங்காரத் தேவதை போல வித்தியா அவனின் எதிரே நின்றாள். அழகான வேலைப்பாடுகள் உள்ள நீல நிறச் சேலை அவளின் அழகை அதிகரிக்கச் செய்தது. அவளின் அருகே அர்ச்சகா நின்றாள். திகைத்துப் போனான் கஜேந்திரன். ‘‘ராஜ்’’ மீண்டும் யாழை மீட்டினாள் வித்தியா. கஜேந்திரன் கரைந்து போனான். அவள் அன்பு மிகுந்த நேரத்தில் அவனை ராஜ் என்றே அழைப்பாள். அவள் அவனது செவிக்குள் ‘ராஜ்’ என்று இரகசியம் சொல்வது போலச் சொல்லும் போது அவனது மனம் அளவுக்கதிகமான உணர்வுகளால் கிளர்ந்தெழும். அப்படியான ஓர் இனிமையான உணர்வுக்காட்பட்டிருந்தான் கஜேந்திரன். அர்ச்சகாவிடமிருந்து கடிதம் வாங்கி வருவதாகக் கூறியவள் அர்ச்சகாவையும் அழைத்து வந்தது வியப்பைக் கொடுத்தது.

நகுலனால் தனது கண்களை நம்ப முடியவில்லை. எழுந்து மெதுவாக நடந்து அவளின் அருகே வந்தான். அர்ச்சகா அவனைப் பார்த்து மெதுவாகச் சிரித்து விட்டுத் தலையை குனிந்தாள். திடீரென்று வானம் இருண்டதைப் போல் இருந்தது. நகுலனுக்கு வானத்தில் பிரகாசிக்கும் சந்திரன் இவளது முகத்தில் வீசும் ஒளியைக் கண்டு நாணிக் கரு முகில்களுக்குள் நுழைந்து விட்டதைப் போல் தோன்றியது.

“நான் கடிதம் தரச் சொல்லித் தான் அர்ச்சகாவைக் கேட்டனான். அவள் என்னோடு கடற்கரைக்கு வந்து விட்டாள்”. என்றாள் வித்தியா.

“உமக்குள்ள ஆவல், அவளிடமும் இருக்கத் தானே செய்யும்” என்ற கஜேந்திரன் நகுலனின் பக்கம் திரும்பி; “பகல் முழுவதும் பெரிதாகக் கவலைப்பட்டாய். அர்ச்சகா வந்திருக்கிறாள். கேட்க வேண்டியவற்றைக் கேள்” என்று கூறி விட்டு வித்தியாவையும் அழைத்துக் கொண்டு வேறோர் இடத்திற்குச் சென்றான்.

“நான் விரைவாக வீட்டுக்குச் செல்ல வேண்டும். நான்கு மணிக்குப் புறப்பட்டனான். புறப்படும் போது மாமா வந்து விட்டார். அவரைச் சமாளித்து வர நேரமாகி விட்டது. நேற்று வீட்டுக்கு வந்த அர்ச்சகா கடற்கரைக்கு தானும் வாறதாகச் சொன்னாள். அர்ச்சகாவும் நானும் கோயிலுக்குப் போறதாகச் சொல்லி விட்டுத் தான் வந்தனாங்கள். விரைவாகப் போக வேண்டும்” என்றாள் வித்தியா.

வானத்தில் பூரண சந்திரன் உலாவிக் கொண்டிருந்தான். விண் மீன்கள் வானில் விரைவாக ஓடிக் கொண்டிருந்தன.

“வித்தியா வானத்தைப் பார்த்தாயா விண்மீன்கள் வானத்தில் உலாவும் நிலவிற்கும் கடற்கரையில் அமர்ந்திருக்கும் உனது முகத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் குழப்பமடைந்து ஓடித் திரிகின்றன” என்றான் கஜேந்திரன்.

“விசர், விசர்” என்றாள் வித்தியா.

**1116. மதியும் மடந்தை முகனும் அறியா**
**பதியின் கலங்கிய மீன்.**

*நிலவிற்கும் இவளது முகத்திற்கும் வேறுபாடு கண்டறிய முடியாத விண்மீன்கள் தம் நிலையில் நிற்காமல் கலங்கித்திரிகின்றன.*

## களங்கம்

“பூரண சந்திரனின் குளிர்மையான ஒளி வெள்ளம் மனதிற்கு இன்பம் அளிக்கும் என்பார்கள். காதலர்களுக்கு சந்திரனின் ஒளிக்கதிர்கள் போதையை ஊட்டும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். நீர் எனக்கு அருகில் இருக்கும் போது உலகை நான் மறப்பதால் சந்திரனின் ஒளி வெள்ளத்தின் குளிர்மை எனக்குத் தெரிவதில்லை. நீர் இல்லா விட்டால் சந்திரனின் ஒளி சுடுகிறது. அத்துடன் சந்திரனின் இந்த ஒளிக்கதிர்கள் உலகு முழுவதையும் தன் ஒளியால்

பிரகாசிக்கச் செய்யலாம். ஆனால் எனது மனத்தைப் பிரகாசிக்கச் செய்ய முயன்று இந்நிலவு தோற்றுப் போனது. எனது மனம் பிரகாசிக்க வேண்டுமானால், எனது மன வானில் உமது முகம் வர வேண்டும். எனது மனதில் உலவும் நிலவு, உமது முகம் தானே.'' என்றான் கஜேந்திரன். அவனது குரல் தாழ்ந்து கரகரத்தது.

''வரவர உங்களுக்கு விசர் கூடிக் கொண்டு போகிறது. இதை விட்டால் கரைச்சல். விரைவாக மருந்தெடுத்துக் குணப்படுத்த வேண்டும்'' என்றாள் வித்தியா.

''எனது விசருக்கு மருந்து நீர்தானே. தினமும் எனக்கு அருகில் இருந்தால் எனது விசர் மாறி விடும்''

''மாறாது முற்றி விடும். நான் கோயிலுக்குப் போயிட்டு வருகிறேன், என்று கூற அம்மா இருட்டி விட்டது போக வேண்டாம் என்றவா. கெதியாய்ப் போக வேண்டும்'' என்று வித்தியா எழுந்தாள். கஜேந்திரன் வித்தியாவின் கையைப் பிடித்து இழுத்து தனக்கு அருகில் அமர்த்தினான்.; ''பாவம் பல நாட்களாக அர்ச்சகாவைச் சந்தித்துப் பேசமாட்டோமா என்று கவலைப்பட்டவன் கொஞ்ச நேரம் கதைக்கட்டும்'' என்றான் கஜேந்திரன்.

''அம்மாவை விட அர்ச்சகாவின் தாயைச் சமாளிப்பது தான் கரைச்சலானது. அம்மா நான் சொல்வதை நம்பி விடுவா. அவாவுக்கு என் மீது சந்தேகமே வராது. ஆனால் அர்ச்சகாவின் அம்மா வந்த பிறகு வீண்கதைகளைச் சொல்லி அம்மாவைக் கெடுத்துப் போட்டா. இப்ப எங்கை புறப்பட்டாலும், புறப்படும இடம் சொல்ல வேண்டும்; திரும்பி வரும் நேரம் சொல்ல வேண்டும். அத்துடன் இரண்டு நாள் நீங்கள் அம்மா இல்லாத நேரம் வீட்டுக்கு வந்தனீர்கள். நீங்கள் வந்த நேரம் பின் சென்ற நேரம் எல்லாம் மனிசி பார்த்து வைத்து அம்மாவக்குச் சொல்லிப் போட்டுது. இனி மேல் நீங்கள் எமது வீட்டுக்கு வரவேண்டாம்'' என்றாள் வித்தியா.

கஜேந்திரன் சிரித்ததான். அவனது சிரிப்பைப் பார்க்க வித்தியாவுக்கு எரிச்சலாக இருந்தது.;'' இப்ப என்ன நடந்ததென்று சிரிக்கிறீர்கள்'' கோபமாகக் கேட்டாள் வித்தியா.

''உம்மையே இந்தப் பாடு படுத்தும் அர்ச்சகாவின் தாயிடம் நகுலன் அகப்பட்டு என்ன பாடுபடுவான் என்பதை நினைத்தன். சிரிப்பு வந்து விட்டது'' என்றான் கஜேந்திரன்.

''இன்னும் உங்களுக்கப் பொறுப்பு வரவில்லை. பகிடியும் சரசமும் தான்'' பொய்யாகக் கோபித்தாள் வித்தியா.

''காதலிக்கும் பொழுது தான் பகிடி, சேட்டை, சரசம் யாயும் விட முடியும். கலியாணமானால் அடுத்த வருடம் குழந்தை.. அதுக்கடுத்த வருடம் குழந்தை இதுகளுக்கெல்லாம் உழைக்க வேணும்..''

கஜேந்திரன் பேசிக் கொண்டிருக்கும் போது கோபத்துடன் சொன்னாள் வித்தியா; “ உங்களோடு எதையும் கதைக்க முடியாது. அவசியமான விடயங்களையும் பகிடியாகவே எடுத்து இலகுவாகக் கதைக்கிறீர்கள்..”

“ஐயையோ பொய்யாகக் கோபித்தாலும் கோபங் கொள்கிறீர். தேய்ந்து தேய்ந்து பின் வளர்ச்சியடையும் சந்திரனுக்குப் பெரிய களங்கம் உள்ளது. தூர இருந்து பார்க்கும் போதே அதில் இருக்கும் களங்கம் மிகப் பெரிதாக இருக்கிறது. கிட்டச் சென்று பார்த்தால் எப்படி இருக்கும். என்னவளின் முகம் காணாத இடத்தில் இருந்து நினைத்தாலும் பிரகாசமாகக் களங்கமின்றித் தெரியும். அருகில் மிக அருகில் இருந்து எத்தனை தரம் பார்த்திருக்கிறேன். என்னால் எந்தக் களங்கத்தையும் காணமுடியவில்லை. நீர் கோபிக்கும் போது தான் சந்திரனைக் காணாத அமாவாசை நாள்ப் போல உமது முகம் தோன்றுகிறது. எனவே பொய்யாகக் கூடக் கோபிக்காதீர்” என்றான் கஜேந்திரன்.

**1117. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல**
**மறு உண்டோ மாதர் முகத்து.**

*தேய்ந்தும் வளர்ந்தும் படிப்படியாக நிறைந்து விளங்குகின்ற சந்திரனில் உள்ள களங்கம் இந்தப் பெண்களின் முகத்தில் உண்டோ? இல்லையே?*

# ஒளிமுகம்

அர்ச்சகா வெகு நேரமாகக் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். அர்ச்சகாவுடன் எவ்வளவோ கதைக்க வேண்டும் என்று பல நாட்களாகத் திட்டமிட்டிருந்த நகுலன் எதுவும் பேசத் தோன்றாமல் கடலைப் பார்த்துக் கொண்டிருக்கும் அர்ச்சகாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். முன்பு பார்த்ததை விட அர்ச்சகா மிகவும் அழகாக இருந்தாள். முழுப்பாவாடையும் சட்டையும் அணிந்திருந்தாள். சிவந்த நிறத்திற்கு அவள் அணிந்திருந்த மஞ்சள் பாவாடை சட்டை எடுப்பாக இருந்தது. மெல்லிய நீண்ட கால் விரல்கள், கணைக் காலுக்குச் சற்று மேலே தெரிந்த அவளது கால் பகுதியின் பூரிப்பு அவனை கிறுகிறுக்க வைத்தது. செழுமையான காலில் லேசாக அரும்பியிருந்த பூனை மயிர்கள் மனதிற்குக் கிளர்ச்சியைக் கொடுத்தன.

குறும்புத்தனம் கொண்ட அழகானமுகம் செக்கச் செவேரெனச் சிவந்திருந்தது. அழகான சிவந்த உதடுகள், அளவான மூக்கு, அதில் மின்னும் மூக்குத்தி பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றும். அளவான உருவ அமைப்பு. அவனால் பேச முடியவில்லை.

வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சந்திரனைச் சில கணங்கள் பார்த்தான். அழகான பெண்களின் முகத்திற்கு வர்ணிக்கப்படும் சந்திரன் இவளின் முகத்திற்கு இணையாக மாட்டான் போலத் தோன்றியது. தமிழ் விரிவுரையாளர்கள் கவிதைகளைக் கற்பிக்கும் போது நிலவைப் புகழ்வார்கள். ஆனால் அவர்கள் அர்ச்சகாவின் முகத்தைப் பார்த்திருந்தால் புகழமாட்டார்கள் என்று நினைத்தவாறு நிலவைப் பார்த்தான்; நிலவே இது நாள் வரை நீ தான் குளிர்மையான ஒளி வீசும் தன்மையை உடையவள் என் கேள்விப்பட்டேன்.

இப்பொழுது நீ அர்ச்சகாவைப் பார். அவளின் முகத்தில் வீசும் ஒளியை விட உனது முகத்தில் கூடுதலான ஒளியா உள்ளது. இவளை விட நீ அழகுள்ளவளானால் அவளை விட்டு விட்டு உன்னைத் தான் நான் விரும்புவேன்'' என நினைத்தான் நகுலன்.

''நான் போக வேண்டும்.'' மெல்லச் சொன்னாள் அர்ச்சகா.

''நகுலன் அவளது அழகான உதடுகளைப் பார்த்தான். வர்ணம் பூசப்பட்ட அவளது உதடுகள் மெதுவாகத் துடித்து எதையோ சொல்வதைப் போலிருந்தது.

''நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்'' மெதுவாகக் கேட்டான் நகுலன்.

''க.பொ.த. உயர்தரம் வரை படித்து விட்டு வேலை தேடுகிறேன்.''

''நீர் வேலை தேடத் தேவையில்லை. நான் உழைத்து உம்மை மகாராணி போல வைத்திருப்பேன்''.

''அர்ச்சகாவின் பற்கள் ஒளிர்ந்தன. உதடுகள் நளினமான அசைந்தன.

''உம்மைக் கண்டன்றே உமது அழகில் மயங்கி விட்டேன். புலவர்கள் பெண்களை எப்படியெல்லாம் வர்ணித்திருக்கிறார்கள். உமது அழகு அவர்களின் வர்ணணைகளை விட வேறுபட்டு இருக்கிறது''.

அர்ச்சகா மெதுவாகச் சிணுங்கினாள். அவளது முகம் சிவக்க தலை கவிழ்ந்தது.; ''நீர் என்னை விரும்புவீரோ என்று இவ்வளவு நாளும் பயந்து போனேன். நீர் என்னைச் சந்திக்க வருவீர் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இன்று நல்ல நாள்.; மிகவும் அதிஷ்டமான நாள்; என் வாழ்வில் பொன்னான நாள் இது.?''

''ஆண்கள் காதலிக்கும் போது பிதற்றுவார்கள் என்று சொல்லக் கேட்டுள்ளேன். அது உண்மைதான்.'' சிரித்தாள் அர்ச்சகா.

அவளின் சிரிப்பு நகுலனுக்குப் போதையைக் கொடுத்தது; ''இன்று முதல் முதலாகச் சந்திக்கிறோம். எம்மைப் பற்றியும் எமது குடும்ப நிலை பற்றியும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நான் ஒரே ஒரு பிள்ளை. அப்பா பொறியியலாளராக இருந்து ஓய்வு பெற்று விட்டார்'' என்றாள் அர்ச்சகா.

''எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அப்பாவும் அம்மாவும் ஆசிரியர்கள். இன்னும் ஓய்வு பெறவில்லை'' என்றான் நகுலன். அப்பொழுது வித்தியாவும் கஜேந்திரனும் அங்கு வந்தனர்.

அர்ச்சகா உம்முடைய அம்மா எங்களைத் தேடிக் கோயிலுக்குப் போய்விடுவா. வாரும் போவம்'' என்றாள். அர்ச்சகா ஏக்கத்துடன் நகுலனைப் பார்த்தாள்; ''வசதியான நேரம் சந்திப்போம். வித்தியாவிடம் சொல்லி அனுப்புகிறேன்'' என்றாள் அர்ச்சகா.

**1118. மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.**

*நிலவே! நான் விரும்பும் பெண்ணின் முகத்தைப் போல ஒளி வீச உன்னால் முடியுமானால், நீயும் என் காதலை அடைவாய்*

# தோன்றாதிரு

“இனி எப்போ சந்திக்கலாம்” ஏக்கத்துடன் கேட்டான் நகுலன்.

“ அடிக்கடி சந்தித்தால் காதலின் மகிமை குறைந்து விடும். காதலன், காதலியைக் காணாது ஏங்கித் தவித்தாற்தான் காதல் வளரும். அந்தக் காதலில் தான் சுவையும் இருக்கும்” என்றாள் வித்தியா.

“அனுபவித்ததைச் சொல்கிறா” என்றான் கஜேந்திரன்.

அர்ச்சகா உதடு பிரியாமல் சிரித்தாள். எனினும் நகுலன் கேட்டதற்கு உடனடியாக அவளால் பதில் கூற முடியவில்லை.

“காதலர்கள் திட்டமிட்டுக் குறித்த நாளில் சந்திப்பது முடியாத காரியம். தினமும் சந்திப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும். சந்திக்கக் கிடத்தால் அதிட்ட மென்று நினைத்துக் கொள்ள வேண்டும்” என்றாள் வித்தியா.

“அர்ச்சகா நீ உன் மனதில் உள்ள எல்லாவற்றையும் எழுதி வித்தியாவிடம் குடு. நான் நகுலனிட மிருந்து பதில் வாங்கி வந்து தருகிறேன். ஆனால் காதலித்து விட்டு ஏமாற்றாமல் இருந்தால் சரி” என்றான் கஜேந்திரன்.

“உனக்கு எந்தெந்த நேரத்தில் என்னென்ன கதைக்க வேண்டும். என்று தெரியாது” கோபித்தான் நகுலன்.

“உவர் உப்பிடித்தான். கதைக்கக் கூடாத கதைகளைத் தான் அடிக்கடி கதைப்பார். நான் எத்தனையோ தரம் சொல்லிப் போட்டன். திருந்திறதாய் இல்லை” என்றாள் வித்தியா.

“அர்ச்சகா, உம்மை நம்பித்தான் நகுலனைக் காதலிக்கிறாள். பிறகு இவன் தற் செயலாய்” கஜேந்திரன் கதைக்கும் போது நகுலன் குறுக்கிட்டான்; “முன்பு நான் உதவி கேட்ட போதும் இப்பிடித்தான் கதைத்தனீ. அப்பவே என்ரை நிலைப் பாட்டைச் சொல்லீட்டன். அதை நம்பியிருந்தால் இப்படிக் கதைக்க மாட்டாய். என்றான் நகுலன்.

“அவர் பயப்படுவதில் நியாயம் இருக்கிறது. எதையும் நன்கு தீர்மானித்த பின்பே முடிவை எடுத்தல் வேண்டும். நான் நன்கு தீர்மானித்துத் தான் முடிவு எடுத்துள்ளேன். தன்னைப் பற்றிய முழுவிபரத்தையும் விரிவாக அவர் கடிதத்தில்

எழுதியுள்ளமையால் நான் அவரை நம்பிச் சந்திக்க வந்தேன்.'' என்றாள் அர்ச்சகா.

''நீ எல்லா உதவிகளும் செய்வாய். ஆனால் கதைக்கப் பேசத்தான் தெரியாது. நீயும் வித்தியாவும் செய்த உதவியை நான் கடைசி வரையும் மறக்க மாட்டன்'' என்றான் நகுலன்.

''வாயால் கூறினால் எப்படி? ஒரு பெரிய விருந்து வைக்க வேண்டும்.'' என்றான் கஜேந்திரன்.

''விருந்து தானே வைக்க வேண்டும். நாளைக்கே வைக்கிறேன்'' என்றான் நகுலன்.

வீதி வந்ததும்; ''இனி நீங்கள் போங்கோ'' என்றாள் வித்தியா

''நான் வாறன்'' என்றாள் அர்ச்சகா.

''நகுலன் அவளது முகத்தை ஏக்கத்துடன் பார்த்தான். அவளது முகம் வாடியிருப்பது நிலவொளியில் தெளிவாகத் தெரிந்தது.

'கூடியிருப்பவர்கள் பிரிவது துயரத்தைத் தரும் தான்' என்று நினைத்தான் நகுலன். அர்ச்சகா சென்று விட்டாள். கஜேந்திரனும் சென்று விட்டான். ஆனால் நகுலனுக்கு வீட்டுக்குச் செல்ல விருப்பமில்லை. நடந்து சென்று அர்ச்சகா இருந்த இடத்தைப் பார்த்தான். அவளது கால் சுவடுகள் மணலில் பதிந்திருந்தன. மெல்ல அவற்றைத் தொட்டுப் பார்த்தான். அர்ச்சகாவைத் தொடுவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. கைக்குட்டையை எடுத்து அவளது காலடி பதிந்த மண்ணை அள்ளி எடுத்து அதில் பவுத்திரப் படுத்தினான். அவள் இருந்த இடத்தில் இருந்து நிலவைப் பார்த்தான். அதற்குள் அர்ச்சகாவின் முகம் தோன்றிச் சிரித்தது. முன்பு நிலவில் இருந்த களங்கத்தைக் காணவில்லை. முன்பை விட ஒளி அதிகரித்திருப்பது போல் இருந்தது. கைக்குட்டையில் சேகரித்து வைத்திருந்த மண்ணைப் பிரித்துப் பார்த்தான். அவளது மென்மையான கால்கள் தெரிந்தன. அவளைக் காணாதிருந்த நாட்களை விடத் துன்பம் அதிகரித்திருப்பதைப் போலத் தோன்றியது. மலர்களைப் போன்ற கண்களையுடைய அர்ச்சகாவின் முகம் வானில் தோன்றியதைப் போன்ற பிரமை. ''நிலவே நீ எனது அர்ச்சகாவின் முகத்தைப் போல இருக்க விரும்பினால், நீ பலரும் பார்க்கும் வண்ணம் தோன்றாதே'' என்று வாய்க்குள் முணுமுணுத்தான்.

**1119. மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தி யாயின்**
**பலரி காணத் தோன்றல் மதி.**

*நிலவே மலர் போன்ற கண்களை உடைய இவளுடைய முகத்தை ஒத்திருக்க நீ விரும்பினால் பலரும் காணும் படியாக நீ தோன்றாதே.*

# நெருஞ்சி முள்

கடற்கரை மணலில் அணணாந்து படுத்திருந்தான் நகுலன். முகில் கூட்டங்கள் நிலவைத் தழுவிச் சென்றன. அர்ச்சகாவின் முகத்தை ஒத்திருக்கும் நிலவில் அன்று களங்கமில்லாததால் மேகக் கூட்டங்கள் நிலவின் அழகு கூடியிருப்பதை உணர்ந்து அர்ச்சகாவைத் தழுவிச் சென்றன. அதை நினைக்க நகுலனக்குப் பொறாமையாக இருந்தது.'' ''நானும் முகில் கூட்டமாக மாறினால் எப்படி இருக்கும்'' என எண்ணினாள். திடீரென்று முகில் கூட்டங்களுக்குள் நடப்பதைப் போன்ற பிரமை நகுலனுக்கு ஏறபட்டது. அர்ச்சகா மிகவும் அழகாக இருந்தாள். மெதுவாக அசைந்து அர்ச்சகாவை நெருங்கினான். அவனைக் கண்டதும் அர்ச்சகா தலை குனிந்தாள். கூந்தலில் சூடியிருந்த மல்லிகைச் சரத்தின் மணம் மூக்கைத் துளைத்தது. '' அர்ச்சகா... என் கண்ணே.. உன்னைத் தழுவிய இந் நிலையிலே என் உயிர் பிரிந்தால் எப்படியிருக்கும்... மலர் போன்ற உன் கண்கள் இன்று என்றுமில்லாத ஒளியை வீசிக் கொண்டிருக்கின்றன. மைபூசப்பட்ட புருவங்கள் சந்திரனில் உள்ள கறையைப் போல அழகாக இருக்கின்றன.

கனவுலகில் மிதந்து கொண்டிருந்த நகுலனின் நெஞ்சில் ஏதோ ஒரு பொருள் வந்து விழுந்தது. திடுக்கிட்டு எழுந்தான். அவனின் எதிரில் குழந்தைகள் கூட்டமாக நின்றன.

''மாமா எங்களை மன்னித்துக் கொள்ளுங்கோ. நாங்கள் விளையாடியது பந்து தவறுதலாக உங்களின் மீது விழுந்து விட்டது.'' அழகான பெண்குழந்தை ஒன்று வீணை மீட்டுவது போலச் சொன்னது.

நகுலன் எழுந்து  சென்று அந்தக் குழந்தையைத் தூக்கினான். மிகவும் அழகான அந்தக் குழந்தை மிரண்டது.; '' நான் ஒன்றும் செய்ய மாட்டேன். உனது பெயர் என்ன.?''

''அர்ச்சகா'' என்று கூடி நின்ற பிள்ளைகள் கூறினார்கள். நகுலன் திகைத்துப் போனான். அர்ச்சகா தனது நெஞ்சில் முகம் புதைத்திருப்பதைப் போன்ற பிரமை. ''வாருங்கோ இனிப்பு வாங்கித் தருகிறேன்'' என்றான் நகுலன்.

''வேண்டாம் அப்பா அடிப்பார்'' கீழே இறங்க முயன்றாள் அர்ச்சகா.

''அப்படியா... போங்கோ'' என இறக்கி விட்டான் நகுலன் சிறிது தூரம் ஓடிச் சென்ற அர்ச்சகா திரும்பி நின்று நகுலனைப் பார்த்துச் சிரித்தாள்.

நகுலன் அவளைப் பிடிப்பதற்காக ஓடிச் சென்றான். அர்ச்சகாவும் ஓடினாள். அவளது பெற்றோர் அருகில் இருந்தனர். விரைவாக ஓடிச் சென்ற அர்ச்சகா தனது தாயின் மடியில் அமர்ந்து கையை அசைத்துச் சிரித்தாள். அவளுடன் கூட வந்த பிள்ளைகள் மீண்டும் பந்தை எறிந்து விளையாடத் தொடங்கினர். அர்ச்சகா, தாயின் மடியில் இருந்து மெல்ல எழுந்து நகுலனைப் பார்த்துப் பார்த்து விளையாடும் இடத்தை அடைந்தாள். நகுலன் அவளைப் பிடிக்கப்போவது போல் பாசாங்கு செய்தான். அர்ச்சகா பயப்படாது பெரிதாகச் சிரித்தாள்.

நேரம் சென்று கொண்டிருந்தது. விளையாடிய பிள்ளைகளைப் பெற்றோர் வந்து அழைத்துச் சென்றனர். கடற்கரையில் சனநடமாட்டம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது. அர்ச்சகா இருந்த இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்த

நகுலனுக்கு அவ்விடத்தை விட்டு எழுந்து செல்ல விருப்பமில்லாமல் இருந்தது. அர்ச்சகா அம் மணல் மீது சரிந்து அமர்ந்திருப்பதைப் போன்ற பிரமை.

கைக்குட்டைக்குள் அள்ளி வைத்திருந்த மணலைப் பிரித்துப் பார்த்தான். அர்ச்சகாவின் மென்மையான பாதங்கள் மணலில் தெரிந்தன. மென்மையான அவளது பாதங்களை அவன் வருடினான். பஞ்சு போல மிகவும் மிருதுவாக அவளது பாதங்கள் இருந்தன. மிகவும் மெல்லியதான அனிச்சம் மலரும் அன்னப் பறவையின் இறகும் கூட அர்ச்சகாவின் பாதங்களைக் குத்தி வருத்தும் நெருஞ்சி முள்ளாகுமோ...? அப்படி எண்ணிய நகுலனின் இதயம் வேதனைப் பட்டது. அவளது மென்மையான பாதங்களும், மென்மையான நீண்ட விரல்களும் கைக்குட்டைக்குள் இருந்த மண்ணில் தோன்றிச் சிரித்தன.

**1120. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.**

*மிகவும் மென்மையான அனிச்சம் பூவும்; அன்னப்பறவையின் இறகும் மாதரின் மெல்லிய அடிகளும் நெருஞ்சி முள் போன்றவை.*

## தேனும் பாலும்

வித்தியாவின் உதடுகள் அசையும் அழகைகட கஜேந்திரன் வெகுநேரமாக ரசித்துக் கொண்டிருந்தான். அவளது உதடுகள் நீண்டும் சுருங்கியும் ஒடுங்கியும் செல்லும் தன்மை மிகவும் அற்புதமாக இருந்தது. அவள் தனது உதடுகளுக்கு நடனம் பழகியிருக்கிறாளோ..?

‘‘நான் எவ்வளவு நேரமாகக் கதைத்துக் கொண்டிருக்கிறன். நீங்கள் ஞானி மாதிரி மேலே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்ப உங்களுக்கு எனது பேச்சைக் கேட்கச் சலிப்பாக இருக்கு. நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்கிறீர்கள் இல்லை’’ சிணுங்கினாள் வித்தியா.

‘‘நான் உமது இரசிகன். உமது உதடுகள் சிவந்து என்றுமில்லாதவாறு அழகாக அசைந்து நாட்டிய மாடுகின்றன. அதற்குப் போட்டியாக ஆடுவதைப் போல உமது கண்கள் அசைகின்றன. முகம் நவரசபாவனை காட்டுகிறது. ஒரு கலைஞன் நாட்டியம் பார்ப்பதை விட்டு விட்டு இசையை ரசிப்பானா..? இரண்டும் ஒரே மேடையில் நடப்பதால் தான் இந்தப் பிரச்சினை...’’

‘‘விசர்...விசர்... காதலிக்க ஆரம்பிப்பவர்கள் தான் அசடு வழியப் புலம்புவினை. என்று பார்த்தால் காதலித்துப் பல மாதங்கள் கழித்தும் புலம்பல் ஓயவில்லை. உங்களது புலம்பலைக் கேட்டுக் கேட்டு எனது காது புளித்து விட்டது. இதை எப்ப விடப் போறியள்’’ பொய்யாகச் சீறினாள் வித்தியா.

‘‘எண்பது வயதுக் கிழவியாய் வந்தாலும் உம்மீதுள்ள மோகம் எனக்குக் குறையாது. அந்த நேரம் கிழவிகளுக்கான அழகிப் போட்டி வைத்தால் நீர் தான் வெல்லுவீர்.’’ பலமாகச் சிரித்தான் கஜேந்திரன்.

‘‘சிரிப்பதை விட்டு விட்டு நான் சொல்வதைக் கேளுங்கோ. என்னைக் கொழும்பிலை உள்ள மாமா தங்கடை வீட்டிலை இருக்க வரட்டாம். அவருக்கு மன்மதன் மாதிரி ஒரு மகன் இருக்கிறான். ஊருக்கு வந்தால் என்னைச் சுற்றிச் சுற்றி வருவான். அவனைப் பார்க்கவே எனக்குப் பிடிக்காது. அங்கை போனால் அவனைத் தான் கட்ட வேண்டி வரும்’’.

‘‘கட்டும், என்னில் பார்க்க அழகான மாப்பிளை அவன்..’’ கஜேந்திரன் கூறும்போது குறுக்கிட்டாள் வித்தியா; ‘‘இப்ப என்னைப் புளிச்சுப் போச்சு’’ விம்மினாள் வித்தியா.

கஜேந்திரன் சிரித்தான்; ‘‘உம்மை எனக்குப் புளிச்சுப் போச்சோ?. உம்மைக் காணாத நேரங்களில் நினைத்தாலே தித்திக்கும் நீரா எனக்குப் புளித்து விட்டீர். அழகான பற்கள், தேனூறுகின்ற மென்மையான சிவந்த உதடுகள். இவற்றை நினைத்தாலே பாலையும் தேனையும் கலந்து குடிப்பதைப் போன்ற இனிமை உண்டாகும். சுவைத்தால் எப்படி இருக்கும். உமது நினைவுகளுக்கே புளிப்பில்லாத போது நனவிற்கு எப்படிப் புளிப்பு இருக்கும். கண்களை மூடினால் அழகான பற்களும் மெதுமையான உதடுகளும் தோன்றுகின்றன. அவற்றின் சுவை கனவிலும் சாகிறது.’’

‘‘நீங்கள் பிதற்றிக் கொண்டிருங்கோ நான் போறன்’’ எழுந்து நடந்த வித்தியாவின் கையைப் பிடித்தான் கஜேந்திரன். வித்தியா எதுவும் பேசாமல் கஜேந்திரனுக்கு மிக அருகில் வந்தாள். அவளது உதடுகள் துடித்தன. கண்களில் நீர் முட்டியது.

‘‘விசர், ஏன் அழுகிறீர். கொழும்புக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டால் சொல்லும். வீட்டை கூட்டிக் கொண்டு போறன். கொழும்புக்குச் செல்லாமல் நிற்பதற்கு உம்மால் சாட்டுச் சொல்ல முடியாதா? பட்டதாரியான உமக்கு எல்லாவற்றையும் நானா சொல்லித் தரல் வேண்டும்.’’ கஜேந்திரனது மென்மையான வார்த்தைகள் வித்தியாவுக்கு ஆறுதலளித்தன. மெதுவாகச் சிரித்தாள்.

‘‘தேவையில்லாமல் கற்பனைகளை வகுத்துக் கொண்டு கண்கலங்குவது தான் உமது வாடிக்கையான தொழில். அது எனக்கு விருப்பம். நீர் ஊடல் கொண்டால் இனிமையான அனுபவங்கள் கிடைக்கும். தேனோடு பால் கலந்து உண்ணலாம்.’’ கஜேந்திரன் சிரித்தான்.

வித்தியாவின் முகம் நாணிக்கோணிச் சிவந்தது. மெல்லத் தலை குனிந்தாள். கஜேந்திரன் அவளது தலையை நிமித்தினான்.

**1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வால்எயிறு ஊறிய நீர்.**

*மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய தூய பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேன் கலந்ததைப் போன்ற சுவையுடையது.*

# தொடர்பு

வித்தியா வீட்டுக்கு வந்த போது அவளது மாமனாரான வரதராஜன் அவளது வீட்டில் இருந்தார். ''இவள் என்னுடைய சொல்லைக் கேட்கிறாளில்லை. போற இடமும் சொல்வதில்லை. வீட்டுக்கு நேரம் பிந்தி வாறாள். படிப்பு முடிந்து விட்டது. பிறகெங்கை போறாள். நீங்கள் தான் கண்டிக்க வேண்டும். '' வித்தியாவின் தாய் இலட்சுமி துக்கத்துடன் சொன்னாள்.

''நீ உலகம் தெரியாத பெம்பிளையாய் இருக்கிறாய். இப்ப ஆண் பெண் என்ற பேதம் இல்லை. படித்தவர்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள் வெளியே இருக்கும். முன்னைய காலத்தைப் போலப் பெண்களை வளர்க்க வேண்டுமென்று நீ நினைத்திருந்தால் அவளை நீ படிப்பித்திருக்கக் கூடாது. படித்தால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தான் வேண்டும்'' என்றார் வரதராசா.

''நீங்கள் அவளைக் கண்டிப்பீர்கள் என்று நினைத்துச் சொன்னால், நீங்கள் அவளுக்கு ஆதரவாகக் கதைக்கிறீர்கள். இனிமேலும் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. கெதியாய்க் கலியாணத்தை முடித்து வையுங்கோ..''

வித்தியாவுக்கு தலையில் இடி விழுந்ததைப் போல இருந்தது. இரண்டு தினங்களுக்கு முன்பு; வித்தியாவை கொழும்புக்குக் கூட்டி வரப் போகிறேன். என்று தொலை பேசியில் சொன்னவர். இன்று வந்திருக்கிறார். ஒரு வேளை என்னைக் கூட்டிச் சென்றால்'' அவளுக்குப் பயமாக இருந்தது. கஜேந்திரனுக்குச் சொன்னால் சிரிப்பார். அலட்டுவார். இதைத் தவிர அவருக்கு எதுவும் தெரியாது; ''வித்தி, உடம்போடு உயிருக்கு உள்ள தொடர்பானது எப்படிப்பட்டதோ அப்படிப்பட்டது தான் உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பு உடலை விட்டு உயிர் பிரிந்தால் தான் நான் உன்னை விட்டுப் பிரிவேன். எமக்கு ஏழு பிறப்பு உண்டென்று சொல்கிறார்கள். அந்த ஏழு பிறப்பிலும் நீர் தான் எனக்குத் துணையாதல் வேண்டும்''. உணர்ச்சிப் பெருக்குடன் கஜேந்திரன் சொன்னது அவளது காதில் ஒலித்தது.

''என்னம்மா யோசிக்கிறாய். மாமி இறந்த பின்பு நான் நிம்மதியில்லாமல் தவிக்கிறேன். என்னால் முன்பு போல ஓடியாடித் திரிய முடியவில்லை. உனது மாமி என்னையும் அங்கஜனையும் குழந்தைப் பிள்ளைகளை வளர்ப்பதைப் போல வளர்த்து விட்டா. இப்ப எம்மால் இயங்க முடியவில்லை. வைத்தியனான அங்கஜன் ஆஸ்பத்திரி வேலைகளைச் செய்யவே சிரமப்படுகிறான். அவனுக்கு தாய் விதம் விதமாகச் சமையல் பண்ணிக் கொடுத்து விட்டார். எனது சமையல் அவனுக்குப் பிடிப்பதில்லை. ஒரே பிரச்சினை. நீயும் அம்மாவும் அங்கை வந்திருங்கோ. முன்பு பலமுறை கேட்ட போது படிப்பைக் காரணம் காட்டினாய். இப்ப படிப்பு முடிந்து விட்டது'' வரதராஜன் கதைத்துக் கொண்டிருந்தார். வித்தியாவுக்குத் தலை சுற்றியது.

''ஒரு பெண்ணுக்குத் தான் விரும்புபவன் தான் உலகில் உயர்ந்தவன். படிப்பும் பட்டமும் பொருளாதாரமுமா எமக்கு நிம்மதியைத் தருவது. கஜேந்திரனுடன் கதைத்துக் கொண்டிருந்தால் சொர்க்கத்தில் இருப்பதைப்போல இருக்கும்'' என்று நினைத்தாள் வித்தியா.

‘‘என்னம்மா யோசிக்கிறாய்? போய் முகத்தைக் கழுவி விட்டுச் சாப்பிடு.’’ வித்தியா மெல்ல நகர்ந்தாள்.; ‘‘ அங்கஜனுக்குப் பக்கத்தில் உள்ள வீட்டில் சாப்பாடு ஒழுங்கு செய்து விட்டு வந்தனான். இரண்டொரு நாட்களில் நான் போக வேண்டும். என்னுடன் நீங்கள் வந்தால் சந்தோசப்படுவன். இல்லா விட்டால் நீங்கள் எப்போது வர வசதியோ அப்போது வாருங்கள்’’ என்றார் வரதராசா.

‘‘எஙகளுக்கு இங்கு என்ன வேலை, நான் உங்களுடன் வருகிறேன்’’ என்றாள் இலட்சுமி.

வித்தியா அதிர்ந்து போனாள். கஜேந்திரன் கூறியது போல என்ன சாட்டுச் சொல்வது எதையும் யோசிக்க முடியாது தவித்தாள் வித்தியா.

‘‘அன்பே உன்னை என்னால் மறக்க முடியாது. உடம்போடு உயிருக்குள்ள தொடர்பு போன்றது. தான் எனக்கும் உமக்கும் உள்ள தொடர்பு நீர் இல்லையென்றால் நான் அன்றே இறந்து விடுவேன்’’ கஜேந்திரன் சொன்னது வித்தியாவின் காதில் ஒலித்தது. ‘‘ அன்பேநீங்கள் இல்லாத உலகில் நான் வாழ்வேனா..? வித்தியாவின் உதடுகள் முணுமுணுத்தன.

**1122. உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.**

*இவளுக்கும் எனக்கும் உள்ள உறவானது, உடம்போடு உயிருக்குள்ள உறவு எப்படியானதோ அப்படியானது*

## இடம்தேவை

அறைக்குள் வந்த வித்தியா விம்மி விம்மி அழுதாள். அவளால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. இதயத்துள் வெடி குண்டுகள் அடுத்தடுத்து வெடிப்பதைப் போன்று இருந்தது. ‘‘கஜேந்திரன் பலசாலி. மிகுந்த ஆண்மையுள்ளவர். எனினும் என் முன் மிகமிகப் பலவீனமானவன். நான் அருகில் இருந்தால் உலக நினைவே அவருக்கு இராது. எந்த விஷயத்தையும் பெரிதாக எண்ணாமல் இலகுவாகக் கருதும் அவரது மனம் நான் பிரிந்தால் எவ்வாறு அல்லற்படும். என் மீது தனக்குள்ள காதலை எப்படியெல்லாம் வெளிப்படுத்தியுள்ளார். அவர் எனக்குப் பின்னால் பல மாதங்களாக நாயாய் அலைந்த போது அவரை விலக்கியிருக்கலாம். நான் இன்னொருவனுக்கெனத் தீர்மானிக்கப்பட்டவள். என்று சொன்ன போதும் அவர் கேட்கவில்லையே..’’

‘‘வித்தி, நீ இன்னொருவனுக்கெனத் தீர்மானிக்கப்பட்டவளாக இருக்கலாம். ஆனால் இந்த விஷயத்தை நீ தீர்மானிக்க வேண்டும். என்னவோ தெரியவில்லை. என்மனம் உன்னையே நாடுகிறது. நீ என்னைப் பல முறை அலட்சியம் செய்தாய். பலருக்கு முன் அவமானப் படுத்தினாய். பலமுறை செருப்பைக் கழற்றிக் காட்டினாய். இருந்த போதும் நான் கோபப்படவில்லை. வெட்கப்படவில்லை. உன்னை நேசித்தேன். தீவிரமாக நேசித்தேன். இதற்குக் காரணம் உனக்குத் தீர்மானிக்கப்பட்டவனை நீ விரும்பவில்லை. அதை நீ

வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும் உனது செயல்களும் வார்த்தைகளும் எனக்குப் புலப்படுத்தின. அவனை விரும்பினால் சொல்லு, நான் விலகிச் செல்கிறேன். என்னுள் விளைந்து பெருகியிருக்கும் உனது நினைவுகளை உன்னால் எடுத்துச் செல்ல முடியாது. அது நான் இறந்த பின்பும் எனது பிறவிகள் தோறும் கூட வரும். காதலைப் பற்றி உனக்குத் தெரியாது. அது அணுவை விடச் சிறியது. மலையை விடப் பெரியது. பிளக்க முடியாத சின்னஞ்சிறிய அணு உலகையே அழிக்கும் தன்மை உடையது. அது மாதிரித்தான் காதல், உலகை உலுப்பக் கூடியது. உலகை மாற்றக் கூடியது. ஆக்கவும் அழிக்கவும் வல்லது. மலையைப் போலக் காதல் உறுதியானது. தகர்க்க முடியாதது. உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டது''

''இப்படியெல்லாம் சொல்லும் நீங்கள் மென்மையான மனதையும் எதையும் அலட்சியம் செய்யும் தன்மையையும் ஏன் கொண்டுள்ளீர்கள். உங்களைப் பிரிந்து என்னாலும் உயிர் வாழ முடியாது. அம்மா வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்தால் நான் இறந்து விடுவேன்.'' அழுதாள் வித்தியா.

''இஞ்சை என்ன செய்கிறாய்.'' மாமாவோடு வந்து கதை, பல வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கிறார். சாப்பிடச் சொன்னேன். நீ வரட்டும் என்று சொன்னார். வா; ''வந்து சாப்பிடு'' என்றாள் இலட்சுமி.

''இந்த இக்கட்டில் இருந்து எப்படித் தப்புவது. அங்கஜனைக் கடைசி வரையும் திருமணம் செய்ய முடியாது. அவரை நான் விரும்பவே இல்லை'' விம்மினாள்.

''வித்தி, காதல் என்பது முற்பிறப்புத் தொடர்பால் தான் ஏற்படுகிறது. விதி, ஊழ் இவற்றிற்கும் உறவுக்கும் தொடர்பிருக்கிறது. ஓர் ஆண் இலட்சக்கணக்கான பெண்களைப் பார்க்கிறான். அதே போல ஒரு பெண் இலட்சக்கணக்கான ஆண்களைப் பாரக்கிறாள். ஆனால் ஒருவரைத் தானே காதலிக்கிறாள். இது எப்படி நிகழ்ந்தது... பூர்வ புண்ணியப் பலன் என்று தான் சொல்ல வேண்டும். என்னால் உன்னை மறக்க முடியாது. அதனால் தான் பேயாக உன் பின்னால் அலைகிறேன். என் இருதயத்துள் நீ இருக்கிறாய். கண்களுக்குள் உன்னை வைத்துப் பூஜிப்பதற்காக என் கண்ணின் கருமணியில் உள்ள பாவையை என் கண்ணை விட்டு அகன்று சென்று விடுமாறு இரக்கிறேன். அப்படி என் கண்ணின் கரு மணிக்குள் இருக்கும் பாவையாகிய நீ அகன்று செல்லாவிட்டால் நான் விரும்பும் என் கண்ணைப் போன்றவள் இருக்க இடமில்லாமல் போய்விடும்'' கஜேந்திரன் கூறியது அவளது செவிகளில் ஒலித்தது.

அவ் வார்த்தைகளின் கொடுமையைத் தாங்க முடியாது விம்மி விம்மி அழுதாள் வித்தியா. அளவுக்கதிகமான துயரத்தால் அவளது இதயம் வெடித்து விடும் போலத் தோன்றியது. '' பிள்ளை வித்தியா'' என்று அழைத்தவாறு இலட்சுமி வந்தாள்.

**1123. கருமணியில் பாவாய் நீ போதாய், யாம் வீழும்**
**திருநுதற்கு இல்லை இடம்.**

*என் கண்ணின் கருமணியில் உள்ள பாவையே! நீ என் கண்ணை விட்டுப் போய்விடு, நீ போகா விட்டால் நான் விரும்புகின்ற பெண்ணுக்குஎன் கண்ணில் இருக்க இடம் இல்லாமல் போய்விடும்.*

# வாழ்வும் சாவும் தருபவள்

“அன்பே நீ அருகில் இருக்கும் போது தான் நான் உயிர் உள்ளவனாக உலகில் உயிர் வாழ்கிறேன். உன்னைப் பிரிந்தால் நான் செத்துப் போய் விடுகிறேன்.’’

‘‘அன்பே நீ அருகில் இருக்கும் போது தான் நான் உயிர் உள்ளவனாக இருக்கிறேன்’’ கஜேந்திரனின் குரல் வித்தியாவின் காதில் பலமாக ஒலித்தது. மிகுதியைக் கேட்க விரும்பாமல் அவள் தனது இருகைகளாலும் காதைப் பொத்தினாள். அவள் காதைப் பொத்திய பின் அவ் வார்த்தைகள் ஒலி பெருக்கியில் ஒலிப்பதைப் போல ஒலித்தன. அவளது இதயம் வேகமாகத் துடித்தது. உடல் வியர்த்துக் கொட்டியது.

‘‘என்ன வித்தியா ஒரு மாதிரியாக இருக்கிறாய். சுகமில்லையா..?’’ என்று கேட்டவாறு வித்தியாவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள் இலட்சுமி.; ‘‘என்னடி, உடல் நெருப்பாகக் கொதிக்குது. இந்த நிலையிலும் ஊர் சுற்றிக் கொண்டு வாறாய்’’ என்றாள் இலட்சுமி.

‘‘உனக்கு அவளைப் பேசாவிட்டால் சரிப்பட்டு வராது. நான் வந்ததில் இருந்து பார்க்கிறேன். ஓயாமல் பேசிக் கொண்டே இருக்கிறாய்’’ என்றார் வரதராசா.

‘‘உங்களுக்குத் தெரியாது அண்ணை தான் காலமை வெளிக்கிட்டவள், இப்ப வாறாள். சரியான காய்ச்சல் காயுது. வருத்த நேரத்திலாவது வீட்டில் இருக்கக் கூடாதே’’.

வரதராசா எதுவும் பேசவில்லை; ‘‘மருந்து எடுத்தியா’’ என்று கேட்டார்.

இல்லை என்று தலையசைத்தாள் வித்தியா; ‘‘அருகில் வைத்தியசாலை இருந்தால் மருந்தெடுப்பம் வா’’ என்று புறப்பட்டார் வரதராசா.

‘‘எனக்குக் காய்ச்சல் இல்லை மாமா. அம்மா இப்படித்தான்’’ என்றாள் வித்தியா.

வரதராசா வித்தியாவின் அருகில் வந்து அவளது நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். அது குளிர்ந்தது.; ‘‘இலட்சுமிக்கு இப்பவே மாறாட்டம் வந்திட்டுது. வித்தியாவின் உடல் குளிர்கிறது. வா சாப்பிடுவம்’’ என்றார் வரதராசா.

சாப்பிடுவதற்காக வரதராசாவின் அருகில் அமர்ந்தாள் வித்தியா. அன்று தனது சகோதரனுக்காக மிகவும் சுவையாகப் பல கறி வகைகளைச் சமைத்திருந்தாள் இலட்சுமி. வரதராசன் சுவைத்துச் சாப்பிட்டார்.; ‘‘பல நாட்களுக்குப் பின்பு இன்று தான் மிகவும் அருமையான உணவை உண்கிறேன்.’’ என்று மகிழ்வுடன் கூறிய படி உண்டார் வரதராசா.

வித்தியாவுக்கு அந்தச் சுவையான உணவு கசந்தது. ஒரு நாள் கஜேந்திரனது கரைச்சல் தாங்க முடியாததால் சொன்னாள்; ‘‘மனிதனுக்கு வெட்கம், ரோசம்,

மானம், மரியாதை இருக்க வேண்டும். எனக்கு உன்னில் விருப்பமில்லை. என்று பல தடவைகள் சொன்ன பின்பும் ஏன் எனக்குப் பின்னால் திரிகிறாய். உனக்குத்தான் வெக்கம் ரோசம் இல்லா விட்டாலும் எனக்கு இருக்கிறது. நாளைக்கு உன்னால் எனக்கு அவமானம் ஏற்படும். தயவு செய்து எனக்குப் பின்னால் வராதை'' அழுதாள் வித்தியா.

அதைக் கஜேந்திரன் எதிர்பார்க்கவில்லை.; ''ஐயையோ அழுகிறியா... அழாதை நீ அழுவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. நீ தான் என் உயிர்; என் உலகம்; என் உறவு; அழாதை....அழாதை.. உனக்குப் பிடிக்காத எந்த விசயத்தையும் நான் செய்ய மாட்டன். என்னால் உனக்கு அவமானம் ஏற்படும் என்று நீ நினைத்தால் நான் இந்த உலகத்தை விட்டே போய் விடுகிறேன். உன்னை நான் காணும் நாட்கள் தான் நான் உயிர் வாழும் நாட்கள். உன்னைக் கண்டவுடன் எனது மனம் மலர்கிறது. உயிர் வாழ்வதாக நினைக்கிறது. உன்னைக் காணாத வேளைகளில் எனது மனம் வாடிச் சோர்ந்து செயலிழந்து விடுகிறது. சொல்லப் போனால் இறந்து விடுகிறது. நான் இறக்க வேண்டு மென நீ நினைத்தால் சொல்லு வரவேண்டாம்; பார்க்க வேண்டாமென்று உன்னை நான் என்ன செய்கிறேன். நீ வரும் வழியில் நின்று பார்த்துப் பரவசமடைவதைத் தவிரத் தொந்தரவு எதுவும் செய்யவில்லையே..'' கஜேந்திரனது குரல் எதிரொலித்தது.

அவனது வார்த்தைகளின் கொடுமையால் தான் அவனை விரும்பினாள். ''இனிப் பிரிந்தால்'' அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

**1124. வாழ்தல் உயிர்க்கு அன்னள் ஆயிழை சாதல்**
**அதற்கு அன்னள் நீங்கு இடத்து.**

*தெரிந்தெடுத்த ஆபரணங்களை அணிந்திருக்கும் இவளைக் கூடும் போது உயிருக்கு வாழ்வு தருபவள் போல் இருக்கிறாள். பிரியும் போது உயிருக்குச் சாவு தருபவள் போல இருக்கிறாள்.*

## மறக்க முடிவதில்லை

கடற்கரையில் அமர்ந்திருந்தான் கஜேந்திரன். சூரியன் மேற்கு வானில் கடலுள் அமிழ்ந்து கொண்டிருந்தமையால் கடற்கரையில் கருமை படர ஆரம்பித்தது.

சூரியனுக்கு மிக மிக அருகே வித்தியா தோன்றிச் சிரித்தாள். கஜேந்திரனுக்கு கடற்கரையில் நடப்பவை எதுவும் தெரியவில்லை. அவனது நினைவுகளை வித்தியா ஆக்கிரமித்திருந்தாள்.

அவனைச் சந்திப்பதற்காக கடற்கரைக்கு வந்த வித்தியா, அவனுக்கு அருகில் வந்து அமர்ந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது உதடுகள் தமக்குள் ஏதோ சொல்வதும் சிரிப்பதுமாக இருந்தன; ''வித்தியா காதலிப்பவர்களுக்குத் தனிமை தான் சொர்க்கம். ஒருவரையொருவர் பிரிந்திருந்தால் பழைய இனிமையான நினைவுகளை இரை மீட்கலாம். காதலியின் குணங்களை, செயல்களை மீட்டுப் பார்க்கலாம். நேரில் காண்பது ஒரு வகையான இன்பம். காதலியின் குண இயல்புகளையும் செயல்களையும்

மீட்டுப் பார்ப்பது இன்னொரு வகையான இன்பம். அது பேரின்பம் என்று கூடச் சொல்லலாம்'' கஜேந்திரன் கூறியவற்றை நினைத்துப் பார்த்தவாறு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் வித்தியா.

காதலனை நேரில் பார்க்க வெட்கமும் நாணமும் விடாது. அவன் பாராத நேரத்தில் பார்ப்பது இன்பமானது. முழுமையாக அவனை இரசித்துப் பார்க்கலாம். அழகான ஆண்மைப் பொலிவுள்ள வட்ட வடிவாக முகம். அளவான அரும்பு மீசை. பளபளப்பான கண்கள்; பெண்களைப் போன்ற சிவந்த உதடுகள். அவற்றைப் பார்த்த வித்தியா மனதுள் பெருமைப்பட்டாள். தான் தான் உலகத்தில் மிக்க அதிஷ்டம் கொண்டவள் என்று நினைத்தாள்.

தற்செயலாகத் திரும்பிய கஜேந்திரன் வித்தியா தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு அதிசயித்தான்; ''எப்போது வந்தீர். நான் கவனிக்கவில்லை'' என்றான் கஜேந்திரன்.

''நான் வந்து பதினைந்து நிமிடங்கள் சென்று விட்டன. உங்களுக்கு எனது நினைவு எங்கே இருக்கிறது. காண்கிற நேரம் தான் பெரிதாக நினைப்பதாக காட்டிக் கொள்வீர்கள்'' கோபித்தாள் வித்தியா.

''வித்தி விளையாட்டாகக் கூட இப்படியான வார்த்தைகளைச் சொல்லாதீர். எந் நேரமும் மனதில் தோன்றி என்னை வருத்தும் அழகான கண்களை உடைய உம்மையும் உமது குணங்களையும் நான் மறந்தால் தானே நான் மீண்டும் நினைக்க முடியும்? என்கண்களும் மனமும் உமது நினைவுகளால் தான் தூங்காமல் விழித்திருந்து என்னை உயிர் வாழ்விக்கின்றன''.

சாப்பிட்டுக் கொண்டிருந்த வித்தியாவுக்குப் புரையேறியது. ''எந்தநேரமும் பரபரப்புத்தான். ஒரு நிமிசமெண்டாலும் நிம்மதியாக இருக்கிறியே. கடைசி சாப்பிடும் போதாவது...'' என்று ஏசியவாறு வித்தியாவின் தலையில் தட்டினாள் இலட்சுமி.

''வித்தி உம்மை மறந்தால் தானே நான் நினைப்பதற்கு. சுழன்று நாட்டிய மாடி பலவிதமான கதைகள் பேசும் கண்களை நான் மறப்பேனா?. மைதீட்டிய வளைந்த புருவங்களின் எழிலை மறக்க முடியுமா? சிவந்த போதையூட்டும் அழகான உதடுகள், அதில் பெறும் பேரின்பம் இவற்றை மறக்க முடியுமா தேவையில்லாமல் ஊடல் கொண்டு என்னை வருத்திப் பின் ஊடல் நீக்கி பேரின்பத்தைத் தரும் உம்மை நான் மறப்பனா? நனவில் செய்தவற்றை கனவிலும் செய்து மகிழ்விக்கும் பேராற்றல் கொண்ட உம்மை உறக்கத்திலும் என்னால் மறக்க முடியாது. உமது பண்பான குணத்தையும் துடிப்பான செயல்களையும் என்னால் எப்படி மறக்க முடியும். மறக்க வேண்டுமானால் எனக்கு மனமும் கண்களும் இல்லாதிருத்தல் வேண்டும்...'' ''இப்படிச் சொல்லும் அவர் எனது பிரிவை எப்படித் தாங்கப் போகிறார். நாளைக்கு மாமா எம்மையும் அழைத்துச் செல்ல விரும்புகிறார். இதில் இருந்து எப்படித் தப்புவது''. அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. மனம் விறைத்து மரத்து விட்டதைப் போல் இருந்தது. அவளால் எதையும் தீர்மானிக்கமுடியவில்லை. அவர்களுக்கு முன்னால் அழவும் முடியவில்லை. சோற்றைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

**1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்**
**ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.**

*ஒளி பொருந்திய போர் செய்யும் கண்களை உடைய இவளுடைய பண்புகளை நான் மறந்தால் தானே மீண்டும் நினைக்க முடியும். ஆனால் நான் ஒரு போதும் மறப்பதில்லையே.*

## நுட்பமானவர்

கஜேந்திரனைப் பற்றி ஒருகணம் நினைத்துப் பார்த்தாள் வித்தியா. அவனது நினைவைப் பற்றி இன்று வரை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நாளாவது அவன் அவளது மனம் நோகும் படியாக நடந்து கொண்டதில்லை. மூன்று வருடங்களுக்கு முன்பு அவள் அவனைக் கண்டாள்.

அவள் எப்பொழுதும் எதையும் பெரிதாக மதித்ததில்லை. அவளுடன் படிக்கும் மாணவர்கள் பலர் அவளைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். அவளின் முன் அசடு வழிய நிற்பார்கள். அவள் அவர்களை ஒரு பொருட்டாக மதித்ததில்லை. அவள் கண்ட ஆண்கள் எல்லோரையும் விட கஜேந்திரன் மிகவும் வித்தியாசமானவன். மிகவும் நுட்பமானவன் என்றே சொல்லலாம். கஜேந்திரன் அவளுக்கு கெடுதல் எதுவும் செய்தவன் அல்லன். தினமும் அவளின் பின்னால் வருவான். ஆனால் அவளுடன் எதுவும் பேசமாட்டான். எனினும் வித்தியாவின் தோழிகள் அவளைக் கேலி செய்வதுண்டு. தோழிகள் கேலி செய்யும் போது வித்தியா ஆத்திரத்தின் எல்லையில் நிற்பாள். ஏற்கனவே அவளது தாயாரின் சகோதரன் வரதராசன் தனது மகனான அங்கஜனுக்கு அவளை திருமணம் செய்ய எண்ணியுள்ளார். அவளது தாயாரும் தனது சகோதரனின் மகனையே வித்தியாவுக்கு திருமணம் செய்வதாக முடிவு செய்திருக்கிறாள். இடையில் இவன் குறுக்கிட்டால் எப்படி இருக்கும். அவள் அங்கஜனை விரும்பாவிட்டாலும் பெற்றோரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வது பிள்ளைகளின் கடமை என்று நினைத்திருந்தாள். ஆனால் கஜேந்திரன் தினமும் அவளைப் பின் தொடர்ந்து செல்வான். இது பிடிக்காததால் ஒரு நாள் அவள் சொன்னாள்; ''நீ என்னைத் தொடர்ந்து வருவது எனக்குப் பிடிக்கவில்லை. எனக்கு ஆண்களைப் பிடிக்காது. எனக்கென நிச்சயிக்கப்பட்ட எனது மாமனின் மகனையே எனக்குப் பிடிப்பதில்லை. இனி மேல் நீ என்னைப் பின் தொடர்ந்து வந்தால் செருப்பால் அடிப்பேன்.'' ஆத்திரத்துடன் சொன்னாள் வித்தியா.

''நான் உங்களைப் பின் தொடர்கிறேனா...? அப்படி நீங்கள் நினைக்கிறீர்களா...? இது பொது வீதி. நான் பல்கலைக் கழகத்தில் படிக்கிறேன். பல்கலைக்கழகத்தில் பாடங்கள் தொடங்கு முன் செல்ல வேண்டும். அதற்காகத்தான் செல்கிறேன். உங்களைப் பின் தொடர்ந்து வருகிறேன். என்று ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள். நான் நீங்கள் எனக்கு முன் சொல்கிறீர்கள் என்று நினைக்கவில்லையே'' அதிர்ந்து போனாள் வித்தியா.

இன்னொரு நாள் தோழிகளுடன் நிற்கும் போது அவனது வகுப்புத் தோழி ஒருத்தி சொன்னாள்; ''நீங்கள் வித்தியாவை விரும்பாதது போலக் கதைக்கிறீர்கள். உண்மையைச் சொல்லுங்கள்; நீங்கள் வித்தியாவை விரும்பவில்லை என்று''.

“காதல் என்பது தானாக உருவாவது. இன்னொருவர் சொல்லி ஏற்படுவதில்லை. காதலை மறைக்கச் சிலர் தாம் விரும்பாதது போல நடிப்பார்கள். கோபிப்பார்கள். பொய் சொல்வார்கள். ஆனால் நான் நடிக்கவில்லை. பொய் சொல்லவில்லை. உண்மையாக நான் வித்தியாவை விரும்புறன். உயிருக்குயிராக நேசிக்கிறன். அவள் இல்லா விட்டால் எனக்கு வாழ்வே இல்லை. காதல் என்பது இருவர் விரும்பி இணைவது மட்டுமல்ல. ஒருவர் விரும்பினாலும் காதல் தான். நான் விரும்புபவள் என்னை விரும்ப வேண்டும் என்று நான் கருதவில்லை. அவள் தான் விரும்பிய ஒருவனுடன் இன்பமாக வாழலாம். ஆனால் நான் அவள் மீது கொண்ட அன்பு மாறாது. என் வாழ்நாளை அவளின் நினைவுகளோடு கழிக்க என்னால் முடியும். காதல் என்பது இரு உயிர்கள் இணைந்து மூன்றாவது உயிரை உண்டாக்குவதல்ல. இரு மனங்கள் இணைந்து ஒன்றாகி நினைவுகளில் இன்புற்றிருப்பதே காதல்” கஜேந்திரனது வார்த்தைகள் வித்தியாவின் காதில் ஒலித்தன. “எவ்வளவு மென்மையானவர். இப்படியான எண்ணம் உலகில் யாருக்கும் வரும்” விம்மினாள் வித்தியா.

“வித்தி, கஜேந்திரன் உன்கண்ணில் இருந்து போக மாட்டார். நீ பெருந் தீங்கிளைத்தாலும் அவர் கோபிக்க மாட்டார். நீ அறியாமல் கண் இமைத்தாலும் தான் உனது கண்களில் இருந்து மறைந்து விடுவோமோ என்று வருந்த மாட்டார். அந்தளவில் அவர் மிகவும் நுட்பமானவர். அவரை அடைய நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்” என்றாள் அவளது தோழி அகல்யா. அதை நினைத்து விம்மினாள் வித்தியா.

1126. **கண் உள்ளின் போகார இமைப்பின் பருவரார்,**
**நுண்ணியர் எங் காத லவர்.**

*எனது காதலர் எனது கண்களை விட்டுப் போகமாட்டார். நான் அறியாமல் இமைத்தாலும் அதற்காக வருந்த மாட்டார். அவர் அவ்வளவு நுட்பமானார்.*

## அஞ்சுகிறேன்

அர்ச்சகா, வித்தியாவின் வீட்டுக்கு வந்தாள்; “பிள்ளை அர்ச்சகா, நீயும் வித்தியாவும் எங்கை போனனீங்கள். வித்தியா வந்த நேரத்தில் இருந்து மாறுபாடாக நடந்து கொள்கிறாள். மாமன் ஏழேட்டு வருடங்களுக்குப் பின்பு வந்திருக்கிறார். அவருடைய மகன் வைத்தியராக பணி புரிகிறார். இவள் பிறந்தன்றே எனது அண்ணை இவளைத் தனது மருமகளாக ஆக்கிக் கொள்வதென்று முடிவு செய்தவர். இவள் அவரைத் தெய்வமாக மதிக்க வேணும். எனக்கென்றால் அவள் அவரை மதிப்பதாகத் தெரியவில்லை. நாளைக்கு நானும் வித்தியாவும் கொழும்புக்குப் போறம். இவளுக்கு விருப்பமில்லைப் போல் தெரிகிறது. அவளைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமோ?” துக்கத்துடன் கேட்டாள் இலட்சுமி.

“நான் இங்கு வந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. எனக்கு எதுவும் தெரியாது மாமி. வித்தியா மிகவும் நல்லவள். நீங்கள் தான் வித்தியாசமாக நினைக்கிறீர்கள். நான் பிறந்ததில் இருந்து கொழும்பில் தான் வசித்தேன். திடீரென்று யாழ்ப்பாணத்திற்குச் செல்ல வேண்டும் என்று அப்பா சொன்ன போது நான் நிலை தடுமாறி விட்டேன். எனது நண்பர்களைப் பிரிந்து புதிய இடத்திற்குச்

செல்ல எனக்கு வெறுப்பாகவும் பயமாகவும் இருந்தது. இங்கு வந்த பின்பும் எனக்கு இந்தப் பிரதேசம் பிடிக்கவில்லை. திரும்பிக் கொழும்புக்குப் போக வேண்டும் என்று அம்மாவிடம் சொன்னேன். அம்மா எனக்கு அடிக்காத குறையா ஏசினா. அதுபோலத் தான் வித்தியாவுக்கும் இருக்கும். நீங்கள் கவலைப்படாதைங்கோ'' என்றாள் அர்ச்சகா.

இலட்சுமிக்கு அர்ச்சகா சொல்வது நியாயமாகப்பட்டது. இங்குள்ள உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களை விட்டுச் செல்ல விருப்பம் இல்லாமல் இருந்தது. தினமும் மாலையில் சென்று வணங்கும் குல தெய்வமான நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியைப் பிரிந்து செல்வதை நினைக்க அவளுக்குத் துக்கமாக இருந்தது.

''சரி நீ போய்க் கதை'' என்றாள் இலட்சுமி.

அர்ச்சகா, வித்தியாவின் அறைக்குச் சென்றாள். வித்தியாவின் முகம் அழுததால் வீங்கி இருந்தது. கண்கள் இரத்தச் சிவப்பாக இருந்தன. அர்ச்சகாவைக் கண்டதும் விம்மி விம்மி அழுதாள். வித்தியாவைப் பார்க்க அவளுக்கும் துக்கமாக இருந்தது. வித்தியா கொழும்புக்குச் சென்று விட்டால் தனது காதலுக்கு உதவி செய்ய யாரும் இல்லையே என்று கவலைப்பட்டாள் அர்ச்சகா.

''வித்தி, உன்னை நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. கஜேந்திரனைப் பற்றி எனக்குப் பெரிதாகத் தெரியா விட்டாலும் நல்லவர் என்று நான் நினைக்கிறேன். அத்துடன் எனது காதலுக்கும் உதவி செய்தவர். மூன்று வருடங்களாக அவரை நீ காதலிப்பதாகச் சொன்னாய். இப்போ எப்பிடிப் பிரியப் போகிறாய். ஓரிரு வாரங்களாக நான் காதல் கொண்ட நகுலனையே என்னால் மறக்க முடியவில்லை. அப்படியிருக்க தீவிரமாக நீ நேசித்த கஜேந்திரனை எப்படி மறக்கப் போகிறாய்'' அழுதாள் அர்ச்சகா.

''மறக்கப் போவதோ....? அர்ச்சகா என்னால் அது முடியாது. நாளைக் காலையில் அவரைச் சந்தித்து அவரோடு செல்லப் போகிறேன். இன்று நான் அவரோடு, மாமா வருவதைப் பற்றிக் கதைத்தேன். அவர் தான் என்னைக் கூட்டிச் செல்வதாகச் சொன்னார்'' என்றாள் வித்தியா.

''அவர் இன்னும் வேலையாகவில்லை. உன்னை எப்படிக் கவனிப்பார்''.

''அதற்காக நான் இன்னொருவரைத் திருமணம் செய்ய முடியுமா...? எனது அன்புக்குரிய காதலர் என் கண்களுக்குள் இருக்கிறார். என் கண்களுக்கு மை எழுதக் கண்களை மூட வேண்டும். நான் கண்களை மூடினால் அவர் மறைந்து விடுவார், என்று எண்ணி நான் கண்களுக்கு மை தீட்டுவதில்லை. அப்படி ஒரு கணம் கண்களை மூடினால் அவர் மறைந்து விடுவார் என நினைக்கும் நான் எப்படி அவரைப் பிரிவது. எனது தாயாரின் விருப்பத்திற்கு மாறாக நான் அவருடன் செல்வேன். இல்லா விட்டால் இவ்வுலகை விட்டுச் செல்வேன்.'' என்றாள் வித்தியா. அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. விக்கி விக்கி அழுதாள்.

''அழாதை வித்தியா வேண்டுமானால் நான் போய் அவருக்கு விஷயத்தைச் சொல்கிறேன். நீ அவரோடு போ'' என்றாள் அர்ச்சகா.

**1127. கண் உள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து**

*எனது காதலர் எனது கண்ணுக்குள் இருக்கிறார். என் கண்களுக்கு மை தீட்ட கண்களை மூட வேண்டும். அதனால் அவர் மறைந்து விடுவார். ஆதலால் நான் கண்ணுக்கு மை தீட்டுவதில்லை.*

## பயம்

‘‘நான் பிறந்தவுடன் மாமா என்னைத் தனது மகனுக்குத் திருமணம் செய்வதாக அம்மாவிடம் சொன்னாராம். நினைவு தெரிந்த நாளில் இருந்து நான் எனது மாமாவின் மகனை நாலைந்து முறை தான் சந்தித்திருப்பேன். மாமா மாதத்திற்கு இரு முறை கடிதம் போடுவார். நாங்கள் தொலை பேசி எடுத்ததன் பின்பு மாமா இரண்டு மூன்று தினங்களுக்கொரு முறை அம்மாவோடு கதைப்பார். அவர் கதைக்கும் போது எமது திருமண விஷயம் பற்றித் தவறாது கதைப்பார். அம்மா சொல்வதால் தான் எனக்கொருவர் நிச்சயிக்கப்பட்டிருப்பதாக அறிந்து கொண்டேனே தவிர மற்றும் படி எனக்கு எதுவும் தெரியாது. எனது மாமாவின் மகன் இது வரை எனக்குக் கடிதம் எழுதவில்லை. தொலைபேசியில் கதைக்கவும் இல்லை. ஆரம்பத்தில் அம்மா சொன்ன எனது மாமாவின் மகனை நான் நினைத்துப் பார்ப்பேன். சிறிய வயதில் கண்ட அந்தக் குழந்தை முகம் தான் எனது நினைவுக்கு வரும். பருவ வயது ஆரம்பித்த போது மாமாவின் மகனின் நினைப்பைக் கஜேந்திரன் மறக்கச் செய்து விட்டார். அம்மாவின் விருப்பத்தை மறுக்கக் கூடா தென்பதற்காக நான் கஜேந்திரனை பல வழிகளிலும் கொடுமைப் படுத்தி விட்டேன். எனினும் என் மீது கொண்ட காதல் மாறாமல் எனது அன்புக்காக ஏங்கினார். அவர் படும் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கித்தான் நான் அவரைக் காதலித்தேன். தற்செயலாக நான் எனது மாமாவின் மகனைத் திருமணம் செய்தால் அவர் இறந்து விடுவார்.’’ விம்மி விம்மி அழுதாள் வித்தியா.

‘‘ஏன் வீணாகக் கற்பனை செய்கிறாய். உன்னால் அவரை மறக்க முடியுமா..?’’ என்று கேட்டு விட்டு வித்தியாவின் முகத்தைப் பார்த்தாள் அர்ச்சகா.

‘‘மறக்க முடியாது ஆனால் சின்ன வயதில் அப்பா இறந்த பின்பு அம்மா என்னை வளர்க்கப்பட்ட கஷ்டத்தைச் சொல்லில் வடிக்க முடியாது. அப்படிப்பட்ட அம்மாவை ஏமாற்றுவதை நினைக்க வேதனையாக இருக்கு’’.

‘‘எல்லோரும் கஷ்டப்பட்டுத்தான் பிள்ளைகளை வளர்க்கிறார்கள். அதற்காக விரும்பிக் காதல் கொண்டவனை வெறுக்க முடியுமா? நீ வெறுத்தால் கஜேந்திரனது நிலை என்ன..? அத்துடன் விரும்பியவனை மறந்து இன்னொருவனுடன் கடைசி வரையும் நிம்மதியாக வாழ முடியாது. அவனது நினைவு தினமும் மனதை நெருடிக் கொண்டு தான் இருக்கும்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘நான் அவரை மறந்து மாமாவின் மகனுடன் சேர்ந்து வாழ்வேன் என்று நினைக்கிறாயா..? எனது அன்புக் காதலர் எனது நெஞ்சுக்குள்ளேயே இருக்கிறார் என்று நினைத்து நான் சூடான எதையும் உண்பதில்லை. என் நெஞ்சுக்குள்

இருக்கும் எனது காதலர் நான் சூடானவற்றை உண்டால் வெந்து விடுவாரோ என்ற பயத்தால் தான் நான் உண்பதில்லை. அப்படிப்பட்ட நான் அவரை மறந்து இன்னொருவரின் கரம் பற்று வேனா?.'' என்று கேட்டாள் வித்தியா,

வித்தியா சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனாள் அர்ச்சகா. ''வித்தியா இவ்வளவு தீவிரமாகக் கஜேந்திரனை விரும்புகிறாளா...? காதல் புனிதமானது; உயர்ந்தது; பெருமை மிக்கது என்றெல்லாம் சொல்லலாம். இந்த வார்த்தைகளுக்குப் பெறுமதியே இல்லை. காதலைப் பற்றி காதல் கொண்டவர்கள் உணர்ந்து அறிதல் வேண்டும்.'' இப்படிக் கொழும்பில் அவளது தோழி ஒருத்தி சொல்வாள். அவள் சொல்லும் போது அர்ச்சகா வாய் விட்டுச் சிரிப்பாள். ''உடலில் எழும் இச்சைகளைத் தீர்ப்பதைக் காதல் என்று சொல்கிறார்கள். இதில் என்ன புனிதம் இருக்கிறது'' என்று சொல்வாள். அர்ச்சகா. இன்று காதலைப் பற்றி அறிந்து கொண்டாள். இரண்டு வாரங்களுக்கு முன் கண்டு காதல் கொண்ட நகுலனை மறப்பதே இயலாத காரியமாக இருக்கும் போது, இரண்டு மூன்று வருடங்களாகக் காதலிக்கும் கஜேந்திரனை எப்படி வித்தியாவால் மறக்க முடியும்'' என்று நினைத்தாள் அர்ச்சகா.

முன்பென்றால்; ''இதயத்துள் இருக்கும் காதலர் வெந்து விடுவார். எனக் கருதி சூடானவற்றை உண்ணவில்லை'' என்று யாராவது சொன்னால் விழுந்து விழுந்து சிரித்திருப்பாள். ஆனால் இன்று; ''எனது காதலரும் இதயத்துள் இருப்பதால் நானும் சூடானவற்றை உண்ணக் கூடாது'' என்று நினைத்தாள் அர்ச்சகா.

**1128. நெஞ்சத்தார் காதலவராக வெய்து உண்டல்**
**அஞ்சுதும் வேபாக்கு அறிந்து**

*என் காதலர் என் நெஞ்சினுள் இருக்கிறார். ஆகையால் சூடான பொருள்களை நான் உண்டால் அவர் வெந்து விடுவார் என்று எணணிச் சூடான பொருள்கள் எதையும் நான் உண்பதில்லை.*

## இமைப்பதில்லை

''ஏன் வித்தி வீணாக அழுகிறாய் கஜேந்திரன் ஏதாவது பிரச்சினை வந்தால் உன்னைத் தான் அழைத்துச் செல்வதாகச் சொன்னவர் தானே. அவர் உன்னை அழைத்துச் செல்ல மறுத்தால் துக்கப்பட வேண்டும், துயரப்பட வேண்டும்; அழவேண்டும் அவர் உடனை வா என்று சொல்லும் போது வீணாக வேதனைப் பட்டு அழுது அம்மாவுக்கும் மாமாவுக்கும் காட்டிக் கொடுக்கப் போகிறாயா. தற்செயலாக உனது காதல் பிரச்சினை அம்மாவுக்குத் தெரிய வந்தால் அவர் உன்னை வெளியே செல்ல விடமாட்டார். நீ வெளியே செல்ல முடியாவிட்டால் எப்படி அவருடன் செல்ல முடியும். படிக்காதவள் மாதிரி அழுது கொண்டிராமல் முகத்தைத் துடைத்து விட்டு சந்தோசமாக இரு'' என்றாள் அர்ச்சகா.

''எப்படிச் சந்தோசமாக இருப்பது அவர் எனது கண்களுக்குள் இருக்கிறார். அதனால் நான் கண் இமைத்தாலோ நித்திரை கொண்டாலோ அவர் மறைத்து விடுவார். என்று எண்ணி நான் கண்இமைப்பதும் இல்லை; பகலில் உறங்குவதும்

இல்லை. இதை அறிந்த எனது தோழியர் என்னைப் பரிகசிக்கிறார்கள்'' விம்மினாள் வித்தியா.

''நல்லாய் அழு, அழுது காட்டிக் கொடுத்து விட்டு நாளைக்குப் பலத்த காவலோடு கொழும்புக்குப் போய் உன் அத்தானைக் கலியாணம் செய்'' கோபித்தாள் அர்ச்சகா.

என்னால் அவரை இழக்க முடியாது. நீ நாளைக்கு எப்படியாவது அவரைச் சந்தித்து எனது நிலையை விளக்கிக் கூறு. முடிந்தால் நான் இன்று இரவு எல்லோரும் படுத்த பின்பு தொலைபேசியில் விபரத்தைக் கூறுகிறேன். தொலைபேசியில் நான் நெடுநேரம் பேசமுடியாது. அதே போல் அவரும் என்னுடன் கதைக்க முடியாது.'' என்றாள் வித்தியா.

''விடிந்ததும் நான் சென்று விபரமாக எல்லாவற்றையும் கூறுகிறேன். நீ அழாதை'' என்றாள் அர்ச்சகா.

''அவர் மிகவும் கஷ்டப்பட்டதாலை தான் நான் காதலித்தனான். பின்பு தான் அவரது குண இயல்புகளை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. என்னைப் பொறுத்தவரை அவர் என்னுடைய கடவுளடீ. நான் சொல்பவை எல்லாவற்றையும் கேட்பார். தனக்கு விருப்ப மில்லாவிட்டாலும் எனது மனம் கோணக்கூடாது. என்பதற்காக நான் விரும்பியவற்றைச் செய்வார். எனக்காக அவர் தனக்கு விருப்பமில்லாதவற்றைச் செய்வது எனக்குப் பிடிப்பதில்லை. ஆனால் இப்பொழுது தனக்குப் பிடிக்காதவற்றையும் எனக்காக மனமகிழ்வுடன் தனது எண்ணங்களை வெளிப்படுத்தாது செய்து முடித்து விடுவார். அத்துடன் பொறுமையில் மலை மாதிரியானவர். எக்காரணம் கொண்டும் என்னோடு கோபிக்க மாட்டார். நான் ஊடல் கொண்டால் அதைப் பெரிதாக எண்ணி மனம் வருந்துவார். அதனால் பொய்யாகக் கூடக் கோபம் கொள்ள முடியவில்லை. ஊடல் கொள்வதில் தான் காதலர்களுக்கிடையே நெருக்கமும் பிணைப்பும் இன்பமும் ஏற்படும். என்று சொல்வார்கள். அதனால் நான் ஊடல் கொண்டால் அதை அவர் பெரிதாக நினைத்து வருத்துகிறார். அவரின் இதயம் அனிச்சம் பூவை விட மிருதுவானது''.

''இதெல்லாம் தெரிந்த உனக்கு நான் புத்தி சொல்ல வேண்டுமா? பேசாமல் படு. நான் போய் வருகிறேன்'' என்றாள் அர்ச்சகா.

''ஏனடி அவசரப்படுகிறாய். நீ போனால் நான் துயரத்தால் துவண்டு விடுவேன். கொஞ்ச நேரம் இரு'' என்றாள் வித்தியா.

அப்பொழுது தொலைபேசியின் மணி இனிமையாக ஒலித்தது. வித்தியா எழுந்தாள்; '' நான் அங்கஜன் கதைக்கிறேன். நீங்கள் யார்? வித்தியாவா...? ''ம்'' என்றாள் வித்தியா ''அப்பாவை ஒரு முறை பேசச் சொல்லுங்கள்'' என்றான் அங்கஜன். அர்ச்சகா வரதராசாவை அழைத்து வரச் சென்றாள்.

''அப்பா உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. நான் ஒரு மருத்துவக் கருத்தரங்கிற்காக இலண்டனுக்கு நாளைக்குச் செல்கிறேன். திரும்பி வர ஆறுமாதங்களாகும். அது வரை நீங்கள் உங்களது தங்கையுடன் இருங்கோ''

வரதராசா கதைத்துக் கொண்டிருந்தார். அர்ச்சகாவும் வித்தியாவும் வெளியே சென்றனர்.

**1129. இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே**
**ஏதிலர் என்னும்இவ் வூர்.**

*கண்இமைத்தால் என் கண்ணுள் இருக்கும் காதலர் மறைந்து போவார். அதனால் நான் கண் இமைப்பதில்லை. இதனால் அவர் இரக்கமில்லாதவர் என்று ஊரவர் குறை சொல்கிறார்கள்*

## உள்ளத்தில் வாழ்பவர்

தொலைபேசியில் மகனுடன் கதைத்து விட்டு வந்த வரதராசா மிகவும் சோகத்துடன் அமர்ந்திருந்தார். வெகு நேரமாக அவர் எதுவும் பேசவில்லை. வெகுநேரமாக பேசாமல் அமர்ந்திருக்கும் சகோதரனைப் பார்த்துக் கொண்டிருந்த இலட்சுமி சொன்னாள்; “ என்னண்ணா பேசாமல் யோசித்துக் கொண்டிருக்கிறியள். என்னென்று சொல்லுங்கோ.”

வாய் திறவாது ‘ம்’ என்று விட்டு மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார்.; “என்ணெண்டு சொல்லுங்கோ. நீங்கள் யோசிப்பதைப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கு” என்றாள் இலட்சுமி.

வரதராசாவின் கண்கள் கலங்கின.; “அங்கஜன் வெளிநாட்டுக்கு ஒரு கருத்தரங்கிற்குப் போகப் போகிறானாம். திரும்பி வர ஆறு மாதங்கள் செல்லுமாம். அதனால் என்னை இங்கேயே இருக்கட்டாம்.” என்றார்.

“இது சந்தோசப்பட வேண்டிய செய்தி தானே. ஏன் கவலைப்படுகிறீர்கள்? உங்களை நான் இராசா மாதிரிக் கவனிப்பன்.” என்றாள் இலட்சுமி மகிழ்வுடன்.

“வரதராசா சொன்னதைக் கேட்டதும் மகிழ்ச்சியின் உச்சியில் இருந்தாள் வித்தியா. அவளது உதடுகள் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் நாமத்தை உச்சரித்தன. “இவ்வளவு நேரமும் அழுதாய் இப்ப மகிழ்ச்சி தானே. எதற்கும் அவசரப்படக் கூடாது என்று சொல்வார்கள்” என்று குசுகுசுத்தாள் அர்ச்சகா.

“பெரியதொரு பிரச்சினை நீங்கி விட்டது. என்றாலும் ஆறுமாதங்களின் பின் திரும்பவும் வருந்தானே. அதற்குள் கஜேந்திரனுக்குச் சொல்லி ஆக வேண்டியதைக் கவனி. ஆறு மாதங்கள் கழிவது பெரிய விசயமல்ல. நாங்கள் நேற்று வந்த மாதிரி இருக்கு. இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன” என்றாள் அர்ச்சகா.

“அவருக்கு ஒரு தொழிலும் இல்லை. தகப்பன் கமக்காரன். ஒரேயொரு பிள்ளையென்றாலும் தொழில் இல்லாமல் என்னைத் திருமணம் செய்யத் தயங்குகிறார்.” என்றாள் வித்தியா.

“உன்னுடைய பேச்சைக் கேட்கச் சிரிப்புத்தான் வருகிறது. தற்செயலாக அங்கஜன் வெளிநாட்டுக்குப் போகாவிட்டால் உனது நிலையை நினைத்துப் பார். விடிந்தவுடன் புறப்பட வேணும். இதை எப்படி நீ கஜேந்திரனுக்குச் சொல்வாய். காதலிப்பவர்கள் பெண்களுக்குள்ள பிரச்சினைகளை உணரவேண்டும். ஆண்களுக்கு தப்புவதற்கு எத்தனையோ வழிகளிருக்கு. ஆனால் பெண்கள் தப்ப எந்த வழியும் இல்லை. நீ விரும்பாத போது உன்னை வற்புறுத்தி விரும்பச் செய்தவர். இவற்றையெல்லாம் யோசித்திருக்க வேண்டும். இன்று நீ மாமா வருவதைப் பற்றியும், அங்கஜனை நீ திருமணம் செய்ய வேண்டிய நிலையைப் பற்றியும் கூறினனீ. அதைப் பெரிதாக எடுக்காமல் சிரித்துச் சமாளித்து விட்டார். உண்மையாக உன்னில் அவர் அன்பு கொண்டிருந்தால் இப்படிப் பொறுப்பில்லாமற் சொல்வாரா..? உன்னைப் பிரிந்து வாழ மாட்டேன் என்று கூறும் அவர் நாளைக்கு நீ கொழும்புக்குச் சென்றால் என்ன செய்வார்?. உன்னால் அங்கஜனைத் திருமணம் செய்வதில் இருந்து தப்ப முடியாது. அப்படியிருக்க அதை வேடிக்கையாக நினைத்து விகடமாகப் பேசி உன்னைச் சமாதானப் படுத்தி அனுப்பிய கஜேந்திரன் உன் மீது அன்பு வைத்திருக்கிறார். என்று நீ எப்படி நம்புகிறாய்” ஆத்திரத்துடன் கேட்டாள் அர்ச்சகா.

வித்தியா சிரித்தாள். அதைப் பார்த்த அர்ச்சகாவுக்குக் கடுமையான கோபம் வந்தது; “கொஞ்ச நேரத்திற்கு முன்பு விம்மி விம்மி அழுதாய். இப்ப முகம் மலர்ந்து சிரிக்கிறாய். நாளைக்குக் கொழும்புக்குச் செல்வதாக இருந்தால் சிரிப்பாயா.?” என்று கேட்டார் அர்ச்சகா.

“அர்ச்சகா உனக்குக் கஜேந்திரனைப் பற்றி எதுவும் தெரியாது. அவர் எதையும் இலகுவாகத்தான் எடுப்பார். எனது நிலையைச் சொல்லி அனுப்பினால் எப்பாடு பட்டாவது வந்து அழைத்துச் சென்று விடுவார். அவர் எந்நேரமும் மகிழ்வுடன் எனது உள்ளத்துள் இருக்கிறார். அவரைப் பற்றிய எந்தத் தகவல்களும் தெரியாத நீ அவர் என்னிடம் அன்பில்லாதவர் என்றும் என்னைப் பிரிந்து வழ்வார். என்றும் நினைக்கிறாய்” என்றாள் வித்தியா.

**1130. உவந்து உறைவர்உள்ளத்துள் என்றும்; இகத்து உறைவர்**
**ஏதிலர் என்னும் இவ்வூர்**

*காதலர் எப்பொழுதும் என் உள்ளத்துள் மகிழ்ந்திருக்கின்றனர். ஆனால் அதை அறியாமல் அவர் என்னைப் பிரிந்து வாழ்கின்றார்; அவர் என் மீது அன்பில்லாதவர் என இவ்வூரவர் அவரைப் பழிக்கின்றனர்.*

## துணை இல்லை

ஒரு வாரமாகக் கஜேந்திரன் வித்தியாவைக் காணவில்லை. மூன்று தினங்களுக்கு முன்பு தற்செயலாக அர்ச்சகாவைச் சந்தித்தான் கஜேந்திரன். வித்தியாவைக் காணாவிட்டாலும் அவளது தோழியைக் கண்டதால் வித்தியாவைச் சந்தித்த மகிழ்வு அவனது மனத்தில் உண்டானது.

“வித்தியா பெரிய கண்டத்தில் இருந்து அதிட்டவசமாகத் தப்பி விட்டாள். உங்களது நடவடிக்கையைப் பொறுத்துத் தான் வித்தியாவின் வாழ்வு அமையும்” என்றார் அர்ச்சகா.

கஜேந்திரன் அதைக் கேட்டுப் பதறிப் போனான்'', வித்தியாவுக்கு ஆபத்தா'' அவனது மனம் துடித்தது.; ''நீ என்ன சொல்கிறாய் விளங்கும்படி சொல்'' என்றான்.

''யாரும் எதிர்பாராதவாறு வித்தியாவின் மாமா வந்து விட்டார். அவர் வந்த மறு நாள் வித்தியாவையும் அவளது தாயாரையும் அழைத்துக் கொண்டு கொழும்புக்குச் செல்லத் தீர்மானித்தார். வித்தியாவின் தாயாருக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. அன்று மாலை தனது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தான் கொழும்புக்குச் செல்வதாகக் கூறி விட்டார். வித்தியா துடித்துப் போனாள். அன்று உங்களைச் சந்தித்த போது நீங்கள் மாமாவுக்குச் சாட்டுச் சொல்லச் சொன்னீர்களாம். சாட்டுச் சொல்ல நேரம் எங்கே இருந்தது. இரவு முழுவதும் விம்மி விம்மி அழுதாள். நான் தான் அவளுக்கு ஆறுதல் சொன்னேன். நானில்லாவிட்டால் அவள் என்ன செய்திருப்பாளோ தெரியாது. பாவம் அவள். அவளை நீங்கள் அளவுக்கதிகமாகத் துன்பப் படுத்துகிறீர்கள். என்று சொல்லி நிறுத்தினாள் அர்ச்சகா.

''முக்கியமான இடத்தில் விட்டு விட்டீர்கள். பிறகு என்ன நடந்தது. வித்தியாவின் மாமா கொழும்புக்குப் போய்விட்டாரா? வித்தியா ஏன் என்னைச் சந்திக்க வரவில்லை'' கவலையோடு கேட்டான் கஜேந்திரன்.

'' பாவம் அவள் இரவு முழுவதும் அழுதாள். கடவுள் தான் உதவி செய்தவர் என்று சொல்ல வேண்டும். இரவு பதினொருமணிக்கு அங்கஜன் தொலைபேசியில் தகப்பனுக்குச் சொன்னான். ''தான் ஆறு மாதங்களுக்கு வெளிநாட்டில் ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ளவிருப்பதால் அவரை சகோதரியின் வீட்டில் தங்குமாறு' அதன் பின்பு தான் வித்தியா அழுவதை நிறுத்தினாள்.''

பெருமூச்சு விட்டான் கஜேந்திரன்; ''பாவம் வித்தியா''

பாவம் பார்ப்பதில் பிரயோசனம் இல்லை. இப்பொழுது வித்தியாவின் தாயார் வித்தியாவை வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. நேற்று நான் வித்தியாவின் வீட்டுக்குச் சென்றேன். அப்பொழுது வித்தியாவின் தாய் சொன்னார்; '' வித்தியின் போக்கு எனக்குப் பிடிப்பதில்லை. இனிமேல் அவளை வெளியே செல்ல விடமாட்டேன். மாமனார் வந்திருக்கிறார். இவள் அடிக்கடி வெளியே சென்று நேரம் தாமதித்து வந்தால் அவர் இவளைப் பற்றி என்ன நினைப்பார். அதோடு வயது வந்த பிள்ளைக்கு வெளியே என்ன வேலை. வீடடில் இருந்து சமையலைப் பழகு. என்று சொல்லி விட்டேன். ஆறு மாதத்தின் பின் அவளுக்கு திருமணமாகவுள்ளது. சமையலைப் பழகா விட்டால் கரைச்சல்படுவள். ஒரு பெண் தனது கணவனை எப்பொழுதும் அழகால் கவரலாம் என்று நினைக்கக் கூடாது. அழகு எந்நேரமும் தேவைப்படாது. சுவையான சமையல் தான் ஒரு பெண் தனது கணவனைக் கைக்குள் வைத்திருக்க உதவும் என்றார். என்னைப் பொறுத்தவரை எவ்வளவு விரைவில் அவளைக் கூட்டிச் செல்லுங்கள். இல்லா விட்டால் வித்தியா உங்களுக்குக் கிடைக்க மாட்டாள்'' என்றாள் அர்ச்சகா.

ஒரு சில நாட்களாக எனது காதலியின் அன்பைப் பெறாமல் வருந்துகின்ற நான் முற்றாக அவளைப் பிரிந்தால் மடலேறுவதைத் தவிர வேறு வழி எதுவும்

இல்லை'' என்றான் கஜேந்திரன். அவனது விழிகளில் நீா் நிறைந்தது குரல் கரகரத்தது.

**1131. காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல் அல்லது இல்லை வலி.**

*காதலியின் அன்பைப் பெறாமல் காமத்தால் துன்புற்று வருந்துபவா்களுக்கு மடலேறுவதைத் தவிர வேறு வலிமையான துணை இல்லை.*

## துணிந்தன

''அா்ச்சகா, நான் வித்தியாவை கோயில் திருவிழா ஒன்றில் தான் முதன் முதலாகச் சந்தித்தேன். முதல் முதல் நான் அவளைக் கண்ட போது உள்ள தோற்றம் இன்னும் என் கண்களை விட்டு அகலவில்லை. பச்சை நிற முழுப்பாவாடையும் சட்டையும் அணிந்திருந்தாள். ஊரிலும் பல்கலைக்கழகத்திலும் எத்தனையோ பெண்களை நான் கண்டிருக்கிறேன். அத்தனை பெண்களிலும் இல்லாத ஒரு தனிக்கவா்ச்சி, ஒரு கம்பீரம் அவளில் குடி கொண்டிருந்தது. அப்படி ஒரு பேரழகை இன்று வரை நான் காணவில்லை. அவளின் கண்களைப் பாா்த்துக் கொண்டே இருக்கலாம். ''பெருமூச்சு விட்டான் கஜேந்திரன். அா்ச்சகா எதுவும் பேசவில்லை. கண்களை மூடி மௌனியாக இருக்கும் கஜேந்திரனது முகத்தைப் பாா்த்துக் கொண்டிருந்தாள்.

''அா்ச்சகா, நான் வித்தியா மீது அன்பு வைத்து விட்டு எவ்வளவு கஷ்டப்பட்டனான். தெரியுமா..? ஆரம்பத்தில் அவளுக்கு என்மீது அன்பே இல்லை. தனக்கு இன்னொருவனை நிச்சயிக்கப்பட்டிருப்பதென்பதில் மிகவும் உறுதியாக அவள் இருந்தமையால் நான் மிகவும் கஷ்டப்பட்டு விட்டேன். நான் அவள் மீது கொண்ட உறுதியான காதல் தான் எனக்கு வெற்றியைத் தந்தது. எத்தனை முறை ஏசியிருப்பாள். எத்தனை முறை தனது செருப்பைக் கழற்றிக் காட்டியிருப்பாள். அப்போதெல்லாம் நான் அவமானப்படவில்லை.; கவலைப்படவில்லை. என்னுடைய உறுதியான நிலையைக் கண்டு வித்தியா அதிா்ந்து போனாள். ஒரு நாள் என்னைச் சந்தித்த போது சொன்னாள்; ''உன்னை யாா் என்று எனக்குத் தெரியாது. உன்னுடைய ஊா் தெரியாது. பெயரும் தெரியாது. நீ ஏன் என்னைப் பின் தொடா்கிறாய். நீ எனக்குத் தொந்தரவு செய்யா விட்டாலும் நீ எனக்குப் பின்னால் வருவதை நான் விரும்பவில்லை. நீ பின்னால் வரும் போது எனது தேகத்தில் அட்டை ஊா்வதைப் போல் உள்ளது. தயவு செய்து என்னைப் பின் தொடராதே.'' என்று அழுதாள்.

''உங்களுக்கு என்னைத் தெரியா விட்டாலும், எனக்கு உங்களைத் தெரியும். உங்களின் பெயா் தெரியும். ஊா் தெரியும். வீடும் தெரியும். என்னால் உங்களை மறக்க முடியாது. எத்தனையோ பெண்களைப் பாா்த்திருக்கிறேன். அவா்களில் இல்லாத ஏதோ ஒரு கவா்ச்சி உம்மிடம் உள்ளது. அதை எனது உள்ளம் விரும்பி விட்டது. எனது உள்ளத்திற்கு என்னால் சமாதானம் கூற முடியவில்லை. எந்த நேரமும் உனது தரிசனம் தேவையென எனது கண்கள் விரும்புகின்றன. என்னால் எனது மனத்தையும் கண்களையும் கட்டுப்படுத்த முடியவில்லை. அவை எனது வாா்த்தைகளைக் கேட்க மறுத்து வெட்கத்தையும் விட்டு உன் பின்னால்

அலைகின்றன. நான் என்ன செய்வேன். என்று கேட்டேன். அவள் என்னை ஏசி விட்டுச் சென்று விட்டாள்'' என்றான் கஜேந்திரன்.

" நீங்கள் இனிமேலும் சோம்பியிருந்தால் வித்தியா அங்கஜனுக்குச் சொந்தமாகி விடுவாள். பின்பு நினைவுகளோடு தான் நீங்கள் வாழ வேண்டிய நிலை உண்டாகும்'' என்றாள் அர்ச்சகா.

ஒரிரு நாள்கள் தானும் எனது மனமும் கண்களும் அவளின் பிரிவைத் தாங்க மாட்டா. அந்தளவில் அவை அவளை விரும்பி விட்டன. அவளைக் காணா விட்டால் எனது உடல் எந்த வேலைகளையும் செய்ய மறுக்கிறது. கண்கள் புத்தகத்தைப் பார்க்க மறுக்கின்றன. மனம் பரபரப்படைந்து தன் நிலை இழக்கிறது. இது ஒரிரு நாள் பிரிவால் ஏற்படுவது. சில சமயம் காதலியைக் காணாமையால் ஏற்பட்ட துன்பத்தைப் பொறுக்க முடியாது எனது உயிரும் உடம்பும் நாணத்தை நீக்கி விட்டு மடலேறத் துணிந்து விட்டன. நான் வித்தியாவைக் காணாத நேரங்களில் குருடனாகவே இருக்கிறேன். எனது கண்கள் எனக்குச் சொல்லாமலே அவளது பிரிவால் வாட்டமுற்று மடலேறி விடும்; என்றான் கஜேந்திரன்.

''வீணாகக் கற்பனை செய்யாதீர்கள். கிடைக்க முடியாத அபூர்வமான பெண் வித்தியா. இப்பொழுது அவள் உங்களது மனத்தில். கண்களில். உடலில் கலந்துள்ளாள். எனவே அவளை உடனே அழைத்து வாருங்கள்'' என்றாள் அர்ச்சகா. கஜேந்திரனுக்கு அது சரியெனப்பட்டது.

**1132. நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்**
**நாணினை நீக்கி நிறுத்தி.**

*காதலியின் பிரிவால் ஏற்பட்ட துன்பத்தைத் தாங்க முடியாத எனது உடம்பும் உயிரும் நாணத்தை நீக்கி விட்டு மடலேறத் துணிந்து விட்டன.*

## பெற்றது

அர்ச்சகா கொண்டு வந்து கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் வித்தியா.

என் அன்பிற்கினியவளே,

உனக்கு ஏற்பட்ட அந்தப் பெருந்துயரை அர்ச்சகா மூலம் கேட்டறிந்தேன். வலிமை பொருந்திய ஆண்மை மிக்க எனது நெஞ்சம் கலங்கித் துயருற்று அதைப் போக்க முடியாது பெருந்துன்பப்படும் போது, மென்மையான, அனிச்ச பூவையொத்த உனது மனம் எவ்வளவு பாடு படும் என்பதை என்னால் உணர முடிகிறது.

அன்பே, காதல் என்பது இன்பமாக வாழ உருத்துடையவனுக்கு மட்டும் பூர்வ புண்ணியப் பயனால் ஏற்படும். பேரழகியான உனது அன்பைப் பெற நான்

எவ்வளவு முயன்றேன் முயற்சியின் இறுதியில் எனக்குப் பித்துப் பிடித்து விடும் போல் இருந்தது. அந்த வேளையில் தான் உனது பேரன்பு எனக்குக் கிடைத்தது. கிடைக்காது என்று நான் நினைத்த உமது அன்பு எனக்குக் கிடைத்த போது நான் அதை நம்பாது பித்துப் பிடித்தவன் போல அலைந்து திரிந்தேன். உமது காதல் கிடைத்த பின்பு நான் புதியதொரு உற்சாகத்தைப் பெற்றேன் அதனால் முன்பு பாடங்களில் குறைவான புள்ளிகளைப் பெற்ற நான் உம்மை நினைத்துப் படித்தேன். எல்லோரையும் விடக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றேன். நண்பர்களும் விரிவுரையாளர்களும் ஆச்சரியப்படும் வகையில் அறிவு முன்னேறியது. உம்மை அடைந்த நான் தான் உலகில் பாக்கியசாலி யென்று எண்ணி இன்ப வானில் சஞ்சரித்தேன். இவையெல்லாம் நாசமடைவதைப் போன்ற தொரு செய்தியை அர்ச்சகா சொன்னாள்.

அவள் கூறிய செய்தியைக் கேட்டு என் இதயம் இயங்க மறுத்து விட்டது. வித்தியாவை அழைத்துவரா விட்டால் நான் இயங்க மாட்டேன் என்று எனது இதயம் கூறுகிறது. அது பொய் என்று உனக்கு எண்ணத் தோன்றுகிறதா..? உங்கள் இதயம் என்னிடமல்லவா உண்டு. எனது இதயம் தான் உங்களிடமிருந்து அப்படிக் கூறியது. என்று சொல்கிறாயா..? அன்பே வாழ்க்கைக்கு உயிரூட்டுவது காதல். வாழ்க்கையை இரசிக்கச் செய்வது காதல் ஒருவனைப் பலப்படுத்துவதும் பலவீனப்படுத்துவதும் காதல் என்று பெரியவர்கள் சொல்வார்கள். பிரிவு துயரத்தை ஏற்படுத்தும் ஆனால் அந்தப் பிரிவு துணிவையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும். துணிவும் நம்பிக்கையும் கொண்ட ஆண்கள் செய்த செயல்களால் உலகம் அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறது. அதே போன்று உனது பிரிவும் என்னைத் துணிவுள்ளவனாக மாற்றியுள்ளது. உனக்கொரு துன்பமென்றால் எனது இதயம் வலிக்கிறது. உனக்குத் தெரியும் நீ நோயுற்ற வேளைகளிலெல்லாம் நானும் நோய்க்கான மருத்துவ முறைகளைப் பின்பற்றியுள்ளேன்.

காதல் சிரித்துப் பேசவும், மகிழ்ந்து உறவாடவும் என்று நினைப்பவர்களுக்கு எனது நிலை கேலிக்குரியதாக இருக்கலாம். காதல் என்பது உயிரோடு கொண்ட உறவு என்று நினைக்கும் என்னைப் போன்றவர்களுக்கு காதலியைப் பிரிவதென்பது இயலாத காரியமாகும். தற்செயலாகப் பிரிந்தால் ஆண்மை மிக்க ஓர் ஆண்மகன் மடலேறுவதைத் தவிர வேறு வழியில்லை. உன்னைப் பிரிந்து உலகில் வாழ முடியாததால் தான் மடலேறும் முடிவை எடுத்தேன். தயவு செய்து வந்து எனது மனதைக் குளிரவை. உனது வீட்டுக்கு என்னால் வர முடியாது. உனது தாயாருக்கு நான் உவ்விடம் வருவது பிடிப்பதில்லை. இப்பொழுது உனது மாமனாரும் வந்திருக்கிறார். நான் உங்கு வந்தால் பல விபரீதங்கள் உண்டாகும். எனவே உனது தாயாருக்கு ஏதாவது சாட்டுச் சொல்லி விட்டு என்னை வந்து மகிழ்விப்பாயென எண்ணிக் கொண்டிருக்கும் கஜேந்திரன். கடிதத்தை வாசித்து விட்டு விம்மி விம்மி அழுதாள் வித்தியா.

**1133 .நாணொடு நல்லாண்மை பண்டுஉடையேன் இன்று உடையேன்**
**காமுற்றார் ஏறும் மடல்.**

*நாணத்தையும் வலிமையான ஆண்மையையும் முன்னர் பெற்றிருந்தேன். இப்பொழுது காதலியைப் பிரிந்து வருந்துவதால் காமம் மிகுந்தவர் ஏறும் மடலையே இன்று உடையவனானேன்.*

# வெள்ளம்

கஜேந்திரனைச் சந்திப்பதற்காக வித்தியா தன்னை நன்றாக அலங்கரித்து விட்டு நிலைக் கண்ணாடியின் முன் நின்று பார்த்தாள்; ''இன்று மனிசியைக் கண் கொண்டு பார்க்க முடியாது. இவ்வளவு நாட்களும் இந்த அழகை எங்கே மறைத்து வைத்திருந்தீர். இது எவ்வளவு வஞ்சகமான செயல். ஒவ்வொரு நாளும் உம்மைக் காணும் போது நீர் தானா என என் கண்கள் நம்ப மறுக்கின்றன. தினமும் கற்கக் கற்க தெரியாதன வெல்லாவற்றையும் அறிந்து கொள்வதைப் போல, உம்மைத்தினமும் பார்க்கப் பார்க்க புதுமை மிளிர்கிறது.'' என்று தினமும் சந்திக்கும் போது சொல்லும் கஜேந்திரன் நிலைக் கண்ணாடிக்குள் தோன்றிச் சிரித்தான்.

''வித்தி, மாமா துர்க்கையம்மன் கோயிலுக்குப் போகப் போகிறாராம். நீயும் கூடப் போட்டு வா'' என்று கூறியபடி வந்த இலட்சுமி; '' நீ வெளிக்கிட்டு விட்டியா..? மாமா முன்பே உனக்குச் சொல்லி விட்டாரா.'' என்று கேட்டபடி வித்தியாவை ஏற இறங்கப் பார்த்தாள். பின்பு ''இன்று நீ மிகவும் அழகாக இருக்கிறாய். என்னுடைய கண்ணே பட்டுவிடும் போல இருக்கு'' என்று கூறி விட்டுத் திரும்பி நடந்தார்.

வித்தியாவின் மனம் சோர்ந்து சுருங்கியது. பெருமூச்சு விட்டாள். அவளின் தாய் பிடிவாதக்காரி. அவள் சொல்வதைத் தான் எல்லோரும் கேட்க வேண்டும். இதனால் அவள் தனது கணவனுடனும் அயலவர்களுடனும் பல தடவைகள் முரண்பட்டிருப்பதை வித்தியா கண்டுள்ளாள். ''இன்று மாமாவுடன் செல்ல மறுத்தால் வெளியேயும் அவள் செல்ல முடியாது. அதனால் மாமாவுடன் செல்வதெனத் தீர்மானித்தாள்.

''இன்று எப்படியும் நான் கஜேந்திரனைச் சந்திப்பேன். நீ அவருக்கு இதைச் சொல்லு'' என்று பதில் கடிதம் பெற வந்த அர்ச்சகாவிடம் சொல்லியிருந்தாள். அதனால் கஜேந்திரன் காத்திருப்பார். என்பதை நினைக்க அவளுக்குக் கவலையாக இருந்தது.

துர்க்கையம்மன் கோயிலுக்குச் சென்று, துர்க்கையம்மனை பக்தி சிரத்தையோடு வணங்கினாள். கஜேந்திரனது பெயரையும் பிறந்த நட்சத்திரத்தையும் சொல்லி அர்ச்சனை செய்தாள். அர்ச்சனை செய்த பின்பு மனம் லேசாகி இருப்பதைப் போல் இருந்தது.

இரவு வீட்டுக்கு அவள் வந்த போது அர்ச்சகா அவளுக்காக் காத்திருந்தாள். அவளைக் கண்டதும் கஜேந்திரனைக் கண்டது போன்ற உணர்வு வித்தியாவுக்கு ஏற்பட்டது. சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள் அர்ச்சகா.

''நான் உனக்குக் கடிதம் தருவதை எனது அம்மா அறிந்தால் என்னைக் கொன்று போடுவா. எனவே சீக்கிரமாக கஜேந்திரனுடன் சென்று விடு. அவர் உன்னைக் காணாமல் துடிக்கிறார்''. என்றாள் அர்ச்சகா.

வித்தியா கடிதத்தைப் பிரித்தாள்; ''என்னுயிரே அதை வாசித்ததும் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்கள் நிரம்பின.

கண்ணீரைத் துடைத்து விட்டுக் கடிதத்தை வாசித்தாள் வித்தியா; ‘‘உமது மாமா வீட்டில் இருக்கும் போது வெளியே நீர் புறப்படுவது சிரமம் என்பது எனக்குத் தெரியும். அதனால் நீர் வரா விட்டால் இக்கடிதத்தை உம்மிடம் சேர்ப்பிக்கலாம். என்ற எண்ணத்துடன் கடிதம் ஒன்றை எழுதி வந்தேன்.

நான் எவ்வளவு பலசாலி, ஆண்மை மிக்கவன் என்று உமக்குத் தெரியும். இரும்பாலான எனது இதயம் இப்போது கடதாசி போல மாறி விட்டது. அந்த இதயமான தோணியை காதல் என்னும் கடுமையான வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடுகிறது.

காதல் என்பது காட்டாற்று வெள்ளம் போன்றது. அதற்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய தோணிகள் எவையும் இல்லை. எனது மனமும் அவ் வெள்ளத்தால் அல்லற்படுகிறது. என்ன செய்ய முடியும். இன்று அர்ச்சகா இல்லா விட்டால் உமது நிலை எனக்குத் தெரியாது. எனது நிலை உமக்குத் தெரியாது. அர்ச்சகாவை நான் கடவுளாக நினைத்து வணங்குகிறேன். என்னைச் சந்திக்கவும் இல்லா விட்டால் எனது உயிர் பிரிந்து விடும். அன்புடன் கஜேந்திரன்.

கடிதத்தை வாசித்து விட்டு விம்மி விம்மி அழுதாள் வித்தியா.

**1134. காமக் கரும்புணல் உய்க்குமே நாணொடு**
**நல்லாண்மை என்னும் புணை.**

*நாணமும் நல்ல ஆண்மையுமான தோணிகளைக் காமம் என்னும் பெரு வெள்ளம் அடித்துச் சென்று விடும்.*

## காதலி தந்தவை

அர்ச்சகா கோயிலுக்கு வந்த போது நகுலனும் கஜேந்திரனும் வேப்ப மரநிழலில் அமர்ந்திருந்தனர். அர்ச்சகாவைக் கண்டதும் இருவரும் எழுந்து அவளின் அருகே வந்தனர். அர்ச்சகாவுக்குப் பயமாக இருந்தது. தற்செயலாக யாராவது இனத்தவர்கள் அல்லது அயலவர்கள் கண்டு விட்டால் பிரச்சினையாகி விடு மெனப் பயந்து சுற்றிவரப் பார்த்தாள். கோயிலில் அவ்வளவு சனம் இல்லை. நேரத்தைப் பார்த்தாள். நான்கு மணிப் பூசை தொடங்குவதற்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் இருக்கின்றன. அதனால் போலும் பக்தர்கள் இன்னும் வரவில்லை.

‘‘வித்தியா வரவில்லையா..?’’ என்று ஏக்கத்துடன் கேட்டான் கஜேந்திரன்.

அர்ச்சகாவால் அவனது கேள்விக்கு உடனடியாகப் பதில் கூற முடியவில்லை. சற்றுத் தடுமாறினாள்.

‘‘அர்ச்சகா மனதில் உள்ளதைச் சொல்லு. யோசித்தால் ஏதோ என்னைத் திருப்திப்படுத்தப் பொய் சொல்லப் போகிறாய் என்று அர்த்தம்’’ என்றான் கஜேந்திரன்.

விளையாட்டான விஷயமென்றால் பொய் சொல்லலாம். இது விபரீதமான விஷயம். என்னைப் பொறுத்தவரை இனி வித்தியா வீட்டை விட்டு வெளி வருவது கஷ்டம். மாமனார் வந்தமையால் வித்தியா வெளியே சென்று திரும்பி

வர நேரமானால் தனது மகளைப் பற்றித் தவறாக அவர் நினைத்து விடுவார் என்று வித்தியாவின் தாயார் பயப்படுகிறார் போலத் தெரிகிறது. அத்துடன் நீங்களும் வித்தியாவும் நெடு நேரமாகக் கதைத்துக் கொண்டிருப்பதை யாரோ கண்டு விட்டு அவாவுக்குச் சொல்லியிருக்கிறார்கள் போல் தெரிகிறது. என்னைத் துருவித் துருவிக் கேட்டவா. நான் எனக்குத் தெரியாது. என்று மறைத்து விட்டேன்'' என்றாள் அர்ச்சகா.

கஜேந்திரன் எதுவும் பேசவில்லை. அவனால் பேசமுடியவில்லை.; ''ஏதாவது ஒரு வேலை கிடைத்தாலாவது அவளைக் கூட்டிச் செல்லலாம். வேலையும் கிடைப்பதாகத் தெரியவில்லை. என்ன செய்யலாம்.?'' என்று யோசித்தான்.

''இனி யோசிக்க என்ன இருக்கிறது. வெள்ளம் தலைக்கு மேல் வந்து விட்டது. வித்தியாவினது காதல் விஷயம் தெரிய வந்தால் அவளது தாயார் சில சமயம் அவளைக் கூட்டிக் கொண்டு கொழும்பிற்குப் போனாலும் போயிடுவா. அவாவுக்கு அந்த எண்ணம் இருக்கென்பதை அவாவின் கதையில் இருந்து புரிந்து கொண்டேன்.'' என்றாள் அர்ச்சகா.

'' என்னால் வித்தியாவை மறக்க முடியாது. அவளைக் காணாவிட்டாலே எனது மனம் அல்லற்படுகிறது. பிரிந்தால் எப்படி இருக்கும். காலம் வரட்டும். வித்தியாவின் வீட்டுக்குச் சென்று பெண் கேட்போம் என்று நினைத்திருந்தேன். எனக்கு வேலை கிடைத்தாலும் வித்தியாவின் தாயார் சம்மதிக்க மாட்டார்.எனவே எனது காதல் விஷயத்தைப் பகிரங்கப் படுத்தி அவளை திருமணம் செய்வது தான் ஒரே வழி. மாலை நேரம் வந்தால் அவளது நினைப்பால் பெருந்துன்பப் படுகிறேன். என்னால் பொறுத்திருக்க முடியாது'' என்றான் கஜேந்திரன்.

''காதலி பிரிந்தால் மடலேறு வதைத் தவிர வேறு வழியில்லை. உனது காதலைப் பற்றி எனக்குத் தெரியும். உன்னால் வித்தியாவைப் பிரிந்து வாழ முடியாது.'' என்றான் நகுலன்.

''பிரிவு என்று சொன்னாலே எனக்கு வேதனை ஏற்படுகிறது. அழகான வளையல்களை மாலை போலத் தொடர்ந்து அணிந்திருக்கும் எனது காதலி தந்த வேதனை அவளைக் கூடுவதால் தான் நீங்கும். அர்ச்சகா, வித்தியாவை எந்த விதமான கலக்கமும் இல்லாமல் துணிந்திருக்கச் சொல்லு. தற்செயலாக அவள் என்னை விட்டுக் கொழும்புக்குச் செல்ல நேர்ந்தால் நீ வந்து சொல்லு வேலையில்லா விட்டாலும் பரவாயில்லை. நான் அவளை அழைத்து வருவேன். எனது பிரிவைத் தாங்க முடியாது என்று இப்போது சொன்னாலும் அவளை அழைத்து வரத் தயாராக இருக்கிறேன் என்று சொல் அர்ச்சகா. என்றான் கஜேந்திரன். வார்த்தைகள் உணர்ச்சிப் பெருக்கோடு வெளி வந்தன.

1135. **தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு**
**மாலை உழக்கும் துயர்.**

*மடல் ஏறுதலோடு மாலைக் காலத்தில் வருத்தும் காமமாகிய துன்பத்தையும் மாலை போல் தொடர்ந்து வளையல்களை அணிந்த காதலி எனக்குத் தந்தாள்.*

# நடுஇரவில்

அர்ச்சகா நகுலனோடு சிறிது நேரம் கதைத்து விட்டுச் சென்றாள். நகுலன் அவளைக் கெஞ்சிக் கேட்ட போதும் அவள் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்பு நிற்க மறுத்து விட்டாள்.

''பெண்களுக்குப் பிரச்சினைகள் பல இருக்கின்றன. எமது சமூக அமைப்பில் ஒரு பெண் ஆணுடன் கதைத்தாலே பிரச்சனைகள் உண்டாகும். அதுவும் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களுக்குக் கதைப்பதைக் கண்டால் காதல் என்று முடிவு கட்டிப் பிரச்சினைகளை உருவாக்கி விடுவார்கள்'' என்றான் கஜேந்திரன்.

அர்ச்சகா வித்தியாவைப் பற்றித் தான் கதைத்தாள். தாயும் மாமனும் கலியாணக் கதைதானாம் கதைக்கிறார்கள். வித்தியாவுடைய அம்மாவுக்கு வீட்டில் பெரிய தொரு பந்தல் போட்டு ஊர்ச்சனம் முழுவதிற்கும் சொல்லிச் செய்ய விருப்பமாம். ஆனால் மாமனாருக்கு கொழும்பில் உள்ள திருமண மண்டப மொன்றில் வெகு விமர்சையாகச் செய்யத்தானாம் விருப்பம். அவர் கொழும்பில் பெரிய பிரமுகர். மகன் மருத்துவர். அதனால் தனது நண்பர்களையும் தனது மகனின் நண்பர்களையும் அழைத்துத் தனது பெருமையைக் காட்ட விரும்புகிறாராம். காலையில் இருந்து மாலை வரை இருவரும் திருமணத்தைப் பற்றிக் கதைப்பதால் தனக்கு விசர் பிடித்து விடும் போலுள்ளது என்று வித்தியா சொல்லி அழுதாளாம். பாவமடா வித்தியா'' என்றான் நகுலன்.

''வித்தியா மிகவும் மென்மையான மனம் படைத்தவள். தாயும் மாமனும் கதைக்கும் கொடுமையான கதைகளால் அவளது மனம் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கும். அவள் கலங்குவதை என்னால் தாங்க முடியாது'' கலங்கினான் கஜேந்திரன்.

''வித்தியாவின் தாய்க்கு, வித்தியாவின் மேல் சந்தேகம் உள்ளது. அதனால் தான் அவளை வெளியே செல்ல விடுவதில்லை. அர்ச்சகாவிடம் வித்தியாவைப் பற்றிக் கேட்டுள்ளா. நீ அடிக்கடி அங்கு போவதாலும் அவாவுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கும். ஒரு கன்னிப் பெண் திருமணம் என்றால் மகிழ்ச்சியடைவாள். எனது சகோதரன் மிகவும் வசதியானவர். பெரிய பணக்காரர், கொழும்பில் இரண்டு வீடுகள் இருக்கின்றன. ஊரில் எவ்வளவோ நிலமிருக்கு. அத்துடன் அங்கஜன் வைத்தியன், கைநிறையச் சம்பள மெடுக்கிறான். அவனைத் திருமணம் செய்ய வித்தியா கொடுத்து வைத்திருக்க வேண்டும். அப்படியிருக்க அங்கஜனின் கதையை நான் கதைத்தால் வித்தியா மகிழ்வுடன் கேட்கிறாளில்லை. முன்பு கலியாணம் செய்ய மாட்டன். படிப்பு முடியட்டும் என்றாள். படிப்பு முடிந்து விட்டது. மாமனும் வந்து நிற்கிறார். இப்ப தனக்குக் கலியாணம் வேண்டாமாம். உழைக்க வேண்டுமாம். எப்படி இருக்குக் கதை. இவா உழைத்தே அந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். அந்த நேரம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான போது எனக்கு அது விருப்பமில்லை. மாமன் தான் படிக்க விடச் சொன்னவர். படிக்க விட்டது பிழையாய்ப் போச்சு'' என்று தாய் அர்ச்சகாவுக்குச் சொன்னவாவாம். எனவே நீ விரைவாக வித்தியாவை அழைத்து வர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்'' என்றான் நகுலன்.

''என்னால் அவளைப் பிரிந்து வாழ முடியாது. அவளுக்கேற்பட்ட துன்பங்களை என்னால் தீர்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் எனது மனதை எந்நேரமும்

வாட்டிக் கொண்டிருக்கிறது. வித்தியாவைப் பிரிந்தமையால் எனது கண்கள் தூங்க மறுக்கின்றன. அதனால் இரவு முழுவதும் நான் விழித்திருக்கிறேன். நடு இரவிலும் கூட மடலேறுவதைப் பற்றியே நினைக்கிறேன். நான் வித்தியா மீது கொண்ட காதலை எப்படி அவளது தாயாருக்குத் தெரியப்படுத்துவது என்றே இரவு முழுவதும் நினைக்கிறேன். அதனால் எனது உறக்கம் கலைகிறதே தவிர உருப்படியான திட்டமேதும் மனதில் உருவாக வில்லை. இரவு எனக்கு வேதனையைத் தருகிறது'' என்றான் கஜேந்திரன்.

**1136. மடல்ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற**
**படல் ஒல்லா பேதைக்கு என் கண்.**

*காதலியின் பிரிவைத் தாங்க முடியாததால் நள்ளிரவிலும் நான் விழித்திருக்கிறேன். அதனால் நள்ளிரவிலும் மடலேறும் எண்ணம் என்மனதில் எழுகிறது.*

## பெருமையான பிறப்பு

கஜேந்திரன், வித்தியாவை நினைத்துப் பார்த்தான். மென்மையான அவளது கன்னங்களைப் போலவே அவளது மனமும் இருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்பு அவனது தாயார் கடும் சுகவீன முற்று நகரத்தில் உள்ள போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கடுஞ்சுகவீன முற்றிருந்த அவர் வீட்டிலேயே சுயநினைவை இழந்திருந்தார்.

கஜேந்திரன் ஆடிப்போனான். அவனால் எதையும் தீர்மானித்துச் செய்ய முடியவில்லை. நான்கு நாட்கள் சுயநினைவடையாது படுத்த படுக்கையாக இருந்த கஜேந்திரனின் தாயாரைப் பராமரித்தவள் வித்தியா தான். மூன்று நாட்கள் பகல் முழுவதும் வித்தியா தான் அவளுடன் இருந்தாள். உறவினர்கள் பலர் இருந்த போதும் வித்தியா விடாப்பிடியாக நின்றதால் கஜேந்திரனால் எதுவும் பேசமுடியவில்லை.

''என்னை யாரென்று யாராவது கேட்டால் கூலிக்குப் பராமரிப்பதற்கு வந்திருப்பவள். என்று சொல்லுங்கள். நான் உங்களைத் திருமணம் செய்த பின்பு நான் யார் என்பதை அவர்கள் சொல்லாமலே புரிந்து கொள்வார்கள்'' என்றாள்.

நோயுற்றிருந்த இலட்சுமியைப் பார்ப்பதற்கு வந்த உறவினர்கள் ''இந்தப் பெண் யார்?'' என்று பொன்னம்பலத்தையும் கஜேந்திரனையும் கேட்டனர். வித்தியா கஜேந்திரனைப் பார்த்தாள். அவன் தடுமாறினான்.; ''என்ன தம்பி யோசிக்கிறாய். எனக்கும் தெரியாது. உனக்கும் தெரியாதென்றால்'' என்று பொன்னம்பலம் கூறிக் கொண்டிருக்கையில் வித்தியா சொன்னாள்; ''அவருக்கும் என்னைத் தெரியாது. நோயாளர்களைப் பராமரிப்பதற்கென்று ஓர் அமைப்பு இருக்கு. மிகவும் கடுமையான நோயாளிகளை நாங்கள் பராமரிப்போம். அதற்கான கூலியை நீங்கள் செலுத்த வேண்டும்'' என்றாள்.

''கஜேந்திரன் வித்தியாவைப் பார்த்தான். அவள் முகத்தை மறுபக்கம் திருப்பினாள். நெஞ்சுள் மோதிய உணர்வுகள் கண்களை நிரப்பின. சிரமப் பட்டு

உணர்ச்சிகளை அடக்கினான், முடியவில்லை. அதனால் அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

வீட்டுக்கு இலட்சுமி வந்த பின்பு தன்னைப் பார்க்க வருபவர்களிடம் வித்தியாவைப் பற்றியே சொல்வாள்.; ''மிகவும் நல்லவள். இப்படியான ஒரு பெண்ணைப் பெற்ற தாய் பாக்கியசாலி. அவளைத் திருமணம் செய்பவன் கொடுத்து வைத்தவன். எப்படியெல்லாம் என்னைப் பராமரித்தாள்.'' என்பார்.

அதன் பின் ஒரு நாளைக்கு மூன்று தரம் என்றாலும் வித்தியாவைப் பற்றி இலட்சுமி கதைப்பாள்.

ஒரு நாள் கஜேந்திரனைச் சந்தித்த போது வித்தியா சொன்னாள்; ''நான் ஒரு முறை மாமியைப் பார்க்க வேண்டும்.''

''வீட்டை வரப் போறீரா.....?

''நாளைக்கு மாலை நான்கு மணிக்கு வருவன். வீடடில் இருங்கோ''.

மறு நாள் நான்கு மணிக்கு வித்தியா கஜேந்திரனின் வீட்டுக்குப் பழங்களுடன் வந்தாள். கஜேந்திரன் திகைத்துப் போனான். அவளை பெருமகிழ்வுடன் வரவேற்றான். இரண்டு மணிநேரம் இருவரும் மகிழ்வுடன் உரையாடினர். வித்தியா பறப்பட்ட பொழுது இலட்சுமி கண்கலங்கினாள்.

மென்மையான துணிவுள்ள, அதே சமயம் திடமான மனமுள்ளவள் வித்தியா, ஒரு முறை அவளுக்கும் கஜேந்திரனுக்கும் ஏதோ பிரச்சினை வந்து விட்டது. ஆறு மாதங்கள் அவனைச் சந்திக்காமலும் கதைக்காமலும் இருந்தாள். அப்படி இருந்த போதும் அவள் அவனைக் குறை சொல்லவில்லை. அவன் செய்த தவறை பேசாமல் இருந்து உணர்த்தினாள்.

''கடல் போன்ற காமம் அவளைத் துனபுறுத்தியும் கூட மடலேறாது பொறுத்திருந்த வித்தியாவைப் போலப் பெருமை உடைய பெண் இவ்வுலகில் இல்லை'' என்று நினைத்தான் கஜேந்திரன். பழைய சம்பவங்களை நினைக்க அவனுக்குத் துக்கமாக இருந்தது. எப்பாடு பட்டாவது இரண்டொரு தினங்களில் வித்தியாவைச் சந்திக்க வேண்டும்.'' என்று நினைத்தான்.

**1137. கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்.**

*கடல் போன்ற காம நோயால் வருந்தியும், மடலேறாமல் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கும் பெண் பிறப்பைப் போல பெருமையுடைய பிறவி வேறு இல்லை.*

## வலிமை இல்லாதவர்

வித்தியா, கஜேந்திரனுடன் கோபித்திருந்த அந்த ஆறு மாத காலத்தில் அவன் பித்துப் பிடித்தவன் போலவே உலாவி வந்தான். கணித பாடத்தில் நூற்றுக்கு நூறு புள்ளிகள் எடுக்கும் அவன் அந்த ஆறு மாத காலத்துள் நடை

பெற்ற இடை நிலைப் பரீட்சையில் இருபது புள்ளிகளையே பெற்றான். அதனால் அதிர்ச்சியடைந்த கணித விரிவுரையாளர் சொன்னார்; கஜேந்திரன் உனக்கு என்ன நடந்தது. நான் இருபது வருடங்களாகக் கணிதம் கற்பித்து வருகிறேன். எனது கற்பித்தற் காலத்தில் உன்னைப் பேன்ற தொரு திறமைசாலியை நான் கண்டதில்லை. உனது அறிவுத்திறனைப் பரீட்சிப்பதற்காகத்தான் நான் வினாத்தாள்களைச் சிலவேளைகளில் மிகவும் கடுமையானதாகத் தயாரிப்பேன். மற்றைய மாணவர்கள் இருபது முப்பது புள்ளிகளைப் பெறும் போது நீ நூறு புள்ளிகளைப் பெறுவாய். இந்த முறை மற்றய மாணவர்களும் பயன் பெற வேண்டுமென்பதற்காகப் பாடத்திட்டத்தில் உள்ளபடியே வினாத்தாளைத் தயாரித்தேன். மிகவும் குறைவாகப் புள்ளிகளைப் பெறும் மாணவர்களே அதிக புள்ளிகள் பெற்றிருக்கும் போது நீ ஏன் குறைவாகப் பெற்றாய். வீட்டில் ஏதாவது பிரச்சினையா...? இல்லை உனது மனம் பாதிக்கப்பட்டுள்ளதா...?'' என்று கேட்டார்.

கஜேந்திரனால் அவரின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. தடுமாறினான். பின்; ''சுகமில்லை ஐயா'' என்றான்.

''அது தானே பார்த்தேன். நீ தான் எனது வாரிசு. பல்கலைக்கழகத்தில் கணித பாடத்திற்கு ஒரு வெற்றிடம் உள்ளது. கவனமாகப் பரீட்சைகளைச் செய். அந்த வெற்றிடத்திற்கு உன்னை நியமிக்கும்படி நான் சிபார்சு செய்துள்ளேன்.'' என்றார் கணிதப் பேராசிரியர்.

''வித்தியா, கதைக்காமல் இருந்து பெருந்தண்டனையை எனக்குத் தராதே. என்னால் உன்னுடன் கதைக்காமல் இருக்க முடியாது. என்னோடு ஏன் கதைக்கவில்லை என்று சொல்லு. சொல்லி விட்டுக் கதைக்காமல் விட்டாயானால் நான் செய்த குற்றத்திற்குத் தண்டனை என்று நினைப்பேன். நீ பேசாமல் இருந்து என்னைக் கொல்கிறாய். தயவு செய்து நான் செய்த குற்றத்தைச் சொல்லு ... வித்தியா'' என்று பல முறை கெஞ்சினான்.

ஆனால் வித்தியா வாய் திறந்து எதையும் கூறுவதில்லை. அவனைக் கண்டதும் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொள்வாள்.

''வித்தி நான் மனதைக் கட்டுப்படுத்தும் வலிமை இல்லாதவன். யார் மீதும் இரக்கப்படுபவன். மற்றவர்களுக்குச் சிறு துன்பம் வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது துடிதுடித்து உதவுபவன் என்று தெரிந்தும் நீ என் மீது இரக்கமில்லாது நடந்து கொள்கிறாயே, உன் மீது கொண்ட காதல் என் உயிரைக் கொல்கிறது. தயவு செய்து என்னோடு கதை'' இரந்தான் கஜேந்திரன்.

அப்படியிருந்தும் வித்தியா அவன் மீது இரக்கம் கொள்ளவில்லை. அதனால் மிகவும் நொந்து போனான். கஜேந்திரன் அவனது கோலத்தைக் கண்ட வித்தியாவின் தோழியான தீபா வித்தியாவைக் கேட்டாள்.; '' வித்தி கஜேந்திரன் மெலிந்துள்ளார். அவரது முகம் பேயறைந்ததைப் போல உள்ளது. என்ன நடந்ததென்று நீ விசாரிக்கவில்லையா...?''

''இல்லை அவரின் போக்குச் சரியில்லை.''

‘‘கஜேந்திரன் மிகவும் நல்லவர். அவரைப் பற்றி எனக்குத் தெரியும். நீ என்ன காரணத்திற்காகக் கதைக்காமல் விட்டனீ.’’

சிறிது நேரம் யோசித்தாள் வித்தியா. அவளது கண்கள் கலங்கின. ‘‘அவரை காயத்திரி விரும்புவதாகச் சொன்னாள். அது தான் எனக்குப் பிடிக்கவில்லை’’ அழுதாள் வித்தியா.

‘‘யாரோ ஒருத்தி அவரை விரும்பினால் உனக்கென்ன. அவர் உன்னைத் தானே விரும்புகிறார். அவர் மிகவும் இரக்க சுபாவமானவர். காதல் விஷயத்தில் மனதைக் கட்டுப்படுத்தும் வலிமை இல்லாதவர். உனது நினைவால் தான் வாடுகிறார். வா போய் கதைப்போம் என்றாள்.

தீபாவுடன் வந்த வித்தியா கஜேந்திரன் முன் கண்கலங்கி நின்றாள். விஷயத்தை அறிந்த கஜேந்திரன் விழுந்து விழுந்து சிரித்தான். அவனது முகம் பிரகாசித்தது.

**1138. நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்**
**மறை இறந்து மன்று படும்.**

*இவர் மனத்தைக் கட்டுப்படுத்தும் வலிமை இல்லாதவர், மிகுந்த இரக்க சிந்தை உடையவர் என்று எண்ணாமல் காமம் மறைந்திருக்காது எல்லோர் முன்பும் வெளிப்படுகிறது.*

## சுழல்கிறது

கிழுவானை வீதியில் வித்தியாவின் வீடு இருக்கிறது. அவ்வீதியால் பல முறை சென்றிருக்கிறான் கஜேந்திரன். முன்பு பல தடவைகள் அவ்வீதியால் சென்ற போது ஏற்படாத பயமும் கூச்சமும் அன்று அவனுக்கு ஏற்பட்டது. முன்பு அவன் அவ்வீதியால் செல்லும் போது எதைப்பற்றியும் சிந்திப்பதில்லை. அவ்வீதியால் வருவோர் போவோரைக் கவனிப்பதில்லை. ஆனால் அன்று அவன் அவ்வீதியால் செல்லும் போது பயப்பட்டான்.

அவனது நண்பன் சுரேந்திரன் கிழுவானை வீதியில் தான் இருக்கிறான். இதற்கு முன்பு அவனைப் பல தடவைகள் சந்தித்திருக்கிறான் கஜேந்திரன். கஜேந்திரனைக் கண்டால் சுரேந்திரன் நட்புரிமையோடு கதைப்பான், சிரிப்பான்.ஏன் அவ்வீதியால் வருகிறான் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவன் அதைப் பற்றி எதுவும் கேட்பதில்லை அவனைச் சந்தித்தால்; ‘‘எனக்கு அவசரமான ஓர் அலுவல் இருக்கிறது. நான் போக வேண்டும்’’ என்பான் கஜேந்திரன்.

‘‘அவசர அலுவல் இருக்கும் உன்னை ஏன் நான் தாமதப்படுத்துவான். நீ போ’’ என்பான் சுரேந்திரன். அன்று கிழுவானை வீதியால் வந்த சுரேந்திரனைப் பார்க்க கஜேந்திரனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. சுரேந்திரன் அவனைப் பார்த்துச் சிரித்தான். அவனது சிரிப்பில் என்று மில்லாத ஒரு பரிகசிப்பு இருப்பதாகக் கஜேந்திரனுக்குத் தெரிந்தது. அவனது சிரிப்பால் கூனிக்குறுகினான் கஜேந்திரன்; அதே வீதியில் தான் வித்தியா இருக்கிறாள்; ‘‘மாமனார் வந்து

நிற்கிறார் வித்தியாவை கொழும்புக்கு அழைத்துச் சென்று விடுவார். நீ என்ன செய்யப் போகிறாய். ஆண்மை இல்லாத உனக்கெல்லாம் என்ன காதல்'' என்று கேட்டதைப் போல இருந்தது அவனது சிரிப்பு.

''எப்படி கஜேந்திரன் சுகமாக இருக்கிறாயா....? கன நாட்களாக உன்னை நான் காணவில்லை. எங்கேயாவது சென்றாயா...? இல்லாவிட்டால் சுகமில்லையா? முகமெல்லாம் வாடி இருக்கிறது.'' என்று கேட்டான் சுரேந்திரன்.

''அப்படி ஒன்றுமில்லை'' சிரித்தான் கஜேந்திரன்.

''இல்லை, நீ மெலிந்திருக்கிறாய். முகம் வாடிச் சோர்ந்திருக்கிறது'' என்று கூறி விட்டு நடந்தான் சுரேந்திரன்.

''இவன் வித்தியாவைப் பற்றி ஏதாவது அறிந்திருக்கிறானோ..? இல்லா விட்டால் இப்படி ஏன் கேட்கிறான்'' நினைக்க அவனுக்குத் தலையைச் சுற்றியது ''எமது காதல் விஷயத்தை அறிந்தால் வித்தியாவின் தாய் வித்தியாவுக்குப்பல துன்பங்களைக் கொடுப்பாள்'' என்று நினைத்தவாறு சென்றான் கஜேந்திரன்.

''கஜேந்திரன்'' என்று ஓர் இனிமையான குரல் ஒலித்தது. நினைவுகளில் இருந்து திடுக்கிட்டுத் திரும்பிய கஜேந்திரன் ''துளஸ்சியாவா..? என்ன இந்தப் பக்கம்'' என்று கேட்டான்.

''நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள். வித்தியாவின் வீட்டுக்குப் போவமென்று வந்தனான். நீங்களும் வாறியளா..?'' என்று கேட்டாள் துளஸ்சியா.

''நான் அவசரமாகச் செல்கிறேன் நீ போ. நான் பிறகு செல்கிறேன''. என்றான் கஜேந்திரன்.

சிரித்தாள் துளஸ்சியா; ''சரி வித்தியாவின் மாமன் வந்து நிற்கிறாராம். அவர் எனது அப்பாவின் நண்பர். அவரைப் பார்க்கத் தான் செல்கிறேன். வித்தியாவையும் தாயையும் கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு போகப் போகிறாராம். நேற்று அப்பா அவரைச் சந்தித்த போது சொன்னவர்'. என்று கூறி விட்டுச் சிரித்தாள் துளஸ்சிகா.

கஜேந்திரனது மனம் வாடிச் சோர்ந்தது. மெதுவாக நகர்ந்தான். வித்தியாவின் வீட்டுக்குச் சிறிய தூரத்தில் ஒரு பலசரக்குக் கடை இருக்கிறது. அதன் உரிமையாளரான ஈஸ்வரநாதனுடன் கஜேந்திரன் கதைப்பான். கஜேந்திரனைக் கண்ட ஈஸ்வரநாதன் சொன்னார்; ''தம்பி வித்தியா கொழும்புக்குப் போகப் போறாளாம். நீர் என்ன செய்யப் போறீர்.'' அவர் அப்படிக் கேட்பாரென அவன் எதிர்பார்க்கவில்லை; ''இப்ப ஒரு கிழமையாய் உம்மைப் பற்றியும் வித்தியாவைப்பற்றியும் தான் இதிலை கூடியிருந்து சனம் கதைக்குது. நீர் அடிக்கடி வித்தியாவின் வீட்டுக்குப் போறனீர். உம்மை வித்தியா விரும்புறாளே''

கஜேந்திரனால் பதில் கூற முடியவில்லை. ஆயிரம் பாம்புகள் உடல் முழுவதும் கொத்துவது போல் இருந்தது ''நான் அமைதியாக இருந்தாலும்

எனது காதல் இந்த ஊர்த் தெருக்களில் நகைப்புக்குரிய செய்தியாக உலா வருகிறது'' என்பதை நினைக்க கஜேந்திரனுக்கு வெட்கமாக இரந்தது.

1139. **அறிகிலார் எல்லாரும் என்றே என் காமம்**
**மறுகின் மறுகும் மருண்டு.**

*அமைதியாக இருந்தால் எல்லோரும் அறிய மாட்டார்கள் எனக்கருதி, எனது காமம் இவ்வூர்த் தெருக்களெல்லாம் வெளிப்பட்டு நிற்கிறது.*

## அறிவில்லாதவர்கள்

ஈஸ்வரநாதன் சொல்ல அங்கு கூடியிருந்த பலர் சிரித்தனர். ''வித்தியா நல்ல பிள்ளை. ஆண்களைக் கவரும் ஒரு வசீகர அழகு அவளில் குடி கொண்டிருக்கிறது. அவளுக்குப் பின்னால் எத்தனை பொடியள் அலைஞ்சவங்கள். பலரை அவள் செருப்பால் அடித்துள்ளாள். நான் அறிந்தவரையில் நீர் ஓர் ஆண் தான். அவளின் வீட்டுக்கு அடிக்கடி போட்டு வாறனீர். வேறை ஆண்கள் அங்கு போவதே இல்லை. தாய் மனிசி பொல்லாத மனிசி. தன்னுடைய சகோதரன்ரை மகனுக்குத்தான் வித்தியாவைச் செய்யிறதாய் இரு வீட்டாரும் தீர்மானித்திருப்பதாகச் சொல்லுறவா. பிறகு எப்படி அவள் உம்மைக் காதலிப்பள்'' என்று கேட்டான் ஈஸ்வரநாதன்.

''பொழுது போக்காகக் காதலிக்கிறது தான். உங்கை ஊரிலை காதலிக்கிறவை எல்லோரும் கலியாணம் கட்டுறவையே'' என்று கடையில் நின்ற ஒருவன் கேட்டான்.

'' காதலிக்கிறவை கலியாணங் கட்டா விட்டால் பரவாயில்லை. இன்னொருவனுக்குத் தீர்மானிக்கப்பட்ட ஒருத்தி வேறொருவனைக் காதலிக்கிறது மன்னிக்க முடியாத குற்றம்'' என்றான் இன்னொருவன்.

கஜேந்திரனுக்கு ஆத்திரமாக இருந்தது. இருவருக்கும் அடிக்க வேண்டும் என்ற உணர்வு மனதுள் எழுந்தது. இருப்பினும் தேவையில்லாமல் சண்டைக்குப் போனால் வித்தியாவுக்குத் துன்பம் ஏற்படும் என்று நினைத்துப் பேசாமல் இருந்தான்.

'' பாவம் பழியை இப்போ யார் பார்க்கிறார்கள். காதலிப்பது தவம் செய்வதைப் போன்றது. காதலின் புனிதத் தன்மையைக் காதலர்கள் போற்ற வேண்டும். அங்கஜனை எனக்குத் தெரியும். மிகவும் நல்லவன். மருத்துவராகக் கடமை புரிகிறான். அவனைத் திருமணம் செய்ய எந்தப் பெண்ணும் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். அப்படியிருக்க இவள் எதற்காக இன்னொருவனை விரும்ப வேண்டும்.'' என்று கேட்டான் ஈஸ்வரநாதன்.

''அவள் விரும்பினவளே. அவளுக்குப் பின்னாலை எத்தனை பேர் திரிந்தவங்கள். அவள் யாரையும் விரும்பவில்லை. தேவையில்லாமல் இவங்கள் ஏன் அவளுக்குப் பின்னால் திரிந்து அவளது மானத்தைக் கெடுக்கிறாங்கள். அவளுக்குத் திருமணமான பின்பு புரிசன் இவங்கள் பின்னால் திரிவதை அறிந்தால் எவ்வளவு பிரச்சினை வரும். காதலிக்கிறத்தை நான் குற்றஞ்

செய்யவில்லை. எமது தெய்வங்களே காதலித்துத் திருமணம் செய்திருக்கு. அப்படியிருக்க புனிதமான காதலை எப்படிக் குறை சொல்ல முடியும். நானும் காதலித்துத் தான் திருமணம் செய்தனான். காதலிக்கிறவைக்கு உதவி செய்ய இப்பவும் எனக்கு விருப்பம். ஆனால் இன்னொருவனுடைய பெம்பிளையைக் காதலிக்கிறது எவ்வளவு பிழை'' என்றான் ஒருவன்.

அதைக் கேட்ட கஜேந்திரனுக்குத் தலையைச் சுற்றியது. ஒரு பெண் தனக்குப் பிடித்தவனைத் தான் திருமணம் செய்ய விரும்புவாள். பெற்றோரின் விருப்பத்திற்காக விருப்பமில்லாத ஒருவனைக் கட்டிக் கொண்டு வாழ் நாள் முழுவதும் துன்பப்பட முடியுமா...?''

தற்காலப் பிள்ளைகளுக்கு காதல் என்றால் என்னவென்று தெரியாது. அழகான ஒரு பெண்ணைக் கண்டு விரும்புறது காதல் இல்லை. அதைக் கவர்ச்சி அல்லது மோகம் என்று தான் சொல்ல வேண்டும். ஒரு பெண்ணைக் காதலிக்கிறவன் அவளுக்காக எந்தத் தியாகத்தையும் செய்யச் சித்தமாக இருத்தல் வேண்டும். அவள் தன்னைக் காதலிக்கா விட்டால், அவளின் விருப்பத்திற்கேற்றவாறு நாகரிகமான முறையில் நடந்து கொள்வது தான் காதலுக்குக் கொடுக்கும் மரியாதை. இப்ப காதலிக்கிறவை ஆசை தீர்ந்தவுடன் பெண்ணைக் கைவிட்டு விடுகிறார்கள். தன்னை அவள் காதலிக்கா விட்டால் அவளுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள். அதனால் அவளது வாழ்க்கை சீரழிந்து விடும். என்பதை நினைத்துப் பார்க்கிறார்கள் இல்லை'' என்றான் ஈஸ்வரநாதன்.

''நான் அனுபவிக்கும் துன்பத்தை அவர்கள் அனுபவிக்காத காரணத்தால் தான் என் எதிரிலேயே, எனக்குக் கேட்கும் வண்ணம் என்னைப் பார்த்துக் கதைத்துச் சிரிக்கிறார்கள். இவர்களுக்கு அறிவில்லை. நான் ஏன் கோபிக்க வேண்டும்'' என்று நினைத்தான் கஜேந்திரன்.

**1140. யாங்கண்ணின் காண நகுப அறிவு இல்லார்**
**யாம்பட்ட தாம்படா வாறு.**

*நான்படும் துயரங்களை தாங்கள் அனுபவிக்காமையால், அறிவில்லாதவர்கள் நான் கண்ணால் காணுமாறு என் எதிரில் என்னைப் பற்றிச் சிரித்துக் கதைக்கிறார்கள்.*

## தூற்றுதல்

தற்காலப் பிள்ளைகளுக்குக் காதல் என்றால் என்ன வென்று தெரியாது. ஓர் அழகான பெண்ணின் கவர்ச்சியை விரும்புவது மோகித்தலே தவிர வேறு எதுவும் இல்லை. வித்தியா அற்புதமான ஓர் அழகி. அவளது கண்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அப்படிப்பட்ட அழகானவளை எத்தனை பேர் விரும்பிப் பின்னால் நாயாக, பேயாக அலைந்திருக்கிறார்கள். அவளுக்கென்றொருவன் தீர்மானிக்கப்பட்டிருக்கிறான். இதை அறியாமல் பலர் அவளின் பின்னால் அலைகிறார்கள்.'' யாரோ ஒருவன் கடையில் இருந்து சொன்னது கஜேந்திரனது காதில் விழுந்தது.

“ஒரு விடயத்தை யார் தீர்மானிப்பது பெற்றோரா? இல்லை சம்பந்தப்பட்ட பெண்ணா? இல்லை ஆணா..? இவர்கள் தான் தீர்மானிக்கிறார்கள் என்று பொதுவாக எல்லோரும் நம்புகிறார்கள். இவர்களுக்கெல்லாம் அப்பாற் பட்ட ஒருவன் தீர்மானம் எடுக்கிறான் என்பதை யாரும் உணர்வதில்லை” என்று நினைத்தான் கஜேந்திரன்.

“ வித்தியாவின் தாய் வித்தியாவுக்கு அங்கஜனைச் செய்வதாகத் தீர்மானிக்கலாம். ஆனால் வித்தியா என்னைத் திருமணம் செய்வதாகத் தீர்மானித்துள்ளாள். அதே போல நானும் தீர்மானித்துள்ளேன். கடவுள் எப்படித் தீர்மானித்திருக்கிறாரோ..”? என்று நினைக்க கஜேந்திரனுக்கு வேதனையாக இருந்தது.

“கஜேந்திரன், ஊரில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு உனது காதல் விஷயம் முழுவதும் தெரியும். அவர்கள் உங்கள் இருவரையும் தூற்றுகிறார்கள். அங்கஜனின் சிறிய தகப்பனார் எனக்குச் சொன்னார்; “அங்கஜன் நல்ல பையன் அவன் இவளைத் திருமணம் செய்வதாகக் கற்பனை பண்ணிக் கொண்டிருக்கிறான். இவள் யாரோ ஒரு பெடியனோடு எல்லா இடமும் சுற்றித்திரிகிறாள். படித்த அவளுக்குத் தான் புத்தியில்லை யென்றால் பெற்ற தாய்க்குமா இல்லை? நீ பார் அவள் அவனோடு சென்று விடுவாள். அங்கஜன் தான் வேதனைப்படுவான்.” என்று சொன்னாள் அர்ச்சகா.

“அர்ச்சகா, தாயும் மாமனும் தீர்மானித்ததிற்கு ஒரு பெண் கட்டுப்பட முடியுமா...? காதல் என்பது தகுதி, பணம், பொருள் கருதி உண்டாவதில்லை. முக்கியமாகச் சொனனால் காதலுக்கு அழகு கூடத் தேவையில்லை. நான் பார்த்தளவில் அழகில்லாத பெண்கள் என்று மற்றவர்களால் சொல்லப்படுபவர்கள் தான் காதலில் வெற்றியடைந்துள்ளனர். காதல் என்பது முற்பிறப்பில் உள்ள ஏதோ ஒரு தொடர்பால் ஏற்படுவதேயன்றி வேறு வகையால் ஏற்படுவதில்லை. எனக்கும் வித்தியாவுக்கும் ஏதோ ஒரு பூர்வ புண்ணியத் தொடர்பு இருத்தல் வேண்டும். அத் தொடர்பு தான் இப்போது கை கூடியுள்ளது.” என்றான் கஜேந்திரன்.

அதை நானும் நம்புறன். ஆனால் ஊரவர்கள் அலர் தூற்றுகிறார்கள். அதை நினைக்கத் தான் கவலையாக உள்ளது” என்றாள் அர்ச்சகா.

காதலிப்பவர்கள் ஊரார் தூற்றுவதைக் கண்டு பயப்பட மாட்டார்கள் ஊரவர்கள் அலர் தூற்றுவதினாலேயே என் உயிர் உடலை விட்டுப் போகாமல் உடலுக்குள்ளேயே தங்கி நிற்கிறது. இது நான் செய்த பாக்கியம். ஒருவன் காதலிக்கும் பெண் அவனுக்கு இலகுவாகக் கிடைத்தால் அந்தக் காதல் வரலாற்றில் ஒரு சுவையும் இராது. பல்வேறு விதமான எதிர்ப்புக்களுக்கு மத்தியில் போராடி வெற்றியடையும் காதலில் தான் பெரும் இன்பம் உள்ளது. ஊரவர்கள் அலர் தூற்றுவதால் தான் காதலியைக் கைபிடிக்க வேண்டும். என்ற எண்ணமும் மனத்தைரியமும் உண்டாகும்.” என்றான். கஜேந்திரன்.

“இப்போது நான் அடிக்கடி வித்தியாவின் வீட்டுக்குச் சென்று வருகிறேன். அது வித்தியாவின் அம்மாவுக்குச் சந்தேகத்தை உண்டாக்கியுள்ளது தெரிகிறது. எனது அம்மாவும் கண்டபடி வித்தியாவின் வீட்டுக்குச் செல்லாதே போனால் அவர்கள்

வித்தியாசமாக நினைப்பார்கள் என்று கூறினா. அதனால் நான் அங்கு இனி அடிக்கடி செல்ல மாட்டேன்'' என்றாள் அர்ச்சகா.

கஜேந்திரன் பதில் கூறாது அர்ச்சகாவைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

**1141. அலர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலர் அறியார் பாக்கியத் தால்.**

*எம் காதலைப் பற்றி அலர் எழுவதால் என் அரிய உயிர் போகாமல் நிற்கிறது. எனது நல்வினைப் பயன் காரணமாக அதைப் பலரும் அறியாமல் இருக்கின்றனர்.*

## உதவி

''காதலைப் பற்றிப் புலம்பிக் கொண்டிருக்கிறாயே தவிர உருப்படியான எந்தச் செயலையும் நீ செய்யவில்லை. தற்செயலாக வித்தியாவை அவளது மாமனார் கொழும்புக்கு அழைத்துச் சென்றால் நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டான் நகுலன்.

''காதல் கொண்ட உள்ளங்களைப் பிரிக்கும் சக்தி உலகில் யாருக்குமே இல்லை. அவர்களைப் பிரிக்க நினைப்பவர்கள் தான் ஏமாற்றம் அடைவார்கள். காதல் கொண்ட ஓர் உயிரை உலகின் எந்தப் பகுதியில் கொண்டு சென்று மறைத்து வைத்திருந்தாலும் காதல் ஒன்று சேர்க்கும்'' உணர்ச்சிவசப்பட்டான் கஜேந்திரன். நகுலன் பேசாமல் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தான்; ''நகுலா, நீ எதை நினைத்துக் கேட்டாயோ எனக்குத் தெரியாது. நாளைக்கு இந்த நிலைமை உனக்கு வந்தால் என்ன செய்வாய்? அர்ச்சகாவை விட்டுப் பிரிவாயா? சொல்லு'' என்றான்.

சில கணங்கள் நகுலன் எதுவும் பேசவில்லை. பின் சொன்னான்; புத்திமதிகள் சொல்வதும், ஆலோசனைகள் வழங்குவதும், திட்டமிடுவதும் மிகவும் எளிதானது. அவற்றை நடை முறைப்படுத்துவது தான் கஷ்டமானது. நீ சொல்வதைப் போல் வலிமையான காதலர்களைப் பிரிக்க முடியாது. எனது காதல் வலிமையானது'' என்றான் நகுலன்.

''காதல் விடயத்தில் திட்டமிட்டுக் கருமமாற்றுவது மிகவும் கடினமானது. மலர் போன்ற கண்களை உடைய உனது காதலியின் அருமை தெரியாததால் தான் இந்த ஊரவர். அவளை எளியவளாகக் கருதி அலர் தூற்றுகின்றனர். அவர்கள் கூறும் அலரானது காதலர்களுக்கு உதவி செய்யுமே தவிர உபத்திரவம் செய்யாது. இது நாள் வரை வித்தியாவின் குடும்பத்தினருக்கு உனது காதல் பிரச்சினை தெரியாது. நீ வித்தியாவைப் பல இடங்களிலும் சந்திப்பதால் அதைக் கண்ட ஊரவர் அலர் தூற்றுகின்றனர். இல்லாதவற்றையெல்லாம் கற்பனை செய்து கூறுவதால் உனது காதலியான வித்தியாவுக்கு நிச்சயிக்கப்பட்டவன் சில சமயம் வெறுக்கவும் கூடும். இது உனக்கு நன்மையே தவிர தீமையில்லை'' என்றான் நகுலன்.

''ஊரவர்கள் ஒரு விசயத்தை மிகைப்படுத்திக் கூறுவதால், அப் பெண்ணுக்கு தீராத களங்க மேற்படும். கற்புள்ள பெண் அன்னிய ஆடவனை நிமிர்ந்து

பார்ப்பதே தவறு என்று நினைக்கும் ஊரவர், வித்தியாவுடன் நான் கொண்ட காதலை மிகவும் கொச்சைப்படுத்திக் கதைக்கின்றனர். இது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. காதலில் கேவலப்படும் பெண் தான் காதலில் வெற்றியடைவாள். இது வரலாறு கண்ட உண்மை'' என்றான் கஜேந்திரன்.

''இந்த நிலை எனக்கும் வரும்'' என்றான் நகுலன். கஜேந்திரன் சிரித்தான்.

**1142. மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது**
**அலர் எமக்கு ஈந்தது இவ்வூர்.**

*மலர் போன்ற கண்களை உடைய இவளின் பெருமையை அறியாமல், இந்த ஊரார் இவளை எளியவளாகக் கருதி அலர் கூறி எமக்கு உதவி செய்தனர்.*

## அடைந்த இன்பம்

வாரம் ஒன்று கழிந்தது. நகுலன், கஜேந்திரனின் வீட்டுக்கு வந்தான். அங்கே கஜேந்திரன் இருக்கவில்லை. கஜேந்திரனது தாயார் இலட்சுமி கவலையோடு நகுலனைக் கேட்டாள்; ''தம்பி, கஜேந்திரன் இரண்டு வார காலமாக மிகவும் துக்கத்துடன் இருக்கிறான். அவன் சரியாகச் சாப்பிட்டுப் பல நாட்களாகி விட்டன. சரியாய் மெலிந்து போனான். முந்தின கலகலப்பும் இல்லை. யாருடனும் கதைப்பதும் இல்லை. இவனுக்கு என்ன தம்பி நடந்தது. நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயக் குருக்களைக் கொண்டு திருநீறு மந்திரித்துப் பார்வை பார்ப்பித்தனான். அதோடை குருக்கள் நூலும் கட்டினவர். அப்படியிருந்தும் சுகமானதாகத் தெரியவில்லை. யாராவது சூனியம் செய்தார்களோ தெரியவில்லை. முந்தியென்டால் இரவிலை படிப்பான். விடியப்புறம் எழும்பியிருந்தும் படிப்பான். இப்ப படிக்கிறேல்லை. நீர் தான் அவனுடைய உயிர்த் தோழன். ஒருக்கால் கேட்டுப் பார் தம்பி. நான் பிள்ளையில்லாமல் அஞ்சுவரிசம் தவமிருந்து தான் அவனைப் பெற்றனான். அவருக்கும் சரியான கவலை. எத்தனையோ தரம் அவர் கேட்டும் அவன் பதில் சொல்லுறானில்லை. ''குளக்கரையிலை போயிருந்து யோசிக்கிறான். குளத்தடியிலை ஒரு வைரவர் இருக்கிறார். அவர் தான் இவனைப் பிடித்து ஆட்டுறாரோ தெரியவில்லை'' அழுதாள் இலட்சுமி.

''இப்ப எங்கை போயிட்டான்'' நகுலன் கேட்டான்.

''அவன் எங்கை போறது. குளப்பக்கம் தான் போயிருப்பான்'' என்றாள் இலட்சுமி, நகுலன் உச்சுவில் குளத்திற்குப் போனனான். குளக்கரையின் வடக்குப் புறமாக இருந்த மூங்கில் பற்றைக்கு அருகே இருந்து, குளத்தை வெறித்து நோக்கிய படி இருந்தான் கஜேந்திரன். குளத்தில் ஏராளமான செந்தாமரைப் பூக்கள் மலர்ந்திருந்தன.

''என்னடாப்பா இதிலை இருக்கிறாய்''

கஜேந்திரன் திரும்பி நகுலனைப் பார்த்தான். பல நாட்களாகச் சவரம் செய்யப்படாதிருந்த அவனது முகத்தில் கறுப்பு முடிகள் முளை விட்டு கரு

கருவென வளர்ந்திருந்தன. நகுலனைப் பார்த்துச் சிரித்தான் கஜேந்திரன். அவனது சிரிப்பில் முன்னைய சுருதி இருக்கவில்லை.

''பல நாட்களாக நான் வித்தியாவைக் காணவில்லை. ஊரவர் அலர் தூற்றுவதால் அவளின் வீட்டுப் பக்கமும் செல்ல முடியாதிருக்கிறது. அதனால் எனது மனம் தாங்க முடியாதளவு வேதனைப் படுகிறது. அதனால் தான் நான் இங்கு வந்தேன். குளத்தில் மலர்ந்திருக்கும் மலர்களைப் பார்க்கும் போது அவற்றில் வித்தியாவின் அழகான முகம் தெரிகிறது; செழுமை மிக்க அவளது கண்கள் தெரிகின்றன. மலர்ந்து சிரிக்கும் செந்தாமரையைப் பார். என்னைக் கண்டதும் நாணத்தால் சிவக்கும் வித்தியாவின் முகம் போலச் சிவந்திருக்கிறது. குளத்தின் தெற்குப் பக்கத்தைப் பார். கொக்கு ஒன்று துயரத்துடன் ஒற்றைக் காலில் நிற்கிறது. காதலியைக் காணாத சோகத்தால் போலும் தலை குனிந்து நிற்கிறது. கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்களாக அது நிற்கிறது. தனது காதலியின் வரவை என்னைப் போல எதிர் பார்க்கிறது'' என்றான் கஜேந்திரன்.

''இன்று காலை வித்தியாவின் அம்மா, அர்ச்சகாவின் வீட்டிற்குப் போனவாவாம். நேற்று இரவு நீ யாரும் அறியாமல் வித்தியாவின் வீட்டுக்குச் சென்று அவளுடன் இரவு முழுவதும் தங்கி விட்டு விடியு முன் சென்று விட்டதாகச் சொன்னவாவாம். அதை அர்ச்சகா நம்பவில்லை. எனினும் வித்தியாவின் தாய் நம்புறா. தனக்கு நம்பிக்கையான நாலைந்து பேர் சொன்னவையாம்'' என்று கூறி விட்டு கஜேந்திரனைப் பார்த்தான் நகுலன்.

''நான் போகவில்லை. போனால் இப்படிச் சோகமாக இருப்பனே. ஒரு வகையில் இப்படியாக அலாகள் கூறுவதும் நல்லது தான். அப்போது தான் எமது காதல் வலிமை பெறும். நான் அவளைச் சென்று காணாத நிலையிலும், ஊரார் நான் சென்று இரவு முழுவதும் தங்கியதாகக் கூறுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. வித்தியாவைக் கண்டு கலந்துரையாடி அவளைத் தழுவிய இன்பம் எனக்கேற்படுகிறது. இந்த இனிமையான செய்தியைச் சொன்ன உனக்கு நன்றி'' என்றான் கஜேந்திரன்.

**1143. உறா அதோ ஊரறிந்த கௌவை?. அதனைப்**
**பெறா அது பெற்றன்ன நீர்த்து.**

*ஊரார் அறிந்த அலர் எமக்குப் பொருந்தாதோ? அந்த அலர் பெற முடியாத தொன்றைப் பெற்றதைப் போன்ற தன்மை உடையது.*

## வளர்கிறது

'' சரி, வித்தியா கடிதம் தந்துள்ளாள். படித்து விட்டுப் பதிற் கடிதம் எழுதித்தா'' என்று நகுலன் கொண்டு வந்த கடிதத்தைக் கஜேந்திரனிடம் கொடுத்தான்.

''இந்தக் கடிதத்தைத் தொட்டதும் வித்தியாவைத் தொட்டது போன்ற இன்பம் எனது மனதுள் எழுகிறது. பிரித்துப் பார்த்தால் அழகான வித்தியாவின் முகம் தோன்றிச் சிரிக்கிறது'' என்றவாறு கடிதத்தைப் பிரித்தான் கஜேந்திரன்.

“அன்பானவரே; காதல் என்ற பேரின்பத்தை எனக்குத் தந்தவரே; உங்களைப் பிரிந்து வீட்டாரின் துன்புறுத்தலால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் எனக்கு, உங்கள் நினைவொன்று தான் வாழவேண்டுமென்ற ஆசையை மனதில் வளர்த்துக் கொண்டிருக்கிறது. காதலருக்குப் பிரிவு துன்பத்தைத்தரும் என்கிறார்கள். எனக்கு உங்களின் பிரிவு துன்பமான இன்பத்தைத் தருகிறது. தயிருக்குள் தேனை ஊற்றிக் குடித்தால் ஒரு புளிப்பான இனிய சுவை நாவைப் பற்றிக் கொள்வது போல, வீட்டார் தரும் துன்பங்கள் எனக்கு துயரமான இன்பத்தையே தருகின்றன.

இப்பொழுது அம்மா என்னைக் கண்டபடி திட்டுகிறா. தன்னால் வெளியே செல்ல முடியவில்லையாம். ஊரவர்கள் என்னை மிகவும் கேவலமாகக் கதைக்கிறார்களாம். உங்களுடன் நான் அடிக்கடி கடற்கரையில் சந்தித்துக் கதைக்கிறேனாம். பூங்காவில் சோடியாக இருந்து கதைத்து மகிழ்கிறேனாம். இப்படி எத்தனையோ விதமாக பலர் கதைக்கிறார்கள்.

மாலை வேளைகளில் இருட்டான நேரத்தில் என்னை நீங்கள் துவிச்சக்கர வண்டியில் ஏற்றி வந்து வீட்டில் விடுகிறீர்களாம். அம்மாவினுடைய மச்சாள் ஒருவர் நேற்று வந்து இவற்றையெல்லாம் கூறி, உனக்குப் பிள்ளை வளர்க்கத் தெரியாது என்று ஏசினாராம். அதைக் கேட்க எனக்கு மிகவும் மகிழ்வாக இருந்தது. ஒரு நாளாவது என்னை நீங்கள் துவிச்சகக்ர வண்டியில் ஏற்றிச் செல்லவில்லை. அம்மா என்னை ஏசிய போது நான் துவிச்சக்கர வண்டியில் முன்னால் இருந்து போவதைப் போல இன்பம் அடைந்தேன். அதன் பின் பல முறை பகலிலும் கூட உங்களுடன் துவிச்சக்கர வண்டியில் செல்வதாக கனவு கண்டேன். அந்தச் சுகத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது. கனவே இவ்வளவு இன்பமானது. என்றால் நிஜம் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். இன்னும் புரியவில்லை. தயவு செய்து என்னை ஒரு முறை துவிச்சக்கர வண்டியில் ஏற்றிச் செல்வீர்களா...?”

இரண்டு வாரங்களுக்கு முன்பு நீங்கள் கடற்கரையில் இருந்தீர்களாம். நான் உங்களது மடியில் படுத்திருந்தேனாம். எனது நீண்ட கூந்தலில் நீங்கள் மஞ்சள் ரோஜாப்பூவைச் சூடினீர்களாம். இப்படி பக்கத்து வீட்டுக்காரி அம்மாவுக்குச் சொன்னாவாம். எவ்வளவு இனிமையான இன்பம் தரும் செயல்கள் அவை. ஒரு நாளாவது சொர்க்கத்தைப் போல இன்பம் தரவல்ல உங்கள் மடியில் நான் உறங்கியிருப்பேனா?. அப்படியிருக்க இவர்கள் ஏன் இப்படிக் கதைக்கிறார்கள்? இதை விட மஞ்சள் ரோஜாவை நீங்கள் எனது தலையில் சூடியது மிகவும் இரசனைக்குரியது. நடக்காதவற்றை யெல்லாம் நடந்ததாக பிறர் கூறுவது எமது காதலை வளர்க்குமே தவிர அழிக்காது. தண்டனையும் எச்சரிக்கையும் தான் காதலின் வளர்ச்சிக்கான நீரும் பசளையும் ஆகும்.

நீங்கள் எதற்கும் பயப்படாதீர்கள். ஆண்மை மிகுந்த பலசாலியான நீங்கள் ஊரவரின் அலருக்கு அஞ்சி நடுங்குவீர்களோ என எண்ணுகிறேன். அலர் ஏற்படுவதாலேயே எமது காதல் வளர்கிறது. இல்லையென்றால் எங்கள் காதல் தன் இயல்பு அழிந்து கருகி விடும்.

கஜேந்திரன் சிரித்தான். அதைக் கண்ட நகுலன் கேட்பான்; “ஏன் சிரிக்கிறாய்?”

வித்தியா ஊர்ச்சனங்கள் தூற்றும் அலரைக் கண்டு பயப்படுவாள். என்று செயலை நினைத்தேன். அவள் அலரால் மகிழ்வடைகிறாளாம். என்னைப்

பயப்படாது தைரியமாக இருக்கட்டாம். எனக்குப் புத்திமதி சொல்லும் அளவில் அவள் வளர்ந்துவிட்டாள்'' கஜேந்திரன் சிரித்தான்.

**1144. கல்வையால் கவ்விது காமம்; அது இன்றேல்**
**தவ்வென்னும் தன்மை இழந்து.**

*எம் காதல் ஊரார் சொல்கின்ற அலரால் வளர்கிறது. அந்த அலர் இல்லையானால் எங்கள் காதல் தன் இயல்பு அழிந்து சுருங்கிப் போய்விடும்.*

## இனிமை

அன்பானவரே, நாம் காதலிக்கும் போது மிகவும் கவனமாக இருந்தோம். சந்தித்துக் கதைக்கும் வேளைகளிலும் மனம் பயத்தால் அல்லற்பட்டதே தவிர மகிழ்வுடன் கூடியிருந்ததில்லை. யாராவது கண்டு விட்டு வீட்டார்க்குச் சொல்லி விடுவார்களோ என்ற பயம் உள்ளத்தை வருத்திக் கொண்டிருக்கும் போது எவ்வாறு மகிழ்வுடன் உரையாட முடியும் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா இரண்டு வருடங்களுக்கு முன்பு நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கைலாய வாகனத் திருவிழாவன்று வடக்கு வீதியில் நான் உங்களைக் கண்டு சிரித்தேன். நீங்கள் எனக்கருகில் அம்மா நின்றமையால் என்னைக் காணாதது போலச் சென்றீர்கள். நான் மெதுவாகச் சனங்களை விலக்கிக் கொண்டு உங்களின் அருகே வந்தேன். சன நெரிசலில் உங்களது இடதுதோள் எனது வலது தோளில் இடித்து விட்டது. அருகில் நின்ற எனது இனத்தவர் ஒருவர் உங்களுடன் சண்டைக்கு வந்தார். மறுநாள் திருவிழாவின் போது உங்களுக்கு துணிவு வந்து விட்டது போலும். எனக்கருகே வந்து சனநெரிச்சலுள் எனது கையைப் பிடித்தீர்கள். நான் பயந்த போதும் மகிழ்வுடன் இருந்தேன்.

ஒரு நாள் பட்டணத்தில் உங்களைச் சந்தித்த போது நான்கு பக்கமும் பார்த்து அவதானமாகக் கதைத்தேன். அப்பொழுது வீதியால் வாகனத்தில் சென்ற உறவினர் ஒருவர் வீட்டுக்கு வந்து அதை அம்மாவுக்குச் சொல்லி விட்டார். அம்மா அதைப்பற்றிக் கேட்ட போது நான் பயந்து விட்டேன். அதற்கு மறு மொழி சொல்ல முடியாது தடுமாறினேன். சிறிய சிறிய விஷயங்களுக்குக் கூட பயப்பட்ட காலத்தை நினைக்க வேடிக்கையாக உள்ளது.

தற்பொழுது எனக்குப் பெரியதொரு பிரச்சினை வந்துள்ளது. இருந்த போதும் நான் பயப்படவில்லை. துணிவுடன் இருக்கிறேன். எனக்கும் மாமாவின் மகனுக்கும் திருமண ஆயத்தம் நடை பெற்றால், உடனேயே புறப்பட்டு வந்து விடுவேன். வீட்டுக்கு வரும் உறவினர்கள் எனது காதலைப் பற்றிக் கேட்பார்கள். சிலருக்கு மறைக்க வேண்டும். சிலருக்கு இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். எனது உறவினர் ஒருவர் இருக்கிறார். அவர் என்னிடம் வந்து உங்களைப் பற்றி விசாரிப்பார். அப்பொழுது நான் கற்பனை பண்ணிப் பல கதைகளைச் சொல்வேன். அதை அவர் தான் அச்செய்திகளை அறிந்தது போலப் பலரின் மத்தியில் கதைப்பார். அவர் எங்கள் தெருவில் உள்ள ஈஸ்வரநாதன் கடையில் சொன்னாராம்; ''வித்தியாவுக்குக் காதலிக்கிறவனையே செய்து கொடுப்பது தான் நல்லது. அவை இரண்டு பேரும் சோடியாகப் படம் திருவிழா என்று சென்றிருக்கிறார்கள். நல்லூத் திருவிழா முடிய அவன் தான் இவளைக் கூட்டி வந்து வீட்டிலை விட்டுட்டுப் போயிருக்கிறான். ஒரு கன்னிப்

பெண்ணும் ஓர் இளைஞனும் நடுச்சாமத்தில் தெருவழியே திரிந்தால் எப்படி இருக்கும். கற்பனையே அசிங்கமாக இருக்கிறது. நிஜம் எப்படி இருக்கும்'' என்றாராம். அதை யாரோ கேட்டு வந்து அம்மாவுக்கு கூறியிருக்கிறார்கள். அம்மா ஓரே ஒப்பாரி. ஊர் முழுவதும் என்னையும் உங்களையும் இணைத்துக் கேவலமாகக் கதைக்குது என்று அழுதா''.

ஊரவர்களைப் பற்றிக் கதைப்பவர்களைக் கண்டால் எனக்கு முன்பு கடுங்கோபம் வரும். இப்பொழுது பெரும் சந்தோசமடைகிறேன். குடிகாரன் ஒருவன் கள்ளைக் குடித்து மயங்கமயங்க மேலும் கள்ளுண்ணுதல் இன்பத்தைக் கொடுப்பது போலக் காதல், அலரால் வெளிப்பட வெளிப்பட இன்பம் உடையதாக இருக்கிறது. காதலனைக் கேவலப்படுத்தும் அலர்கள் தான் காதலரைச் சேர்த்தும் வைக்கிறது. என்பதை அலர் கூறுவோர் இதுவரை உணரவில்லை. அவர்கள் தாம் அலர்கள் கூறுவதால் தான் காதல் வளர்ந்து வெற்றியளிக்கிறது என்பதை உணர்ந்து அலர் கூறாதிருந்தால் காதல் தோற்று விடும். நான் எனது மாமாவின் மகனைத் திருமணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். எனவே அலர் வாழ்க. ஊரில் எழுந்துள்ள மிக மோசமான அவர்களால் தான் நான் உங்களைக் காணவேண்டு மென்ற நினைவு கூட எனக்கு வருவதில்லை. சந்திப்போம். இப்படிக்கு, உங்கள் வித்தியா.

**1145. களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்**
**வெளிப்படுந் தோறும் இனிது.**

*கண்ணுண்பவன் கள்ளுண்டு மயங்க மயங்க கள்ளில் விருப்பம் அதிகரிப்பது போலக் காதல் அலர் வெளிப்பட இனியதாகும்.*

## ஒரு நாள்

அர்ச்சகா வித்தியாவிடம் வந்த போது அவள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள்.; ''நகுலன், கஜேந்திரனைச் சந்தித்து கதைத்து நீ தந்த கடிதத்தைக் கொடுத்தவராம். நீ மகிழ்வுடன் இருக்கிறாய். ஆனால் கஜேந்திரன் தாடி வளர்த்துச் சோகமாக இருக்கிறாராம். நீ எப்படி மகிழ்வுடன் இருக்கிறாய். உனக்குக் கஜேந்திரனைச் சந்திக்காதது துக்கமில்லையா'' என்று கேட்டாள் அர்ச்சகா.

''என்னைப் பொறுத்தவரை உயிர் என்று சொல்வது மனம் தான். மனம் நாம் தூங்கும் பொழுது கூட விழித்திருக்கிறது. எந்நேரமும் தனக்கு விருப்பமானவற்றை அசை போடுகிறது. இப்படி அசை போடுவதால் துன்பங்கள் வரும் போது நான் எனது காதலரைச் சந்தித்த இனிமையான நிகழ்வுகளை நினைத்து இன்பமடைகிறேன். துன்பப்படுவதால் என்ன இலாபம் கிடைக்கப் போகிறது? மனம் வருந்தி உடல் மெலிவதை விட வேறு என்ன கிடைக்கப் போகிறது. துன்பப்படுவதன் மூலம் வீட்டாருக்கு எனது காதலைப் பற்றித் தெரியப்படுத்தி அவர்களை கண்காணிக்க வைப்பதன் மூலம் நான் வீட்டை விட்டு வெளியேற முடியாத நிலை தான் ஏற்படும். நான் மகழ்வுடன் இருப்பதால் ஊரார் என்னைப்பற்றிக் கதைப்பதை அம்மா கட்டுக் கதை என்றே நினைக்கிறா. அதனால் எனது காதலைப் பற்றி ஊரவர் ஏதாவது சொன்னால் சண்டைக்குப் போகிறா. அதுவும் நன்மையைத் தான் எனக்குத் தருகிறது'' என்றாள் வித்தியா.

‘‘அப்ப ஏன் கஜேந்திரன் துக்கப்படுகிறார்’’ அர்ச்சகா கேட்டாள்.

‘‘இனித் துன்பப்பட மாட்டார். நான் அலரைப் பற்றி அவருக்குத் தெளிவாக எழுதியுள்ளேன். ‘‘ என்றாள் வித்தியா.

‘‘கஜேந்திரனைப் பார்க்கப் பாவமாக இருக்கு. ஒரு முறை சென்று சந்தியடி. எனக்கு நகுலனைப் பாராமல் ஒரு நிமிடம் கூட இருக்க முடிவதில்லை. மூன்று வாரகாலமாக நீ கஜேந்திரனைச் சந்திக்காமல் எப்படி இருக்கிறாய்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘சந்தித்துக் கதைக்காமல் இருக்க முடியாது தான். இப்போது வீட்டில் உள்ள சூழ்நிலையில் எப்படி வெளியே போவது. எப்படிச் சந்திப்பது. எனக்கு அவரைச் சந்திக்க விருப்பமில்லையென்றா நினைக்கிறாய்.? நான் அவருடன் ஒரு நாள் துவிச்சக்கர வண்டியில் ஏறி வந்தேன். அதைக் கண்ட ஊரவர் ஒருவர் தான் எம்மைப் பற்றிய கதைகளைப் பரப்பினார். வீட்டில் இருந்து ஐந்து மைல்களுக்கப்பால் உள்ள ஓர் இடத்தில் தான் நான் அவருடன் துவிச்சக்கர வண்டியில் சென்றேன். அந்த இடத்திற்கு எமது ஊரவர் எவரும் வரமாட்டார்கள். என்ற தைரியத்தில் தான் நான் அவரது வாகனத்தில் ஏறினேன். ஆனால் நான் வீட்டுக்கு வரு முன்பு நிலவைப் பாம்பு விழுங்கிய செய்தி போல ஊரெங்கும் அச்செய்தி பரவி விட்டது’’ என்றாள் வித்தியா.

‘‘பல நாள் கள்வன் ஒரு நாள் அகப்படுவான் என்பார்கள். பல நாட்கள் கஜேந்திரனின் துவிச்சக்கர வண்டியில் ஏறி உல்லாசப் பயணம் செனறு வந்தாய். அகப்பட்டு விட்டாய். துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்யும் போது எப்படி இருந்தது. எனக்கும் நகுலனோடு ஒன்றாகத் துவிச்சக்கர வண்டியில் செல்ல வேண்டும். என்று ஆசையாக இருக்கடி’’ என்றாள் அர்ச்சகா.

‘‘அந்த சுகத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாதடீ. அந்த நேரம் நான் சொர்க்கத்தில் இருந்ததால் பூவுலக நினைவே இல்லாமல் போய் விட்டது’’ கண்களை மூடினாள் வித்தியா. அந்த நெடுஞ்சாலையில் கஜேந்திரனுடன் துவிச்சக்கர வண்டியில் செல்வது போல் இருந்தது.

‘‘என்னடி தன்பாட்டிலை சிரிக்கிறாய். வாய்க்குள் முணுமுணுக்கிறாய். திடீரென்று தட்டிப் போட்டுதோ’’ என்று கூறியும் வித்தியா கண்களைத் திறக்காது சிரித்தாள். ‘‘என்னடி; திடீரென்று உனக்கு என்ன நேர்ந்தது. ‘‘என்று வித்தியாவின் தோள்களை பற்றி உலுக்கினாள் அர்ச்சகா.

‘‘போடீ, நான் கஜேந்திரனுடன் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தேன். எனது கைகள் அவரது கைகளை உரச அவரின் நெஞ்சில் எனது முதுகு சாய.. என்ன சுகம்.. அதை நீ கெடுத்து விட்டாய்’’ ஏசினாள் வித்தியா.

1146. **கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும்**
**திங்களைப் பாம்பு கொண்டற்று.**

*நான் காதலரைக் கண்டது ஒரே ஒரு நாள் தான். அதனால் உண்டாகிய அலரோ திங்களைப் பாம்பு விழுங்கிய செய்தி போல எங்கும் பரவி விட்டது.*

# எருவும் நீரும்

‘‘நீங்கள் கதைக்கிறத்தைக் கேட்டுக் கொண்டு தான் நான் நின்றனான். நேற்றுக் கொழும்பாலை வந்த நீ அந்தப் பஞ்சப்பட்டவனைப் பார்த்துப் பேசி விட்டு வந்து இவளுக்குச் சொல்லுறியா…?’’ வித்தியாவின் தாய் கண்மணி கோபத்துடன் அர்ச்சகாவை ஏசினாள்.

‘‘இல்லை மாமி எனக்கு அவரைத் தெரியாது. வித்தியா தான் அவரின் பெயரைச் சொல்லி, அவரது விலாசத்தையும் சொல்லி என்னைப் போய் அவரைச் சந்தித்து தனது நிலையைப் பற்றிச் சொல்லச் சொன்னவர். தான் கெட்டழிந்ததோடை என்னையும் கெடப் பண்ணுகிறாள். நாங்கள் ஒழுங்காக வாழுறனாங்கள். எனக்கு இவ்வூரில் சிநேகிதிகள் இல்லை என்பதாலேயே இவளுடன் கதைத்தேன். அம்மாவும் வித்தியாவோடு சேராதை அவள் உன்னையும் கெடுத்துப் போடுவள். அவள் அந்தப் பெடியனோடை துவிச்சக்கர வண்டியில் ஏறித் திரிகிறாள். அதோடை கடற்கரை, பூங்கா என்றும் திரிகிறாள். அவளோடு சேர்ந்தால் நாளைக்கு உனக்கும் கெட்ட பெயர் வரும். அதோடை கண்மணியக்காவும் உன்னைத் தான் குறை சொல்லுவா என்றவா. நான் வேறுயாரும் இல்லாததாலை வித்தியாவோடை பழகினனான் அவன்ரை போக்கை நான் உங்களுக்கு வந்து சொல்லுறன். இனிமேல் நீங்கள் வித்தியாவை வெளீலை விடாதைங்கோ’’ என்றாள் அர்ச்சகா. அவளது கண்களால் நீர் வழிந்தது.

அர்ச்சகாவின் வார்த்தைகளையும், அவளது கோவத்தையும் கண்டு ஏமாந்த கண்மணி துக்கத்தோடு சொன்னாள்; ‘‘ஊரவை யெல்லாம் தரக் குறைவாகப் பேசியதாலை நான் அவசரப்பட்டு உன்னைச் சந்தேகித்து விட்டன். அதை மனதில் வைத்திராதை பிள்ளை. இவள் பிறந்தன்றைக்கே அண்ணை தன்னுடைய மகனுக்கு இவளைத் திருமணம் செய்வதாகத் தீர்மானித்து விட்டார். இரண்டு குடும்பமும் இருபத்தைந்து வருடங்களாக நினைத்திருக்கிற விஷயத்திலை மண்ணை அள்ளிப் போட்டுட்டாளே. அண்ணைக்கு கொழும்பிலை இரண்டு மூன்று வீடுகள் இருக்கு. அதை விட கடைத் தொகுதி ஒன்று இருக்கு. அதிலிருந்து வாடகையாக வருடா வருடம் பல இலட்ச ரூபா பெறுகிறார். அதோடு அங்கஜன் மருத்துவன். கைநிறையச் சம்பாதிக்கிறான். மகாராணி மாதிரி வாழ வேண்டிய இவள், ஒரு பரதேசியை விரும்புகிறாள். தகப்பன் தோட்டக்காரன். அவற்றை வருமானம் அன்றன்று சீவிக்கவே போதாது. அதோடு அவனுக்கும் ஒரு தொழிலும் இல்லை. அப்படியிருக்க இவள் அவனைக் கட்டி என்ன செய்யப் போகிறாள்’’ ஆத்திரத்துடன் பேசிய கண்மணி விக்கி விக்கி அழுதாள்.

அவள் அழுவதைப் பார்க்க அர்ச்சகாவுக்குத் துக்கமாக இருந்தது. ‘‘ வித்தியா தவறு செய்து விட்டாளோ?’’ என்று எண்ணினாள்.

‘‘இதைக் கேள்விப்பட்ட பிறகு அண்ணை நிம்மதி இழந்து தவிக்கிறார். இருந்தும் இவள் விரும்பினால் உடனே அவளைக் கூட்டிச் செல்லவும் விரும்புகிறார். ஆனால் இவள் விரும்புகிறாளில்லை. என்னால் துன்பத்தைத்

தாங்க முடியாதிருக்கிறது. வீட்டில் நிம்மதியில்லையென்று வெளியே சென்றால் சனம் கூறும் கதைகளைக் கேட்க வாழ்வே வெறுக்குது.'' அழுதாள் கண்மணி

''அழாதைங்கோ மாமி. சின்னவயதில் காதலிக்கிறது இயல்பு தான். அதைப் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும். அவசரப்பட்டு பலாத்காரத்தைப் பிரயோகித்தால் அவளுக்கு நெஞ்சுறுதி அதிகரித்து விடும். நான் அன்பாகச் சொல்கிறேன்'' என்றாள் அர்ச்சகா. '' அவளின் மனதை மாற்றினாயானால் நீ தான் என்னுடைய கடவுள்.'' என்று கூறி விட்டுச் சென்றாள் கண்மணி.

''நான் பயந்து போனன். நீ சமாளித்து விட்டாய். நீயும் வராமல் விட்டால் நான் தனிமையில் இருந்து செத்துப் போவன்'' என்றாள் வித்தியா.

''அதற்காகத் தானே நான் திடீரென்று மாறினனான். காதல் என்கின்ற பயிர் ஊரார் தூற்றுகின்ற அலரை எருவாகவும், தாயின் கடுமையான சொற்களை நீராகவும் கொண்டு செழித்து வளரும் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தாள் அர்ச்சகா.

1147. **ஊரவர் கௌவை எருஆக அன்னைசொல்**
**நீரா நீளும்இந் நோய்.**

*இந்தக் காம நோயானது ஊரார் தூற்றுகின்ற அலரை எருவாகவும் அன்னை கடிந்து உரைக்கும் கடுஞ் சொற்களை நீராகவும் கொண்டு செழித்து வளர்கிறது.*

# தீ அழித்தல்

'' அம்மா சொல்வது போல் இன்று எனது காதல் விஷயம் தான் ஊர் முழுதும் பேசப்படுகிறது. நேற்று மாமா கடைக்குச் சென்றிருக்கிறார். மாமாவைக் கடையில் இருந்த எவருக்கும் தெரியாது. ஒருவன் சொன்னானாம், அவள் திமிர் முற்றித் திரிகிறாள். தகப்பனில்லாவிட்டாலும் நல்ல ஓய்வூதியம் கிடைக்கிறது. அதோடு காணி பூமிகளிலிருந்து வரும் வருமானம் வருடச் சாப்பாட்டுக்குப் போதும். தாயின் சகோதரன் ஒருவர் கொழும்பில் இருந்து இலட்சக் கணக்கிலை அனுப்புறார். தனது மகனைத் தான் அவள் திருமணம் செய்யப் போகிறாள் அதனால் அவள் எதற்கும் கஷ்டப்படக் கூடாது என்று அந்த மனிசன் நினைக்குது. அதனால் பணத்தைத் தாராளமாக அனுப்புறார்'' என்று ஒருவன் கூறும் போது மற்றவன் சொன்னானாம்; ''மாமன்காரன் கொழும்பில் பெரிய புள்ளி. கோடிக்கணக்கிலை சொத்திருக்கு தனது மருமகள் ஊரில் கஷ்டப்படாமல் இருந்து சாப்பிடட்டும் என்று காசு அனுப்ப, இவள் திண்டு கொழுத்திட்டாள். அந்தக் கொழுப்படங்கத்தான் யாரோ ஒருவனுடன் இராப்பகலாக் கூடித்திரிகிறாள்''. என்று கூற எல்லோரும் பலமாகச் சிரித்தனராம்.

''அதைவிடக் கடைக்காரன் சொன்னதை நினைக்க வேதனையாக உள்ளது. அவன் சொன்னானாம்; ''வீட்டில் இரண்டு பேர் தான் இருக்கினை. பத்துப் பேருக்குச் சாப்பாடு போடுற காசு செலவு செய்யினை. விதம் விதமான பால்மாக்களை இந்த ஊரிலை யார் குடிக்கினை. அதை விட இவை வாங்கிற பல சாமான்களின்ரை பெயரே இந்த ஊர்ச்னத்துக்குத் தெரியாது. தாய் மனிசி ஒரு துண்டிலை தேவையான பொருட்களை எழுதி வந்து தரும். நான் பட்டணத்துக்குப் போய் வாங்கி வந்து கொடுப்பன். பல பொருட்கள்

இவைக்கென்று தான் வாங்குறனான்'' என்றானாம். இனிமேல் அவனுடைய கடையில் பொருட்கள் வாங்க வேண்டாமென்று மாமா சொன்னார்''.

அர்ச்சகா எதுவும் பேசவில்லை. அதனால் வித்தியா சொன்னாள்; ''அம்மா வருடா வருடம் கந்தசஷ்டிக்கு விரதம் அனுஸ்டிக்கிறவா. சூரன் போரிலன்று அவா கோயிலுக்குப் போனவா. அங்குள்ள பெண்கள் பூசை நடக்கும் போது கூட எனது காதலைப் பற்றித் தானாம் கதைத்தவை. வீடுகளிலை பொது இடங்களிலை, வீதிகளிலை கதைக்கிறதைக் குறை சொல்ல முடியாது. புண்ணியம் தேடுவதற்காக விரதம் பிடிப்பவர்கள் கோயிலுக்குச் சென்று வணங்குவதை விட்டு விட்டுப் பேசக்கூடாத கதைகளைப் பேசிப் பாவத்தையல்லவா தேடிக் கொள்கிறார்கள். சரசக்கா சொன்னாவாம்; ''அவள் இப்ப மூன்று மாதம் கர்ப்பம் என்று'' அழுதாள் வித்தியா.

ஊரார் அலர் கூறி உனது காதலை அழித்து விடலாமென்று நினைப்பது நெய்யை ஊற்றி தீயை அணைப்பதைப் போன்றது. நீ கர்ப்பமாக இருக்கிறாய் என்று ஊரார் கதைத்தால் உனது மாமா அதை நம்புவார். அதன் பின் உன்னைத் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்ப மாட்டார். அது நல்லது தானே'' என்றாள் அர்ச்சகா.

வித்தியா அழுதாள்; '' எப்படி இருந்தாலும் ஒரு பெண் திருமணத்திற்கு முன்பு காப்பமாவது கூடாது'' வித்தியா கதைத்துக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா குறுக்கிட்டாள்.; ''இப்போ நீ கர்ப்பமாக இருக்கிறாயா?'' வித்தியா அதிர்ந்து போனாள். உனக்கென்ன விசரே'' என்று அழுதாள்.

ஊரார் ஒன்றைப் பத்தாகக் கதைத்துப் பழகி விட்டார்கள். காதலிப்பதைக் கேவலமாகக் கதைக்கும் பலர், தாம் காதலித்துத் தான் திருமணம் செய்தோம் என்பதை ஏனோ மறந்து விடுகிறார்கள். காதலிப்பதைப் பற்றி மிகவும் மோசமாகக் கதைக்கும் ஊரவர், பின் திருமணமான பின் அவற்றை மறந்து மதிப்பார்கள். இது உலக இயற்கை. இதுக்காகக் கவலைப்படுவதை விட மகிழ்ச்சியடைவதே, நல்லது'' என்றாள் அர்ச்சகா

**1148. நெய்யால் எரிநுதுப்போம் என்றற்றால் கௌவையால்**
**காமம் நுதுப்போம் எனல்.**

*அலர் கூறுவதால் காமத்தை அடக்கலாமென முயல்தல், நெய்யால் நெருப்பை அனைப்போம் என்று முயல்வதைப் போன்றது.*

## அஞ்சல் ஓம்பு

'' அவர் அற்புதமானவர். உறுதியான மனம் கொண்டவர். அவர் சொல்வார்; ஒருவன் ஒரு செயலை எடுத்து அச் செயலை வாழ்க்கை மயமாக்குதல் வேண்டும். அதைப்பற்றியே நினைக்க வேண்டும். அதையே இலட்சியமாகக் கொள்ளல் வேண்டும். அது வெற்றி பெற உழைக்க வேண்டும். இயலாதது என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு செயலை ஒதுக்கி வைத்தால் உலகில் இயலாத செயல்களின் தொகை அதிகரித்து விடும். எனவே இயலாதது என்று ஒன்றும்

இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனது வாழ்க்கையின் இலட்ச்சியம் உம்மை அடைதல் தான். ஏனையவையெல்லாம் எமது அன்றாடத் தொழில். படிப்பது, உணவு உண்பது, மற்றவர்களுக்கு உதவி செய்வது இவையெல்லாம் என்னைப் பொறுத்தவரை இலட்சியங்களாகாது. இலட்சியமென்பது எதிர்கால நல்வாழ்விற்கான செயலில் ஈடுபடுவது என்னைப் பொறுத்தவரை கல்வி எனக்கு மிகவும் இலகுவாக இருக்கிறது. ஒன்றை ஒரு முறை கேட்டால் அதை மறக்க என்னால் முடியாது. கணித பாடத்தில் உள்ள கடுமையான பகுதிகளை மீட்டுப் பார்த்தால் போதும். வித்தியா நீ, நான் அடைய முடியாத பெரும் பொக்கிஷம். நான்கு வருடங்களாக உமக்குப் பின்னால் பேயாக நான் அலைந்த போதும் எனது கல்வியில் எந்தக் குறைபாடும் ஏற்படவில்லை. கணித பாடத்தில் நூறு புள்ளிகளைப் பெற்றேன். எனவே உம்மை அடைவது தான் எனது இலட்சியம்'' என்றார். அதன் பின்பு தான் கல்லாக இருந்த எனது மனம் கசிய ஆரம்பித்தது. ஆரம்பத்தில் நான் செய்வது தவறு என்று நினைத்தேன். ஆனால் எனது தாயாரும், மாமனாரும் எமக்குத் திருமணம் செய்து வைப்பதாகத் தீர்மானித்தார்களே தவிர நான் தீர்மானிக்க வில்லை. சொல்லப்போனால் நான் இன்று வரை அங்கஜனுடன் கதைத்ததே இல்லை. தொலைபேசியில் கூட அவர் என்னுடன் கதைத்ததில்லை. அதனால் தான் நான் செய்தது தவறு என்று எனக்குத் தோன்றவில்லை. அங்கஜன் தொலைபேசியில் அடிக்கடி கதைத்திருநந்தால் அல்லது கடிதங்கள் எழுதியிருந்தால் எனது மனம் கலவரப்பட்டிராது'' அழுதாள் வித்தியா.

''இனி இதைப்பற்றி ஏன் யோசிக்கிறாய். நம்பிக்கை உடையவர்களின் காதலே வெற்றியடைந்திருக்கிறது. இது உலக சரித்திரமாகும். காதலனிடம் உள்ள நம்பிக்கை தான் காதலியை உறுதியுடன் வாழ வழி சமைக்கிறது. உனது காதல் வெற்றியடையும். தோல்வியடையும் என்று நீ எதிர்பார்த்தால்தான் தோல்வி ஏற்படும். காதல் வரம்பில்லாத வலிமை பெற்றது. வலிமைக்கு காலமும் இடமும் ஒரு பொருட்டல்ல. தோல்வியைப்பற்றி நீ ஓயாது சிந்திப்பாயேயானால் உனக்குத் தோல்வியே கிடைக்கும். மிகவும் பலம் பொருந்திய காதலர் உனக்குக் கிடைத்துள்ளார். உன்னை ஒரு நாளும் பிரிய மாட்டேன் என்று கூறியவர் தற்காலிகமாக உன்னை விட்டுப் பிரித்திருக்கிறார். அவர் விரைவாக உன்னை வந்து மகிழ்விப்பார். ஊரவர் கூறும் அலருக்கும், உனது தாயார் கூறும் கடுஞ் சொற்களுக்கும் அஞ்சினால் வாழ முடியுமா...?'' என்று கேட்டாள் அர்ச்சகா.

''அவர் உறுதியாக இருக்கிறார். என்னை அடைவதே தனது இலட்சியம் என்றும் இருக்கிறார். இப்போது அவரைப் பிரிந்திருப்பதால் கவலை கொள்கின்றேனே தவிர பயப்படவில்லை'' என்றாள் வித்தியா.

காதலிப்பவர்கள் ஊரவரின் அலரையும், பெற்றோரின் கடின வார்த்தைகளையும் பொருட்படுத்தக் கூடாது. ஆயிரம் முறை தோற்றாலும் அதற்கு மேலும் முயற்ச்சிப்பவர் தான் வெற்றியடைவான்'' என்றாள் அர்ச்சகா.

''நான் கர்ப்பமாக இருப்பதாக ஊரவர் சொல்வதால் தான் நான் கவலைப்படுகிறேன் என்று நினைக்கிறாயா? அது அலராக இருந்தாலும் அதற்கு நான் வெட்கப் படவில்லை அதற்காக நான் நாணி இருக்க முடியுமா? நாளைக்கு அம்மாவுடன் கோயிலுக்குச் செல்வதாக இருக்கிறேன்'' என்றாள் வித்தியா.

1149. **அலர்நாண ஒல்வதோ அஞ்சல் ஓம்பு என்றார்**
**பலர் நாண நீந்தக் கடை.**

*உன்னை ஒரு போதும் பிரியேன் அஞ்சாதிரு என்று அன்று உறுதி கூறியவர் இன்று பலரும் நாணும்படியாக என்னை விட்டுப் பிரிந்தால், அலருக்கு நான் நாணி இருக்க முடியுமா?.*

## உறுதி

அர்ச்சகாவைத்தேடி வித்தியாவின் வீட்டுக்கு வந்தாள் அர்ச்சகாவின் தாய் கமலேஸ்வரி. அர்ச்சகா வித்தியாவின் அறையுள் இருந்ததை அறிந்து வித்தியாவின் அறைக்குள் வந்தாள்; ''அர்ச்சகா உன்னை அப்பா வரட்டாம்'' என்றாள். உடனே அர்ச்சகா எழுந்து சென்றாள்.

''வித்தியா, நீ எனக்கு மிகவும் நெருங்கிய இனத்தவள். உனக்கு வரும் அவமானம் எமது குடும்பத்தையும் பாதிக்கும் என்பதை உணரத் தவறி விட்டாய். ஊரில் உள்ள பலர் அர்ச்சகாவை உன்னுடன் சேரவிட வேண்டாம். என்று எனக்குக் கூறுகின்றனர். நானும் பல தடவைகள் அவளுக்குச் சொல்லி விட்டேன். இருந்தாலும் அவள் கேட்கிறாள் இல்லை. நீ கர்ப்பமாக இருக்கிறதாய் என்று கோயிலுக்கு வந்த பெண்கள் தமக்குள் கதைத்தனர். திருமணமாகு முன் கர்ப்பமான நீ அர்ச்சகாவையும் கெடுத்து விடுவாய். உன்னுடன் பழகுவதால் நாளைக்கு அவளுக்குத் திருமணம் பேசும் போது பிரச்சினைகள் வரலாம்'' என்றாள் கமலேஸ்வரி.

''ஒரு பெண் தனக்கு விரும்பியவனைக் காதலிக்கக் கூடாதா.....? இந்த ஊரில் வாழும் பெரும்பான்மையானவர்கள் காதலித்துத் தானே கலியாணம் செய்தனர். அலர்கள் தான் இப்போது என்னுடைய காதலைத் தூற்றுகிறார்கள். காதலிக்கும் ஒரு பெண் உடனேயே கர்ப்பமாகி விடுவாள். என்று ஏன் எண்ணுகிறார்கள். அம்மாவுக்கு நான் கர்ப்பமாக இருக்கிறேன் என்று கூறிய சரசு காதலித்துத்தானே கலியாணம் செய்தவள். அதுவும் கர்ப்பமான பிறகு தான் கலியாணம் செய்ததாக நான் அறிந்தனான். ஒவ்வொருவரும் தன்னைப் போலத்தான் பிறரையும் நினைக்கிறார்கள். சரசுவின்ரை மகள் எப்படிக் கலியாணம் செய்தவள். காதலித்தவனை வீட்டாருக்குப் பிடிக்காததால் அவள் அவனோடு பெற்றோருக்குத் தெரியாமல் போளவள். இப்ப ஒற்றுமை யாகிவிட்டனர். இது எல்லாம் எனக்குத் தெரியும்'' என்றாள் வித்தியா.

கமலேஸ்வரி சில கணங்கள் எதுவும் பேசவில்லை. பின் சொன்னாள்; '' காதலிப்பது தப்பென்று நான் சொல்லவில்லை. நீ ஏற்கனவே ஒருவனுக்கு நிச்சயிக்கப்பட்டனீ. அப்படியிருக்க இன்னொருவனை விரும்புவது சரியா.....? தர்மமானதா..? படிச்ச நீ சொல்லு''.

''பெற்றார் தான் அதைத் தீர்மானித்தவை. இன்று வரை எனது மைத்துனர் என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை. அவரை நான் கண்டு பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது'' என்றாள் வித்தியா.

''நீ காதலிப்பவன் பரம ஏழையாம் எப்படி உன்னை வைத்துக் காப்பாற்றப் போகிறான் என்று ஊரவர்கள் பேசிக் கொள்கின்றனர். நீ இன்னொருவனுக்கு

நிச்சயிக்கப்பட்டவள் என்பதால் தான் ஊரவர்கள் தரக் குறைவாகப் பேசுகின்றனர்'' என்றாள் கமலேஸ்வரி. அப்போது அவர்களின் அயல் வீட்டுக்காரியான கமலாம்பிகை வந்தாள்.

வித்தியா அவளை மதிப்பவள். ஆரம்பக் கல்வியைக் கற்கும் காலத்தில் அவள் கமலாம்பிகையிடம் சென்று தனக்கு விளங்காதவற்றைக் கேட்பாள். அத்துடன் கமலாம்பிகைக்குப் பிள்ளைகள் இல்லாததால் வித்தியாவை அவள் தனது பிள்ளையாகவே கருதி அன்பு செலுத்தி வந்தாள். கமலாம்பிகையைக் கண்டதும் எழுந்தாள் வித்தியா.

''வித்தி, நான் உன்னை எனது மகளாகவே கருதியுள்ளேன். அப்படிப்பட்ட உன்னைப் பற்றி ஊரவர் தூற்றுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை'' விம்மினாள்.

''அக்கா, நான் ஒருவரை விரும்புவது உண்மை தான் அவர் நல்லவர்; படித்தவர்; என்னை வைத்துக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நீங்களும் காதலித்துத் தானே திருமணம் செய்தீர்கள். உங்களுக்குக் காதலைப் பற்றித் தெரியும். அதன் பெருமையைப் பற்றியும் தெரியும். நான் ஒருவரை விரும்புவதை அடித்தனமாகக் கொண்டு இவ்வூரவர் பெரிதாகத் தூற்றுகின்றனர். ஆனால் உங்களுக்கு உண்மையான நிலை புரியும். நான் ஊரவர்கள் கூறுவதைப் போல கர்பமாக இருக்கவில்லை. என்னை நம்புங்கள். எனது காதலர் என்னை உறுதியாக விரும்புகிறார். அதனால் அவர் நான் விரும்புகிற படி நடப்பார். இதில் எனக்குச் சந்தேகமில்லை.'' விம்மினாள் வித்தியா. கமலாம்பிகை எதுவும் பேசத் தோன்றாது விம்மி விம்மி அழும் வித்தியாவின் தலையைக் கோதினாள்.

1150. **தாம் வேண்டின் நல்குவர் காதலர்; யாம் வேண்டும்**
**கௌவை எடுக்கும் இவ்வூர்.**

*அவருடன் செல்வதற்கு விரும்புகின்ற என்னை ஊரவர் தூற்றுகின்றனர். அதனால் எனது காதலர் நான் விரும்பியவாறு நடந்து கொள்வார்.*

# சொல்

வித்தியாவுக்குத் தாயார் கூறும் கொடிய வார்த்தைகளைக் கேட்டு கஜேந்திரன் துடி துடித்துப் போனான். ''காதல் என்பது பெற்றோரின் எதிர்ப்பால் தான் வளர்கிறது. மேலும் மேலும் அவர்கள் கொடுக்கும் தண்டனைகள் தான் காதலை மேலும் சிறந்ததாக்கி மனவலிமையை உண்டாக்குகிறது. காதலால் துன்பப் படுபவரின் மூளைக்கு அளவுக்கதிகமான ஆற்றலும் அதீதமான மன வலிமையும் உண்டு. இடையறாத துன்பங்களின் மூலம் காதலர்கள் தாம் நினைத்ததைச் சாதிக்கும் சக்தியைப் பெறுகிறார்கள். கோழைகளும் முட்டாள்களும் தான் எதிர்ப்புக்களுக்குப் பயந்து பின் வாங்குகிறார்கள். மனவலிமை உள்ளவன் எழுந்து நின்று தன்னுடைய தலைவிதியைத் தானே அமைத்துக் கொள்வேன் என முழக்கமிடுவான். கோழை தான் விதிக்கும் சமூக அமைப்பிற்கும் பயப்படுவான். மனவலிமை உள்ளவன் தன் காதலியை இரும்புக் கோட்டைக்குள் அடைத்து வைத்தாலும் அதைப் பிரித்து அவளை அழைத்து வந்து விடுவான்'' என்றான் நகுலன்.

‘‘அவள் படும் வேதனையை நீ சொல்லக் கேட்ட நேரம் முதல் எனது மனம் தாங்க முடியாதளவு துன்பத்தால் வேதனைப்படுகிறது. பாவம் அவள் நான் அவள் மீது காதல் கொண்டு அவளுக்குப் பின்னால் அலைந்த போது என்னை அவள் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. நான் தீவிரமடைந்து அவளின் பின்னால் சென்ற போது அவள் தனது காலில் இருந்த செருப்பைக் கழற்றிக் காட்டினாள்.அதன் பின்பும் அவளின் மேல் இருந்த மோகம் எனக்குச் சற்றும் குறையவில்லை. ஒரு நாள் அவள் என்னை மறித்தாள். சில கணங்கள் அவளால் பேசமுடியவில்லை. பின் தடுமாறியபடி சொன்னாள்; ‘‘ நீங்கள் படித்தவர் நியாயத்தை எடுத்துச் சொன்னால் உங்களுக்குப் புரியுமென்பதால் சொல்கிறேன். நான் இன்னொருவருக்கு நிச்சயிக்கப்பட்டவள். தயவு செய்து இனிமேல் எனக்குப் பின்னால் வராதீர்கள். தற்செயலாக நீங்கள் என் பின்னால் வருவதை யாராவது அவருக்கு அறிவித்தால் எனது வாழ்வு நாசமாகி விடும்’’ என்று அழுதாள். அதை நான் நம்பவில்லை. அதனால் அவளைப் பின் தொடர்ந்தேன். அதனால் மனமிரங்கிய வித்தியா மெல்ல மெல்ல என்னுடன் பழக ஆரம்பித்தாள். அதன் பின் நடந்த அனைத்தும் உனக்குத் தெரியும் தானே. எந்த ஒரு செயலிலும் வெற்றி பெறுவதற்கு மனஉறுதி வேண்டும். நிறைந்த மனவுறுதி உள்ளவனால் செய்ய முடியாதது எதுவும் இல்லை. தைரியமாக வித்தியாவை இருக்கச் சொல்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘வித்தியாவைத் தாயாரும் மாமனாரும் கொழும்புக்கு வற்புறுத்தி அழைத்துச் சென்றால் என்ன செய்வது. நீ அவளை எந் நேரமும் அழைத்து வருவதற்கு ஆயத்தமாக இரு. நீ அழைத்து வரா விட்டால் அவள் தற்கொலை செய்து விடுவாள்’’ என்றான் நகுலன்.

‘‘கோழைகள் தான் தற்கொலை செய்வார்கள். வித்தியா மனவலிமை உள்ளவள். அவள் சொல்வாள்’’ வலிமை தான் வாழ்வு. வலிமையுடையவர்கள் மலையளவு துன்பம் வந்தாலும்; அதைத் தினையளவாகத் தான் கொள்வார்கள். உங்களைத் திருமணம் செய்யக் கடைசி வரையும் அம்மா விடமாட்டா. அவாவுக்கு மாமா மீது உயிர். மாமாவுக்காக அவா எதையும் இழப்பதற்குச் சித்தமாக இருப்பா. ஆனால் உங்களை இழக்க நான் தயாராகஇல்லை’’ என்பாள். எனவே அவளை எந்தத் துன்பமும் தாக்காது. தற்செயலாக அவளை வற்புறுத்திப் பலாத்காரமாக அழைத்துச் சென்றால் என்னால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் அவள் எனக்காகக் காத்திருப்பாள்’’

‘‘விசரன் மாதிரிக் கதையாதை அவளை ஏன் கொழும்புக்குச் செல்ல விடுவான்’’ நகுலன் சொல்லிக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் சொன்னான்; ‘‘நீ சொல்வது சரி பிரியாமையைப் பற்றியே நாம் பேசுவோம். பிரிந்தால் நாமிருவரும் இறந்து விடுவோம். அதன் பின் செய்தியைக் கேட்க யார் உயிரோடு இருக்கப் போகிறார்கள். இனி மேல் நீ பிரிவு பற்றிய செய்தியை மறந்தும் கதைக்காதே’’

**1151. செல்லாமை உண்டேல் எனக்கு உரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க்கு உரை.**

*பிரிந்து செல்லாமையாயின் அதைப் பற்றி என்னிடம் சொல். பிரிந்து செல்வதாயின் அப்போது யார் உயிரோடு இருக்கிறார்களோ அவர்களிடம் சொல்.*

# பிரிவுத் துன்பம்

''கஜேந்திரன் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்று நகுலன் சொன்னார் அவர் தந்த கடிதத்தை நான் கொண்டு வர முடியவில்லை. அம்மாவுக்கு எனது போக்கில் சந்தேகமிருக்கிறது. உன்னுடைய அம்மா என்னைப் பற்றிப் புகழ்ந்து கூறினவாவாம். அதோடு உனக்கு நான் எதிரியென்றும் எனக்கு உனது காதல் விஷயம் பிடிப்பதில்லை என்றும் கூறினாவாம். நான் அம்மாவுடன் தெரியாத்தனமாக பல விஷயங்களைக் கதைத்து விட்டேன்; ''வித்தியா பாவம். தாயும் மாமனும் வித்தியாவுடைய திருமணத்தைத் தீர்மானித்த போதும், அங்கஜன் இதுவரை வித்தியாவுடன் கதைக்கவில்லை. கடிதங்களும் எழுதுவதில்லை. தொலைபேசி வீட்டில் இருக்கிறது. ஒரு முறையென்றாலும் எடுத்துக் கதைக்கலாம் தானே'' என்று சொன்னேன். அம்மா என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தபின்; ''நீ அவளுக்கு உதவி செய்கிறாயா. ஒரு பெண் பெற்றோரின் விருப்பப்படி தான் திருமணவிஷயத்தில் நடந்து கொள்ள வேண்டும். பெற்றாரின் ஆசீர்வாதத்துடன் திருமணம் நடைபெற்றால் தான் அவர்கள் இன்பமாக வாழ்வார்கள். நீயும் வித்தியாவைப் போல கண்டகண்டவங்களைக் காதலித்துப் போட்டு வந்து நிக்காதை கொப்பர் உயிரை எடுத்துப்போடுவர்'' என்றா எனக்கெண்டால் பயமாகக் கிடக்கு உன்னுடைய பிரச்சினையிலையும் அம்மாவும் மாமாவும் விட மாட்டினை.

என்னுடைய பிரச்சினையும் அப்படித்தான். அப்பா சரியான கண்டிப்பானவர். தனக்கு இஷ்டமில்லாத எதையும் செய். எங்களை விட மாட்டார். அம்மா, அப்பாவுக்குப் பயந்து நடுங்குவா இப்ப எனக்குப் பயமாக இருக்கு'' அர்ச்சகாவின் குரல் துயரத்துடன் ஒலித்தது.

''எனக்கு நீ ஆறுதல் சொல்ல வேண்டிய நேரத்திலை நான் உனக்கு அறுதல் சொல்ல வேண்டியிருக்கு. மனதைத் தளர விட்டால் வீணான கற்பனைகளெல்லாம் தோன்றி எம்மை அலைக்களிக்கும். சற்று நாம் தளர்ந்தாலும் நாம் பலவீனர்களாகி விடுவோம். பின் எமது எதிரிகள் எம்மைச் சுலபமாக வென்று விடுவார்கள். நீ தைரியமாக இரு. நீ தைரியத்தை இழந்தால் அது என்னையும் பாதிக்கும். நகுலன் பணக்காரன்; வசதியானவன்; கல்வியாளன்; பிறகேன் பயப்படுகிறாய். என்னை கஜேந்திரனுடன் செல்லச் சொல்லும் நீ, ஏன் நகுலனுடன் செல்லக் கூடாது'' என்று கேட்டாள் வித்தியா.

'' காதல் இப்படியானது என்று வரையறுத்துக் கூற முடியாதுள்ளது. ஆரம்பத்தில் பார்க்க மாட்டோமா என்ற தவிப்பு இருந்தது. அவளின தரிசனம் கிடைத்ததும் எனது கண்கள் பொங்கிப் பூரித்தன. அந்தப் பார்வையில் உள்ள இன்பத்தின் அளவைக் கணிப்பிட்டுக் கூற முடியாதிருந்தது அவரைக் கண்டு விட்டு இரவு முழுவதும் விழித்திருந்து நினைத்து நினைத்து இன்பமடைந்தேன் அப்படி நினைப்பதில் ஒரு அலையிருந்தது. மறு நாளும் அவரைக் காண வேண்டும். என்ற தவிப்பு இருந்தது. அவரைக் கண்ட பின்பு பேச மனம் அவதிப்பட்டது. அவரைக் கண்டு கதைத்து மகிழ்ந்த பின்பு இப்பொழுது அவருடன் கூட இருக்கும் வேளையிலும் இன்னும் சிறிது நேரத்தில் அவரைப் பிரிந்து விடுவேனே. என்று எண்ணிக் கவலைப்படுகிறேன். அவருடன் இருக்கும் வேளையிலும் என்னால் அவரோடு இன்பமாகக் கதைக்க முடியவில்லை. அவர் பிரிந்து சென்று விட்டால் நான் என்ன செய்வேன். என்று கலங்குகிறேன். இன்று நான் அவரைப் பிரிந்தால் இன்னும் எத்தனை நாட்களுக்குப் பிறகு நான் அவரைச் சந்திக்கப் போகிறேன். என்ற எண்ணமே எனது மனதில் எழுகிறது.

அதனால் அவர் கூட இருக்கும் போது கூட அவருடன் மகிழ்வாகக் கதைக்கவில்லை'' என்று அழுதாள் அர்ச்சகா.

''நான் எனது துன்பங்களையே தாங்க முடியாது அவதிப்படுகிறேன். இதில் உன்னுடைய துயரத்தைத் தீர்ப்பது எப்படி.?'' என்று சிரித்தாள் வித்தியா.

அர்ச்சகா கண்களால் வழிந்த நீரைத் துடைத்தாள்.

**1152. இன்கண் உடைத்தவர் பார்வல்; பிரிவு அஞ்சும்**
**புன்கண் உடைத்தால் புணர்வு.**

*அவருடைய பார்வை முன்பு இன்பத்தைத் தந்து; இப்பொழுது அவருடன் கூட இருந்த போதிலும் அவரின் பிரிவை எண்ணித் துனபம் ஏற்படுகிறது.*

## நம்பமுடியவில்லை

கஜேந்திரன் எழுதிய கடிதங்களைப் பத்திரப்படுத்தி வைத்திருந்த வித்தியா அதில் முக்கியமான தொரு கடிதத்தை எடுத்துப்படித்தாள். மனதில் துன்பம் ஏற்படும் வேளைகளில் அவள் கஜேந்திரன் எழுதிய கடிதங்களை எடுத்து வாசிப்பாள். கஜேந்திரனைச் சந்திக்க முடியாத வேளைகளில் அவனுக்கு அருகில் இருக்கும் வாய்ப்பை அக் கடிதங்கள் அவளுக்குக் கொடுக்கும்

அன்பே முழுமதியைப் போலப் பிரகாசிக்கும் உமது வட்ட முகம் என்மனவானில் உலவி வருகிறது. வானத்தை விட்டு சந்திரன் ஒரு போதும் மறைவதில்லை. மறைவது போலத் தோற்றமளிக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அது போலத் தான் உமது முகமும் எனது மனவானில் தேயாது முழுமதியாக உலா வருகிறது.

பிரிவுத் துயர் கொடியது என்று நீர் அடிக்கடி கூறக் கெட்டிருக்கிறேன். நாம் எப்பொழுது பிரிந்தோம் அருகில் இருப்பதும் கதைப்பதும் இல்லா விட்டால் பிரிந்திருக்கிறோம். என்று நீர் நினைக்கிறீர். இரவில் வானத்தில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் தோன்றி மின்னுகின்றன. பகலில் அவற்றை நாம் காணமுடிவதில்லை. அதற்காக நட்சத்திரங்கள் பகலில் வானத்தில் இல்லை என்று சொல்ல முடியுமா? நினைவு என்பது நிஜத்தின் நிழல். நிழல் எம்மைப் பின் தொடர்வது போல நினைவுகளும் உடனிருந்து பின் தொடரும். நேரில் உம்மோடு கதைக்க முடியாத, செய்யமுடியாத பலவற்றைத் தனிமையில் நினைத்து செய்து மகிழ்கிறேன். அப்படியிருக்க நீர் என்னை விட்டுப் பிரிந்திருக்கிறீர் என்று நான் எப்படி நினைப்பது.

உம்மைப் பிரிந்திருக்க எனக்கு விருப்பமா என்ன? எனக்கு ஒரு தொழில் கிடைத்ததும் உம்மப் பலாத்காரமாக தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வருவேன். நீர் நினைப்பதைப் போல் நான் இல்லை. பெண்களுக்குரிய சந்தேகம் உம்மையும் பற்றிப் பிடித்துள்ளது. என் உடலோடு கலந்து ஒன்றாகி விட்ட உம்மைப் பிரிய முடியுமா...? எனக்குச் சக்தி இருக்குமாயிருந்தால் சிவனைப் போல அர்த்தநாரீஸ்வரராக மாறி இருப்பேன். மனதுள் கலந்துள்ள உம்மை இடப்பாகத்திலிருந்தும் சக்தி எனக்கில்லையே''.

அதை வாசித்து விட்டு வித்தியா விம்மினாள். அவளின் அருகில் இருந்த அர்ச்சகா; ''என்னடீ'' என்று கேட்டாள்.

''அவர் பிரிவுத்துயரம் கொடியது. என்பதை நன்கு அறிந்தவர் தான் என்றாலும் இப்படியான பிரியும் நிலை ஏற்பட்டிருக்கும் வேளையில் உன்னைப் பிரியமாட்டேன் என்று உறுதியாகக் கூறிச் சத்தியம் செய்து தந்தாலும் என்னால் நம்ப முடியவில்லை. சில சமயம் பிரிவு ஏற்பட்டால் என்று நினைக்க வாழ்வு வெறுக்கிறது'' என்றாள் வித்தியா.

''துன்பமான வேளைகளில் உறுதியான மனமும் தளர்வது இயல்பு உனக்கு இப்பொழுது பெருந்துன்பம் ஏற்பட்டுள்ளது. உனது தாயார் உன்னை அளவுக்கதிகமாகக் கொடுமைப்படுத்துகிறார். அளவுக்கதிகமான துன்பத்தால் நம்பிக்கையுள்ள உறுதியான மனம் படைத்தவர்களும் தளர்வடைவார்கள் நீ நம்பியிரு'' என்றாள் அர்ச்சகா.

''நாளைக்குக் கொழும்புக்குப் புறப்பட ஆயத்தமாக இரு. உடுப்புக்களை யெல்லாம் அடுக்கிவை யென்று காலையில் அம்மா சொன்னவா. கொழும்புக்குச் செல்லும் சூழ்நிலை, ஏற்பட்டால் உன்னை நான் அழைத்துச் செல்வேன் என்றவர். அத்துடன் வேலை கிடைத்ததும் பலத்காரமாகத் தூக்கிச் செல்வேன் என்றும் சொன்னவர். அதையெல்லாம் இப்பொழுது என்னால் நம்ப முடியாமல் இருக்கிறது. நீ இந்தச் செய்தியை எப்படியாவது அவருக்கு அறிவித்து விடு. எனக்கென்றால் நம்பிக்கை இல்லை'' என்று விம்மினாள் வித்தியா. அர்ச்சகாவால் அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை. தடுமாறியபடி நின்றாள்.

**1153. அரிதரோ தேற்றம் அறிவு உடையார் கண்ணும்**
**பிரிவு ஓர் இடத்து உண்மையான்.**

*பிரிவுத் துயரம் கொடுமையானது என்பதை அறிந்த காதலரிடத்தும் பிரிவு ஒரு காலத்தில் வரும் என்பதால், அவர் பிரியேன் என்று சொல்லும் உறுதி மொழியை என்னால் நம்ப முடியவில்லை.*

## குற்றம் உண்டோ..?

'' என்னால் அவரைப் பிரிந்து இருக்க முடியவில்லை. அவருடன் இருக்கும் போது நெருப்பாற்றைக் கூடக் கடக்கும் வலிமை எனக்கிருந்தது. இப்போது கனுக்காலளவு வெள்ளத்தில் இறங்கக் கூடப் பயமாக இருக்கிறது. அந்த வெள்ளம் என்னை அடித்துச் சென்று விடுமோ. என்று பயப்படுகிறேன். அங்கஜன் என்மீது பெரிதாக அன்பு கொண்டுள்ளார் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. இருந்த போதும் அங்கஜன் என்னைத் தீவிரமாக விரும்புவதாகவும், இங்கு வந்தால் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து அன்புத் தொல்லை தருவார் என்றும் நான் அவருக்குக் கூறியுள்ளேன். அதன்மூலம் அவர் என்னை அங்கஜன் திருமணம் செய்து விடுவான் என்று நினைப்பார் என்று நினைத்தேன். ஆனால் நான் அவர் மீது கொண்ட தீவிரமான அன்பை உணர்ந்து, நான் கடைசி வரையும் தன்னைப் பிரிய மாட்டேன் என்று நினைக்கிறார். அதனால் அவர் அக்கறை இல்லாமல் இருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது''. என்று அழுதாள் வித்தியா.

“வீணான கற்பனைகளை உருவாக்கித் தேவையில்லாமல் கவலைப்படுவது காதலரின் இயல்பு. அதற்காக உன்னைக் குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லை. அவர் உன் மீது உயிரையே வைத்திருக்கிறார். பிரிவை அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. வீண் நினைவுகளை விட்டு விட்டு நிம்மதியாக இருக்கப் பார். உனது தாயார் கொழும்புக்குச் செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு கூறியுள்ளார். எனவே நான் எப்படியும் இன்று மாலையாவதற்கு முன்பு கஜேந்திரனுக்குச் சொல்லி உன்னை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்கிறேன். நீ கொழும்புக்குச் செல்ல ஆயத்தமாவதைப் போல ஆயத்தமாக இருந்தாயானால் நல்லது தானே” என்றாள் அர்ச்சகா.

“நான் ஆயத்தமாவது பெரிய விஷயமல்ல. அவர் என்னை அழைத்துச் செல்வது தான் பெரும் பிரச்சினை” என்றாள் வித்தியா.

“நீ அவரை நம்பவில்லையா?. நான்கு வருடங்களாக அவரைக் காதலிக்கும் உனக்கு அவரின் நிலைமை புரியவில்லையா.? சில நாட்கள் பழகினாலே ஒருவரைப் பற்றி அறிந்து கொள்ள முடியும் என்று சொல்வார்கள். நீ வருடக் கணக்காகப் பழகியும் அவரின் மனநிலையை அறியாது இருப்பது வேடிக்கைக்குரியது” என்றாள் அர்ச்சகா.

“நான் அவரோடு காதல் விஷயம் பேசியது குறைவு. சந்திக்கும் போதெல்லாம் எனது வீட்டு நிலையைத் தான் விளக்கிச் சொல்வேன். அம்மா, உங்களைத் திருமணம் செய்யக் கடைசி வரையும் சம்மதிகக மாட்டா. அவா எமது காதல் விஷயத்தை அறிந்தால் உடனே என்னை அழைத்துக் கொண்டு கொழும்புக்குச் சென்று விடுவா என்று துயரத்துடன் நான் கூறும்போதெல்லாம் அன்போடு ‘அஞ்சாதே!’ என்று தேற்றி எனது கண்களால் வழியும் கண்ணீரைத் துடைத்து விட்டுத் தானும் கண்கலங்குவார். அப்படிப்பட்டவர் இப்போது எனது துயரங்களை அறிந்தும், அத் துயரைத் தீராது இருக்கிறார். அப்படிப்பட்டவரின் உறுதி மொழியை நம்பிய என் மீது குற்றம் உண்டா?. சொல் அர்ச்சகா? காதலிப்பவர்கள் யோசிக்காமல் கண்டபடி வாக்குறுதிகளைக் கொடுப்பார்கள் என்று நேற்றுவந்த துவாரகா சொன்னாள். அப்படி அவரும் என்னில் உள்ள மோகமிகுதியால் வாக்குறுதிகளைத் தந்திருப்பாரோ..? அதை அறியாமல் நம்பிய நான் தான் குற்றவாளியோ...?. அழுதாள் வித்தியா.

அர்ச்சகாவுக்கு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. விக்கி விசும்பி அழும் வித்தியாவைப் பார்த்துக் கொண்டு நின்றாள். வித்தியாவின் நிலையை நினைக்க அவளுக்குப் பயமாக இருந்தது. தற்செயலாக நாளைக்குள் அவளைக் கஜேந்திரன் அழைத்துச் செல்லாவிட்டால் என்ன நடக்கும்?” என்று நினைத்தான். அவளுக்குத் தலையைச் சுற்றியது. அதற்கு மேல் அவளால் நினைக்க முடியவில்லை. தேம்பித்தேம்பி அழும் வித்தியாவைப் பார்த்தாள். “தனக்கும் அப்படியான தொரு நிலை ஏற்படுமா..?.” என்று நினைத்தாள்.

**1154. அளித்து அஞ்சல் என்று அவர் நீப்பின் தெளித்த சொல்
தேறியார்க்கு உண்டோ தவறு.**

*உறுதியளித்து அஞ்ச வேண்டாம் என்று முன்பு அஞ்சிய என்னைத் தேற்றியவர், பின் பிரிந்து சென்றால், அவர் கூறிய உறுதி மொழியை நம்பிய என்னில் குற்றம் உண்டோ?.*

## காத்துக் கொள்ளல்

‘‘என்னை நான் பல முறை அவரிடமிருந்து காத்துக் கொண்டேன். சென்ற வருடம் சிவராத்திரியன்று அம்மா கோயிலுக்குச் சென்று விட்டா. பொதுவாக அம்மா எல்லா விரதங்களையும் அனுஷ்டிப்பா. விரதங்களை முறைப்படி அம்மா அனுஷ்டிப்பா. சிவராத்திரியன்று பகல் முழுவதும் உபவாசம் இருப்பா. அன்று பகல் முழுவதும் பூசை அறையிலேயே அவாவின் பொழுது கழியும். விதம் விதமான பூக்களைப் பறித்துப் பகல் வேளைகளில் பூசை செய்வா. இரவில் வீட்டில் இருந்து ஐந்து மைல்களுக்கு அப்பால் இருக்கும் சிவன் கோயிலுக்குச் சென்று விடுவா. கோயிலில் விரதமனுட்டிக்கும் நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு பால் கொடுப்பா. அதற்காக பல நாட்களுக்கு முன்பே குருக்களிடம் சென்று அதற்கான ஆயத்தங்களைச் செய்து விடுவா. சிவராத்திரியன்று நான்கு மணிக்குக் கோயிலுக்குப் புறப்பட்டு விடுவா. வழமையாக நானும் அவாவுடன் கூடச் செல்வேன். அன்று கஜேந்திரன் வருவதாகக் கூறியதால் எனக்குச் சுகவீனம் என்று சொல்லி வீட்டில் தங்கி விட்டேன். அம்மா வீட்டில் இல்லாத வேளைகளில் பக்கத்து வீட்டுத் தாத்தா தான் எனக்குப் பாதுகாப்பாக இருப்பார். அவர் நன்றாகக் கள்ளுக் குடிப்பார். அதனால் என்னிடம் அடிக்கடி பணம் கேட்பார். நானும் கொடுப்பேன். சிவராத்திரியன்று அவர் நான்கு மணிக்கு வீட்டுக்கு வந்தார். நான் நூறு ரூபா பணம் கொடுத்தேன். அவர் அதிசயமாக என்னைப் பார்த்தார். இவ்வளவு பணத்தை நான் ஒரு நாளும் அவருக்குக் கொடுத்ததில்லை. அத்துடன் என்னிடம் பணம் வாங்குவதை அம்மாவுக்குச் சொல்ல வேண்டாம் என்று என்னிடம் பணம் பெறும் போதெல்லாம் சொல்லுவார்.’’ பெருமூச்சு விட்டாள் வித்தியா.

சுவரஸ்சியமாகக் கதை ஆரம்பிக்கும் போது வித்தியா இடை நிறுத்தியது அர்ச்சகாவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. சில கணங்கள் சுவரை வெறித்து நோக்கிய வித்தியா மீண்டும் ஒனரு முறை பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னாள்.; ‘‘ நூறு ரூபா வோடு சென்ற தாத்தா இரவு பத்துமணியாகியும் வரவில்லை. கஜேந்திரன் தனது நண்பனின் வீட்டில் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு இரவு எட்டு மணிக்கு வந்தார். அவரைக் கண்டதும் எனக்குப் பயமாக இருந்தது. உடல் வியர்த்தது; தலை சுற்றியது. பலமணி நேரம் என்னால் அதிலிருந்து விடுபடவில்லை. எனக்கருகில் இருந்து கஜேந்திரன் கதைத்துக் கொண்டிருந்தார். அவரது கதைகள் எவையும் எனக்குப் புரியவில்லை. நான் விலகித்தூரச் செல்லும்போதெல்லாம் அவர் எனக்கருகில் வந்தார். அவருக்கெனத் தயாரித்து வைத்த உணவு வகைகளையும் தேநீரையும் கொடுத்து நானும் உண்டேன். அன்பு மிகுதியால் ஏதேதோ பிதற்றினார். அப்படியே இரவு கழிந்தது. அந்த நேரத்தில் என்னை அவர் தொடக் கூட நான் விடவில்லை. என்னை நான் காத்துக் கொண்டேன். இப்படி அம்மா கோயிலுக்குச் செல்லும்போதெல்லாம் அவர் வருவார். அம்மா கோயில்களுக்குச் சென்றால் திரும்பி வர நாலைந்து மணித்தியாலங்கள் செல்லும். அந்த நேரங்களிலெல்லாம் அவர் எனது வீட்டுக்கு வருவார். அவ்வேளைகளில் அவருக்கு விதம் விதமாக உணவு வகைகளைச் சமைத்துப் பரிமாறுவேன். இந்த வேளைகளில் எல்லாம்

நான் என்னைக் காத்துக் கொள்வேன். ஆனால் இப்பொழுது அவா் என்னருகில் இல்லாத வேளையில் என்னைக் காத்துக் கொள்ள முடியவில்லை. இப்பொழுது என்னை நான் காத்துக் கொள்ள வேண்டுமானால் அவா் என்னை விட்டுப் பிரியாமல் என்றும் என் அருகிலேயே இருத்தல் வேண்டும். இப்பொழுது நான் அவரை விட்டுப் பிரிந்தேனேயானால் மீண்டும் அவரைக் கூடுவது மிகவும் அரிதானதாகும்'' விம்மினாள் வித்தியா.

''அழாதை நேற்றும் சாப்பிடவில்லையென்று உனது அம்மா சொன்னா. சாப்பிடாமல் விட்டால் பலவீனமாகி விடுவாய். போய்ச் சாப்பிடு போ. நான் உடனே உனக்கு நோ்ந்த இந்தத் துன்பத்தைக் கஜேந்திரனுக்குத் தெரியப்படுத்துகிறேன்.'' என்றாள் அா்ச்சகா.

**1155. ஓம்பின் அமைந்தாா் பிரிவுஓம்பல்; மற்றவா்**
**நீங்கின் அரிதால் புணா்வு.**

*என்னை நான் காத்துக் கொள்வதானால் காதலா் என்னை விட்டுப் பிரியாமல் காத்துக் கொள்ளல் வேண்டும். அவா் பிரிந்து சென்றால் அவரோடு கூடுதல் அரிதாகும்.*

## பயனற்ற ஆசை

''காதலிப்பவா்கள் திருமணமாகும் வரை பிரிவு தவிா்க்க முடியாதது. திருமணமானாலும் தொழில் நிமிா்த்தம் பிரிந்து தானே ஆகவேண்டும். பிரியாமல் எந்நாளும் கூடியிருந்தால் உணவிற்கு என்ன செய்வது? உனது நிலையைப் பற்றி நான் சொன்ன போது அவா் இவ்வாறு சொன்னாா்'' என்றாள் அா்ச்சகா.

''இவ்வளவும் தான் சொன்னவரா. இல்லை வேறு ஏதாவதும் சொன்னவரா'' என்று கேட்டாள் வித்தியா.

''காதல் திருமணத்திற்கு எந்தப் பெற்றோரும் இலகுவில் சம்மதிக்கமாட்டாா்கள். வித்தியாவைப் பொறுத்தவரைஅவளது தாய் தனது சகோதரனின் மகனுக்கு அவளை திருமணம், செய்வதற்குத் தீா்மானித்திருக்கிறாள். இந்த நிலைமையில் எமது காதலிற்குச் சம்மதிப்பாா்களா? வீணாகக் கற்பனை பண்ணி மனதையும் உடலையும் கெடுக்கா வேண்டா மென்று சொல்லுங்கோ. கட்டாயம் கூட்டி வர வேண்டும். என்ற அவசியம் ஏற்பட்டால் கட்டாயமாகக் கூட்டிவருவேன். பிரிவுத் துயரம் வித்தியாவுக்கு மட்டும் இல்லை. எனக்கும் இருக்கிறது. நான் அவளைக் காணாது படும் துன்பம் எவ்வளவு தெரியுமா?'' என்று கேட்டாா்.

''அவா் இதற்கு மேலும் கேட்பாா். நான் இரண்டு மூன்று வருடங்களாக அவரை வெறுத்தேன். இப்படியான நிலை ஏற்படும் என்று எனக்குத் தெரியும். எத்தனை தரம் எடுத்துச் சொன்னேன் தெரியுமா?. சண்டித்தனமான முறையிலும் சொன்னான். சமாதானமான முறையிலையும் சொன்னனான். அப்போதுள்ள மயக்கத்தில் எதுவும் தெரியாத மாதரி நடந்து விட்டு இப்போது தத்துவம் பேசுகிறாா். இதெல்லாவற்றையும் முன்பே யோசித்திருக்க வேண்டும்'' என்று விம்மினாள் வித்தியா.

‘‘அவர் இருக்கும் நிலையில் அவர் சொல்வது நியாயமானது தான். தகப்பன் விவசாயம் செய்கிறார். கஜேந்திரன் படித்து விட்டு தொழில் இல்லாமல் இருக்கிறார். இப்படியிருக்க உன்னைக் கூட்டிக் கொண்டு சென்றால் உனது செலவுகளுக்கும் கஜேந்திரன் தகப்பனைத் தானே கேட்க வேண்டும். அப்படிச் செய்வது சரியானதல்ல. அது தான் அவர் தயங்குகிறார். வேலையாகி யிருந்தால் அவர் உன்னை அழைத்துக் கொண்டு சென்றிருப்பார்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘எனது நிலை அறியாது பிரிவைப்பற்றி எடுத்துச் சொல்லும் அளவிற்கு எனது காதலர்கள் கல் நெஞ்சம் உடையவர் என்றால், அவர் திரும்பவும் வந்து அன்பு செலுத்துவார் என்று நான் நினைப்பது பயனற்றது தானே. எனது நிலையை உணராது பேசாமல் இருக்கும் அவரை நான் எப்படி நம்புவது’’ என்றாள் வித்தியா.

‘‘ஏன் வீணாகக் கற்பனை பண்ணுகிறாய். கொஞ்ச நேரம் எதையும் சிந்திக்காமல் இரு பார்ப்பம்’’ என்றாள் அர்ச்சகா.

**1156. பிரிவு உரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிது அவர்**
**நல்குவர் என்னும் நசை.**

*பிரிந்து செல்வதைப் பற்றிச் சொல்லும் அளவிற்குக் காதலர் கல் நெஞ்சமுடையவரானால், அத்தகையவர் திரும்பி வந்து அன்பு செலுத்துவார் என்று ஆசைப்படுவது பயனற்றது.*

## வளையல் கூறும் செய்தி

வித்தியாவின் அறைக்கு வரதராசன் வந்தார். அவரைக் கண்டதும் அர்ச்சகாவும் வித்தியாவும் ஆசனத்தால் எழுந்தனர். அழுததை மறைப்பதற்காக வித்தியா மறுபக்கம் திரும்பி கைகளால் கன்னங்களால் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள்.

‘‘வித்தியா, நீ இரவும் சாப்பிடவில்லை யென்று உனது அம்மா சொல்லிக் கவலைப்பட்டா. அந்தந்த நேர உணவு குறித்த நேரத்தில் எமக்குக் கிடைக்கப் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். உலகில் உயிர் வாழ்வோரில் பெரும்பான்மையானோர்க்கு மூன்று வேளையும் உணவு கிடைப்பதில்லை. சிலருக்கு ஒரு வேளை உணவு கூடக் கிடைப்பதில்லை. உனக்கு நல்ல சுவையான உணவைக் கடவுள் தந்துள்ளார். அதற்கு நீ கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு இரவு உணவை உண்ணாமல் விட்டிருக்கிறாய். அது கெட்டுப் போய்விட்டது. உணவை உண்ணு முன் நாம் யாருக்காவது உணவைக் கொடுத்து விட்டுத்தான் உண்ண வேண்டும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதுவும் நல்ல உணவைத் தான் கொடுக்க வேண்டும். பழுதடைந்த உணவைக் கொடுப்பது பாவம். கடவுள் எமக்களித்த எந்தப் பொருளையும் வீணாக்குதல் கூடாது. அப்படி வீணாக்கினால், அந்தப் பொருளுக்கு ஒரு காலத்தில் கஷ்டப்பட வேண்டி வரும் என்று எனது பேரனார்

அடிக்கடி கூறுவார். நான் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் தண்ணீரை அளவுக்கதிகமாக வீணாக்குவேன். ஒரு வாளி தண்ணீரில் செய்ய வேண்டிய வேலையைப் பத்து வாளி தண்ணீரில் செய்வேன். கொழும்புக்குச் சென்ற பின்பு சில காலங்களில் மாதக்கணக்கில் நீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும். குழாய் நீா் குறித்த நேரத்திற்குத் தான் வரும். வீட்டில் இருந்து வெகு தூரத்திற்கு அப்பால் உள்ள கிணற்றிற்குச் சென்றுதான் நீரைப் பெற்றோம். ஆகவே நீ உணவை வீணாக்கினால் பிற்காலத்தில் உணவுக்குக் கஷ்டப்படுவாய்'' என்றார்.

''தலை வலியோடு காய்ச்சலாகவும் இருந்தது. அது தான் நான் இரவு உணவை உண்ணவில்லை'' என்றாள் வித்தியா.

''சரி... சரி... காலைச் சாப்பாட்டை ஏன் உண்ணவில்லை. காய்ச்சல் காய்ந்தால் வா மருத்துவரிடம் செல்வோம்.'' என்றார் வரதராசா.

''இரவு மருந்து குடித்தனான் மாமா, காலை உணவைச் சாப்பிடுகிறேன்'' என்றாள் வித்தியா.

அதை அவர் நம்பவில்லை. எனினும் நம்பியது போலச் சொன்னார்; ''உனது முகம் வாடிக் கறுத்திருக்கிறது. கையில் அணிந்துள்ள வளையல்கள் கழன்று விழுந்து விடும் போலத் தோன்றுகின்றது. உனது உடல் ஏன் மெலிய வேண்டும். மகாராணி போல இருக்க வேண்டிய நீ பிச்சைக்காரி மாதிரி இருப்பதைப் பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை. எழுந்து போய்ச் சாப்பிடு'' என்று கூறி விட்டுச் சென்றார் வரதராசா.

''நான் உனக்கு எத்தனை தடவை சொன்னனான். சாப்பிடு சாப்பிடு என்று காதல் விஷயமாகப் பிரிவு வந்தால் அதை மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ளாமல் மறைத்தல் வேண்டும். நீ சாப்பிடாமல் அழுது அழுது உடல் மெலிந்ததால் அதை மாமா கண்டு பிடித்து விட்டார். இனி எவ்வளவு பிரச்சினைகள் வரும் தெரியுமா? அவர் சொல்லி விட்டுச் சென்ற பின்பும் எழும்பாமல் இருந்தால் என்ன அர்த்தம்.'' கோபித்தாள் அர்ச்சகா. அர்ச்சகா உணவை ஓரிரு நாட்கள் உண்ணாமல் விட்டால் மெலிய மாட்டோம். காதலரின் பிரிவுத்துயரால் தான் உடலில் தளர்வு ஏற்படும். கௌரி விரதத்திற்கு எத்தனை நாட்கள் நோன்பிருக்கிறனான். அப்போது எனது உடலில் தளர்ச்சி உண்டாவதில்லை. உற்சாகம் தான் பிறக்கும். ஆனால் காதலரைக் காணாததால் எனது உடல் மெலிந்து விட்டது. வளையல்கள் மணிக்கட்டை விட்டு கழன்று விழுகின்றன. காதலரைக் காணாமையால் தான் நான் மெலிந்திருக்கிறேன். என்று என்னைக் காண்பவர்கள் குறை சொல்கிறார்கள். அவரைப் பற்றி யாராவது குறை கூறினால் எனக்கக் கோபம் வருகிறது. காலையில் அம்மா அவன்ரை நினைவாலை தான் நீ அரைவாசியாய்ப் போனாய்.'' என்று ஏசினா'' என்றாள் வித்தியா.

**1157. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறை இறவா நின்ற வளை**

*எனது உடல் மெலிவால் கையிலிருந்து கழன்று விழும் வளையல்கள், தலைவன் என்னை விட்டுப் பிரிந்த செய்தியைப் பலரும் தூற்றும்படி வெளிப்படுத்தாமல் இருக்குமா?*

# பெரும்துன்பம்

‘‘மகிழ்ச்சியாக இருந்தாலென்ன துன்பமாக இருந்தாலென்ன அதை அனுபவிப்பவனுக்குத் தான் அதன் தார்ப்பரியம் தெரியும். தாயை இழக்காத ஒருவன் இன்னொரு தாயை இழந்தவன். அனுபவிக்கும் துன்பத்தைப் பற்றித் தெரிந்திருக்க முடியாது. நாம் ஒருவா் மீது வைத்துள்ள பற்று, பாசம், அன்பு ஆகியவற்றின் அளவைப் பொறுத்துத் தான் துக்கமும் மகிழ்ச்சியும் ஏற்படும். காதல் பிரிவும் அதே போன்றது தான். பெற்றோர் எதிா்ப்பதால் துயரம் வரும் தான். ஆனால் உனக்கு வந்த வேதனை பெரியது. காதலனைப் பிரிவதால் பின்பு சேரலாம் என்ற நிலை பலருக்கு உண்டாகும். ஆனால் உன்னைப் பொறுத்த வரை பிரிந்தால் இந்த வாழ்வில் பின்சேரவே முடியாது. மறுபிறப்பு உண்டென்று சமயங்கள் கூறுகின்ற போதும் அதை நாம் கண்களால் காணமுடிவதில்லையே. ஒரு குடும்பம் இன்பமாக வாழ வேண்டுமானால் அக் குடும்பத்தின் மீது அன்பு செலுத்தும் இனத்தவர்கள் இல்லாத ஊரில் வாழக்கூடாது. நாங்கள் கொழும்பில் வாழும் போது மிகவும் சிரமப்பட்டோம். எனது பெரியம்மாவின் மகளுக்கு எமது வீட்டில் திருமணம் நடைபெற்றது. திருமணநாளன்று தான் கொழும்பில் உள்ள உறவினா்கள் நான்கு பேர் வீட்டுக்கு வந்தனா். கொஞ்ச நண்பா்கள் திருமண மண்டபத்திற்கு வந்தனா். திருமணம் முடிந்த பின்பு மாப்பிள்ளையும் பொம்பிள்ளையும் அனாதைகள் மாதிரி வீட்டுக்கு வந்தனா். திருமணத்திற்கு வர முடியாத நண்பா்கள் தொலைபேசியில் வாழ்த்துத் தெரிவித்தனா். பரிசுப் பொருட்கள் தபாலில் வந்தன. இரண்டு மணிநேரம் மதச் சடங்குகள் நடைபெற்றன. நண்பா் சிலரும் உறவினா்கள் நாலைந்து பேருமாக மண்டபத்தில் சாப்பிட்டோம். வீட்டுக்கு வந்த பின்பு நாளாந்த நிகழ்வுகள் போலக் காரியங்கள் நடைபெற்றன. ஊரில் என்றால் எத்தனை நாட்கள் கொண்டாட்டம் நடைபெறும் தெரியுமா? அப்பாவின் சகோதரிக்கு ஊரில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பத்துத் தினங்களுக்கு முன்பே உறவினா்கள் வீட்டுக்கு வந்து விட்டனா். திருமணம் முடிந்து ஒரு மாதம் சென்ற பின்பும் உறவினா்களின் கொண்டாட்டம் முடியவில்லை. உறவினா்கள் ஒவ்வொரு நாளும் மாப்பிள்ளை பொம்பிளையை அழைத்து விருந்தும் வைத்துப் பரிசுப் பொருட்களும் கொடுத்தனா். அந்த நிலைமை கொழும்பில் இல்லை’’ என்று சொல்லி விட்டுப் பெருமூச்சு விட்டாள் அா்ச்சகா.

அதைக் கேட்க வித்தியாவுக்கு விசா் வரும் போல் இருந்தது. ‘‘சம்பந்தமில்லாமல் தேவையற்ற கதைகளைக் கதைக்கிறாள்’’ என்று நினைத்தான்.

‘‘திருமணம் மட்டுமல்ல, அப்பாவின் தகப்பனார் திடீரென்று இறந்து விட்டார். சித்தப்பா வெளிநாட்டில் இருந்தார். இங்கு வர மூன்று தினங்கள் சென்றன. நாம் தாத்தாவின் பிரேதத்தை கொழும்பில் உள்ள மலா்ச்சாலையொன்றில் வைத்து விட்டு வீட்டில் துயரத்துடன் இருந்தோம். உறவினா்கள் எவரும் இல்லாததால் உறவினா்கள் எவரும் வீட்டுக்கு வந்து அனுதாபம் தெரிவிக்கவில்லை. இரண்டொரு நண்பா்கள் மட்டும் வீட்டுக்கு வந்து துக்கம் விசாரித்தனா். தாத்தா மீது நான் அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தேன். நான் கேட்கும் பொருட்கள் யாவற்றையும் வாங்கித்தருவார். இதனால் ஒரு மாதம் கழிந்தும் நான் அழுது கொண்டிருந்தேன். எனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இருக்கவில்லை. மூன்றாம் நாள் இறுதிச் சடங்கில் பத்துப்பேர் கலந்து கொண்டனா்.’’ என்று கூறி விட்டு அழுதாள் அா்ச்சகா.

வித்தியாவுக்கு விசர் பிடித்து விட்டதைப் போன்ற பிரேமை ‘‘உனக்கு நான் சொல்வதைக் கேட்க விசராய் இருக்கும். ஆனாலும் சொல்லுறன். அப்பாவுக்கு நெஞ்சுவலி வந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பதினைந்து தினங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். எமக்கோ அப்பாவுக்கோ உதவி செய்ய யாரும் இருக்கவில்லை. வேதனையால் நாங்கள் துடிதுடித்தோம்’’ என்று கூறி நிறுத்தி விட்டுச் சிலகணங்கள் வித்தியாவைப் பார்த்தாள் அர்ச்சகா. பின் சொன்னாள்; ‘‘உறவினர்கள் இல்லாது அந்த ஊரில் நாம்பட்ட வேதனையை விடப் பயங்கரமான வேதனையை இனிய காதலரின் பிரிவு உண்டாகும்.

வித்தியா திகைத்துப் போனாள். ‘‘எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறாய்’’ என்றான்.

**1158. இன்னாது இனன் இல்ஊர்வாழ்தல்; அதனினும்**
**இன்னாது இனியார்ப் பிரிவு.**

*தம் மீது அன்புடைய இனத்தவர்கள் இல்லாத ஊரில் வாழ்வது துன்பமானது; அதைவிடத் துன்பமானது தன் இனிய காதலரின் பிரிவாகும்.*

## நீங்கினும் சுடும்

‘‘உலகத்தில் எந்தப் பொருளைப் பிரிந்தாலும் அந்தப் பொருளின் கவலை கொஞ்ச நாட்களுக்குத் தான் இருக்கும். காதலரின் பிரிவால் உண்டாகும் கவலை உடலை விட்டு உயிர் நீங்கிய பின்பும் இருக்கும். காதல் நிறைவேறாது இறந்தவர்கள் பேயாக அலைந்து திரிவதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அத்துடன் பத்திரிகைகளிலும் வாசித்துள்ளேன். காதலைத் தவிர மற்றைய இழப்புக்களுக்குச் சாமாதானம் சொல்லலாம். ஆனால் காதல் இழப்பிற்குச் சமாதானம் சொல்ல முடியாது. பொருளாக இருந்தால் இழந்ததைப் போல பலவற்றை முயற்சியால் பெற்றுக் கொள்ளலாம் காதலன் இன்னொருத்திக்கு கணவனாகி விட்டால் அவனைப் பெற்றுக் கொள்ள முடியுமா இல்லை? காதலி இன்னொருவனுக்கு மனைவியாகி விட்டால் பின்பு அவளை அடைய முடியுமா?. சொல்லு அர்ச்சகா. என்னுடைய வாழ்க்கை ஒரு நூலிழையில் ஆடுகிறது. எப்போது அறுமோ என்ற பயம் எனக்கிருக்கிறது. என்னால் அவரைப் பிரிந்து வாழ முடியாது’’ அழுதாள் வித்தியா.

‘‘நீ உனது மனம், இருதயம், ஆன்மா முழுவதையும் காதலுக்கு அர்ப்பணித்துள்ளாய். அதே போலக் கஜேந்திரனும் தனது மனம், இருதயம் ஆன்மா மூன்றையும் காதலுக்கு அர்பணித்துள்ளான். எனவே பிரிவு என்பதற்கு இடமே இல்லை. காதல் இனிமையானது. பேரின்பம் தருவது; உண்மையானது என்று சொல்வதெல்லாம் தலைவனும் தலைவியும் கூடியிருக்கும் போது தான் அவர்கள் பிரிந்திருக்கும் வேளைகளில் கொடுமையானது; கொடிய துன்பத்தைத் தருவது; வாழ்க்கையை வெறுக்கப் பண்ணுவது என்று நீ அறியவில்லையா? குளிர் காலங்களில் நெருப்பின் அருகிலும், வெப்பமான வேளைகளில் குளிர்மையான இடங்களிலும் இருப்பதைப் போன்றது தான் காதல். பிரிவென்பது பனிக்காலத்தில் மரத்திற்குக் கீழேபடுவதைப் போலவும், கோடை காலத்தில்

தீக்கு அருகில் இருப்பதைப் போலவும் இருக்கும். இந்த நடைமுறையைக் காதலர்கள் ஏனோ உணர்வதில்லை. நீ உட்பட'' என்றாள் அர்ச்சகா.

‘‘இதெல்லாவற்றையும் நீ எங்கே கற்றுக் கொண்டாய். பெரிய அனுபவசாலி மாதிரிப் பேசுகிறாய்'' என்றாள் வித்தியா.

‘‘புத்தகங்களில் வாசித்தேன். இப்போ காதலிக்கும் போது அனுபவத்தில் உணர்கிறேன். உன்னைப் போலத்தான் என்னாலும் அவரைக் காணாமல் ஒரு நிமிடம் கூட இருக்க முடியவில்லை. என்ன மாயம் செய்தாரோ தெரியவில்லை. ஒரு நிமிடமென்றாலும் பிரிந்திருக்க என்னால் முடியவில்லை. உண்மையில் காதலின் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரைக் கண்டு பேச வேண்டும். என்று கற்பனை பண்ணித் துடிக்கும் மனது அவரைக் கண்டதும் எல்லாவற்றையும் மறந்து விடுகிறது. அவரது செயல்களை நினைத்து கோபம் கொள்ளும் மனது அவரைக் கண்டதும் கரைந்து விடுகிறது. இத்தகைய தூய்மையான தன்மை காதலுக்கு மட்டும் தான் உண்டு'' என்றாள் அர்ச்சகா.

‘‘காதலுக்குரிய பண்பகளைச் சொல்லி முடிக்க முடியாது. கவிஞர்களும் எழுத்தாளர்களும் புலவர்களும் தத்தமக்கு எட்டியவற்றைத்தான் எழுதியுள்ளார்கள். எழுதத் தெரியாதவன் தன் காதலி மீது கொண்ட பற்றையும் பாசத்தையும் யார் அறிவார்கள்? காதல் ஒவ்வொருவரது மனதிலும் புதுமையான எண்ணங்களை உருவாக்குகிறது. காதல் கொண்ட ஒவ்வொரு மனமும் பலகலைக்கழகத்தைப் போன்றது. சுவையான உணவை உண்டால் தான் ருசிக்கும். மயக்கத்தைத் தரும் கள்ளை உண்டால் தான் அதன் இன்பம் தெரியும். ஆனால் காதல் நினைத்தாலே நினைத்த சுவையைத் தரும். அதே போல நெருப்பானது தன்னைத் தொட்டால் தான் சுடும். அதன் அருகில் இருந்தால் தான் வெப்பத்தை உணரமுடியும். ஆனால் காதல் அப்படியானதல்ல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து நினைத்தாலும் சுடும். அருகில் இல்லாமல் தூர இருந்தாலும் வெப்பத்தை உணரமுடியும். இப்படியான புதுமைகள் பலவற்றைக் கொண்டது தான் காதல். இதைச் சொன்னால் பிறர் சிரிப்பார்கள். ஒவ்வொருவரும் அனுபவித்து உணரல் வேண்டும்'' என்றாள் வித்தியா.

**1159. தொடின்சுடின் அல்லது காமநோய் போல**
**விடின் சுடல் ஆற்றுமோ தீ .**

*நெருப்புத் தன்னைத் தொட்டால் சுடுமே அல்லாமல் காமநோய் போல தன்னை விட்டு நீங்கிய பின்பும் சுடுமோ...?*

## உலகில்பலர்

‘‘ காதலில் பிரிவு என்பது ஒரு பெண்ணைப் பொறுத்தவரையில் மிகவும் வேதனைக்குரியது. கொழும்பில் நிர்மலா என்று எனக்கு ஒரு தோழி இருந்தாள். நான் அவளுடன் க. பொ. த. உயர்தர வகுப்ப வரை சேர்ந்து படித்தேன். பெரிய பணக்காரி கொழும்பில் ஐந்தாறு வீடுகள் உண்டு. அதை விட ஏராளமான சொத்துக்கள் உண்டு. அவளது சகோதரர்கள் ஐந்து பேர் வெளிநாட்டில் வேலை செய்கிறார்கள். அவள் பாடசாலைக்கு குளிரூட்டிய மோட்டார் வாகனத்தில் தான்

வருவாள். சுமார் எழுபத்தைந்து இலட்சம் ரூபா பெமதியுள்ள அவர்களது பெறுமதிமிக்க வாகனத்தில் நான் அவளின் தோழி என்பதால் பயணம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. சும்மா சொல்லக்கூடாது. அந்த வாகனம் ஒரு சொர்க்கம் அப்படிப்பட்ட பெரும் பணக்காரியான நிர்மலா அவளது சகோதரன் ஒருவனின் நணபனை விரும்பினாள். அவளது சகோதரன் வெளிநாட்டிற்குச் சென்ற பின்பும் அவன் வீட்டுக்கு அடிக்கடி வருவான். அவர்களுக்குத் துணையில்லாததால் அடிக்கடி அவனை வரச் சொல்வார்கள். அவர்களது வீட்டு வேலைகளில் பெரும்பகுதியை அவனே செய்து வந்தான். அவன் மிகவும் ஏழை. வாடகை வீட்டிலே குடியிருக்கிறான். மாத வாடகை கட்ட முடியாததால் அடிக்கடி அவனது குடும்பம் வீட்டை மாற்றிக் கொள்ளும். அவ்வேளைகளில் நிர்மலாவின் தாயார் தான் உதவி செய்வாள். நிர்மலாவின் சகோதரர்கள் அவ்வப்போது அவனுக்குப் பணமும் உடைகளும் அனுப்புவார்கள். அவன் வீட்டுக்கு வந்து சென்றமையால் நிர்மலா அவனை விரும்பினாள். அவள் கவிதைகள் எழுதுவாள். அவனை வர்ணித்து பல கவிதைகள் எழுதிக் கொடுத்தாள். பின் அதைப் புத்தகமாகவும் வெளியிட்டாள். அவள் எழுதும் கவிதைகள் பல பத்திரிகையில் வெளி வந்துள்ளன. கவிதைப் புத்தகம் ஒன்று என்னிடம் உள்ளது. நாளைக்கு கொண்டு வந்து தருகிறேன் வாசித்துப் பார். அவனுடைய ஒவ்வொரு அசைவையும் அவள் கவிதையில் வடித்தாள். நான் அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்றே நினைத்தேன்.'' மூச்சுவிட்டாள் அர்சகா. பின் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தாள். அவளது கண்கள் கலங்கின.

அதைக் கண்ட வித்தியா பதறினாள். ''எனன்டீ, உனக்கு என்ன நேர்ந்தது''.

''நிர்மலாவின் வாழ்க்கை மிகவும் துன்பமானது. எவ்வளவு பணமிருந்தாலென்ன சொத்திருந்தாலென்ன நிம்மதி வருமா?. இல்லை இன்பமான வாழ்வு கிட்டுமா என்ன?. ஒரு நாள் நிரிமலாவும் அவனும் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவளது தந்தையார் சந்தேகப்பட்டு அவளது அறையைச் சோதனை செய்தார்.'' நிறுத்தினாள் அர்ச்சகா.

''பிறகு'' அவசரப்பட்டாள் வித்தியா'' ''பிறகென்ன காதல் என்று அறிந்து விட்டார்கள். உடனே அந்தப்பையனை வீட்டுக்கு வரவேண்டாம் என்று கூறி விட்டு மாப்பிளை தேடினார்கள் கிடைக்கவில்லை. ஊரில் வைத்திருக்க முடியாதென உணர்ந்த நிர்மலாவின் பெற்றோர் அவளை சகோதரன் வாழும் வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டனர். எல்லாம் இரண்டொரு நாட்களில் நடைபெற்றதால் நிர்மலாவால் எதுவும் செய்ய முடியவில்லை. அவள் அவனுடன் செல்லச் சம்மதித்த போதும் அவனது குடும்பநிலை அவளை அழைத்துச் செல்ல விடவில்லை. வெளிநாட்டிற்குச் செல்வதற்கு முதல் நாள் கோயிலுக்கு என்னைக் கூட்டிச் செல்லும்படி சொன்னார்கள். மோட்டார் வாகனத்தில் சென்றோம். கார் வாகனச் சராதி எமக்குப் பாதுகாப்பாக வந்தான். சாராதிமிகவும் நல்லவன் இழகிய மனம் படைத்தனர். அதனால் சில நிமிடங்கள் நிர்மலாவை அவனுடன் கதைக்கவிட்டான். எனினும் இருவராலும் கதைக்க முடியவில்லை, இறுதியாக அவன் சொன்னான்; ''நிர்மலா பயப்படாதே. கடவுள் எம்மைச் சேர்த்து வைப்பார்.''

நிர்மலா வெளிநாட்டுக்குச் சென்று இரண்டுவருடங்களாகி விட்டன. அவன் பித்துப்பிடித்தவன் போலத் திரிகிறான். பிரிய முடியாத பிரிவுக்கு உடன் பட்டு தலைவன் பிரிந்த போதும் துன்பத்தால் வருந்தாது மனதைக் கட்டுப்படுத்திப் பொறுத்துக் கொண்டு உலகில் பலர் உயிர் வாழ்கிறார்கள்'' என்றாள் அர்ச்சகா.

‘‘அந்த நிலை எனக்கும் வந்து விடுமோ?’’ என்று கலங்கினாள் வித்தியா.

**1160. அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவு ஆற்றிப்
பின் இருந்து வாழ்வார் பலர்.**

*பிரிய முடியாத பிரிவுக்கு உடன் பட்டு, பிரியும் போது கலங்குவதையும் நீக்கி, பிரிந்த பின் பொறுத்திருந்து பின்பும் உயிர்வாழ்வோர் உலகில் பலர்.*

## ஊற்றுநீர்

‘‘வித்தி எனக்கும் பயமாக இருக்கடீ. நான் தனிமையில் இருக்கும் போது யோசித்துக் கொண்டிருப்பேன். சில சமயம் என்னையும் அறியாமல் கதைப்பேன்; சிரிப்பேன். ஆனால் இதெல்லாம் எனக்குத் தெரியாது. நேற்றுக் காலை உணவை அம்மா எடுத்துத் தட்டில் வைத்திருக்கிறார். மூன்று நான்கு தினங்கள் அவரை நான் சந்திக்காததால் இரவு முழுவதும் நித்திரை கொள்ளவில்லை. இரவு முழுவதும் அவர் என்னை நித்திரை கொள்ள விடவில்லை. நாம் சந்திக்கும் போது தூர இருந்தே கதைப்போம். கடற்கரையிலும் பூங்களிலும் தெருக்களிலும் சனசந்தடி அதிகமாக இருப்பதால் நெருங்கியிருந்து கதைக்கப் பயம். அத்துடன் அதிக நேரம் கதைக்க முடியாது ஆனால் கனவில் வந்து அவர் தட்டி எழுப்பி என்னுடன் உறவாடுகிறார். நெருக்கமாக இல்லை. மிகமிக நெருக்கமாக அவர் எனக்கருகில் இருந்து என்னவென்ன வெல்லாமோ சொன்னார். நான் கூச்சமிகுதியால் அவதிப்பட்டேன். கனவில் வந்தாலும் மிகவும் பொல்லாதவரடி அவர். கதைக்கக் கூடாதவற்றை யெல்லாம் கதைக்கிறார். இதனால் அடிக்கடி எனது உறக்கம் கெட்டு விடுகிறது. இதனால் அன்று எழ நேரமாகி விட்டது. அம்மா சுடுநீர்ப் போத்தலில் ஊற்றி வைத்த தேநீரையும் குடிக்க மறந்து விட்டேன். சாப்பிட மறந்த போதும் எனக்குப் பசி எடுக்கவில்லை. அவரை நினைத்தால் எனக்கு நேரம் போவது. தெரிவதில்லை. அது பரவாயில்லை. எனது மனம் மட்டுமல்ல வயிறும் அவரை நினைப்பதால் உணவைக் கூட அது மறந்து விடுகிறது’’. என்று அர்ச்சகா கதைத்துக் கொண்டிருக்கும் போது வித்தியா குறுக்கிட்டுச் சொன்னாள். ‘‘நான் சரியாகச் சாப்பிட்டு எத்தனை நாளாகிறது. தெரியுமா.? அவரை நினைத்தால் பசிக்காது, தூக்கம் வராது, எந்தக் காரியமும் செய்ய முடியாது. உடல் மரத்து விறைத்து விட்ட நிலையே ஏற்படும். எத்தனையோ நாட்கள் நினைக்ககூடாதென்று கட்டுப்பாடாக இருந்தாலும் ஓரிரு நிமிடங்களில் மனம் துடிதுடித்து அவரிடம் சென்றுவிடுகிறது. அதனால் தான் எனக்கு இவ்வளவு கஸ்டம்’’ என்றாள் வித்தியா.

‘‘உன்னுடைய பிரச்சினை வெளிப்பட்டு விட்டது. ஆனால் எனது நிலை அப்படியானது அல்ல. இன்று காலை அம்மா மேசையில் மூடப்படடிருந்த உணவைத் திறந்து பார்த்து விட்டுக் கேட்டா; ‘‘ ஏன் பிள்ளை சாப்பிடவில்லை’’ என்று நான் தடுமாறினாலும் சமாளித்துக் கொண்டு பிந்தி எழுந்ததால் பசிக்கவில்லை. கொஞ்சம் பொறுத்துச் சாப்பிடுகிறேன் என்றேன். அம்மா நம்பி விட்டா’’.

‘‘இன்னொரு நாள் அவரின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். படங்கள் சேமித்து வைத்திருக்கும் சாதனத்துள் எனது பாடசாலையில் பிடித்த படம் ஒன்றிற்குக் கீழ் நகுலனின் படத்தை ஒளித்து வைத்துப் பார்ப்பேன். அம்மா

அதை அவதானித்து விட்டுக் கேட்டா; "எந்த நேரமும் படங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய். யாருடைய படம்" என்று கேட்டவாறு எனக்கு அருகில் வந்தா. நான் தடுமாறிப்போனேன். எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது அவரின் படத்தை உள்ளே தள்ளி விட்டு காட்டினேன். அம்மா வாங்கிப் பார்த்துவிட்டு பாடசாலை வாழ்வை உன்னால் மறக்க முடியவில்லை. என்று கூறி விட்டுச் சென்றா. இப்படி எத்தனையோ முறை நான் அகப்படாமல் தப்பியுள்ளேன். அவர் மீது எனக்கிருக்கும் காதல் என்ற நோயை பிறர் அறியாமல் என்னால் மறைக்க முடியும். ஆனால் இந்நோயானது இறைக்க இறைக்க சுரக்கும் கிணற்று நீர் போல் இதயத்துள் சுரந்து பெருகிக் கொண்டே இருக்கிறது. எந்த வகையாலும் இதை என்னால் தடுக்க முடியவில்லை. என்ன செய்வது" பெருமூச்சு விட்டாள் அர்ச்சகா.

"உனது நிலை இத்தகையது ஆனால் எனது நிலை எப்படி இருக்கும். என்று நினைத்துப் பார்த்தாயா? காதல் இனிமையானது பிரிவு கொடுமையானது" என்று அழுதாள் வித்தியா.

**1161. மறைப்பேன்மன் யான்இ∴தோ நோயை; இறைப்பவர்க்கு**
**ஊற்று நீர் போல மிகும்.**

*இக்ககாம நோயைப் பிறர் அறியாமல் நான் மறைப்பேன். ஆனால் இறைக்க இறைக்க ஊறும் ஊற்று நீரைப் போல இது மேலும் மேலும் பெருகிக் கொண்டிருக்கிறது.*

## முடியவில்லை

பல நாட்களாக வித்தியாவைக் காணாமையால், வித்தியாவைத் தேடி வந்தாள் வளர்மதி. வளர்மதி வித்தியாவின் உயிர்த் தோழி. ஆரம்ப வகுப்பில் இருந்து பல்கலைகழகம் வரை ஒன்றாகப் படித்தவள். வித்தியா கஜேந்திரனைப் பற்றிக் கூறுவாள். வளர்மதி தனது காதலனான ஆதவனைப் பற்றிக் கூறுவாள். இருவரும் தமக்குள்ள இன்ப துன்பங்களைப் பகிர்ந்து இன்பமடைவார்கள்.

வளர்மதிக்கு ஆதவனின் மேல் தீவிரமான காதல் ஏற்பட்டது. ஆனால் ஆதவன் ஆரம்பத்தில் அவளை விரும்பவில்லை. தானுண்டு தனது படிப்புண்டு என்று இருந்தான். அத்துடன் அவனுக்குப் பெண்களைக் கண்டால் அளவுக்கதிகமான பயம், வெட்கம், நாணம் யாராவது பெண்கள் வலியச் சென்று கதைத்தாலும் கதைக்கமாட்டான். தலையைக் குனிந்து கொண்டு செல்வான்.

"உனது கையைப் பிடித்து யாராவது ஒரு பெண் இழுத்தாலும் நீ முனிவன் மாதிரித்தான் இருப்பாய்" என்று கஜேந்திரன் அடிக்கடி அவனைக் கேலி செய்வான். வளர்மதியின் பெரு முயற்சியின் பயனாக ஆதவன் அவளோடு தலை குனிந்தபடி நின்று இரண்டொரு வார்த்தைகள் பேசுவான். அதற்குள் அவனது உடல் வியர்வையால் நனைந்து விடும். வளர்மதி ஒவ்வொரு நாளும் என்னென்ன கதைக்க வேண்டு மென்று திட்டம் போட்டு வந்து கதைப்பாள். அவள் கதைக்கும் கதைகளை நடுங்கிய படி கேட்பான் ஆதவன். அவள் கேட்கும் கேள்விகளுக்கு "ம்" "சரி" ம் என்று மட்டும் சொல்வான். அதனால் வளர்மதிக்கு ஏமாற்றம் தான் கிடைக்கும். எனினும் அவனின் மேலுள்ள மோகத்தால் அவள்

அவனைச் சுற்றிச் சுற்றி வருவாள் வாயோயாமல் கதைப்பாள். ஆனால் ஆதவன் திகைத்துப் போய் நிற்பான். இருவரும் கதைப்பதை யாராவது கண்டு விட்டு வீட்டாருக்குச் சொன்னால் பெற்றோர் கண்டிப்பார்கள். என்ற பயம் அவனது நெஞ்சை வாட்டும். காதலிப்பது கேவலமானது; பெற்றோரின் மனதைப் புண்படுத்துவது; பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க அவர்கள் தீர்மானிக்கும் பெண்ணைத் திருமணஞ் செய்தால் தான் வாழ்வு சிறக்கும் என்று நினைப்பவன் ஆதவன். வளர்மதி முழுமூச்சுடன் விடாப்பிடியாக அவனைச் சுற்றிச் சுற்றி வந்ததாள் ஒருவாறு மெல்ல அவன் வளர்மதியுடன் சிரிக்கத் தொடங்கினான். பின் மெது மெதுவாக இரண்டொரு வார்த்தைகள் கதைத்த போதும் இன்னும் சரியான நிலைக்கு அவன் வரவில்லை.

வித்தியாவின் வீட்டுக்கு வந்த வளர்மதி நெடுநேரமாக வித்தியாவைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அர்ச்சகா அங்கு நின்றமையால் அவளால் வித்தியாவுடன் கதைக்க முடியவில்லை. ‘‘யார் இவள் ?இங்கு ஏன் நிற்கிறாள். வந்தால் வந்த விஷயத்தை முடித்துக் கொண்டு போக வேண்டியது தானே’’ என்று நினைத்தாள். வெகு நேரமாக வளர்மதி பேசாததால் வித்தியா சொன்னாள்; ‘‘அவள் எனது இனத்தவள். இவ்வளவு காலமும் கொழும்பில் இவர்களது குடும்பம் இருந்தது. ஒரு மாதத்திற்கு முன் தான் இங்கு வந்தனர். அந்த ஒரு மாதத்துக்குள் நகுலனை வளைச்சுப் பிடித்து விட்டாள். எத்தனை பெட்டையள் நகுலனில் ஆசைப்பட்டவையென்று உனக்குத்தெரியும் தானே. இவள் அதிட்டக்காரி இவள் நம்பிக்கைக்குரியவள் அத்துடன் ஆதவனைப் பற்றி இவளுக்குச் சொல்லிச் சிரிக்கிறனான். நீ கதைக்க வேண்டியதைச் சொல்லு. இப்ப இவள் தான் எனக்கு உதவி’’ விரத்தியுடன் சிரித்தாள் வித்தியா.

‘‘கஜேந்திரனை நேற்றுக் கண்டனான் எல்லாம் சொன்னவர். நல்லாய் மெலிஞ்சிட்டார். தாடியும் ஆளும் பார்க்கச் சரிக்கவில்லை’’ என்ற வளர்மதி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுச் சொன்னாள்; ‘‘ எனது காதல் நோயை பிறர் அறியாமல் என்னால் மறைக்க முடியவில்லை. எனது இனத்தவன் ஒருவன் தன்னைத் திருமணம் செய்யச் சொல்லி வற்புறுத்துகிறான். வீட்டாருக்கும் விருப்பம். என்னுடைய நடத்தையைப் பார்த்து வீட்டார் சந்தேகிக்கிகிறார்கள். எப்படி இதை மறைக்கிறது. அத்துடன் இந்நோயை எனக்குத் தந்த என்னுடைய அவருக்கு எப்படிச் சொல்கிறது. சொல்ல நாணமாக இருக்கிறது’’ என்று சிணுங்கினாள் வளர்மதி.

**1162. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு**
**உரைத்தலும் நாணுத் தரும்.**

*இக்காம நோயை பிறர் அறிந்து கொளளாமல் மறைக்கவும் முடியவில்லை; இந் நோயை எனக்குத் தந்த காதலருக்குச் சொல்லவும் நாணமாக இருக்கிறது.*

## காவடித்தண்டு

‘‘ம்’’ காதலித்தால் கவலைதான். எமது பிரதேசப் பெற்றோரில் பெரும்பாண்மையானவர்கள் காதலிப்பது தவறு என்று நினைக்கிறார்கள். ஒரு பெண் காதலிக்கும் ஆண் பெரிய பணக்காரனாகவும், உயர்ந்த

உத்தியோகத்தனாகவும் இருந்தாலும் கூட தமது கௌரவத்திற்காக அக்காதலை பெற்றோரும் உறவினர்களும் எதிர்கிறார்கள். அதே போல் ஓர் ஆண் உயர்ந்த குடும்பத்திலுள்ள பெண்ணை விரும்பினாலும் கூட ஆரம்பத்தில் எதிர்க்கிறார்கள். ஆனால் ஒரு ஆணோ பெண்ணோ தகுதியில்லாதவர்களை விரும்பி உடன் சென்றால் பின் ஏற்றுக் கொள்கிறார்கள். இது ஏன்'' என்று கேட்டாள் அர்ச்சகா.

வித்தியா சிரித்தாள். பின்பு ''அப்போ என்னைக் கஜேந்திரனுடன் செல்லச் சொல்கிறாய்'' என்றாள்.

''விளங்கிக் கொண்டால் சரி. எந்தப் பெற்றோரும் காதலை மகிழ்வுடன் வாழ்த்தி வரவேற்றதாக நான் அறியவில்லை. காதலிக்கிறது குற்ற மென்றும், அது குடும்பக் கௌரவத்தைப் பாதிக்கு மென்றும் தான் பலர் நினைக்கிறார்கள்'' என்றாள் அர்ச்சகா.

''இப்ப நீ இப்படிச் சொல்லுவாய். நகுலனைத் திருமணம் செய்து பிள்ளை குட்டிகள் பிறந்த பிறம் நீயும் இப்படித்தான் சொல்லுவாய். ஏனென்றால் காதலித்துத் திருமணம் செய்யிற பெற்றோர்தான் காதலை முழு மூச்சுடன் எதிர்க்கிறவை'' என்றாள் வித்தியா.

''நான் எதிர்க்க மாட்டன்'' நாணிக் கோணினாள் அர்ச்சகா.

''நாங்கள் இருவரும் வந்தவளைக் கவனிக்காமல் கதைக்கிறம். நீ சொல்லு மதி என்றாள் வித்தியா.

''ஆதவனோடு கலகலப்பாக ஐந்து நிமிடங்கள் கதைக்க முடியாமல் இருக்குதடி. என்னைக் கண்டால் பேயைக் கண்ட மாதிரி வெருளுறார். போனவாரம் யாழ்ப்பாணத்திலுள்ள கடையொன்றுக்குள் கண்டேன். அவர் என்னைத் தெரிந்தமாதிரியே காட்டிக் கொள்ளவில்லை. நான் அவரின் அருகில் சென்றேன். அவரின் உடல் நடுங்குவது எனக்குத் தெரிந்தது. அவர் பொருட்களையும் வாங்காது சென்று விட்டார். நான் அவரைப் பின் தொடர்ந்து சென்று மெல்ல அவரின் பெயரைச் சொல்லி அழைத்தேன். நின்று திரும்பிப் பார்த்தார். அருகில் சென்று; ''ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்டேன்'' அவர் அவசரமாகப் போக வேண்டு மென்றார். எனக்கு கோபமும் அழுகையும் வந்தது. கண்கள் கலங்கிவிட்டன. ''வேறு எதுவும் சொல்ல வேண்டாம். நான் உங்களைக் காதலிக்கிறேன். உங்களுக்கு என'னைப் பிடித்திருக்கா.'' என்று கேட்டேன். 'பிடித்திருக்கு' என்று கூறி விட்டுச் சென்று விட்டார்'' என்றாள் மதி.

கஜேந்திரனாக இருந்தால் வித்தியாவைக் கண்டவுடன் பெருமகிழ்வடைந்து அவளுக்கு ஏதாவது ஒரு பொருள் வாங்கிக் கொடுத்திருப்பார். அத்துடன் குளிர்பானக் கடைக்கு அழைத்துச் சென்று குளிர்பானமும் வாங்கிக் கொடுத்திருப்பார். இவ்வளவுக்குமிடையில் பத்துத்தர மென்றாலும் அவளைத் தொட்டிருப்பார்'' என்றாள் அர்ச்சகா.

பெருந்துயரத்தின் மத்தியிலும் வித்தியாவுக்குச் சிரிப்பு வந்தது; ''அவள் தன்னுடைய அனுபவத்தைச் சொல்கிறாள். கஜேந்திரன் கண்ணியமானவர். என்னைத் தொட மாட்டார். நகுலன் தான் தொட்டுப் பாத்திருக்கிறான்'' என்றாள் வித்தியா.

“என்னால் அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவரைத் தேடி அவர் செல்லும் இடங்களுக்குச் செல்வேன். அவர் என்னுடன் கலகலப்பாகக் கதைக்காததால் அவருடன் கதைக்க நாணமாக உள்ளது. அவரின் நிலையால் வாடி மெலிந்த உடம்பில் என் உயிரைக் காவடித்தண்டாய்க் கொண்டு காதல் நோய் ஒரு பக்கமாகவும் நாணம் மற்றொரு பக்கமாகவும் தொங்கிச் சித்திரவதை சொல்கிறது” என்றாள் வளர்மதி.

**1163. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்**
**நோனா உடம்பின் அகத்து.**

*காம நோயால் வாடி மெலிந்த என் உடம்பில் எனது உயிரைக் காவடித் தண்டமாகக் கொண்டு காம நோயும் நாணமும் இரு பக்கமும் தொங்குகின்றன.*

## தோணி இல்லை

அழகான பெண்களைக் கண்டால் அசடு வழிய அலட்டுற இக் காலத்து ஆண்களுள் ஆதவன் வித்தியாசமானவராக இருக்கிறார். இப்படியும் ஓர் ஆண்மகன் இருப்பானா...? ஓர் ஆண் நான்கு நாட்கள் பின்னால் திரிந்தால் மயங்கும் பெண்கள் இருக்கும் இக்காலத்தில் பல மாதங்கள் பின்னால் திரிந்தும் பயப்படும் ஆண்கள் இருக்கிறார்களா? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது” என்றாள் அர்ச்சகா.

“நல்லூத் திருவிழாவில் நான்கு நாட்கள் நகுலன் உன் பின்னால் திரிய நீ மயங்கி விட்டாய். ஆனால் ஆதவன் அப்படியில்லை. ஆண்மையுள்ளவன் கற்பு நெறி தவறாதவன்” என்றாள் வித்தியா. அர்ச்சகா பலமாகச் சிரித்தாள்.

எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் அவருடன் கதைக்க முடியவில்லை. காயத்திரி ஆதவனின் தங்கையின் சிநேகிதி. அடிக்கடி ஆதவனின் வீட்டுக்குச் செல்பவள். கன நாட்களுக்குப் பின்பு தான் காயத்திரி ஆதவனின் தங்கை கவிதாவுடன் நெருங்கிய நட்புப் பூண்ட விஷயம் எனக்குத் தெரிய வந்தது. காயத்திரிக்கு எனது காதல் விஷயங்களைக் கூறி உதவி செய்யும்படி கேட்டேன். அவள் தன்னுடன் ஆதவனின் வீட்டுக்கு வரும்படி சொன்னாள். ஒரு நாள் நான் அவளுடன் ஆதவனின் வீட்டுக்குச் சென்றேன். அப்பொழுது தான் ஆதவன் குளித்து விட்டு ஈரம் துவட்டியபடி முற்றத்தில் நின்றார். எங்களைக் கண்டதும் விரைவாக உள்ளே சென்று விட்டார். நல்ல உறுதியான உடல், உரமான தோள்கள், சிவந்த நெஞ்சில் இருந்த கருமையான முடி என்னைச் சற்றுக்கிறங்கச் செய்தது. அந்த ஒரு கணக்காட்சியை இப்போ நான் கனவில் தான் காண்கிறேன்....” நிறுத்தினாள் வளர்மதி. அவளது விழித்திரைக்குள் ஆதவன் மேற் சட்டை இல்லாமல் தோன்றினான்.

அர்ச்சகா அவளைப் பார்த்தாள். அவளது சிவந்த கன்னங்கள் மேலும் சிவந்து கொண்டிருந்தன.; “ உன்னைக் கண்டு விட்டு அவர் ஓடி ஒளித்தாரா...? நீ அவருடன் கதைக்கவில்லையா?” என்று கேட்டாள் அர்ச்சகா.

“வீதியில் கண்டாலே சிரிக்கமாட்டார். காணாதது போலச் சென்று விடுவார். அப்படியானவர் வீட்டில் கதைப்பாரா.....? காயத்திரி அவர் வெளியெ வரட்டும். என்று பல மணி நேரம் காத்திருந்தாள். ஆனால் அவர் வரவில்லை. ஆனால் கவிதாவுக்கு என்னைப் பிடித்து விட்டது. கலகலப்பாக கதைத்தாள். அவளுக்குப் பூக்களின் மீது கொள்ளை ஆசை என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர்களின் வீட்டு முற்றத்தில் விதம் விதமான பூங்கன்றுகள் பூத்துச் சிலிர்த்திருந்தன. அவளிடம் இல்லாத சில பூக்கன்றுகள் என்னிடம் இருப்பதாகச் சொன்னேன். உடனேயே அவள் என்னுடன் வரப் புறப்பட்டாள் காயத்திரி; இப்பொழுது நாங்கள் வேறு ஓர் இடம் செல்கிறோம். நாளைக்கு உன்னை வந்து அழைத்துச் செல்கிறோம் என்றாள். கவிதா எனது வீட்டு விலாசத்தைக் கேட்டாள். நான் கொடுத்தேன். அன்று மாலை அவள் வீட்டுக்கு வரு முன் நான் பூத்தடிகளை வெட்டிக் கொண்டு அவளின் வீட்டுக்குச் சென்றேன். வாசலில் ஆதவன் இருந்தார். என்னைக் கண்டதும் பயந்து விட்டார். “கவிதா எங்கே? அவளிடம் வந்தேன்” என்றேன். அவர் பதில் எதுவும் கூறவில்லலை. உள்ளே சென்றார். அது எனக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. கவிதா மகிழ்வுடன் வந்து பூத்தடிகளைப் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தாள். தேநீரும் தந்தாள். ஏமாற்றமாக இருந்தாலும் அவரை ஒரு முறை கண்டது இன்பத்தைத் தந்தது. என் நெஞ்சில் காதல் நோயாகிய பெருங்கடல் இருக்கிறது. ஆனால் அதை நீந்திக் கடப்பதற்கு தோணி இல்லையே. தோணியாக இருக்க வேண்டியவர் களிமண்ணாக இருக்கிறார்” என்று பெரு மூச்சு விட்டாள் வளர்மதி.

**1164. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்**
**ஏமப் புணைமன்னும் இல்.**

*காமநோயாகிய பெருங்கடல் இருக்கிறது. ஆனால் அதைக் கடப்பதற்குரிய தோணி இல்லை.*

## என்ன செய்வார்

வித்தியாவும் அர்ச்சகாவும் வளர்மதியும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். அன்று ஆவணிச் சதுர்த்தி. நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய ஆவணிச் சதுர்த்தித் திருவிழாவை வித்தியாவின் குடும்பமே செய்து வந்தது. அது கஜேந்திரனுக்கத் தெரியும். இரண்டு வருடங்களாக கஜேந்திரன் ஆவணிச் சதுர்த்திக்கு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்திருக்கிறான். அவன் வந்தால் அவனுக்கெனப் பிரத்தியேகமாகப் பிரசாதத்தை வாழையிலையில் வைத்து வித்தியா கொடுப்பாள். அவ் வேளையில் பிரசாதம் வாங்கும் சாட்டாகக் கஜேந்திரன் அவளது கையையும் சேர்த்துப் பிடிப்பான். சனக்கூட்டத்திற்கு மத்தியில் வாழையிலையோடு சேர்த்துப் பிடித்தமையை விலக்க முடியாது. அவதிப்படுவாள் வித்தியா. அப்போது அவளுக்குக் கடும் கோபம் வரும். எனினும் எதுவும் செய்ய முடியாது தவிப்பாள். மறு நாள் அவனைத் தனிமையில் சந்திக்கும் போது காரசாரமாயத் திட்டுவாள்; “பகிடி சேட்டைகளுக்கு ஓர் அளவு இருக்க வேண்டும். நேற்றுக் கோயிலில் இரண்டு நிமிடம் வரை வாழையிலையோடு சேர்த்துக் கையைப் பிடித்தீர்கள். எவ்வளவு சனம் கூடி நின்றதுகள். யாராவது கண்டால் நான் அம்மாவுக்கு என்ன சொல்ல முடியும்?. மறு நாள் கொழும்புக்கு அனுப்பி விடுவா. போன வரிசமும் இப்படித்தான் செய்தனீங்கள். உங்களுக்கு மனச்சாட்சி

என்று ஒன்று இல்லையா.? தனிமையில் நாம் சந்திக்கும் போது சேட்டை சரசம் விட்டால் பரவாயில்லை. ஆட்களுக்கு முன்னால் எனக்கு வாற கோபத்திற்குச் செருப்புத்தான் கழற்ற வேண்டும்.''

''மனிசீன்ரை தாமரைப்பூப் போன்ற கால்களில் அணியப்பட்ட செருப்பு எனது கன்னங்களில் பட்டால் எவ்வளவு இன்பம் தெரியுமா?'' என்று சிரிப்பான்.

''உங்களுக்குக் கோபமே வராதா....? இப்படி ஏன் அசடு வழியுறியள்'' சீறினாள் வித்தியா.

''கோபம் வரும் வேளையில் உமது வினப்புக் கூடுகிறது. அழகான சிவந்த கன்னங்கள் மேலும் சிவக்க, சிவந்த உதடுகள் துடித்து விளையாட, கண்கள் நளின பாவங்களுடன் அசைய எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா..? அந்த அழகான அந்த கன்னத்தில் ....'' முடிக்காமல் சிரித்தான் கஜேந்திரன்.

''உங்களுக்கு எந்த நேரமும் அந்தத் தியானம் தான். 'சீ' நீங்கள் ஓா் ஆண்மையுள்ள ஆம்பிளையா....?''

''நீா் எதையும் சொல்லலாம்'' சிரிப்பான் கஜேந்திரன். கோயிலுக்கு வந்த வித்தியா சுற்றி வரப் பாா்த்தாள். கஜேந்திரனைக் காணவில்லை. முன்னைய வருடங்களிலென்றால் அவள் வருவதற்கு முன்பே வந்து விடுவான். அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. மனதுள் பொங்கிப் பெருகிய துயரத்தைக் கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை. பூசை முடிந்த பின்பு குருக்கள் வீபூதி கொடுத்தாா். மகா கணபதிக்கு நிவேதிக்கப்பட்ட பண்டங்கள் தாம்பாளத் தட்டில் கிடந்தன. வித்தியா ஒரு தலை வாழை இலையை எடுத்து இரண்டு மோதகங்களையும், மூன்று வடைகளையும் பொங்கலையும் எடுத்து அதில் வைத்து மடித்து அா்ச்சகாவிடம் கொடுத்து விட்டு மெதுவாகச் சொன்னாள். ''கஜேந்திரன் வந்திருப்பாா். பாா்த்துக் கொடு''.

அா்ச்சகா அதைப் பெற்க் கொண்டாள். அன்று கஜந்திரன் கோயிலுக்கு வரவில்லை. கோயிலில் இருந்து புறப்படும் போது நகுலன் அங்கு வந்து ஒரு கடிதத்தை அா்ச்சகாவிடம் கொடுத்தான்.

வீட்டுக்கு வந்த வித்தியா கடிதத்தை யாரும் காணதபடி பிரித்துப் பாா்த்தாள்; ''என் அன்பே! என் உயிரே! நான் கோயிலுக்கு வந்து உமக்குத் துன்பத்தைத் தர விரும்பவில்லை....'' மேலே வாசிக்க முடியாது தடுமாறினாள் வித்தியா; ''அா்ச்சகா இன்பமான நட்பின் போதே பிரிந்திருந்து பெருந்துன்பத்தை எனக்குத் தரும் எனது காதலா் தாங்க முடியாத துன்பத்தைத் தரும் பகை ஏற்பாட்டால் எனக்கு எத்தகைய பெரும் துன்பத்தைத் தருவாரோ'' கலங்கினாள் வித்தியா.

**1165. துப்பின் எவன்ஆவா் மன்கொல் துயா்வரவு
நட்பினுள் ஆற்று பவா்.**

*இன்பமான நட்பின் போதே பிரிவால் பெருந் துன்பத்தை உண்டாக்கும் காதலா் துன்பம் தரும் பகையின் போது என்ன செய்வாரோ.*

## பெரியது

சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுக் கடிதத்தை ஆரம்பத்தில் இருந்து வாசித்தாள் வித்தியா; என் அன்பே! என் உயிரே! வாசித்து விட்டுக் கண்களை மூடினாள். வித்தியா. அவளது மூடிய கண்களுக்குள் அவ்வூர்க் கடற்கரை தோன்றியது. கடற்கரையை அண்டிய தென்னஞ் சோலை, அந்தக் குளிர்மையான சோலையின் கரையில் கைவிடப்பட்ட ஒரு மீன்பிடிவள்ளம் தெரிந்தது. கஜேந்திரன் பச்சை நிறக்கோடுகள் போட்ட வெள்ளைச் சட்டை அணிந்திருந்தான். அந்த வள்ளத்தின் மீது ஒய்யாரமாகச் சாய்ந்து அமர்ந்திருந்த அவன் முன்பை விட மிகவும் அழகாகத் தோன்றினான். முதன் முதலாக அன்று அவன் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி அவனின் அழகை மிகைப்படுத்திக் காட்டியது.

''வித்தி'' மெதுவாக அழைத்தான் கஜேந்திரன் அவனது வெப்பமான மூச்சுக்காற்று வித்தியாவின் கன்னங்களை தழுவிக் கடற்காற்றோடு கலந்தது; ''உம்மைப் பார்த்துக் கொண்டு எவ்வளவு நேரமும் இருக்கலாம். நீர் தான் அம்மாவுக்குப் பயந்து ஐந்து பத்து நிமிடங்களில் ஓடி விடுகிறீர். நீர் சென்ற பின்பும் நான் இவ்விடத்தில் அமர்ந்திருப்பேன். இந்த வள்ளத்தில் சாய்ந்திருந்தால் உமது முதுகில் சாய்ந்திருப்பதைப் போன்ற பிரேமை எனக்கு ஏற்படும். எமது காதலை இந்த வள்ளம் தானே வளர்த்தது. இந்த வள்ளத்திற்குப் பேசும் சக்தியிருந்தால் நாம் கதைப்பதையெல்லாம் மற்றவர்களுக்குச் சொல்லிச் சிரிக்கும். நான் கதைக்கும் கதைகள்...'' கஜேந்திரன் சிரித்தான்.

அவனது வெண்நிறப்பற்கள் மின்னலைப் போலப் பளீச்சிட்டன. உதடுகள் பிரிந்து நெடுந்தூரம் சென்றதால் இரு கன்னங்களிலும் குழி விழுந்தன. அவன் சிரிக்கும் போது குழிவிழும் கன்னங்களின் வனப்பில் மயங்கி அவனையே பார்த்துக் கொண்டு நிற்பாள் வித்தியா.

''இன்று நீர் மிகவும் அழகாக இருக்கிறீர். தலை சீவிய முறையும் இன்று கொள்ளை அழகாயிருக்கு. எனக்கு வேலை கிடைத்திருந்தால் கட்டிப்பிடித்துத் தூக்கிக் கொண்டு வீட்டை போயிடுவன்'' பெருமூச்சு விட்டான் கஜேந்திரன்.

''வேலை இல்லாதவர்கள் சீவிக்கவில்லையா. எங்களது வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு குடும்பம் ஒன்று புதிதாக வந்து குடியேறியிருக்கு. இருவரும் காதலித்திருக்கிறார்கள். இரண்டு வீட்டுப் பெற்றோருக்கும் அது விருப்பமில்லை. அதனால் இருவரும் புறப்பட்டு வந்து திருமணப்பதிவைச் செய்து விட்டுத் தனியாக வாழ்கிறார்கள். பையன் ஒரு வைத்தியரின் மகன். பட்டதாரி ஆனால் வேலை இல்லை. கச்சான் கடலை விற்கிறார்கள். நான் அவர்களுடன் கதைப்பேன். மிகவும் அன்பாக வாழ்கிறார்கள். ''காதல் தான் வாழ்வு. என்னால் இவளைப் பிரிந்து வாழ முடியாது. எனது பெற்றோர் பெருஞ்சீதனத்துடன் எனக்குப் பெண் பார்த்தனர். எனக்குப் பெற்றோரை விட இவள் தான் முக்கியம். அதனால் அழைத்து வந்து விட்டேன். இரண்டொரு தினங்கள் பணமில்லாததால் கஸ்டப்பட்டோம். நான் இவளுக்காக எதையும் செய்வேன். பொய் சொல்லாது களவெடுக்காது வாழ்வது தான் முக்கியமே தவிர எந்தத் தொழிலையும் செய்யலாம்'' என்றான். அதே போல என்னைக் கூட்டிக் கொண்டு போங்கோ. எனக்காக உங்களால் கடலை விற்க முடியாத...?''

“என்னடீ கடிதத்தை வாசிக்காமல் முகட்டைப் பார்த்துக் கொண்டு முணுமுணுத்துச் சிரிக்கிறாய்” என்றவாறு வித்தியாவின் தோளைப் பற்றினாள் அர்ச்சகா. வித்தியா திடுக்கிட்டுப் போனாள். சற்றுத் தடுமாறியபடி “என்ன?” என்று கேட்டாள். அர்ச்சகா சிரித்தாள். “என்ன முணுமுணுக்கிறாய்” என்றாள்.

“நான் அவருடன் கூடி இருக்கும் போது கடலளவு இன்பத்தை அனுபவிப்பேன். அவரைப் பிரிந்தால் கடலை விடப் பெருந்துன்பம் என்னை வருத்துகிறது. அவரது கடிதத்தை வாசித்த போது பழைய சம்பவமொன்று நினைவில் வந்து இனித்தது” என்றாள் வித்தியா.

**1166. இன்பம் கடல்மற்றுக் காமம்; அ.்.துஅடும்கால்**
**துன்பம் அதனின் பெரிது.**

*காமம் இன்பம் தரும்போது அதன் மூலம் வரும் இன்பம் கடலைப் போன்றது; அது வருத்துகின்ற பொழுது அதன் துன்பம் கடலை விடப் பெரியது.*

## பெருவெள்ளம்

வித்தியாவின் முகத்தைப் பார்த்தாள் அர்ச்சகா. அவளின் முகத்தில் முன்பு தென்பட்ட துன்பத்தின் சுவட்டைக் காணவில்லை. முகம் பிரகாசமாக இருந்தது. அவளின் கண்களில் என்றுமில்லாத ஒரு மருட்சி. நினைவுகளுக்கே இவ்வளவு மாற்றமென்றால் நேரில் கண்டால் எப்படி இருக்கும். நினைக்க அர்ச்சகாவுக்கு மனம் இனித்தது. மூன்று தினங்களுக்கு முன்பு அர்ச்சகா நகுலனைச் சந்தித்தாள். அந்தச் சந்திப்பு அவளின் மனத்திரையில் அசைந்தது.

“வித்தியா பாவம். அவளை அவளது தாயும் மாமனும் கொடுமைப் படுத்துகின்றனர். அவளை அழைத்துச் செல்லத் துணிவில்லாத கஜேந்திரனுக்கு ஏன் காதல். வித்தியாவைத் தான் மறந்து விட்டதாகவும், அங்கஜனை திருமணம் செய்யுமாறு கூறும் ஒரு கடிதம் கஜேந்திரனிடம் வாங்கி வந்து தாருங்கோ. வித்தியாவை நான் சமாளிக்கிறேன். அவள் படும் வேதனையை என்னால் பார்க்க முடியவில்லை”. ஆத்திரத்துடன் கூறினாள் அர்ச்சகா.

நகுலன் அழகாகச் சிரித்தான்; “உமக்கு யாரோ படும் வேதனையைப் பார்க்க முடியவில்லை. ஆனால் நான்படும் வேதனையைப் பார்க்க முடிகிற இரண்டு கிழமை நான் உம்மைச் சந்திக்கவில்லை. நான் படும் வேதனை உமக்குப் புரியுதா. ஒரு கணம் கூடப் பிரியாது உம்மோடு நான் இருக்க வேண்டும். உம்மோடு இருக்கும் வேளையில் தான் நான் உயிரோடு இருக்கிறேன். மற்றும் நேரங்களில் உயிருள்ள காய்ந்த மரக்கட்டை போலத் தான் இருக்கிறேன்... நகுலன் பேசிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா கோபத்துடன் குறுக்கிட்டாள்; “ஓர் உயிர் நண்பனும் அவனது காதலியும் சித்திரைவதைப்படுகிறார்கள். எதைச் சொல்லியும் உங்களுக்குப் புரியுதில்லை” கோபத்துடன் கூறினாள் அர்ச்சகா.

“தனக்குப் பின் தான் தானம் என்பார்கள். நான் படும் சித்திரவதையை முதலில் நீக்கும். பிறகு நண்பனைப் பற்றியோசிப்போம்” என்றான் நகுலன்.

“நட்பு, காதல் எல்லாம் சுயநலம். நாளைக்கு உங்களுக்கும் இப்படி ஒரு நிலை வந்தால் யார் உதவி செய்யப் பொகிறார்கள்” .

“அப்படி ஒரு நிலை எனக்கு வராது.?” என்று நகுலன் கூறிக் கொண்டிருக்கும் போது அர்ச்சகா கோபத்துடன் குறுக்கிட்டாள்”. நீங்கள் பெரிய இவர் இவருக்கு வராதாம்..”

“நான் பெரிய இவர் தான். உமக்கு எந்தத் துன்பமும் வர நான் விடமாட்டன். உமக்குப் பூவால் எறிந்தால் கூட எனக்க வலிக்கும். கஜேந்திரன் முழு மடையன் வடிகட்டிய முட்டாள். உமக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் முகடு பிரித்தாவது உமது வீட்டுக்குள் நுழைந்து உம்மைத் தூக்கிக் கொண்டு வந்து விடுவன். உமக்கு அதில் சந்தேகமிருந்தால் இப்பவே என்னுடன் வீட்டை வாரும். தொழில் இல்லை என்பதெல்லாம் ஒரு சாட்டு. உலகத்தில் எத்தனையாயிரம் தொழில்கள் இருக்கு. அதில் ஒன்றைச் செய்து வித்தியாவைக் காப்பாற்ற முடியாதோ” சற்று உணர்ச்சி வசப்பட்டான் நகுலன்.

அர்ச்சகா பூரித்துப் போனாள். இவ்வளவு தீவிரமாக என்னை அவர் நேசிக்கிறாரா?” என நினைத்துக் கொண்டு; “என்ன தொழில் உங்களுக்கத் தெரியும்” என்றாள்.

“கூலி வேலை செய்வன். விறகு கொத்துவன். இன்னும் பல இருக்கு. நான் விறகு கொத்துவது உமக்கு வெட்கமாக இருக்கும் என்று நினைக்கிறீரா..?

“இல்லை இல்லை...” அவசரமாக மறுத்தாள். “உங்களைத்தான் நான் விரும்புறன். உங்களது தொழிலை அல்ல” அர்ச்சகாவின் உதடுகள் அசைந்தன.

“என்னடி நீயும் முணுமுணுக்கிறாய். என்னைப் பகிடி பண்ணி விட்டு நீ....” சிரித்தாள் வித்தியா.

காதலால் வந்த பெரு வெள்ளத்தைப் போன்ற நோயை என்னால் நீந்திக் கடக்க முடியாததால் நான் நடு இரவிலும் உறக்கம் வராமல் தவிக்கிறேன். அவரின் நினைவுகள் என்னதைத் தூங்க விடுவதில்லை” என்றாள் அர்ச்சகா.

**1167. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்**
**யாமத்தும் யானே உளேன்.**

*காமம் என்னும் வெள்ளத்தை நீந்திய போதும் அதன் கரையை நான் காணவில்லை; நள்ளிரவிலும் நான் தனியே இருக்கிறேன்.*

## துணை

“கண்களை மூடினால் கண்களுக்குள் நின்று சிரிக்கிறார். கண்களைத் திறந்தால் மனதுக்குள் இருந்து இனிக்கிறார். இதனால் என்னால் உறங்கவும்

முடியவில்லை, விழித்திருக்கவும் முடியவில்லை. சற்றுக்கண்ணயர்ந்தால் எவ்வளவு சேட்டை சரசம் விடுகிறார் தெரியுமா? அவரது இந்தச் செயல்களால் சிறிது நேரம் கூடக் கண்ணயர முடியவில்லை. தினமும் சந்தித்துக் கதைத்தாலும் இரவில் கண்களுக்குள் வந்து விடுகிறார். பல நாட்களுக்கொருமுறை சந்திக்கத் தீர்மானித்தாலும் இருபத்து நான்கு மணிநேரமும் கண்களுக்குள்ளும் மனதுக்குள்ளும் வந்தமர்ந்து ஓயாமல் தொந்தரவுகள் செய்கிறார். என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை'' என்றாள் அர்ச்சகா.

''உன்னோடு அவர் கதைத்துச் சிரிப்பதால் தான் உனக்கு இந்த நிலை. வந்ததாக கூறுகிறாய். என்னைக் கண்டதும் வெருண்டோடும் ஆதவன் இரவில் எனது கனவில் வந்து உனக்கு நகுலன் செய்யும் தொந்தரவை விடக் கூடுதலான தொந்தரவுகளைச் செய்கிறார். நேரில் என்னைக் கண்டதும் வெட்கப்பட்டு தலை குனிந்து வேர்த்து விறுவிறுத்து நிற்கும் அவர் கனவில் வந்து செய்யும் அட்டகாசங்களைச் சொல்லி முடிக்க முடியாது. எந்நேரமும் தூக்கமின்றி அவர் நினைவாகவே இருக்கும் நான் நேற்று மாலை சற்றுக் கண்ணயர்ந்து விட்டேன். எப்பொழுது நான் கண்ணயர்வேன் எனக்காத்திருக்கும் அவர் உடனேயே என்கண்களுக்குள்ப் புகுந்து என்னைப் பூந்தோட்டத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்.'' கண்களை மூடினாள் வளர்மதி.

''நான் உம்மைக்கண்டதும் தலையைக் குனிந்தபடி விலகிச் செல்வதாக நீர் நினைக்கலாம். அப்படியல்ல, நீர் என்னைப் பார்க்கட்டும். என்பதற்காகவே அப்படிச் செல்வேன். நீர் வீட்டுக்கு வரும் வேளையில் நான் மறைந்திருந்து உம்மைப் பார்ப்பேன். முன்பே எனக்கு உம்மீது கொள்ளை ஆசை. கூச்ச சுபாவமுடைய நான் எப்படி உமக்கு எனது விருப்பத்தைத் தெரிவிப்பது என்று யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் வந்து நீர் என்னைக் காதலிக்கும் விஷயத்தைச் சொன்னான். அது எனக்க மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்த போதும் உம்மைத் தவிக்க வைத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனது மனதில் துளிர்த்தது. அதனால் தான் உம்மைக் கண்டதும் தலையைக் குனிந்தேன்; உம்மைப் பாராது சென்றேன். அப்பொழுது நீர் படும் வேதனையைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது''

''போங்கோ.... சரியான கள்ளன்'' என்றாள் வளர்மதி.''ஆரடி கள்ளன்'' என்றவாறு வளர்மதியின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள் அர்ச்சகா. திடுக்கிட்டு மிரண்ட வளர்மதி தன்னைச் சுதாகரித்துக் கொண்டு; '' நான் சொன்னதை நீ நம்பவில்லை. இரவு முழுவதும் தூக்கமில்லாததால் சற்றுக்கண்ணயர்ந்து விட்டேன். அதற்குள் அவர் வந்து தன்னைப் பற்றிப் பல விஷயங்களைக் கூறி விட்டார்'' என்றாள் வளர்மதி.

வித்தியாவும் அர்ச்சகாவும் சிரித்தனர். ''காதல் வந்தால் இப்படிப் பல கனவுகள் வரும். அதை நிஜம் என்று நம்பினால் பைத்தியம் பிடித்து விடும் கவனம்'' என்றாள் அர்ச்சகா.

''அனுபவம் பேசுகிறது'' என்று சிரித்த வளர்மதி சொன்னாள்; ''உலகத்தில் வாழும் எல்லா உயிர்களையும் உறங்கச் செய்யும் இரவு பாவம். அதற்குக் காதலரை விட்டால் வேறு கதியில்லை. அதனால் தனக்குத் துணையாக என்னை விழித்திருக்கச் சொல்கிறது'' என்றாள் வளர்மதி.

வித்தியாவும் அர்ச்சகாவும் சிரித்தனர்.

**1168. மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்துஇரா
என் அல்லது இல்லை துணை.**

*இந்த இராக்காலம் இரங்கத்தக்கது; எல்லா உயிர்களையும் உறங்கச் செய்து விட்டு என்னைத் தனக்குத் துணையாக வைத்துள்ளது.*

## இரவின் கொடுமை

காதலர்களைக் கொடுமைப்படுத்த வென்று பலர் இருக்கிறார்கள். பெற்றோரை விட சமூகமே காதலரைக் கொடுமைப்படுத்துகிறது. நான் சில தினங்களுக்கு முன்பு ஆதவனைத் தெருவில் கண்டேன். என்னைக் கண்டதும் அவர் வெருண்டு விரைவாகச் செல்ல முயற்சித்தார். நான் அவரைக் காணாதவள் போல் வீதியின் குறுக்கே சென்றேன். அவர் அதை எதிர்பார்க்கவில்லை. அதனால் தடுமாறியபடி துவிச்சக்கர வண்டியால் விழுந்து விட்டார். வீதியின் குறுக்கே கிடந்த துவிச்சக்கர வண்டியைத் தூக்கி நிறுத்தி விட்டு அவரைப் பார்த்தேன். முகம் வியர்த்திருந்தது. அவர் அணிந்திருந்த சட்டையில் புழுதி படிந்திருந்தது. முழங்கையில் கல்லொன்று தேய்த்ததனால் இரத்தம் கசிந்தது. எனக்குப் பயமாகவும் வேதனையாகவும் இருந்தது. எனது செயலால் தானே அவர் விழுந்து காயப்பட்டார் என்பதை நினைக்க அழுகை வந்தது. எனினும் தடுமாறிய படி முழங்கையால் இரத்தம் கசிவதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆதவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. நான் கொண்டு சென்ற கைப்பையைத் திறந்து உள்ளே இருந்த கைக்குட்டையை எடுத்து இரத்தத்தைத் துடையுங்கள். என்று நீட்டினேன். அவர் தடுமாறினார். தலையைக் குனிந்தபடி நின்ற அவரைப் பார்த்ததும் எனக்குத் துணிவு வந்து விட்டது. உடனே அவரின் அருகிற் சென்று காயப்பட்ட கையைப் பிடித்து அதில் வழிந்த இரத்தத்தைத் துடைத்தேன். இதை அவர் எதிர்பாராததால் கையை உதறினார். அவரது கை எனது கன்னத்தில் மெதுவாகப்பட்டது. இதை நான் எதிர்பார்க்கவில்லை. அவ்விடத்தில் சனங்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர். சிறிது நேரத்தில் அவர் சென்று விட்டார். அவ்விடத்தில் நின்ற ஒரு பெண் சொன்னாள்; ‘‘இப்ப பெண் பிள்ளைகள் கெட்டுப் போனார்கள். சிறியதொரு காயத்திற்கு இவளே கட்டுப் போட வேணும்’’ என்றாள். நான் பதில் எதுவும் கூறாமற் சென்று விட்டேன். மறு நாள் ஊரில் உள்ளவர்கள் அச்சம்பவத்தை மிகைப்படுத்திக் கதைத்தார்கள். அம்மாவிற்கு அச் செய்தி எட்டி விட்டது. அம்மா கேட்டா நான் உண்மையை மறைத்து ‘‘ஒருவர் வீதியில் விழுந்தால் உதவி செய்யக் கூடாதா? என்று கேட்டேன். அது அம்மாவிற்குச் சரியாகப் பட்டது.; ‘‘ வீதியால் செல்பவர்கள் விபத்துக்குள்ளானால் உதவி செய்வது மனிதாபி மானம். உடையவர்களின் கடமை. நீயும் கொப்பரைப் போல ஊருக்கு உதவி செய்பவளாக வந்து விட்டாய்’’ என்றார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது’’ என்றாள் வளர்மதி.

‘‘நீ பொல்லாத ஆள், உன்னை நம்பி நாங்கள் சேர்ந்தால் ஆபத்து’’ என்றாள் அர்ச்சகா.

‘‘சேர வேண்டாம். உங்களை நான் கெடுத்துப் போடுவன்’’ என்றாள் வளர்மதி.

“நீ சொல்ல வந்த கதையை விட்டுட்டாய். காதலிப்போர்க்கு சமூகத்தைத் தவிர வேறு யார் யார் எதிரி” என்று கேட்டாள் வித்தியா.

“பொதுவாய் எல்லோரும் எதிரிதான். காதலிக்கிறது பெருங்குற்றமென்று பெற்றோர் எதிர்த்துத் துன்பத்தைத் தருகிறார்கள். நன்றாகப் பழகிய நண்பர்கள் காதலிப்பது மகா பாவம் என்றெண்ணி எம்மை விட்டுப் பிரிகிறார்கள். எனது தோழி ஒருத்தி என்னைக் காதலிக்க வேண்டாமென்று கூறினாள். நான் காதலித்தால் என்னுடன் கூடத்திரியும் தனக்கு அவமானமாம். இப்ப அவள் என்னுடன் கதைப்பதில்லை. அது வேதனையாய் இருக்கு. இதை விட இயற்கையும் எம்மை வேதனைப்படுத்துகிறது. காதலரின் பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாது துன்புற்று வருந்தும் எனக்கு, தூங்காமல் விழித்துக் கொண்டிருக்கும் நீண்ட இரவு என்னைச் சித்திரவதை செய்கிறது. அந்தக் கொடுமை பிரிவுத்துயரை விட மோசமானது பெற்றோர். உறவினர், அயலவர்கள், நண்பர்கள் தரும் துன்பங்களை விடப் பலமடங்கு அதிகமானது.” என்று அழுதாள் வளர்மதி.

**1169. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா.**

*காதலரின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வருந்தும் எனக்கு, நீண்ட இரவு நேரம் பிரிவுத் துயரை விட அதிக கொடுமையைத் தருகிறது.*

## மனம் செல்லும்

“வித்தியா உன்னை நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. உனது நிலை வேறு யாருக்கும் ஏற்படக் கூடாது. தற்செயலாக எனக்கு இந்த நிலை ஏற்பட்டால் நான் துடிதுடித்து இறந்து விடுவேன். உறுதியான மனமும், தளர்வில்லாத நம்பிக்கையும் பெற்ற உன்னை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒரு பெண்ணுக்கு வரக்கூடாத துன்பம் உனக்கு வந்துள்ளது. நாம் இங்கு வந்து எமது துயர்களைப் பகிர்ந்து கொண்டு செல்கிறோமே தவிர உனது துன்பத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை. உனது துன்பத்தை யாராலும் போக்க முடியாது. போக்கக் கூடியவர் வாழாதிருக்கிறார். நான் இன்று சென்று அவரைச் சந்தித்து உனது நிலையைக் கூறுகிறேன்.” என்றாள் வளர்மதி.

“அவருக்கு அர்ச்சகா யாவற்றையும் சொல்லியுள்ளாள். அத்துடன் எனது நிலையைப் பற்றி தெளிவாகக் கடிதமும் எழுதியுள்ளேன். என்னைப் பிரிந்து அவரால் இருக்க முடியாது. எனவே அவர் எனது துன்பத்தைப் போக்க நடவடிக்கை எடுப்பார்”. என்றாள் வித்தியா. அவளது கண்கள் கலங்கின.

“அழாதை வித்தி. நீ இப்போது இருக்கும் நிலைக்கு நீ தான் பொறுப்பாளி. நாம் எப்படி வாழவேண்டுமென்று விரும்புகிறோமோ அப்படி நம்மை அமைத்துக் கொள்ளும் தன்மை நம்மிடமே இருக்கின்றது. நீ கஜேந்திரனை விரும்பியது முன் வினைப்பயன் என்றால், கஜேந்திரனைத் திருமணம் செய்து எதிர்காலத்தில் எப்படியெல்லாம் வாழவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அதை நீ உன் செயல்களால் தான் செய்து முடிக்க முடியும். எனவே என்ன செய்ய வேண்டும்

என்பதை நீ தீர்மானி நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள் வளர்மதி.

வளர்மதி கூறியதை நினைத்துப் பார்த்தாள் வித்தியா. அவள் சொல்வது நூற்றுக்கு நூறுவீதம் சரியெனப்பட்டது. ''நான் உறுதியாக இருந்தால் எவராலும் எதுவும் சொல்ல முடியாது. கூடுதலான பிரச்சினை ஏற்பட்டால் இரவோடு இரவாகப் புறப்பட்டு கஜேந்திரனது வீட்டுக்குச் செல்ல வேண்டும்.'' என்று தீர்மானித்தாள் வித்தியா. அதன் பின் மனம் லேசாகி விட்டதைப் போல் இருந்தது. பல இரவுகள் கண் விழித்தமையால் கண்கள் எரிந்தன. இருந்த போதும் மனம் கஜேந்திரனை நினைத்தது.

கஜேந்திரன் விகடமாகப் பேசுவான். அதுவும் வித்தியாவைக் கண்டால் அவனுக்குக் குதூகலம் மிகுந்து நிற்கும். அதை நினைத்துப் பார்த்தாள் வித்தியா. அன்றொரு நாள் துவிச்சக்கர வண்டியில் அவளை ஏற்றி வரும் போது கேட்டான்; '' இன்று அம்மாவின் பிறந்த நாள். வீட்டை கூட்டிக் கொண்டு போறன். போய் அவாவை வாழ்த்தி ஆசி பெறும்.''

''ஐயையோ நான் மாட்டன். ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறும் போதே அவாவிற்கு என் மீது சந்தேகம். இன்றைக்கும் போனால் கரைச்சல்''. தடுமாறினாள் வித்தியா.

''இன்றைக்கு நான் கட்டாயம் வீட்டிற்குக் கூட்டிச் சென்று அம்மாவை அழைத்து மருமகள் என்று உம்மை அறிமுகம் செய்யப் போறன்'' அட்டகாசமாகச் சிரித்தான் கஜேந்திரன். வித்தியா பயந்து விட்டாள்; ''என்னை இறக்கி விடுங்கோ'' என்று கூறியபடி துவிச்சக்கர வண்டியால் குதித்து இறங்கினாள். அவள் திடீரென இறங்கியதால் சமநிலையை இழந்த கஜேந்திரன் தடுமாறி நிலத்தில் விழுந்தான்.

''நான் விளையாட்டாகச் சொல்ல நீர் நம்பீட்டீர்'' என்றான் கஜேந்திரன்.

''இப்போது அவர் எப்படி இருப்பார்'' என்று நினைத்தாள் வித்தியா. உச்சுவில் குளக்கரையில் தாடியோடு மூங்கில் மரப்பற்றைக்கு அருகில் இருந்து அக் குளத்தில் மலர்ந்துள்ள செந்தாமரைப் பூக்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்'' என்று நினைத்தாள். இந்த மனம் எவ்வளவு புதுமையானது. காதலர் செல்லும் இடத்திற்கெல்லாம் மனம் சென்று விடுகிறது. எனது மனம் போவது போல் என்னால் போக முடியவில்லையே. போக முடிந்தால் நான் அழ வேண்டிய தேவை இராது'' என்று நினைத்தாள் வித்தியா.

**1170. உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்**
**நீந்தல் மன்னோஎன் கண்.**

*காதலர் உள்ள இடத்திற்கு என் மனத்தைப் போல நானும் செல்ல முடியுமானால், என் கண்கள் கண்ணீர் வெள்ளத்தால் நீந்த வேண்டியதில்லை.*

## காட்டிய கண்கள்

முதன் முதலாக கஜேந்திரனைக் கண்டதை நினைத்துப் பார்த்தாள் வித்தியா. ஐந்து வருடங்களுக்கு முன்பு நல்லூர்த் தேர்த்திருவிழாவன்று தேரடியில் அர்ச்சனை செய்வதற்காக நீண்ட வரிசையில் காத்து நின்றாள் வித்தியா. அவளின் அருகே கஜேந்திரனின் தாயார் இலட்சுமி அர்ச்சனைத் தட்டுடன் நின்றாள். அவள் வைத்திருந்த அர்ச்சனைத் தட்டில் கற்பூரத்தைக் காணவில்லை. கற்பூரம் வழியில் எங்கோ தவறி விட்டது. அதனால் கஜேந்திரனின் தயாரான இலட்சுமி பரபரத்துக் கொண்டு நின்றாள்.; ''வருடத்திற்கு ஒரு முறை தான் நல்லூரானின் தேர்த்திருவிழா நடைபெறும் கற்பூரம் இல்லாமல் எப்படி அர்ச்சனை செய்வது. வரிசையை விட்டு விட்டுச் சென்றால் திரும்பவும் வந்து நிற்க முடியாது.'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள் இலட்சுமி. அதைப் பொறுக்க முடியாத வித்தியா; ''நான் கற்பூரம் வாங்கி வந்து தருகிறேன். நீங்கள் நில்லுங்கோ'' என்று புறப்பட்டாள்.

''காசைக் கொண்டு போ பிள்ளை'' என்று இலட்சுமி சொல்லிக் கொண்டிருக்கும் போது வித்தியா அதைக் கேட்காதவள் போலச் சென்று கற்பூரத்தை வாங்கி வந்து கொடுத்தாள்.

''பிள்ளை, சுவாமி காரியம் கட்டாயம் நீ காசு வாங்க வேண்டும்'' என்று கூறிப் பத்துரூபாத் தாள் ஒன்றை எடுத்து நீட்டினாள்.

''வேண்டாம் அம்மா....'' என்றாள் வித்தியா.

''இல்லை பிடிபிள்ளை'' என்றாள் இலட்சுமி.

''அர்ச்சனைப் பயன் எனக்கு வந்து விடுமென்று பயப்படுகிறீர்களோ....'' என்று சிரித்தாள். அப்போது கஜேந்திரன் அங்கு வந்தான்; ''அம்மா, கற்பூரம் வாங்க மறந்து விட்டேன். இந்தாருங்கோ'' என்று கற்பூரத்தை நீட்டினான் கஜேந்திரன்.

''அவதானமில்லாத பிள்ளை. கற்பூரமில்லாததை நான் தேரடியிலைதான் கண்டனான். வாங்க முடியாமல் போயிற்றுது. இந்தப்பிள்ளை தான் வாங்கி வந்து தந்தது. நல்ல பிள்ளை. கற்பூரத்திற்கான காசை வேண்ட மறுக்குது'' என்றாள் இலட்சுமி. கஜேந்திரன் நிமிர்ந்து வித்தியாவைப் பார்த்தான். அவளின் அழகு அவனைப் பெரிதாகக் கவரவில்லை; ''அம்மாவுக்கு உதவி செய்ததற்கு நன்றி. உங்கள் நல்ல குணத்தைப் பாராட்டுறன். ஆனால் அம்மா ஒரு மாதிரியானவா. நான் கற்பூரம் வாங்காமல் விட்டது பெரிய விபரீதம் வருவதற்குக் காரணமாயிருக்கும் என்று நினைப்பா. காசை நீங்கள் வாங்கா விட்டால் வாழ்நாள் முழுவதும் தான் ஏதோ தவறு செய்து விட்டதாக நினைத்துக் கவலைப்படுவா. வாங்குங்கோ.'' என்றான். அப்படி இருந்தும் வித்தியா தயங்க; அவன் தாயின் கையில் இருந்த பத்துரூபாத்தாளை வாங்கி நீட்டினான். வித்தியா அதைப் பெறும்பொழுது அவனது விரல்கள் அவளது விரல்களைத் தொட்டன. அவன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

வித்தியா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். மிகவும் அழகான முகம். கவர்ச்சியான சிரிப்பு, மேற்சட்டை அணியாததால் தெளிவாகத் தெரிந்த மார்பின் உறுதி அவளைச் சற்றுத்தடுமாற வைத்தது. திரண்ட தோள்கள், உறுதியான

மார்பு, நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் முதுகிலும் திரிபுண்டரமாகத் தரிக்கப்பட்டிருந்த வீபூதிக்குறி அவளை மிகவும் கவர்ந்தது. அவன் சென்று விட்டான். அவளது கண்களுக்குள் பதிந்த அவ்வுருவம் நெஞ்சுக்குள்ளும் புகுந்தது.

“உங்கள் மகன் என்ன செய்கிறார் படிக்கிறாரா…” என்று கேட்டாள் வித்தியா.

“ஓம் பிள்ளை பல்கலைக்கழகத்தில் படிக்கிறான்” என்றாள் இலட்சுமி. வித்தியாவின் கண்களுக்குள் புகுந்த அவனை வெகு நாட்களாக அவளால் மறக்க முடியவில்லை. தான் இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்பதையும் மறந்து விட்டாள். அதன் பின் பல்கலைக்கழகத்திற்கு அவள் சென்ற போது தான் கஜேந்திரன் கண்டு விரும்பினான். அவளுக்கு விருப்பமிருந்த போதும் பயத்தினால் அவனை அலட்சியம் செய்தாள். “எனது கண்கள் தான் எனக்குத் துரோகம் செய்தன. அவை தான் அடிக்கடி அவனைக் காண விரும்பின.” அதனால் தான் எனக்கு இவ்வளவு பெருந்துன்பம் வந்தது. என்று அழுதாள் வித்தியா.

**1171. கண்தாம் கலுழ்வது எவன்கொலோ? தண்டாநோய்**
**தாம்காட்ட யாம்கண்டது.**

*தீராத இந்தக் காம நோயானது, என் கண்கள் அவரைக் காட்டியதால் தானே வந்தது. அவ்வாறிருக்க காட்டிய கண்கள் ஏன் அழ வேண்டும்.*

## கலங்குவது ஏன்?

தேர்த்திருவிழாவில் கஜேந்திரனைக் கண்டு மயங்கிய கண்கள் அவனைத் தேடிக் கொண்டிருந்தன. அவள், தான் செல்லுமிடங்களிலெல்லாம் அவனைத் தேடினாள். தேர்திருவிழாவின் மறு நாள் தீர்த்தத் திருவிழாவுக்கு வந்த அவளின் கண்கள் சுழன்று சுழன்று நாலா திசையும் அவனைத் தேடின; “அவனது தாயாரிடம் பெயரைக் கேட்டிருக்கலாமென்று நினைத்தாள். பல்கலைக்கழகத்தில் ஆறாயிரம் ஏழாயிரம் மாணவர்கள் கற்கிறார்கள். எப்படி அவனைத் தேடுவது. யாரையாவது விசாரிக்கலாமென்றால் எப்படி விசாரிப்பது. அவன் கற்கும் துறையைக் கேட்டாலாவது விசாரிக்கலாம்.” என்று நினைத்தவாறு அவனைத் தேடிப் பார்த்தாள். பெரும் பக்திமானான அவன் அன்று எப்படியும் கோயிலுக்குள் வந்திருப்பான். என்று அவளது மனம் கூறியது. அதனால் கோயிலுக்குச் சென்றாள். சுவாமி வசந்த மண்டபத்தில் இருந்து உள்வீதி உலாவுக்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மூச்சு விட முடியாதளவு சனக்கூட்டம் அவளை நெரித்தது. அவனைக் காணும் ஆவலில் மனம் பரபரத்ததால் சுவாமியின் பின்னாற் சென்றாள். உள்ளே நின்ற ஆண்கள் அனைவரும் மேற்சட்டை அணியாததால் அவளுக்கு அவனைத்தேடுவது சிரமமாக இருந்தது. சுவாமிக்குச் சிறிதுதூரத்தில் அவன் நிற்பது போலிருந்தது. அவளது கண்கள் ஆவலோடு அவனின் மீது மொய்த்தன. தலையின் மேல் கரம் குவித்தபடி நின்ற அவன் மறுபக்கம் திரும்பினான். வித்தியாவுக்கு கவலையாக இருந்தது. அவனது

முதுகுப்பகுதியைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவளது கண்கள் அவன் திரும்ப மாட்டானா என ஏங்கித் தவித்தன.

சுவாமி மெதுவாகச் சென்று கொண்டிருந்தார். சனங்களை விலத்திச் சென்று அவனைப் பார்க்கலாமென்றால் அசைய முடியவில்லை. மெதுவாக அவள் அசைந்து சென்றாள். கண்கள் அவனை நோக்கிக் கொண்டிருந்தன. சுவாமி, உள்வீதி உலாவை முடித்துக் கொண்டு வெளியே வந்தார். வித்தியா சனங்களை விலத்திக் கொண்டு சிரமப்பட்டு முன்னேறி அவனின் அருகில் வந்தாள். நாணத்துடன் மெதுவாகக் கண்களை உயர்த்தினாள். அவனைப் பார்த்து ரசிக்க வேண்டும் போல் இருந்தது. நிமிர்ந்த வித்தியாவின் கண்கள் ஏமாற்றத்தால் சுருங்கின. அவன் யாரோ…..

வெளியே வந்த வித்தியா எங்கும் தேடிப் பார்த்தாள், அவனைக் காணவில்லை. உடல் சலிப்படைந்த போதும் கண்களும் மனமும் இன்னும் தேடிப்பார் என்றது. அதனால் அவள் மீண்டும் தான் சென்ற இடங்களெல்லாம் சென்று தேடிப் பார்த்தாள். அவனைக் காணவில்லை. ஏமாற்றத்தால் கண்கள் கசிய வீட்டுக்குச் சென்றாள். அன்று இரவு முழுவதும் அவளின் கண்களுக்குள் அவன் குடியிருந்தான். மறுநாள் பூங்காவனத் திருவிழா அன்றும் அவள் கோயில் முழுவதும் அவனைத் தேடினாள். ஆனால் அவனைக் காணவில்லை. ஏமாற்றத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கோயில் வாசலுக்கு வந்து முருகப் பெருமானை உள்ளமுருக வழிபட்டாள்.; ‘‘எம் பெருமானே தேர்த்திருவிழாவன்று கண்டு என் மனதைக் கொள்ளை கொண்ட அவனை எனக்கொரு முறை காட்டு’’ என்று கண்களை மூடி வணங்கினாள். அவளது கண்களுக்குள் அவன் வந்து நின்று சிரித்தான். வித்தியா’’ என்று மெல்ல அழைத்தான். திடுக்கிட்டு திரும்பினாள் ‘‘வித்தியா. சனங்கள் பெருவாரியாக நின்றார்களே தவிர தெரிந்த எவரும் இல்லை.

அதன் பின் அவனைப் பார்ப்பதற்காகப் பல முறை பல்கலைக்கழக வீதியால் சென்றாள். அவனைக் காணவில்லை. அவன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிச் சென்ற போது அவனைத்தான் அவனது கண்கள் தேடின. ‘‘ஆராய்ந்து பின் விளைவுகளை உணராமல் ஆசைப்பட்ட கண்களின் மீது அவளுக்கு வெறுப்பாக இருந்தது. பின் அவன் அவளின் பின்னால் அலையும் போது மனம் பயம் காரணமாக வெறுத்ததே தவிர அவனைக் காணத்தானே விரும்பியது’’ என்று விம்மினாள் வித்தியா.

**1172. தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துஉணராப்**
**பைதல் உழப்பது எவன்?.**

*ஆராய்ந்து அறியாமல் அன்று அவரைக் கண்டதும் காதல் கொண்ட என்கண்கள், இந்த துன்ப நிலைக்குக் காரணம் தாமே என்று அறியாமல் துன்பப்பட்டு வருந்துவது ஏன்?.*

## நகைப்புக்குரியது

‘‘காதலர் தினத்திலன்று நான் மனிசியைப் பாக்க வேண்டும். உம்முடைய கன்னங்களைப் போல் சிவந்த மென்மையான ரோஜாப்பூக்களால் செண்டொன்றைப் பரிசாக உமக்குத் தர வேண்டும். மஞ்சள்நிறரோஜாப்பூ ஒன்று

கொண்டு வந்து உமது கூந்தலைப் பிரித்து அதில் அப்பூவை நான் செருக வேண்டும். அதன் பின் பலமணி நேரம் உம்மைப் பார்த்து இரசிக்க வேண்டும். மஞ்சள் நிற ரோஜாமலரை சூடி தேவதை போலத் தோன்றும் உம்மைக் கண் இமைக்காது பார்த்து இரசிக்க வேண்டும். உமது அழகு தான் எனது கண்களுக்கு விருந்து படைப்பது. உமது அழகு. ஒரு முறை இருப்பது போல இன்னொரு முறை இருப்பதில்லை. எனது கண்களில் குறை பாடு உள்ளதோ அல்லது உமது வனப்பு நாளுக்கு நாள் அதிகரிக்குதோ என்று தெரியாது. தடுமாறுகிறேன். காதலர் தினத்திலன்று பூரண அலங்காரத்துடன் வரும் உம்மைத் தரிசிக்க எனக்கு இன்னும் பல கண்கள் தேவை. அதற்காக கடவுளை நான் வேண்டப்போகிறேன்?'' என்றான் கஜேந்திரன்.

''எனக்கும் அன்று உங்களைப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகிறது. உங்களைக் காணாவிட்டால் எனது கண்கள் தூங்க மறுக்கின்றன. நீங்கள் தந்த நிழற்படத்தைக் காட்டினாலும் எனது கண்கள் அதைப் பார்க்க மறுத்து நேரில் பார்க்க வேண்டுமென அடம் பிடிக்கின்றன. எனது கண்களுக்காக கட்டாயம் காதலர் தினத்தன்று வருவேன்'' என்றாள் வித்தியா.

காதலர் தினத்தன்று கஜேந்திரன் நான்கு மணிக்கு கடற்கரையில் அவளைச் சந்திப்பதாகக் கூறியிருந்தான். மூன்று தினங்கள் அவள், அவனைக்காணாததால் அன்று மூன்று மணிக்குக் கடற்கரைக்கு வந்து விட்டாள். கடற்கரையில் பல காதல் சோடிகள் ஆங்காங்கே இருந்து காதலர் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தன. அவளுக்கு மிக அருகில் இருந்த காதல் சோடியைப் பார்க்க அவளுக்கு வேதனையாக இருந்தது. அவள் அவனது சட்டைப் பைக்குள் சிவப்பு ரோஜா வொன்றை வைத்தாள். அவன் மிகுந்த மகிழ்வுடன் அவளது கையைப் பிடிக்க அவள் ஏதோ சொல்லியவாறு அவனது கையைத் தட்டி விட்டாள். பின் அவன் மஞ்சள்நிற ரோஜாப்பூவொன்றை அவளது கூந்தலில் செருகினான். வித்தியாவுக்குப் புல்லரித்தது. மூன்று தினங்களுக்கு முன்பு கஜேந்திரன் கூறிய படி மஞ்சள் ரோஜா தனது கூந்தலில் ஆடுவது போலிருந்தது.

நான்கு மணியாகியும் கஜேந்திரன் வரவில்லை. அவளது அழகிய கண்கள் ஆவலுடன் அவன் வரும் பாதையை நோக்கிச் சென்று தரித்து நின்றன. கண்ணுக்கெட்டிய தூரம் வரை கஜேந்திரனைக் காணவில்லை. நேரம் சென்று கொண்டிருந்ததே தவிர அவனைக் காணவில்லை. அவனைக் காணாததால் அவளது கண்கள் சோர்ந்து கலங்கின. கண்களுள் தேங்கி நின்ற கண்ணீரை அருகில் இருப்பவர்கள் அறியாதபடி மெல்லத் துடைத்தாள். எனினும் கண்கள் அவன் வராமையால் ஊற்று நீர் போல் ஊறிக் கொண்டே இருந்தன. அவளால் அதைத் தடுக்க முடியவில்லை.

''என்ன வித்தி கஜேந்திரனைக் காணவில்லை தனியே இருந்து என்ன செய்கிறாய்.'' என்று கேட்டவாறு அவளின் அருகில் அமர்ந்தாள் வளர்மதி.

''அவர் வாறதென்று சொன்னவர். வந்து விடுவார்'' என்றாள் வித்தியா.

''என்ன தனியே இருக்கிறீர்கள். ஐயாவைக் காணவில்லை'' என்று கேட்டான் கடலை விற்பனை செய்யும் பையன்.; ''கஜேந்திரன் ஐயா வந்தால் இரண்டு சரை கடலை விற்கலாம்.'' என்று கூறி விட்டுச் சென்றான் அப்பையன்.

வித்தியா நேரத்தைப் பார்த்தாள். மாலை ஐந்து மணியாகியது. கடற்கரை எங்கும் ஒரே சனக்கூட்டம். வித்தியா அவன் வரும் பாதையைப் பார்த்துக் கொண்டு நின்றாள். "இந்தக் கண்கள் தான் நான் இன்னொருவருக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்று தெரிந்தும் அதை அலட்சியம் செய்து அவரைப் பார்த்தன. இப்பொழுது கலங்குகின்றன." என்று நினைத்தாள் வித்தியா.

**1173. கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்**
**இதுநகத் தக்கது உடைத்து.**

*அன்று அவரைக் கண்கள் தானே எனது கட்டுப் பாட்டையும் மீறி தாமே விரைந்து சென்று பார்த்து மயங்கின. இன்று தாமே அழுகின்றன. இது சிரிப்புக்குரியது.*

## தீராதநோய்

"நான்கு மணிக்கு வருவதாகக் கூறினார். ஐந்து மணியாகியும் வரவில்லை. என்னில் முழுமையான அன்பு வைத்திருந்தால் அவர் இப்படிச் செய்வாரா. இப்பொழுது அவர் உள்ள நிலையில் என்னைப் பார்ப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் அவருக்கு இல்லை. நான்கு மணிக்கு வரச் சொன்னவர், ஆனால் எனது கண்கள் இரண்டு மணிக்கே அவரைப் பார்க்க வேண்டும் என்று பரபரத்தன. மனமும் நிலை கொள்ளாமல் தவித்ததால் அம்மாவுக்கு பரீட்சை இருக்கிறது என்று சொல்லி விட்டுப் புறப்பட்டேன். எனது நிலையை உணராத அம்மா மிகுந்த அக்கறையுடன் சமையல் செய்து தந்தா. என் மனதில் அவரின் நினைவுகள் நிரம்பியிருந்தமையால் என்னால் சாப்பிட முடியவில்லை. அதனால் எனக்குச் சாப்பாடு கட்டித் தந்தா. இஞ்சை பார்" என்று கண்ணீர் மல்க ஓர் உணவுப் பொதியை எடுத்துக் காட்டினாள் விதிதயா. அதிலிருந்து வந்த வாசம் மூக்கை அரித்தது. அதனால் வளர்மதிக்குப் பசிப்பது போல் இருந்தது.

"அம்மா அக்கறையாகச் சமைத்துக் கட்டித்தந்த போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. காதலர் தினமான இன்று அம்மா கட்டித் தந்த உணவை இருவரும் பகிர்ந்து உண்போம் என நினைத்தேன். அவர் வீட்டுக்கு வரும் போது நான் உணவு கொடுத்தால் அதைக் குழைத்துத் தரும்படி கேட்பார். நான் மறுத்தால் சாப்பிட மாட்டார்; "உமது அம்மாவின் சமையல் பிரமாதமான சுவையுடையது. ஆனால் உம்முடைய கைபடவில்லை. எனக்குரியவள் என்று நான் நினைப்பவளின் கைபடாத அமிர்தம் கூட சுவையானதாக எனக்குத் தேவையில்லை." என்பார். பின் நான் குழைத்துக் கொடுத்தால்; " உமது கைபட்ட உணவு மிகவும் சுவையாக இருக்கிறது" என்பார். நான் விசர் கதையை விட்டு விட்டுச் சாப்பிடுங்கோ என்றால்; "சுவையில்லை என்று நீர் நினைத்தால் சாப்பிட்டுப் பாரும். என்று தானுண்ட உணவை எனது வாய்க்குள் வைப்பார். அப்படியானவரைக் காணாமல் எனது மனம் வாடுகிறது. என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை" என்று அழுதாள் வித்தியா.

வளர்மதிக்கு தர்மசங்கடமாக இருந்தது. " நான் எவ்வளவு முயன்றும் ஆதவன் ஒரு கதை கூடக் கதைக்கிறாரில்லை. தினமும் கதைத்துச் சிரிக்கும் கஜேந்திரன் சற்றுத் தாமதமாகி விட்டதால் இவள் அழுகிறாள். எவ்வளவு நேரமாக அழுகிறாள். இன்னும் இவளது கண்களுக்குள் கண்ணீர் இருக்குமோ"? என்று நினைத்தாள் வளர்மதி.

வித்தியா அவன் வரும் பாதையைப் பார்த்தபடியே இருந்தாள். அவளது கண்கள் கலங்கிய படி இருந்தன. கண்ணீர் கன்னங்களால் வழிய முன்பு கைக்குட்டையால் அவள் அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள். காதலுக்கு புலவர்கள் தாம் தாம் எண்ணியவற்றையே கவிதைகளாகவும் வரைவிலக்கணமாகவும் எழுதியுள்ளனர். ஆனால் எல்லோருடைய காதலைப் பற்றியும் அவர்களால் கூற முடியுமா..? வித்தியா இன்று கண்ணீர் விடும் நிலையைக் கண்டால் கவிஞன் என்ன கூறுவான். இறைக்க இறைக்க ஊறும் கிணறா இவளது கண்கள் என்று ஆச்சரியப்படுவானோ…''என்று நினைத்தாள் வளர்மதி.

''என்னடி யோசிக்கிறாய் என்னைப் போலப் பைத்தியம் உலகில் யாரும் இல்லை. என்று யோசிக்கிறாயா…? இல்லை அவரைக் காணாவிட்டால் ஏன் கண்ணீர் விட்டு அழுகிறாள் அவர் சற்றுத் தமதமாகி வந்தாலும் வருவார். அதற்கேன் அழுகை என்று யோசிக்கிறாயா…?'' என்று நிறுத்தியவள் சற்று நேரத்தின் பின் சொன்னாள்; '' அவர் கூறுவதைப் போல் எந்த ஒன்றையும் அவரின் கையால் பெற்று உண்பது பேரின்பத்தை எனக்குத் தரும். கடற்கரையில் விற்கப்படும் கச்சான் கடலையை வாங்கி அவர் உடைத்துத் தந்தால் எவ்வளவு சுவை தெரியுமா…? கடலை விற்பவன் பல முறை வந்து ஏமாந்து செல்கிறான். நான் வாங்கி நான் உடைத்துச் சாப்பிடுவதில் எந்தச் சுவையும் இல்லை. அது வயிற்றை நிரப்புவதாகவே இருக்கும். என் கண்களுக்கு இன்பத்தைத் தந்து விட்டு இப்போது அவர் வராததால் அந்த இன்பம் துன்பமாக மாறி என் கண்களை வருத்துகிறது. இனி நான் அழுதாலும் கண்ணீர் வராது. கண்ணீர் முழுவதும் வற்றி விட்டது'' என்று விம்மினாள் வித்தியா.

**1174. பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயல்ஆற்றா**
**உய்வுஇல்நோய் என்கண் நிறுத்து.**

*எனது கண்கள் தப்பிப் பிழைக்க முடியாத தீராத காம நோயை உண்டாக்கி விட்டு, இப்பொழுது தாமும் அழ முடியாமல் நீர் வற்றிப் போய்த் துன்புறுகின்றன.*

## பெரும் நோய்

மாலை மணி ஆறாகியும் கஜேந்திரன் வரவில்லை. வித்தியா ஏதோ கதைத்துக் கதைத்து விம்மினாளே தவிரக் கண்களால் கண்ணீர் வழியவில்லை. அடிக்கடி கைக்குட்டையால் கண்களைத் துடைத்தமையால் அவளது கண்கள் சிவந்திருந்தன.

வழமையாக அவர்களுக்குக் கடலை கொடுக்கும் பையன் பத்தாவது தடவை அவளிடம் வந்தான். வித்தியா அவனது நிலையைப் பார்த்து இரங்கி பத்து ரூபாத்தாள் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். அவன் தயாராகக் கட்டி வைத்திருந்த கடலைச் சரை ஒன்றை எடுத்து நீட்டினான்; '' இன்று அவர் வரவில்லை. எனக்குக் கடலை வேண்டாம் கொண்டு போ'' என்றாள் வித்தியா. கடலை விற்பவன் வித்தியாவை ஒரு மாதிரியாகச் சில கணங்கள் பார்த்து விட்டுச் சென்றான்.

“ கடற்கரையில் இவ்வளவு நாளும் கடலை வாங்கி, அதை உடைத்து அவர் தந்தவர். இன்று என்னால் அவரில்லாமல் உண்ண முடியவில்லை.” விம்மினாள் வித்தியா. வளர்மதி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் விக்கி விக்கி அழுத போதும் கண்ணீர் வரவில்லை.

“ஆறரை மணியாச்சு. இனி அவர் வரமாட்டார். வாபோவம்” என்றாள் வளர்மதி.

“இல்லை அவர் வருவர். இன்னும் சிறிது நேரம் காத்திருப்போம்” என்றாள் வித்தியா.

வளர்மதியின் நெஞ்சு ‘திக் திக்’ என்று அடித்தது. வளர்மதியின் அம்மா மிகவும் கண்டிப்பானவர். நேரம் பிந்திச் சென்றால் ஏசுவார். என்பதை நினைக்க வளர்மதிக்குப் பயமாக இருந்தது. “வித்தி ஆறுமணிக்குப் பிறகு நான் போனால் அம்மா ஏசுவா. அவாக்கு எந்தச் சாட்டும் சொல்ல முடியாது. முன்பு ஒரு முறை நான் பாடசாலையால் பிந்திச் சென்ற போது அம்மாவுக்குச் சரியான கோபம் வந்து விட்டது. என்னை ஏசி விட்டு பாடசாலை அதிபரிடம் சென்று விசாரித்தார். அதன் பின்பு தாமதமாகி வீட்டுக்குச் செல்ல எனக்குப் பயம். நீ நின்று ஆறுதலாக வா” என்று கூறி எழுந்தாள் வளர்மதி.

“என்னடீ விம்மி விம்மி அழுகிறாய். கண்களும் முகமும் வீங்கி இருக்கு. இரண்டு மூன்று தினங்களாய்த் தைரியமாக இருந்த உனக்கு இப்ப என்ன நடந்தது.” பாசத்துடன் கேட்டாள் அர்ச்சகா.

கட்டிலால் எழுந்து அமர்ந்த வித்தியா சொன்னாள்; “பழைய சம்பவமொன்றை நினைத்துப் பார்த்தேன். அழுகை வந்து விட்டது. காதலர் தினத்தன்று நான்கு மணிக்கு எனது கூந்தலில் மஞ்சள் ரோஜாப்பூ சூடுவேன் என்று கூறி விட்டுச் சென்ற அவர் வரவில்லை. அதனால் நான் மூன்று தினங்கள் சாப்பிடவில்லை. எனது நிலைமையைப் பற்றி வளர்மதி கூறியதால் துடிதுடித்துக் கொண்டு வந்தார். அவரது தாயார் அன்று காலை மயங்கி விட்டாராம். அதனால் தான் அவர் வரவில்லை. தாயார் ஒரு நோயாளி, இருந்தும் அவர் அன்று வராததை நினைக்க இப்பவும் எனக்குக் கவலையாக இருக்கு. அப்படிப்பட்ட நான் எப்படி அவரைப் பிரிந்திருக்கப் போகிறேன். ஒரு வார காலமாக அவரைக் காணாததால் உறங்க முடியாமல் தவிக்கிறேன். அவர் தந்த இந்தக் காதல் நோய் கடலை விடப் பெரிதாகி என்னை வருத்துகிறது. நீங்கள் யாராவது என்னுடன் இருந்தால் அவரை நினைத்தாலும் கலங்காது இருக்கிறேன். நீங்கள் போய் விட்டால் நான் படும் துன்பம் கடலை விடப் பெரியது” என்றாள் வித்தியா.

“உனது அம்மா முன்பை விட இப்பொழுது மனம் குழம்பிக் காணப்படுகிறார். மாமாவும் அவாவும் அடிக்கடி கவலையோடு கதைக்கிறத்தைப் பார்த்தால் வேறு ஏதோ ஒரு துக்கம் அவர்களை வாட்டுவது போலத் தெரிகிறது. கண்மணி மாமி நேற்று இரவு கஜேந்திரனைப் பற்றி என்னைக் கேட்டவா. நான் அவரைப் பற்றிச் சொன்னனான். அவா மௌனமாகக் கேட்டாவே தவிர ஒன்றும் சொல்லவில்லை” என்றாள் அர்ச்சகா.

“அம்மாவும் மாமாவும் சேர்ந்து ஏதாவது சூழ்ச்சி செய்வார்கள். அம்மா அவரில் உள்ள அக்கறை காரணமாக விசாரித்து இருக்க மாட்டா. அவருக்கு அம்மா ஏதாவது தீங்கு செய்தால் நான் உயிரோடு இருக்க மாட்டேன். கடலை விடப் பெரிதான காதல் நோயால் என் கண்கள் பல நாட்களாக உறங்க முடியாது வருத்துகின்றன. இந்நிலையில் அவருக்கு ஏதாவது கெடுதி ஏற்பட்டால்” விம்மினாள் வித்தியா.

**1175. படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்**
**காமநோய் செய்தஎன் கண்.**

*அன்று கடலை விடப் பெரிய நோயான காமநோயை உண்டாக்கிய எனது கண்கள், இன்று உறங்க முடியாமல் துன்பத்தால் கலங்கித் தவிக்கின்றன.*

## கண்கள் தந்த நோய்

“அழாதை உனக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் ஒரு விஷயம் சொல்லப் போகிறேன்” என்ற அர்ச்சகா சுற்றி வர ஒரு முறை பார்த்து விட்டுத் தனது சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த கஜேந்திரனது கடிதத்தை எடுத்து நீட்டினாள். வெகு நேரமாக வித்தியா அக்கடிதத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தாளே தவிர உற்சாகத்துடன் கையை நீட்டி அதைப் பெறவில்லை. அது அர்ச்சகாவுக்கு அதிர்ச்சியை கொடுத்தது. தற்செயலாக கண்மணி மாமி அறைக்குள் வந்தால் என்ன செய்வத?” என்று நினைத்துப் பயந்தாள்; “என்னடி பேயறைந்தது மாதிரி இருக்கிறாய். உனக்காக நான் கஷ்டப் நகுலனைச் சந்தித்துக் கஜேந்திரனிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக் கொண்டு வாறன். நீ அலட்சியமாக இருக்கிறாய்.” என்றவாறு மேசையில் அக்கடிதத்தை வைத்தாள் அர்ச்சகா.

மேசையில் இருந்த அக்கடிதம் காற்றில் படபடத்தது. அதை எடுக்காது அதையே பார்த்துக் கொண்டிருந்தாள் வித்தியா. அர்ச்சகாவுக்குப் பயமாக இருந்தது. மெல்லச் சென்று அக்கடிதத்தை எடுத்து அங்கிருந்த புத்தகமொன்றுக்குள் வைத்தாள் அர்ச்சகா. அவளுக்கு வித்தியாவின் மேல் கோபம் வந்தது.

“அர்ச்சகா, என்னால் இனியும் அவரைப் பார்க்காது இருக்க முடியாது. கடிதங்கள் இன்பத்தையோ ஆறுதலையோ தரமாட்டாது. தொலையாத துன்பத்தைத் தான் தரும். ஆயிரம் கடிதங்கள் வாசிப்பதை விட அவர் அருகில் இருந்து ஒரு வார்த்தை பேசினால் எவ்வளவு இன்பமாக இருக்கும் தெரியுமா? அத்துடன் நான் கடிதம் எழுதினால் அவருக்கு என்னைச் சந்திக்கும் எண்ணம் வராது. எனவே நான் இனிமேல் கடிதம் எழுத மாட்டேன். அத்துடன் அவர் எழுதும் கடிதத்தையும் வாசிக்க மாட்டேன். கடிதம் எழுதுவது ஆரம்பக் காதலர்களுக்கு இன்பமாக இருக்கும். அவர்கள் தமக்கு எழுதிய கடிதங்களை அடிக்கடி எடுத்து வாசித்து இன்பமடைவார்கள். நாங்கள் காதலிப்பதைக் கடந்து விட்டோம். அவர் எனது நெஞ்சில் கருங்கல் சிற்பமாகப் பதிந்துள்ளார். அதே போல் நானும் அவரின் உள்ளத்தில் உறைந்துள்ளேன். இந்நிலையில் துன்பப்படும் எனக்கு அவர் நேரில் வந்து ஆறுதல் வார்த்தைகள் கூறினாலும்

எனது மனம் ஏற்காது. அத்துடன் எனது கண்களும் அதை ஏற்காது வருந்தி அழும். இப்பொழுது அவர் வந்து அழைத்துச் சென்றாலே எனது துன்பம் மறையும். அதற்கான ஏற்பாட்டை செய்ய விரும்பினால் செய். இல்லா விட்டால் நான் துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டிரு'' என்றாள் வித்தியா.

அர்ச்சகாவால் பேச முடியவில்லை. அவள் அதிர்ச்சியால் சில கணங்கள் உறைந்து போனாள். வித்தியாவின் வார்த்தைகளில் அர்த்தமிருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது. ''வித்தியா பாவம். அவள் சொல்வதைப் போல் நாம் கஜேந்திரனைச் சந்தித்துக் கடிதங்கள் வாங்கி வருவதாலும், வித்தியாவைப் பற்றிய செய்திகளைச் சொல்வதாலும் தான் அவன் வாழாதிருக்கிறான். வித்தியாவைப் பற்றி செய்திகள் எதுவும் தெரியாவிட்டால் துடிதுடித்து அவளைச் சந்திக்க முயல்வான். அதை நான் கெடுத்து விட்டேன்'' என்று நினைத்தாள் அர்ச்சகா.

''காதலிக்க துணிந்தவருக்கு எனது துயரத்தைப் போக்கவும் தெரிய வேண்டும். அழுது அழுது எனது கண்ணீர் வற்றி விட்டது. பல இரவுகள் உறங்காததால் எனது கண்கள் எரிகின்றன. கண்ணீரைத் துடைப்பதால் எனது கண்கள் சிவந்து வீங்கித் துன்பத்தைத் தருகின்றன. இனிமேலும் என்னால் துன்பத்தைத் தாங்க முடியாது. எதற்கும் ஓர் அளவு வேண்டும். அவர் எனது நிலையை உணராது தனது துன்பங்களைப் பற்றியே கடிதங்களில் எழுதுகிறார். அவருக்கு எனது பிரிவால் மட்டுமே துன்பம் உண்டு எனக்கு எவ்வளவு கரைச்சல் என்று உனக்குத் தெரியும். அம்மா தினமும் பலமுறை என்னைத் திட்டுகிறா. நான் யாரையோ கொலை செய்த மாதிரி மாமா என்னைப் பார்க்கிறார். இதிலிருந்து நான் விடுதலை அடைய வேண்டும் என்று அவருக்கு எடுத்துச் சொல்லு. இந்தத் துன்பங்கள் யாவும் அவர் அழைத்துச் சென்றால் தான் தீரும்'' என்று அழுதாள் வித்தியா.

**1176. ஓஓ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்**
**தாஅம் இதற்பட்டது!**

*எனக்கு இக் கொடிய காம நோயை உண்டாக்கிய கண்கள், இன்று தாமும் பெருந்துன்பத்துள்ளாகி வருந்துவது மிகவும் நல்லதே.*

## நெகிழ்ந்த கண்கள்

''அவர் உன்னை அழைத்துச் செல்ல மாட்டேன் என்று எப்போதாவது உனக்குக் கூறினாரா? அப்படிக் கூறியிருந்தால் நீ சொல்கின்ற அனைத்துக் குற்றச் சாட்டுக்களையும் ஏற்றுக் கொள்ளலாம். அவர் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் ; ''வித்தியாவை தாய் கொடுமைப்படுத்துவதை நினைக்க எனக்குத் தாங்க முடியாத வேதனையாக இருக்கிறது நான் அவளைக் கூட்டி வரப்போகிறேன். கடவுள், தான் படைத்த உயிர்களைக் காப்பாற்றாமல் விடமாட்டார். நான் விரும்பியவளை கௌரவமாகக் கூட்டிவர நினைக்கிறேன். தாங்கள் ஒரு வைத்தியனைத் தீர்மானித்திருக்க அவள் யாரோ ஊர் பேர்

தெரியாத தொழிலில்லாதவனோடு சென்று விட்டாள் என்று அவளது இனத்தவர்கள் குறை கூறக்கூடாது என்பதற்காகத் தான் பொறுத்திருக்கிறேன். வித்தியா படும் துன்பங்களைக் கடிதங்களில் எழுதுவதால், அதை வாசிக்கும் போது எனது கண்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றன. அவள் ஒரு மாபெரும் புதையல். எனது சொர்க்கம் அப்படியானவள் வீட்டில் இருந்து துன்பப்படுவதை விட கௌரவக் குறைவான முறையில் கூட்டிவருவது நல்லது. நான் எனது அம்மாவுக்கு வித்தியாவின் காதல் விஷயத்தைப் பற்றிக் கூறி விட்டேன். என்னால் அவள் படும் துன்பத்தைப் பற்றியும் எடுத்துக் கூறி விட்டேன். அம்மா சுகவீனமுற்று வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்ற பொழுது வித்தியா அங்கு வந்து பராமரித்த போதே அம்மா சந்தேகப்பட்டாவாம். நல்ல பிள்ளை; குணவதி என்றா. அப்பா என்னில் மிகுந்த அன்பு வைத்துள்ளார். எனது காதலைப் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டார். கொழும்புக்கு வித்தியா செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் உடனே நான் அவளை அழைத்து வந்து விடுவேன்'' என்று கஜேந்திரன் கூறினவர். உனக்கு இங்கு இருக்கக் கஷ்டமென்றால் புறப்பட்டு வா. கூட்டிக் கொண்டு போய் விடுகிறேன் என்றாள் அர்ச்சகா.

அர்ச்சகா அப்படிச் சொல்வாள் என்று எதிர்பாராத வித்தியா சற்றுத் தடுமாறிப் போனாள்; ''இப்ப அம்மா கொழும்புக்குப் போறதைப் பற்றிக் கதைப்பதில்லை. காலையில் வந்து சொன்னா; ''வித்தி இனி நீ வீட்டை விட்டுச் செல்ல நான் அனுமதிக்க மாட்டன். அவசரமாக எங்காவது செல்வதானால் நானும் உன்னோடு வருவன்.'' என்றா. இதிலிருந்து இப்போதைக்குக் கொழும்புக்குப் போவதில்லை என்று தீர்மானித்திருக்கிறா போலத் தெரிகிறது. அம்மாவுக்கு இரத்த அழுத்த நோய் உள்ளது. நேற்றுச் சாப்பிடவில்லை தலையைச் சுற்றுகிறது என்று படுத்திருந்தா. மாமா வைத்தியரை அழைத்து வந்தார். இரத்த அழுத்தம் கூடி இருப்பதாக வைத்தியர் சொன்னார். அத்துடன் அதிகம் யோசிக்க வேண்டாமென்றும் சொன்னார். நான் அழுவதைப் பார்க்க அவாவுக்கு வருத்தம் கூடி விடும். தற்செயலாக நான் வீட்டை விட்டுப் போனால் அதிர்ச்சியில் செத்துப் போவா. அது தான் கவலையாக இருக்கு. இவ்வளவு காலமும் அன்போடு எந்த விதமான குறைகளுமில்லாமல் என்னை வளர்த்த அம்மாவுக்குத் துரோகம் செய்வதை நினைக்க கவலையாக இருக்கு.'' என்று கூறி விட்டுச் சில நிமிடங்கள் விம்மினாள் வித்தியா.

நல்லூர்க் கந்த சுவாமி கோயிலில் அவரைக் கண்டு விட்டு நான் தான் ஆசைப்பட்டேன். பின் அவர் எனக்குப் பின்னால் திரிந்த போது அவரை வெறுத்து ஒதுக்க எனது கண்கள் விடவில்லை. அப்பொழுது வெறுத்திருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிராது. அன்று அவரைக் கண்டதும் மகிழ்ந்து விரும்பிய எனது மனமும் அவரைக் கண்டவுடன் நெகிழ்ந்து வரவேற்று மகிழ்ந்த கண்களும் இன்று உறங்க முடியாமல் தவிக்கின்றன. என்னால் இப்பொழுது அழமுடியவில்லை. அழுதாலும் கண்ணீர் வற்றியதால் கண்களால் கண்ணீர் வருவதில்லை'' என்றாள் வித்தியா. அர்ச்சகா எதுவும் பேசாமல் நின்றாள்.

**1177. உழந்துஉழந்து உள்நீர் அறுக விழைந்துஇழைந்து**
**வேண்டி யவர்க்கண்டகண்!.**

*அன்று காதலரைக் கண்டு மயங்கி விரும்பிய கண்கள், இன்று உறக்கமில்லாது துன்பத்தால் வருந்தி வருந்தி அழுது கண்ணீரும் அற்றுப் போகட்டும்.*

## கண்களின் துன்பம்

பல நாட்களாக வளர்மதி, ஆதவனைக் காணவில்லை. வழக்கமாக அவன் செல்லும் வீதியில் பலமுறை அவள் சென்ற போதும் அவனைக் காண முடியவில்லை. வளர்மதி வசதியான குடும்பத்தில் பிறந்தவள். அவளது தந்தை பெரிய விவசாயி. பெரும் வர்த்தகர்கள் சம்பாதிக்கும் பணத்தை விட கூடுதலான பணத்தை அவர் விவசாயம் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்வார். அத்துடன் வளர்மதியின் மூன்று சகோதரர்கள் வெளிநாட்டில் இருந்து உழைத்துப் பெருந்தொகையான பணத்தை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவளுக்குப் பணத்திற்கு ஒரு போதும் தட்டுப்பாடு ஏற்பட்டதில்லை. அவள் ஏதாவது ஒரு பொருளை விரும்பினால் அவளது தந்தை அதை வாங்கிக் கொடுத்து விடுவார். அவர் வாங்கிக் கொடுக்கா விட்டால், அவள் அன்று தொலைபேசியில் தனது சகோதரர்களுக்கு சொல்வாள். உடனே அவர்கள் தமது தந்தையை ஏசி விட்டு அவள் கேட்ட பொருளை வாங்கிக் கொடுத்து விடுவார்கள். அதனால் அவளது தகப்பனார் அவள் கேட்கும் பொருட்கள் யாவற்றையும் வாங்கிக் கொடுத்து விடுவார். அப்படிச் செல்லமாக வளர்ந்த வளர்மதிக்கு ஆதவன் அலட்சியம் செய்வது பெரும் வேதனையைக் கொடுத்தது. பொருட்கள் வாங்குவதைப் போல அவனை வாங்க முடியவில்லையே என்று அவள் துக்கப்படுவாள்.

பல நாட்களாக ஆதவனைக் காணாததால் அவனது வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானாள் வளர்மதி. ஆதவனின் தங்கை நிர்மலா ஓர் அழகுப் பிரியை. அழகான எந்தப் பொருளைக் கண்டாலும் அதை வாங்க வேண்டுமென்று நினைப்பவள். அதனால் வளர்மதி பூங்கன்றுகள் விற்பனை செய்யும் தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மஞ்சள் நிறமும் சிவப்பு நிறமும் கலந்த ரோஜாப்பூச் செடி விற்பனைக்கிருப்பதாகத் தோட்டச் சொந்தக்காரன் அன்றைய தினசரிப் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருந்தான். அதனால் அங்கு சென்ற வளர்மதி அந்த ரோஜாச் செடியை விலைக்குக் கேட்டாள். உரிமையாளன் அதற்கு ஐந்நூறு ரூபா சொன்னான். பணத்தைக் கொடுத்து அந்த ரோஜாச் செடியை வாங்கிய வளர்மதி, அதைக் கொண்டு ஆதவனின் வீட்டுக்கு வந்தாள். அந்த ரோஜாச் செடியில் மலர்ந்திருந்த பூவைக் கண்டதும் நிர்மலா திகைத்து விட்டாள்.

‘‘நிர்மலா, மிகவும் அபூர்வமான ரோஜாச் செடியொன்று எனக்குக் கிடைத்தது. ரோஜாப் பூக்களில் இரு நிறங்கள் கலப்பதில்லை. அபூர்வமாக இந்த ரோஜாச் செடியில் இரண்டு நிறங்கள் கலந்துள்ளன. உனக்குப் பூக்கள் என்றால் உயிர். அது தான் கொண்டு வந்தேன்’’ என்றாள் வளர்மதி.

‘‘அண்ணா, அண்ணா ஓடி வாருங்கோ ரோஜாச் செடியில் இரண்டு நிறங்களில் பூக்கள் மலர்வதில்லை. இங்கே வந்து பாருங்கோ இரண்டு நிறத்தில் ரோஜாப்பூ உள்ளது’’ என்று பலமாகக் கூறினாள் நிர்மலா.

ஆதவன் அவசரமாக அங்கே ஓடி வந்தான். அங்கு வளர்மதி நிற்பதைக் கண்டதும் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. தடுமாற்றத்துடன் அப்பூவைச் சிறிது நேரம் பார்த்த அவன்; ‘‘நல்லாயிருக்குது இதுவரை நான் இப்படியான ஒரு பூவைப் பார்க்கவில்லை’’ என்று கூறி விட்டு உள்ளே சென்றான்.

வளர்மதிக்கு ஏமாற்றமாக இருந்தது. எனினும் சில நிமிடங்களாவது அவனைப் பார்க்க முடிந்ததே என்று சந்தோசப்பட்டாள்; ‘‘நான் எவ்வளவு தீவிரமாக அவரை நேசிக்கிறேன். ஆனால் அவர் என்னை ஏறெடுத்துப் பார்க்கிறாரில்லையே. நான் உங்களை விரும்புகிறேன். உங்களுக்கு என்மீது காதல் இருக்கிறதா என்று வெட்கத்தை விட்டுக் கேட்ட போதும் ‘‘ம்’’ என்று சொன்னாரே தவிர வேறு எதுவும் பேசவில்லை. அப்படியானவராக அவர் இருந்த போதும் எனது கண்கள் அவரைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கின்றன. அதனால் தான் இன்று ரோஜாச் செடியுடன் ஆவரைத் தேடி வந்தேன். அவர் என்னைக் கண்டும் காணாதது போல் இருக்கிறார்’’ என்று துக்கப்பட்டாள் வளர்மதி.

**1178. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றுஅவர்க்**
**காணாது அமைவில கண்.**

*உள்ளத்தால் விரும்பாமல் சொல்லளவில் விரும்பிப் பழகியவரானாலும், அவரைக் காணாமல் கண்கள் அமைதியுறுவதில்லை.*

## இருவகைத்துன்பம்

அர்ச்சகாவின் தாயாரான கமலேஸ்வரியும் தந்தையாரான நவரத்தினமும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷனியம்மன் ஆலயத்திற்குச் செல்வதெனத் தீர்மானித்திருந்தனர். இருபது வருடங்களாக அவர்கள் கொழும்பில் இருந்தமையால் அக் கோயிலுக்கு அவர்கள் செல்லவில்லை. நவரத்தினத்தின் பெற்றோர் திருமணம் செய்து பல வருடகாலம் பிள்ளைகள் இல்லாதிருந்ததால் நாகபூஷனி அம்மனுக்கு நேர்த்தி வைத்து விரதமிருந்தனர் அதனால் தான் நவரத்தினம் பிறந்தாரென அவரது தாயார் கூறுவார். நவரத்தினம் கொழும்புக்குச் செல்லும் வரை வருடாந்த உற்சவ காலத்தில் அவர் குடும்பத்துடன் சென்று வந்தார். ஊருக்கு வந்ததும் முதல் வேலையாக அவர் நாகபூஷனி அம்மன் கோயிலுக்குச் செல்ல வேண்டுமென்று நினைத்திருந்தார். இருந்த போதும் அவரால் உடனே புறப்பட முடியவில்லை.

கார்த்திகைத் தீபத்திருநாளுக்குச் செல்ல வேண்டுமென்று நினைத்து, காத்திகைத் தீபத்திருநாளன்று நவரத்தினமும் கமலேஸ்வரியும் புறப்பட்டனர். அர்ச்சகா சுகமில்லை என்று கூறி நின்று விட்டாள். ஒரு வாரத்திற்கு மன்பே அர்ச்சகா நகுலனைக் கண்டு தனது பெற்றோர் கார்த்திகைத் தீபத்திருநாளன்று நாகபூஷனியம்மன் கோயிலுக்குச் செல்வதால் அன்று அவனை வீட்டுக்கு வருமாறு கூறியிருந்தாள். அவன் முதன் முதலாக வீட்டுக்கு வரும் போது எப்படி

அவனை வரவேற்பது என்று பல நாட்களாக நினைத்துப் பார்த்தாள். இரவு முழுவதும் அவனது வருகையைப் பற்றி நினைத்துத் தூங்கவில்லை. கார்த்திகைத் தீபத்திருநாளுக்கு முதல் நாள் இரவு அவள் விடியும் வரை தூங்கவில்லை. இன்று இரவு அவர் வரமாட்டார். அவரை எதிர்பாராது உறங்கு என்று சொன்னாலும் அவளது கண்கள் உறங்க மறுத்தன. இரவு முழுவதும் உறங்காது கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள் அர்ச்சகா. அன்று இரவு மிகவும் நீண்டு விட்டதைப் போன்றதொரு உணர்வு அவளின் மனதில் எழுந்தது. அடிக்கடி மின் விளக்கைப் போட்டு நேரத்தைப் பார்த்தாள். மணிக் கூடு அசையாமல் நிற்பதைப் போல் இருந்தது. மனம் ஒரு நிலைப் படாது அவதிப்பட்டது.

காலை ஆறு மணிக்கு நவரத்தினமும் கமலேஸ்வரியும் அர்ச்சனைப் பொருட்களுடன் கோயிலுக்குப் புறப்பட்டனர். ''பிள்ளை, கவனமாக வீட்டைப் பூட்டிக் கொண்டு போய் வித்தியாவின் வீட்டில் இரு. அடிக்கடி வீட்டுக்கு வந்து கவனித்துக் கொள். இரவு கார்த்திகைத் தீபம் பார்த்து விட்டு விடியத்தான் நாங்கள் வருவோம். இரவைக்கு வித்தியாவின் வீட்டை போய் நில்.'' என்றாள் கமலேஸ்வரி.

''இரவுக்கு வளர்மதியை கூட்டி வந்து வீட்டில் படுக்கிறேன். ஊரில் திருடர் நடமாட்டம் அதிகரித்திருப்பதால் இங்கு படுப்பது தான் நல்லது'' என்றாள் அர்ச்சகா.

''பயமில்லாவிட்டால் இரண்டு பேரும் படுங்கோ'' என்றாள் கமலேஸ்வரி அந்த வார்த்தைகள் அர்ச்சகாவுக்குத் தேனாக இனித்தன. அவர்கள் புறப்படும் போது வளர்மதி அங்கு வந்தாள்.

''மதி அர்ச்சகாவுடன் துணையாக இருந்து கொள். நாங்கள் விடிய வருகிறோம்.'' என்று கூறிவிட்டுச் சென்றாள் கமலேஸ்வரி. அவர்கள் சென்ற சில நிமிடங்களில் நகுலன் அங்கு வந்தான். அவனைக் கண்டதும்; ''நான் வித்தியாவின் வீட்டுக்குப் போயிட்டு வாறன்'' என்று புறப்பட்டாள் வளர்மதி.

நகுலனைக் கண்டதும் அர்ச்சகாவுக்கு நெஞ்சு படபடத்தது. அவன் அவளின் அருகில் வந்து அமர்ந்தான். அர்ச்சகாவால் அவனோடு கதைக்க முடியவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் பிரிந்து சென்று விடுவார் என்று நினைத்தாள்.

''இப்படி ஒரு நாள் முழுவதும் உமக்கு அருகில் இருப்பேன் என நான் கனவு கூடக் காணவில்லை. மற்றும் வேளைகளில் கலகலப்பாக கதைக்கும் நீர் இன்று ஏன் பேசாமல் இருக்கிறீர்'' என்று அவளின் கையைப் பிடித்தான் நகுலன்.

நீங்கள் கண்டாலும் எனக்குத் தூக்கம் வருவதில்லை. காணாவிட்டாலும் தூக்கம் வருவதில்லை. இப்பொழுது எனக்கருகில் இருக்கிறீர்கள். சிறிது நேரத்தில் என்னை விட்டுப் பிரிந்து சென்று விடுவீர்கள் என்று நினைக்க எனக்குக் கவலையாக உள்ளது. அதை நினைத்தால் எனக்குத் தூக்கம் வர மாட்டாது. நீங்கள் என்னைச் சந்திக்க வந்தாலும் துக்கம் தான். சந்திக்க வராவிட்டாலும் துக்கம் தான்'' என்று விம்மினாள் அர்ச்சகா.

''அதிஷ்டவசமாய் உம்மைச் சந்திக்க எனக்கொரு வாய்ப்புக் கிடைத்திருக்கு. அதைச்சரிவரப் பயன்படுத்தாமல் அழுகிறீர்'' என்றான் நகுலன்.

‘‘உங்களுக்குகென்ன சொல்லுவியள் நான் உங்களால் இருவகையான துன்பத்தை அனுபவிக்கிறேன்’’ என்றாள் அர்ச்சகா.

**1179. வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை**
**ஆரஞர் உற்றன் கண்.**

*காதலர் வராவிட்டாலும் எனது கண்கள் தூங்குவதில்லை. அவர் வந்தாலும் தூங்குவதில்லை. இவ்வாறு எந்நேரமும் என் கண்கள் துன்பப்படுகின்றன.*

## கொட்டும் மேளம்

அன்று இரவு எட்டுமணிக்கு நகுலன் அர்ச்சகாவின் வீடடிலிருந்து புறப்பட்டான்; ‘‘நான் அதிகாலையில் புறப்பட்டு வந்தால் காலை உணவையும் உண்ணவில்லை, உம்மோடு இருந்தால் மதிய உணவையும் அம்மாவிடம் உண்ணவில்லை. அம்மா காலையில் சாப்பிட்டிருப்பா. மத்தியானம் நான் சாப்பிடாமல் சாப்பிடமாட்டா’’ என்று ஐந்தாவது தடவையாகக் கூறிவிட்டு எழுந்தான் நகுலன்.

‘‘என்னை விட உங்களுடைய அம்மாவினுடைய சாப்பாடு முக்கியமென்று கருதும் உங்களை எனக்குப் பிடிக்கவில்லை. இன்னும் சிறிது நேரம் இருந்து விட்டுச் செல்லுங்கள்’’ என்று சிணுங்கினாள் அர்ச்சகா.

‘‘மாலை ஆறுமணிக்கும் இதைத் தான் சொன்னனீா். இப்ப ஒன்பது மணிக்கும் இப்பவும் அதைத்தான் சொல்கிறீா். இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால் விடிந்த பின்பும் நான் செல்ல முடியாது.’’ என்றான் நகுலன்.

‘‘இப்படி ஒரு சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்கமாட்டாது. விடிந்த பின்பு நீங்கள் செல்வதானாலும் எனக்குச் சந்தோஷம் தான்.’’

‘‘இனியும் தாமதிக்க என்னால் முடியாது’’ என்று எழுந்தான் நகுலன்.

அர்ச்சகா அவனது கையைப் பிடித்து இழுத்தாள்; ‘‘எனது பள்ளித் தோழி மாதுமையும் அவளது தாயாரும் யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்காக நாளைக்கு இங்கு வருகிறார்கள். அவர்கள் செல்ல இரண்டு வாரங்களாகும். அது வரையும் நான் உங்களைக் காண முடியாது. இன்னும் சிறிது நேரம் இருங்கோ’’ என்று கெஞ்சினாள் அர்ச்சகா.

‘‘எனக்கு உம்மோடு இருக்க விருப்பமில்லையென்றா நீர் நினைக்கிறீர். என்னுடைய நிலைமையை உம்மால் புரிந்து கொள்ள முடியாது. நான் மாலை வேளைகளில் தாமதமாக வீட்டுக்குச் செல்ல நேர்ந்தால், அம்மா விளக்குடன் ஒழுங்கையில் நிற்பா. ஊர்முழுக்க நான் நேரம் தமதமாகி வரும் செய்தி தெரிந்து விடும்’’ என்று கூறி விட்டு அர்ச்சகாவின் பதிலை எதிர்பாராது நடந்தான் நகுலன்.

அன்று இரவு முழுவதும் அர்ச்சகா தூங்கவில்லை. பகல் முழுவதும் நகுலன் அருகில் இருந்ததைப் போல் விடியும் வரை அவளின் நினைவில் அவன்

இருந்தான். அவன் அங்கிருந்த போது நடந்த சம்பவங்கள், அவன் சென்ற பின்பும் நடப்பதைப் போல் இருந்தன. வளர்மதி நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். விடியலை வரவேற்றுக் குருவிகள் இசைக்கும் இராகம் கேட்டுக் கொண்டிருந்தது. நித்திரை வராமையால் எழுந்த அர்ச்சகா குளித்து விட்டுச் சமைக்க ஆரம்பித்தாள்.

பத்துமணிக்கு மாதுமையும் அவளது தாயார் புனிதவதியும் அர்ச்சகாவின் வீட்டுக்கு வந்தனர். அவர்கள் வந்த போது நவரத்தினமும் கமலேஸ்வரியும் நாகபூஷனியம்மன் கோயிலால் வரவில்லை. மாதுமை குளித்து விட்டு வந்து சாப்பாட்டு மேசையில் அமர்ந்தாள். அர்ச்சகா அவளுக்கு உணவு பரிமாறினாள்.; ‘‘யாழ்ப்பாணத்துத் தண்ணீர் உன்னைக் கொழுக்க வைத்திருக்கு. இரண்டு மாதத்துள் ஆளே மாறிவிட்டாய். கொழும்பில் உனது முகத்தில் நரம்புகள் தெரிந்தன. இப்ப நல்லாய்க் கொழுத்துச் சிவந்திட்டாய். முன்பை விட ஓர் அபூர்வ அழகு உனது முகத்தில் தாண்டவமாடுகிறது’’ என்ற மாதுமை அவளது கண்களை உற்றுப்பார்த்தாள் பின்; ‘‘ஆள் அழகாக இருந்தாலும் கண்களில் உள்ள மருட்சியும் துன்பமும் என்னைச் சந்தேகப்பட வைக்கினன்றன. உண்மையைச் சொல்லு இல்லாவிட்டால் மாமியைக் கேட்பன்.’’ என்றாள் மாதுமை.

உனக்கு எப்பவும் கேலியும் நக்கலும் தான். உன்னைப் போல என்னையும் நினைக்கிறாய்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘நீ உண்மையாகக் காதலிக்காது இருந்தால், காதலைப் பற்றி எப்படிக் கதைப்பாய். உனக்குள்ளே இருப்பது தான் உனது உடலிலும் இருக்கிறது. ஒருவரது கண்கள் அவரது முகத்தைக் காட்டும் கண்ணாடி என்று சொல்வார்கள். மனதின் உணர்வுகளை முகம் பிரதிபலிக்கும். நான் சொல்லும் வார்த்தைகளால் உனது கண்கள் துடிக்கின்றன. முகம் சிவந்து விட்டது. உனது கண்களில் காணப்படும் காதலரைப் பிரிந்த சோகம் அடிக்கப்படும் மேளத்தைப் போல உனது மனதில் உள்ள செய்தியைச் சொல்கிறது’’ என்று கண்சிமிட்டினாள் மாதுமை.

**1180. மறைபெறல் ஊரார்க்கு அரிதுஅன்றால் எம்போல்**
**அறைபறை கண்ணா ரகத்து.**

*அறைந்து இரகசியத்தை வெளிப்படுத்தும் பறையைப் போல துன்பத்தை வெளிப்படுத்தும் கண்களை உடைய என்னைப் போன்றவரிடத்தில் இரகசியங்களை அறிந்து கொள்வது இந்த ஊரவருக்கு மிகவும் எளிதானது.*

## யாரிடம் சொல்வேன்

‘‘காதல் என்பது அற்பமான தென்றா நீ கருதுகிறாய். உலகின் உயிர் மூச்சு காதல் தான். காதல் இல்லாவிட்டால் உலகம் அழிந்து விடும். உலகில் எந்த ஓர் உயிரினமும் இருக்கமாட்டாது. காற்றும் இராது. நீரும் இராது. கடவுள் உலகத்தையும் காதலையும் ஒன்றாகத் தான் படைத்தார். காதல் இல்லா விட்டால் உலகில் சுவைகள் கூட இருக்கமாட்டாது. விஞ்ஞானப்படி தாவரங்கள் கூடக் காதலிக்கின்றன. நீ காதலிப்பதைப் பற்றி நான் குறை சொல்ல வில்லை. காதலை மறைத்ததைத் தான் குறை சொல்லுறன். நீ உனது காதல்

விஷயத்தைப் பற்றி எனக்குக் கடிதம் எழுதியிருக்கலாம் தானே. என்னை நீ உண்மையாக நேசித்திருந்தால் மறைத்திருக்கமாட்டாய். காதலைப் பற்றி நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வது எவ்வளவு இன்பமான தென்று உனக்குத் தெரியுமா? காதலிப்பதை விடக் காதலிப்பவரைப் பற்றி அன்புள்ளம் கொண்டவர்களுடன் கதைப்பது பேரின்பத்தைத் தரும்'' என்றாள் மாதுமை.

''உனக்கு எனது காதலைப் பற்றி எழுத வேண்டும் என்று தான் நினைத்தனான். ஆனால் நேரங்கிடைக்கவில்லை. வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து ஒழுங்கு படுத்த ஒரு மாதத்திற்கு மேல் எடுத்து விட்டது…'' என்று அர்ச்சகா சொல்லிக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டாள்.; ''சாட்டுச் சொல்லாதை நீ இரண்டு கடிதங்கள் எனக்கு எழுதினனீ ஒன்றிலென்றாலும் எழுதியிருக்கலாம்'' என்றாள் மாதுமை.

''பிழை தான், அவர் என்னைக் காதலிக்கிறாரோ என்று அந்த நேரம் என்னால் சரியாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. சரியாகத் தெரியாமல் எழுதினால் நீ அங்குள்ள எல்லோருக்கும் சொல்லி விடுவாய். பிறகு வீணான தொந்தரவுகள் வந்துவிடும். எழுதாதது பிழை தான். இனி அப்படியான தவறு எதுவும் விட மாட்டன்'' என்றாள் அர்ச்சகா.

''அவர் எப்படி வடிவானவரே? என்ன செய்கிறார். எத்தனை நாட்கள் அவரைச் சந்தித்துக் கதைத்தனீ'' என்று கேட்டாள் மாதுமை.

''அவர் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புப் படிக்கிறார். மிகவும் நல்லவர். அழகானவர் பலமுறை சந்தித்துக் கதைத்தனான். அடுத்த முறை உன்னையும் அழைத்துச் செல்கிறேன்'' என்றாள் அர்ச்சகா.

'' உனது வார்த்தைகளை விட உனது அங்கங்கள் தான் அவரைப் பற்றிச் சொல்கின்றன. நீ பேசும் போது உனது கண்களும், உதடுகளும் அசையும் அசைவில் இருந்து அவர் மீது நீ கொண்டுள்ள காதலைப் பற்றி நான் தெரிந்து கொண்டேன். எவ்வளவு அழகாக இருந்த நீ இப்பொழுது பசலை நிறமாகியுள்ளாய். காதல் வசப்பட்ட ஒரு பெண் தனது காதலன் அருகில் இருந்தால் சிவந்து அழகு கூடிக்காணப்படுவாள். காதலனின் நெருக்கம் கூடக் கூட அவளின் உடல் சிவந்து பொன் போல் ஒளிரும். ஆனால் காதலன் அப் பெண்ணை விட்டுப் பிரிந்தால் அவளது நாணமாகிய செந்நிறம் உடனே மாறி விடும். இதற்குக் காரணம் அவளின் உடலில் பசலை படர்வது தான்.'' என்ற மாதுமை சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். பின்; ''எனது காதலரைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. ஒரு நிமிடம் கூட என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டார். அதே போலத்தான் நானும் அவரை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன். தொழில் நிமித்தம் அவர் வெளிநாடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதற்காக அவர் என்னை விட்டுப் பிரியவிரும்பினார். நான் அதற்குச் சம்மதித்து விடை கொடுத்தேன். அவர் பிரிந்த பின்பு பசலையுற்றேன். இந்த நிலையை நான் யாருக்குச் சொல்வேன். சொல்வதால் ஏதாவது பிரயோசனம் ஏற்படுமா. என்ன….? அவர் எப்போது வருவாரென நான் ஆவலோடு காத்திருக்கிறேன். அவர் இல்லாததால் எனக்குப் பொழுது போகுதில்லை'' என்று விம்மினாள் மாதுமை.

அர்ச்சகா மாதுமையை உற்றுப் பார்த்தாள். அவளது உடல் வெளிறி பசலை படர்ந்திருந்தது.

**1181. நயந்தவர்க்கு நல்காமை தேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க்கு உரைக்கோ பிற?.**

*எனது காதலர் பிரிவை விரும்பிய போது அதற்கு உடன்பட்டேன்; பிரிந்த பின்பு பசலை உற்ற என் தன்மையை நான் வேறு யாரிடம் போய்ச் சொல்லுவேன்.*

# பெருமையுடன்

‘‘அர்ச்சகா, உனக்கு அவரைத் தெரியும் தானே. அவர் என்மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார். அத்துடன் அவர் எனது தந்தையாரின் உற்ற நண்பனின் மகன் என்பதால் எந்த நேரமும் அவர் வீட்டுக்கு வருவார். இரு வீட்டாரும் எமக்கு திருமணம் செய்து வைப்பதாகத் தீர்மானித்திருந்தமையால் எமக்குக் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. நினைத்த நேரம் நான் தொலைபேசியில் அவரோடு கதைப்பேன். அவரைக் காண வேண்டும் என்று விரும்பினால் உடனே தொலைபேசியில் அவரை வீட்டுக்கு வருமாறு அழைப்பு விடுவேன். உடனே வந்து விடுவார். அவருக்கு என்ன அவசர வேலை இருந்தாலும் அதை எனக்காக ஒதுக்கி வைத்து விட்டு என்னைச் சந்திப்பதற்காக வந்து விடுவார். அப்படித் தினமும் அவரைச் சந்தித்துக் கதைத்து மகிழ்ந்த நான் இப்போது இரண்டு மாதங்களாக அவரைச் சந்தித்துக் கதைக்க முடியாமல் இருக்கிறேன்’’ அழுதாள் மாதுமை.

‘‘ஒவ்வொரு நாளும் மூன்று மணித்தியாலங்கள் தொலைபேசியில் கதைக்கிறதாய் நான் கேள்விப்பட்டன்’’ என்றாள் அர்ச்சகா.

விரக்தியாகச் சிரித்தாள் மாதுமை; ‘‘நேரில் சந்தித்துக் கதைக்கும் இன்பத்தைப் போல ஓர் இன்பம் இவ்வுலகில் இல்லை என்று நினைக்கிறேன். அவரின் கருணையான விழிகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் எனக்குத் தூக்கமே வராது. அவர் கதைக்கும் போது, அவரின் உதடுகள் அசையும் நளினம் இருக்கே அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவர் கதைப்பதைக் கேட்பதிலும் பார்க்க பார்ப்பது தான் எனக்கு இன்பத்தைத் தரும். அழகான கருமை மிக்க சுருண்ட அவரது தலை முடி எவ்வளவு அழகானது தெரியுமா.’’ அந்த அழகை நான் தொலைபேசியில் பார்க்க முடியுமா….? இல்லை அவரது உதடுகள் அசையும் நளினத்தை நான் இரசிக்க முடியுமா..? குரலைத்தான் கேட்க முடிகிறது. அதுவும் அவர் என் அருகில் இருந்து பேசுவது போல வருமா…? அவர் எனக்கு அருகில் இருந்து கதைக்கும் போது எனது விரல்களைப் பிடிப்பார். தலையில் பூச்சூடுவார். நான் தேநீர் கொடுத்தால் என்னையும் குடிக்குமாறு வற்புறுத்துவார். நான் குடித்து விட்டுக் கொடுத்தால் தான் அவர் குடிப்பார். அதற்காக நான் தேநீர் குடிக்காமல் அவர் வரும்வரை காத்திருப்பேன். அந்த இன்பத்தைப் பற்றி உனக்குத் தெரியாது. சொல்லிக் கொண்டிருந்தாள் மாதுமை.

அதைக் கேட்க அர்ச்சகாவுக்குச் சிரிப்பாக இருந்தது. ‘‘நகுலன் செய்யாத ஒன்றையா இவளது காதலன் செய்கிறார். கையை அசைக்கும் போது தற்செயலாக தொடுவதைப் போல் அவர் எங்கெல்லாம் தொட்டிருக்கிறார் என்று இவளுக்கு எங்கே புரியப் போகிறது. கடற்கரையில் குளிர்பானம் வாங்கி எனக்கு அவர் பருக்கியதை இவள் அறிவாளா? இல்லை கடலை வாங்கி நான் அவரது வாயில் வைக்க, அவர் எனது கையைக் கடிப்பதை இவள் அறிவாளா...? தான் பெரும் இன்பத்தை அடைந்ததாக நினைக்கிறாள்’’ என்று மனதுக்குள் நினைத்துச் சிரித்தாள் அர்ச்சகா.

‘‘என்னடி சிரிக்கிறய்?’’ என்ற மாதுமையைப் பார்த்துச் சொன்னாள் அர்ச்சகா; ‘‘நீ சொல்வதைப் பற்றி ஒன்றும் எனக்குத் தெரியாது. நீ வீட்டாரின் அனுமதியோடு உனது காதலரோடு கதைத்து இன்பமனுபவிக்கிறாய். ஆனால் நான் எங்கோ இருக்கும் ஒருவருடன் மனதுள் கதைத்துச் சிரிக்கிறேன்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘நான் அதிஷ்டம் செய்தவள். ஆனால் தற்பொழுது பிரிந்திருக்கிறேன்’’ என்றாள் மாதுமை.

பிரிந்திருப்பதால் நன்றாக மெலிந்து விட்டாய். அதோடு வெளிறியும் போனாய்’’ என்றாள் அர்ச்சகா.

‘‘அவர், என் அருகில் இருக்கும் போது கொழுத்துச் சிவந்திருந்த எனது உடல், அவர் வெளிநாடு சென்றதும் வெளிறி விட்டது. அவர் உண்டாக்கினார் என்ற பெருமையோடு பசலை உடலெங்கும் பரவி விட்டது. அது தான் வெளிறிப் போனேன்.’’ என்றாள் மாதுமை.

**1182. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்**
**மேனிமேல் ஊரும் பசப்பு.**

*அந்தக் காதலர் உண்டாகினார். என்ற பெருமையோடு இந்தப் பசலை நிறம் என்மேனி யெங்கும் ஊர்ந்து பரவி வருகிறது.*

## கைம்மாறு

‘‘நீ முன்பு எவ்வளவு அழகாக இருந்தாய் எம்மோடு கூடப் படித்த மாணவர்கள் பலர் உன் அழகில் மயங்கிப் பித்துப் பிடித்துத் திரிந்தவர்கள். மதிவதனன் உனது அழகில் மயங்கி பித்துப் பிடித்தவன் போல உனக்குப் பின்னால் அலைந்தவன். அவன் உனக்குக் கடிதம் எழுதிக் கொண்டு வந்து என்னிடம் எத்தனை தடவை தந்தவன். நான் அவன் தந்த கடிதமொன்றை உன்னிடம் கொண்டு வந்து தர அதை நீ வாங்க மறுத்து விட்டாய். அதனால் அதை அவனிடம் திருப்பிக் கொடுத்தேன். ஆனால் அவன் அதை வாங்கவில்லை. ‘‘அர்ச்சகா, நீயே இக்கடிதத்தை வைத்துக் கொள். இன்றில்லா விட்டாலும் என்றோஒரு நாள் அவள் என்னை விரும்புவாள். அப்பொழுது அந்தக் கடிதத்தைக் கொடு’’ என்றான். இரண்டு வருட காலமாக நான் உன்னைக் கேட்டும் நீ அந்தக் கடிதத்தை வாங்கவில்லை. அதற்ப் பின்பு அவன் வெளிநாடு ஒன்றிற்குச் சென்று விட்டான். அதனால் அவன் தந்த கடிதம் என்னிடடே

இருக்கு. இரு எடுத்து வருகிறேன்'' என்று கூறி விட்டு மாதுமையின் பதிலை எதிர்பாராது உள்ளே சென்ற அர்ச்சகா சில நிமிடங்களில் திரும்பி வந்தாள்.

" இந்தா மதிவதனனின் கடிதம்'' என்று ஒரு கடிதத்தை நீட்டினாள் அர்ச்சகா. மாதுமை அக்கடிதத்தை வாங்கவில்லை.; "மாதுமை, அவன் வெளிநாட்டிற்குச் சென்று விட்டான். செல்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு எங்களது வீட்டுக்கு வந்து அழுதான். நான் ஏற்கனவே உனக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது என்று கூறினேன். கவலைப்பட்டான். அவன் கவலைப்படுவதைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. உன்மீது கோபமும் வெறுப்பும் வந்தது. அவன் சொன்னான் "மாதுமையை விரும்பிய என்னால் அவளை மறக்க முடியவில்லை. எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் உள்ளது. எனக்கு மூன்று பெண் சகோதரிகள் இருக்கிறார்கள். அப்பா அண்மையில் ஒரு விபத்தில் அகப்பட்டு இறந்து போனார். அதனால் சகோதரிகளைக் காப்பாற்றுகின்ற பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டு விடடது. இல்லாவிட்டால் நான் செத்திருப்பன்'' என்றான். உன் மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கும் மதிவதனனின் கடிதத்தை வாசித்துப் பார்'' என்றாள் அர்ச்சகா.

"நான் வாசிக்க மாட்டன்'' என்றாள் மாதுமை; "நீ வாசிக்க வேண்டாம் நான் வாசிக்கிறேன் கேள்'' என்ற அர்ச்சகா கடிதத்தை மெதுவாக வாசித்தாள்.

அன்பே! நான் உன்னை விரும்புகிறேன். அதற்குக் காரணம் உனது அழகுதான். பிரமன் தனது கைவண்ணத்தைப் பூவுலகினர்க்குக் காட்ட எண்ணிப் போலும் உன்னைப் படைத்தான் உனது உடலில் கொட்டிக் கிடக்கும் அழகை என்னால் வர்ணிக்க முடியாது. வட்டவடிவமான முகம். அதில் படர்ந்திருக்கும் பசுமை எனது கண்களைப் பறிக்கிறது. சிற்பி ஒருவன் அளவறிந்து செதுக்கிய சிலையைப் போன்ற உனது உடலமைப்பு என் உயிரைக் கொல்கிறது. அழகான நெற்றி அதை அழகு படுத்தும் ஒட்டுப் பொட்டு, கூர்மையான வளைந்த புருவங்கள், அழகான கண்கள், பளபளக்கும் சிவந்த கன்னங்கள். எடுப்பான மூக்கு, அழகான செந்நிற ரோஜா இதழில் பனித்துளி பட்டுப் பிரகாசிப்பதைப் போன்ற உதடுகள் தொடர்ந்து வாசிக்கட்டா'' என்று கேட்டு விட்டு மாதுமையைப் பார்த்தாள் அர்ச்சகா. மாதுமை எதுவும் சொல்லாதால் அர்ச்சக சொன்னாள்; "இப்ப நான் ஏன் இந்தக் கடிதத்தை வாசித்தனான் தெரியுமே..? மதிவதனன் எழுதிய அழகு அப்ப சரி. இப்ப எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. சுருக்கம் விழுந்த கன்னங்கள், காய்ந்து வெளிறிய உதடுகள், "என்று அர்ச்சகா கூறிக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டுச் சொன்னாள்; "உண்மை தான் அவர் காதல் நோயையும் பசலை நிறத்தையும் தந்து விட்டு எனது அழகையும் நாணத்தையும் எடுத்துச் சென்று விட்டார்'' என்று விம்மினாள் மாதுமை.

**1183. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா**
**நோயும் பசலையும் தந்து.**

*காமநோயையும் பசலை நிறத்தையும் எனக்கு அவர் கைம்மாற்றாகத் தந்து விட்டு எனது அழகையும் நாணத்தையும் எடுத்துச் சென்று விட்டார்.*

## ஏன்

அர்ச்சகா வெளியே சென்றதால், மாதுமை கட்டிலில் படுத்திருந்தாள், ‘‘மாது’’ யாரோ காதுக்குள் கிசு கிசுப்பதைப் போல் இருந்தது. அது அவளது காதலர் விபுலனது குரல் போல இருந்தது. ‘‘மாது… என்ன நித்திரையா என்னை மறந்து உன்னால் எப்படி நித்திரை கொள்ள முடிகிறது. நீ என் உடல் முழுவதும் வியாபித்திருப்பதனால் என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை. உனது அழகிய தோற்றம் என் கண்களுக்குள் புகுந்திருப்பதால் கண்கள் மூட மறுக்கின்றன. உனது இனிமையான குரல் ஒலி எனது காதுகளை நிரப்பியிருப்பதால் கண்கள் மூட மறுக்கின்றன. உனது இனிமையான ஒலி எனது காதுகளை நிரப்பியிருப்பதால் வேறு ஒலிகள் எவையும் எனக்குக் கேட்பதில்லை. உனது பேரழகும் இனிமையான குரலும் என் மனதில் பதிவாகி நிறைந்திருப்பதால் என்னால் செயலாற்ற முடியவில்லை. ‘‘என்று அவன் மாதுமையின் காதுகளுக்குள் மெதுவாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனது உஷ்ணமான மூச்சுக் காற்று அவளது கன்னங்களைக் குளிரச் செய்தது. அவனது உதடுகள் அவளது காதில் உரசி உரசி அசைந்தன.

மாதுமை பூரித்துப் போனாள், ‘‘வந்து விட்டீர்களா…? எப்படி உங்களால் என்னைப் பிரிந்திருக்க முடிந்தது. உங்களுக்கு வெளிநாட்டு உழைப்பு வேண்டாம். இங்கு எனக்கு இருக்கும் சொத்தில் வாழ்வோம். இல்லாவிட்டால் என்னையும் உடனே அழைத்துச் செல்லுங்கள். ஒரு கணம் கூட உங்களைப் பிரிந்து என்னால் இருக்க முடியவில்லை. அர்ச்சகா சொல்கிறாள், எனது அழகெல்லாம் குறைந்து விட்டதாம். முன்பு பொங்கிப் பூரித்திருந்த எனது கண்கள் வாடிச் சுருங்கி விட்டனவாம். அத்துடன் முக எலும்புகள் தெரிகின்றனவாம். சிவந்த எனது உடல் வெளிறி மெலிந்து விட்டதாகக் கூறுகிறாள். அத்துடன் அம்மா எனக்கேதோ வருத்தமெனப் பயப்படுகிறா. எனவே உடனே வந்து என்னை அழைத்துச் செல்லுங்கள்.’’

‘‘மாதுமை, அதுக்கிடையில் நித்திரையாகி விட்டியா.. எழும்பு விபுலன் தொலைபேசியில் வெகு நேரமாகக் காத்திருக்கிறார். நீ வரும்போது எமது வீட்டுத் தொலை பேசி எண்ணைக் கொடுத்து விட்டு வந்திருக்கிறாய். புத்திசாலி’’ என்றாள் அர்ச்சகா.

‘‘மாது, யாழ்ப்பாணத்தில் சுகமாக இருக்கிறாயா?. உனக்கு வெய்யில் ஒத்துக் கொள்ளாது யாழ்ப்பாணக்காலநிலை வித்தியாசமானது. கொழும்பு கருங்கற்பூமி. யாழ்ப்பாணம் சுண்ணாம்புக்கற்பூமி அந்தச் சுவாத்தியம் உனக்கு ஒத்துக் கொள்ளாது. கவனமாக இரு. தற்செயலாக உமக்கு ஏதாவது வருத்தம் வந்தால் நான் வரவேண்டிய சூழ்நிலை உருவாகிவிடும்.’’ விபுலன் கதைத்துக் கொண்டிருக்கும் போது மாதுமை குறுக்கிட்டாள்.; ‘‘நீங்கள் இங்கு வாறதாக இருந்தால் எனக்கு வருத்தம் வரவேண்டும்.’’

‘‘உமக்கு வருத்தம் வந்தால் தான் நான் வர வேண்டுமா…? வருத்தம் வராவிட்டால் நான் வரமாட்டேனா…? இப்பொழுது எனக்கு வேலை கிடைத்து விட்டது. உம்மை இங்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறேன். எப்படியும் ஆறு மாத காலத்துக்குள் உம்மை என்னுடன் அழைத்து வந்து விடுவேன்’’ என்றான் விபுலன்.

“ஆறு மாதங்கள் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.” சிணுங்கினாள் மாதுமை.

ஒரு மணிநேரம் விபுலனுடன் கதைத்தாள் மாதுமை. அவள் கதைத்து முடிந்த பின்பு அர்ச்சகா அங்கே வந்தாள்; “ஒரு மணித்தியாலமாக அவருடன் ஏதோ சிரித்துச் சிரித்துக் கதைத்தாய். ஆனால் இப்ப முகம் கறுத்துப் போய்க் கிடக்கு, உனக்கு என்ன நடந்தது.”

“கண்காணாமல் கதைப்பதில் எந்த விதமான இன்பமும் இல்லை. உப்பில்லாத கறியைச் சாப்பிடுவதைப் போன்றது. அவரோடு தொலைபேசியில் கதைத்த பின்பும் என்னால் உணவை உண்ண முடியவில்லை. சந்தோசமாக இருக்க முடியவில்லை. அதனால் தான் நான் மெலிகிறேன். மிகவும் சுவையான கறி வகைகளை அம்மா சமைத்தாலும் பசிப்பதில்லை. நான் எனது காதலரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவரைப் பற்றி பெற்றாருடனும் இனத்தவர்களைப் பற்றியும் கதைக்கிறேன். ஆனால் சந்தோசமாக இருக்க முடியவில்லை. என்னுடைய உடலெல்லாம் வெளிறி இருக்கிறது” என்றாள் மாதுமை.

**1184. உள்ளுவன் மன்யான்; உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு.**

*நான் அவரின் நல்லியல்புகளை நினைக்கிறேன்; நான் சொல்வதும் அவற்றையே; அவ்வாறிருக்க இந்தப் பசலை என் உடலைப் பற்றிப் படரும் வஞ்சகம் என்னவோ?.*

## இதோபார்

அர்ச்சகா, மாதுமையை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றாள். அப்பொழுது மாலை நான்குமணி. கடற்கரையில் சன நடமாட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது. குளிர்மையான காற்று வீசிய போதும் சூரியனின் ஆதிக்கம் குறையாததால் வெய்யில் மாதுமையின் உடலைச் சுட்டது.; “மாலை, நான்கு மணியாகியும் வெப்பம் குறையவில்லை” என்று கூறியவாறு கடற்கரை மணலில் நடந்தாள் மாதுமை. அவளது கால்கள் மணலுள் புதைந்தன.

“நாங்கள் இன்னும் கொஞ்ச நேரம் செல்ல வந்திருக்கலாம்” என்றாள் மாதுமை.

உனக்கு அம்மாவைப் பற்றித் தெரியும்தானே. பாடசாலையால் செல்லச் சிறிது நேரம் தாமதித்தாலும், பக்கத்து வீட்டுக்கார மாமாவைப் பாடசாலைக்கு அனுப்பி விடுவா. நான் இங்கு ஐந்து மணி வரை இருக்க எனக்கு அனுமதியிருகு அது நகுலனுக்குத் தெரியும். அதனால் அவர் வந்திருப்பர். வா அந்தப் பக்கம் செல்வோம்” என்று மாதுமையை அழைத்துச் சென்றாள் அர்ச்சகா.

வழமையாக அவர்கள் இருக்கும் பழுதடைந்த ஓடத்தின் அருகில் நகுலன் இருந்தான். “நகுலன் வந்து விட்டார்” என்றவாறு அர்ச்சகா மகிழ்வுடன் நடந்தாள். அவளுக்குப் பின்னால் மாதுமை சென்றாள்; “மாது இவர் தான்…”

வாக்கியத்தை முடிக்காது நாணினாள் அர்ச்சகா. மாதுமை நிமிர்ந்து நகுலனைப் பார்த்தாள். அழகான மிடுக்குள்ள இளைஞன் என்று அவளது மனம் சொல்லியது. அவனது அரும்பு மீசை முகத்திற்கு எடுப்பாக இருந்தது. அழகைப் பொறுத்தவரை அர்ச்சகா மிகவும் கொடுத்து வைத்தவள். என்று நினைத்தாள். “இவள் எனது கொழும்புத் தோழி மாதுமை. என்னுடன் படித்தாள். இவளைப் பற்றிய விடயங்கள் யாவும் உங்களுக்குச் சொல்லியிருக்கிறன். இப்ப எமது ஊரைப் பார்க்க வந்திருக்கிறாள்” என்றாள் அர்ச்சகா.

“வணக்கம்! இருங்கோ. உங்களைப் பற்றி எந்த நாளும் வாயோயாமல் அர்ச்சகா சொல்வா. அத்துடன் உங்களது காதல் விஷயங்களைப் பற்றியும் சொல்லியுள்ளா. உங்களுக்கு நல்லதொரு அம்மா வாய்த்திருக்கிறா. உங்களின் அம்மாவுக்கு எதிர்மாறானவர் அர்ச்சகாவின் அம்மா அர்ச்சகா ஐந்துமணிக்கு ஒரு நிமிடம் பிந்தினாலும் அவளை வீட்டில் இருந்து வெளியேற அனுமதிக்கமாட்டா. பெருந்துன்பம்” என்று பெருமூச்சு விட்டான் நகுலன்.

என்னைப் பற்றிய விடயங்கள் யாவற்றையும் உங்களுக்குச் சொல்லிய அர்ச்சகா, தன்னுடைய காதலைப் பற்றி எனக்கு எதுவும் சொல்லவில்லை.” என்றாள் மாதுமை துக்கத்துடன்.

அர்ச்சகா எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள். இவள் இப்படித் தான். படிக்கும் போது கூட வீட்டில் நடைபெறுபவற்றைச் சொல்ல மாட்டாள். நான் தான் அவளின் வீட்டுக்குச் சென்று தெரிந்து கொள்ள வேண்டும். அர்ச்சகா மிகவும் நல்லவள். பூப்போன்ற மென்மையான மனமுள்ளவள். யாழ்ப்பாணத்து இளைஞர் பெண்களைக் காதலிப்பார்கள். பின்பு சீதனத்திற்காக ஏமாற்றி விடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் அப்படியான வராக இருக்க மாட்டீர்கள் என்று எண்ணுகிறேன். எக்காரணத்திற்காகவும் அவளை ஏமாற்றி விடாதீர்கள் அவள் ஒரு சிறு ஏமாற்றத்தையும் தாங்க மாட்டாள். அவ்வளவு மென்மையானவள்” என்றாள் மாதுமை.

நீங்கள் கூறுவதைப் போல பல இளைஞர்கள் இருக்கலாம். ஆனால் நான் அப்படியானவன் அல்ல. என்னுடைய உயிர் அர்ச்சகா” என்று கூறிவிட்டு அர்ச்சகாவைப் பார்த்தான். அவளின் முகம் சிவந்து சுடராகப் பிரகாசித்தது.

அவர்கள் அங்கிருந்து மகிழ்வுடன் ஒரு மணிநேரம் கதைத்துச் சிரித்தனர். அர்ச்சகா ஐந்து மணிக்கு எழுந்து புறப்பட்டாள். நகுலன் அவளுடன் பிரதான வீதிவரை வந்தான். அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அர்ச்சகா. அவளது மனத்தைப் போல உடலும் சோர்ந்தது. “நான் அவரைப் பிரிந்து மூன்று மாதங்களாகி விட்டன. நீ நகுலனைப் பிரிந்து ஒரு நிமிடம் கூட ஆகவில்லை. அதுக்கிடையில் கலங்குகிறாய். உடல் சோர்கிறாய்” நகுலன் உனது கண்களை விட்டு அகலுமுன் உனது முகம் வெளிறி விட்டது” என்றாள் மாதுமை.

**1185. உவக்காண்எம் காதலர் செல்வார்; இவக்காண்என்
மேனி பசப்புஊர் வது.**

*அதோ பார் என்னைப் பிரிந்த காதலர் செல்கிறார்; இதோ பார் என் மேனியில் பசலை நிறம் வந்து படர்கிறது.*